


கோட்டயம் புஷ்பநாத்

தமிழில் : ரா. வேங்கடசாமி

# கார்த்திகாவின் தீர்ப்பு

# கார்த்திகாவின் தீர்ப்பு

மலையாள மொழியில்:
கோட்டயம் புஷ்பநாத்

தமிழில்:
ரா. வேங்கடசாமி

காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்
2, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.

## நூல் விவரம்


| | |
|---|---|
| தலைப்பு | : கார்த்திகாவின் தீர்ப்பு |
| வகை | : தமிழாக்க நாவல் |
| மொழி | : தமிழில் - ரா. வேங்கடசாமி<br>மூலம் - மலையாளம்<br>ஆசிரியர்: கோட்டயம் புஷ்பநாத் |
| ஆசிரியர் | : ரா. வேங்கடசாமி |
| பதிப்பு ஆண்டு | : முதற்பதிப்பு: டிசம்பர் 1998 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் அளவு | : கிரௌன் (12.5 x 18.5 செ.மீ) |
| தாளின் தன்மை | : சேஷசாயி 11.3 Kg. |
| எழுத்து | : 10 புள்ளி |
| பக்கங்கள் | : 256 |
| விலை | : ரூ. 55.00 |
| ஒளி அச்சு | : கவிராஜ் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், சென்னை-24. |
| அச்சிட்டோர் | : மணி ஆப்செட், சென்னை - 5. |
| தயாரிப்பு | : மகாகவி பதிப்பகம், சென்னை - 33. |
| வெளியிட்டோர் | : காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிட்., 2, ஜயசங்கர் தெரு, சென்னை - 33. |



27920
4289226
031.3


## என்னுரை

தமிழ் எழுத்துலகில் ஓரளவு அறிமுகமடைந்த நான், ஒரு மலையாள நண்பர் மிகவும் பாராட்டிப் பேசிய மாந்திரீக நாவல் ஒன்றைப் படிக்கக் கேட்டேன். மாந்திரீகம், பயங்கரம், மர்மம்... இவ்வளவையும் உள்ளடக்கிய அந்த நாவலை எழுதியவர் 'கோட்டயம் புஷ்பநாத்' என்னும் பிரபல மலையாள எழுத்தாளர் என அறிந்து அவருடன் தொடர்பு கொண்டேன். இதைத் தமிழில் வெளியிடலாமா எனக் கேட்டேன். நேரில் வரச் சொன்னார் – போனேன், பேசினேன். அனுமதி கொடுத்தார்.

அதுதான் 'கார்த்திகாவின் தீர்ப்பு' என்னும் தமிழ் நாவல். அந்த நாவல் 'பிரம்மராக்ஷஸ்' என்ற பெயரில் 'மலையாள மனோரமா' இதழில் தொடர்ந்து வெளிவந்த பிறகு, அந்தக் கதை திரைப்படமாகவும் வெளிவந்தது. தமிழ் உலகத்திற்கு 'கோட்டயம் புஷ்பநாத்' அவர்களை அறிமுகப்படுத்திய பெருமை எனக்கு உண்டு.

அவரது இன்னும் பல நாவல்கள் – தமிழில் வர இருக்கின்றன.

இப்போது புதிய நூலாக காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிட்., நிறுவனத்தார் வெளியிடுகிறார்கள். அதன் நிர்வாக இயக்குநர் திரு. கண்ணன் விக்ரமன் அவர்களுக்கு நன்றி.

ரா. வேங்கடசாமி

சேலம் – 7.

## பதிப்புரை

கேரளச் சூழ்நிலையை விளக்கும் கதைகளும், யதார்த்தச் சிறுகதைகளும், சமூகத்தைப் படம்பிடிக்கும் இலக்கியங்களும் மலையாள மொழியில் ஆண்டு தோறும் வெளிவருகின்றன. மாந்திரிகம், பயங்கரம், மர்மச் சம்பவங்கள் நிறைந்த கதைகளும் நூற்றுக்கணக்கில் வெளிவருகின்றன.

கோட்டயம் புஷ்பநாத் மாந்திரீகம், பயங்கரச் சம்பவங்களை உள்ளடக்கிய நாவல் எழுதுவதில் அங்கே முன்னணியில் நிற்கிறார். மாந்திரீகம் அங்கு சமூக வாழ்க்கையில் ஊடுருவி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதனைச் சுவைபட, பாத்திரப் படைப்புகளில் நாம் திடுக்கிடும் வண்ணம் கதைகளைப் படைப்பதில் வல்லவராக புஷ்பநாத் திகழ்கிறார்.

பெண்ணுக்கு அநீதி இழைத்த பாண்டிய மன்னனும், துரியோதனனும், இராவணனும் பட்ட பாட்டை இலக்கியத்திலும் இதிகாசத்திலும் படித்திருக்கிறோம். இந்த நாவலின் கதைத்தலைவி கார்த்திகா தான் அடைந்த துயரத்திற்கும் அவமானத்திற்கும் பழிக்குப் பழிவாங்குகிறார். மாய வடிவில் கொடூரமாகப் பழிவாங்குகிறார்.

கோட்டயம் புஷ்பநாத்தைத் தமிழ் நாட்டிற்கு அறிமுகப் படுத்திய பெருமை எழுத்தாளர் ரா. வேங்கடசாமி அவர்களுக்கு உண்டு. மலையாளத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட நாவலைப் படிக்கிறோம் என்றில்லாமல் தமிழிலே புதுக் கதையைப் படிக்கும் உணர்வை திரு. ரா. வேங்கடசாமி ஏற்படுத்தியுள்ளார்கள். ஓரிடத்திலும் தரம் குறைய வில்லை; தடம் பிறழவில்லை.

தமிழ்நாட்டில் கோட்டயம் புஷ்பநாத் நாவல்கள் படிப்பதற்கென்றே ஆயிரக்கணக்கான வாசகர்கள் இருக்கிறார்கள். எனவே –

இந்தப் புது நாவலுக்கும் வரவேற்பு இருக்கும் என்ற உறுதியுடன் காமதேனு வெளியீடாக தமிழ் வாசகர்களுக்கு இந்நூலை அளிக்கிறோம்.

பதிப்பாளர்.

சென்னை – 33.

42-89226

# கார்த்திகாவின் தீர்ப்பு

## அத்தியாயம் – 1

"அதோ பாருங்கள்... அங்கே தெரியும் பனைமரக் காட்டிற்குள் பாழடைந்து, இருண்டுபோய், ஆனால் கம்பீரமாக நிற்கிறதே... அதுதான் நாலுமனை கொண்ட எழமத்தூர் வீடு. அந்த வீட்டுக்காரர்கள்தான், ஒரு காலத்தில் இந்தக் கிராமத்தின் எஜமானர்களாக விளங்கினார்கள்" என்று இடசேரி வீட்டைச் சேர்ந்த வாசுதேவன் தம்பியின் திருமணத்திற்க வந்திருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

இடசேரி என்று அழைக்கப்படும் அவ்வீடு பெரிய காம்பௌண்டுக்குள் இருந்தது. பல குடும்பங்கள் அதில் அடக்கம். அந்த இடம் இன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. அவ்வீட்டின் வயது ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு. அவ்வீட்டின் நாலு பக்கமும், நடு முற்றமும் பின்னப்பட்ட தென்னை ஓலைகளால் விதவிதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. அலங்காரம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது.

இந்த அலங்காரம் இடசேரி வீட்டோடு மட்டும் நிற்கவில்லை. சற்று தூரத்தில் இருந்த சேதுமாதவன் தம்பியின் வீடாகிய 'தைகாட்டுத்தரை' வரை நீண்டிருந்தது. அதுதான் பெண்ணின் வீடு. திருமணம் வியாழன் காலை 10 மணியிலிருந்து 11 மணிக்குள் நடைபெற இருந்தது. நெற்றிப் பட்டம் கட்டி அலங்கரிக்கப்பட்ட எழு

பெரிய யானைகள் கட்டியம் கூறி முன்னே செல்ல, பின்னால் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணின் வீட்டை நோக்கி நடந்தார்கள். வாத்தியங்கள் இனிமையான ஓசையுடன் முழங்க, அலங்கரிக்கப்பட்ட குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் மாப்பிள்ளை வாசுதேவன் தம்பி அமர்ந்திருந்தான்.

இவர்கள் ஆடம்பரத்திற்குப் பெண்ணின் வீடும் ஒன்றும் சளைத்ததன்று! அந்த வீடும் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. நாதஸ்வரக் கச்சேரி ஒரு பக்கமும், மற்ற வாத்தியங்கள் மறுபக்கமும் அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தன.

“மாப்பிள்ளை வீட்டார் வந்தாயிற்று” என்று யாரோ குரல் கொடுக்க, அடுத்த கணம் வாத்தியங்களின் சப்தம் அதிகமாயிற்று.

முகூர்த்த நேரம் நெருங்கியது. கல்யாண மண்டபத்தில் பூசாரி பிரவேசித்து, திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கியவுடன், சகல சப்தங்களும் அடங்கின. மாப்பிள்ளையை முறைப்படி அழைத்து வந்து மணமேடையில் அமர்ந்தார்கள். அடுத்தது பெண்ணின் முறை.

‘தைக்காட்டுதரை’யின் சொந்தக்காரரும், அவ்வூரில் மிகவும் பிரபலமானவருமான சேது மாதவன் தம்பியின் மகள்தான் மணப்பெண். பெயர் ஓமனகுஞ்சம்மா. அன்ன நடை பயின்று, மிகவும் ஒயிலாக நடந்து தோழிகள் புடைசூழ மணமேடைக்கு வந்த ஓமனா, மாப்பிள்ளையின் இடப் பக்கம் அமர்ந்தாள். பளிங்குக் கல்லில் செதுக்கிய சிலைபோல் இருந்த அவள், தேவ கன்னிகையைப்போல் காட்சியளித்தாள். இடைவரை தொங்கிய தலைமுடியை மல்லிகை மலர் தழுவியிருந்தது. தலையின் ஆரம்பத்தில் வகிடு பிரிந்த இடத்தில் பன்னிரண்டு வைரக்கற்கள் பதிக்கப்பட்ட பதக்கம் ஒன்று துலங்கியது. வானவில்லைப் போன்ற புருவங்கள். எள்ளுப்பூ நாசி, தாமரை இதழ் போன்ற அதரங்கள் – மாலை நேரத்து வானம் போன்ற சிவந்த கன்னங்கள், ஆகியவை



ஒன்று சேர்ந்து ஓமனாவின் சௌந்தர்யத்தை மிகைப்படுத்தின. வாசுதேவன் தம்பியும் அழகில் குறைந்தவன் அல்லன்!

ஆஜானுபாகுவான உருவம். அதற்குத் தகுந்த உடலமைப்பு, பரந்த மார்பு, கடைந்தெடுக்கப்பட்டவை போன்ற கைகள். கருநிறமுள்ள அடர்த்தியான தலைமுடி – முகத்தை அலங்கரித்த அழகான மீசை. பெண்கள் பார்த்தால் பரவசமடையும் முகம். தங்க ருத்ராட்சம் கட்டிய தங்கச் செயின் கழுத்தில்.

– இதுதான் மணமகன் வாசுதேவன் தம்பி.

பூசாரி மந்திரத்தைத் தொடர்ந்தார். தாலி கட்டும் சமயம் நெருங்கியது. பட்டு ஜரிகை நூலில் கோத்து தங்கத் தாலியின் இரு நுனியையும், தன் இரு கைகளாலும் பிடித்தபடி வாசுதேவன் தம்பி மணப்பெண் கழுத்தருகே கொண்டு செல்லும் வேளையில், வெளியில் திடீரென அதிபயங்கரமான ‘ஓம்’கார சப்தத்துடன் சூறாவளிக்காற்று வீசியது.

இந்தக் காற்றினால் கல்யாணப்பந்தல் பலமாக ஆடியது. மண்டபம் அதிர்ந்தது. மணமேடை அருகே இருந்த விளக்கில் எரிந்து கொண்டிருந்த திரியிலிருந்த நெருப்பு உயரப்பறந்து எரிந்தது – சுழன்றது. எங்கோ சிதறிக்கிடந்த கருமேகங்கள் வானத்தில் இப்போது ஒரே இடத்தில் கூடின. பயங்கர மழை கொட்டக்கூடும் என்பது போன்ற நிலை. சற்று எட்ட தென்னந்தோப்பில் கட்டப்பட்டிருந்த யானைகள், நான்கு திசைகளும் நடுங்கப் பிளிறின.

கல்யாணப் பந்தலில் கூடி இருந்தவர்கள் பயத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்த நேரம்.

“தாலியைக் கட்டு. முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டது” என்று இந்த நிலையிலும் பூசாரி கூறினார்.

தயங்கிக் கொண்டிருந்த வாசுதேவன் தம்பி மீண்டும் பெண்ணின் கழுத்தருகே தாலியைக் கொண்டு செல்ல, அவன்

சகோதரி, அந்தத் தாலியைப் பெண்ணின் கழுத்தில் கட்டினாள். பூசாரி பூமாலைகளை இருவர் கையிலும் கொடுக்க, மணமக்கள் மாலை மாற்றிக்கொள்ளும் நேரத்தில் அருகே இருந்த பெரிய குத்துவிளக்கு கீழே சரிந்தது. இருப்பினும், அதைப் பெரிதுபடுத்தாமல் மாலை மாற்றும் சடங்கு முடிந்தது. அதேபோல் இந்த இயற்கையின் திடீர் மாறுதலையும் யாரும் பெரிதாக நினைக்கவும் இல்லை, எடுத்துக் கொள்ளவும் இல்லை.

ஆனால் வாசுதேவன் தம்பியின் மனத்தில் மட்டும் ஒரு கருநிழல் படிந்தது.

மற்ற சில முக்கியமான சடங்குகள் நடந்து முடிந்தபின் திருமண விருந்து நடைபெற்றது.

வாசுதேவன் தம்பி, மணப்பெண்ணை அழைத்துக்கொண்டு உற்றார் உறவினருடன் தன் வீட்டிற்குப் புறப்படும் வேளை வந்தது. மீண்டும் அவர்கள் எழுமத்தூர் இல்லம் வழியாகத்தான் திரும்பிச் செல்ல வேண்டும்; சென்றார்கள்.

அந்த நேரத்தில் இன்னொரு சம்பவம் நடந்தது. முன்னே நடந்து கொண்டிருந்த அந்த ஏழு யானைகளும் திடீரென எதையோ பார்த்து பயந்ததுபோல் பிளிறி மேலே அடியெடுத்து வைக்காமல் நின்றுவிட்டன. அவற்றின் முன் யாரோ குறுக்கே நின்று தடுப்பது போலிருந்தது. அப்போது தம்பியின் மனம் பயந்தது; பதறியது.

"யானைகள் அங்கேயே நிற்கட்டும். நாம் போகலாம்" என்று வயதான ஒருவர் சொல்ல, எல்லாரும் மணமக்களை அழைத்துக்கொண்டு நடந்தார்கள். வாசுதேவன் தம்பியின் இல்லமான இடசேரியிலும் எல்லாச் சடங்குகளும் முறைப்படி நடந்தன.

மாலை நெருங்கியது. இருட்டுவதற்கு முன் வந்திருந்த விருந்தினர் தம், தம் வீட்டிற்குத் திரும்பினர்.



அங்கே மீதி இருந்தவர்கள், பிரத்தியேகமாக அழைக்கப்பட்டவர்களும், மற்றும் சில அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மட்டுமே! இவர்களுக்காக மட்டும் ஸ்பெஷலாக விருந்து தயாராக இருந்தது. அவர்கள் மட்டும் சாப்பிடத் தொடங்கியவுடன், அந்த அறையின் கதவு அடைக்கப்பட்டது.

அதற்குக் காரணம், அங்கே பரிமாறப்பட்டிருந்த ஆகார வகைகளை அவ்வீட்டுப் பெண்களும், விருந்தினர்களில் எஞ்சி இருந்தவர்களும் பார்க்கக்கூடாது என்பதற்காகவே! கோழி, வாத்து, புறா போன்ற பறவை இனங்களும் ஆடு, முயல் போன்ற பிராணி இனங்களும் உணவாக அங்கே பாத்திரங்களில் இருந்தன. இந்தப் பிரத்தியேக உணவு வேறிடத்திலிருந்து கொண்டு வரப்பட்டவை. ஏனெனில் திருமண வீட்டில் இதைப்போன்ற பதார்த்தங்களை அன்று சமைக்க மாட்டார்கள். பொதுவாகவே 'தாவாடு' என்று அழைக்கப்படும் பெரிய இல்லங்களில் மாமிசம் எப்போதும் சமைக்கப்படுவதில்லை.

மதுக்குப்பிகள் உடைக்கப்பட்டன. பாத்திரங்கள் மளமள வெனத் திறக்கப்பட்டன. சோடா பாட்டில்கள் சப்தத்துடன் திறக்கப்பட்டன.

"சியர்ஸ்" என்னும் குரலோடு விருந்து கோலாகலமாகத் தொடங்கியது. மது பாட்டில்கள் காலியாக, காலியாக அவர்களது பேச்சில் மாறுதல் தெரிந்தது. எதற்குமே சம்பந்தம் இல்லாத வார்த்தைகள் தாராளமாக வெளிவந்தன. வாசுதேவன் தம்பி அவர்களை உபசரித்தான்.

"இப்போது மாப்பிள்ளையும் கொஞ்சம் சாப்பிடலாமே!" என்று தாசில்தார் சங்கரன் நாயர் வாய் குழறியபடி பேசினார். வார்த்தைகள் முழுமையாக வராவிட்டாலும் அவர் பேசியதற்கு இதுதான் அர்த்தம்! குடித்தவர்கள் நன்றாகப் பேசியது உண்டா?

“எனக்கு நிச்சயம் வேண்டாம் சார். இன்றைக்கு மட்டும் என்னை நீங்கள் விட்டுவிட வேண்டும். காரணம் உங்களுக்கே தெரியும். என் வாழ்நாளில் இன்று மிகவும் முக்கிய நாள் அல்லவா?” என்றான் வாசுதேவன் தம்பி.

“ஏய்... அப்படியெல்லாம் சமாதானம் சொல்லி நீ எங்களை ஏமாற்ற முடியாது. நீயும் எங்களோடு கலந்து கொண்டுதான் ஆகவேண்டும். இல்லையென்றால் நான் சாப்பிடுவதை இத்துடன் நிறுத்திக்கொள்வேன்” என்று சொன்னவர் அரிசி மொத்த வியாபாரியான கரியாட்சன்.

இப்படி சொல்லிக்கொண்டே அவர் தன் கையில் இருந்த டம்ளரைக் காலி செய்துவிட்டு, மீண்டும் பாட்டிலில் இருந்த மதுவை, தன் டம்ளரில் நிரப்பிக் கொண்டார். அதே சமயத்தில் கையில் மது நிறைந்த டம்ளர்களுடன் நான்கைந்து பேர் தம்பியைச் சுற்றி நின்றுகொண்டு, அவன் குடித்தே ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தார்கள். அவர்கள் எல்லாரும் பெரிய உத்தியோகம் பார்ப்பவர்கள். போதை தலைக்கேறியதால், அவர்கள் கோரஸாகப் பேசத் தொடங்கினார்கள்.

“தம்பி! நீ இப்படியெல்லாம் சொன்னால் நாங்கள் ஒப்புக்கொள்ளவே மாட்டோம். குடிக்க விருப்பமில்லையென்றால் குடிக்க வேண்டாம். ஆனால் இப்போது எங்கள் கையில் இருப்பதையெல்லாம் உன் தலைமீது ஊற்றலாமா?” என்று கேட்டார்கள்.

அவர்கள் நிச்சயம் அப்படிச் செய்யக்கூடியவர்கள் என்று தம்பிக்கு நன்றாகத் தெரியும். இவர்களிடமிருந்து தப்ப வேண்டும் என்றால் குடிக்காமல் இருக்கமுடியாது என்பதும் தம்பிக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவர்களைத் திருப்திப்படுத்த டம்ளர் நிறைய மதுபானத்தை ஊற்றி எடுத்துக்கொண்டு வந்த ஒருவரிடமிருந்து அதை வாங்கிக் கொஞ்சங்கொஞ்சமாக



உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கினான். அவன் அப்படித் தொடங்கியவுடன், இன்னொரு நபர் முள் கரண்டியால் மாமிசத்துண்டை எடுத்து அவனைச் சாப்பிடச் சொன்னார்.

“தயவுசெய்து இதை மட்டும் வற்புறுத்தாதீர்கள்” என்று தம்பி சொன்னான்.

“நீ சொல்வதையெல்லாம் கேட்க முடியாது. இதோ இந்தத் துண்டை மட்டுமாவது நீ சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்” என்று தொந்தரவு செய்தார் ஒருவர்.

“மன்னிக்கவும் இன்று மட்டும்” என்று தாழ்மையுடன் அவரைக் கேட்டுக் கொண்டான்.

“சரி சார். அவரைத் தொந்தரவு செய்யாதீர்கள். தம்பி சொல்வது சரி. இன்று மட்டும் மாமிசம் சாப்பிடக் கூடாது. குடித்தால் மட்டும் போதும்” என்றார் தாசில்தார். இதனால் வாசுதேவன் தம்பி தப்பினான்.

இருந்தாலும் மேலும் இரண்டு டம்ளர் மது சாப்பிட வேண்டியதாயிற்று.

இரவு மணி பத்து. எல்லாரும் ஏறக்குறைய மூக்கு முட்டச் சாப்பிட்டாயிற்று. சிலர் இருந்த இடத்திலேயே தள்ளாடினார்கள். சிலர் எழுந்து நடக்கத் தடுமாறினார்கள். வாசுதேவன் தம்பி முன்னரே செய்திருந்த ஏற்பாட்டின்படி தயாராக இருந்த அவனது வேலைக்காரர்கள் குடித்திருந்தவர்களை அவரவர் வீட்டில் பத்திரமாகச் சேர்க்கும் பணியில் முனைந்தார்கள்.

மணி பத்தரை அடித்தது. மதுவின் நெடி வாயில் இருக்கக்கூடாது என்பதற்காக வாசுதேவன் தம்பி பல் தேய்த்தான். நன்றாகக் குளித்தான். இடுப்பில் ஒரு வேட்டி மட்டும் அணிந்து, முகத்தில் லேசாகப் பவுடர் பூசி கழுத்திலும், மார்பிலும் சென்ட் தெளித்துப் பின் மணமகள் இருந்த அறையை நோக்கி அடியெடுத்து வைத்தான்.

அந்த வாயில் திறந்திருந்தது. உள்ளே கோல் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. (கோல் விளக்கு – நடைகுச்சியின் ஒருமுனையில் ஒரு விளக்கு கட்டப்பட்டு இருக்கும். குச்சியை சுவரில் எங்கு வேண்டுமானாலும் செருகி வைத்துக் கொள்ளலாம்) தம்பி அறைக்குள் நுழைந்து கதவை மூடினான்.

வெள்ளைப்பட்டு விரித்த மெத்தை மீது மல்லிகை மலர்கள் தூவப்பட்டிருக்க, அதன் நடுவே மணமகள் தலையணையில் கை வைத்தவாறு ஒருக்களித்து, தலை குனிந்தவாறு சாய்ந்திருந்தாள். கதவை மூடும்போது எழுந்த சப்தத்தினால் அவள் லேசாக நடுங்கியதுபோலத் தோன்றியது தம்பிக்கு!

அறை முழுவதும் மல்லிகையின் வாசனை 'குப்'பென்று வீசியது.

''நான் வருவதற்கு சற்றுத் தாமதமாகிவிட்டது இல்லையா?'' என்று கேட்டான் தம்பி, அவளிடம் மன்னிப்பு கேட்கும் தோரணையில். சௌந்தர்ய தேவதையாகக் காட்சியளித்த அவள் ஏதும் பேசவில்லை. பதில் சொல்லவில்லை. அந்த நேரத்திலும் அவள் முழு அலங்காரத்துடன் தான் இருந்தாள்.

''எவ்வளவு நேரம் இந்தக் கோலத்திலேயே இருப்பாய்? இந்த அலங்காரத்தை எல்லாம் மாற்றிக் கொள்ளக்கூடாதா?'' என்று சிரித்தபடியே தம்பி கேட்க, ஓமனா மெதுவாகத் திரும்பித் தன் கடைக்கண்ணால் தம்பியை'') பார்த்தாள். அவளது இதழ்க்கடையில் குறும்புச் சிரிப்பு தவழ்ந்தது. தம்பி அவளருகில் நெருங்கி, அவளது தலையில் சுற்றியிருந்த மல்லிகைப் பூச்சரத்தை மெதுவாகப் பிரித்தெடுத்து சுற்றித் தனியே ஒரு பக்கமாக வைத்தான். நெற்றியிலிருந்து தங்கப் பதக்கத்தை எடுத்தான். மற்றவை உடம்பில் அப்படியே இருந்தன.

''இவ்வளவு நகைகள் உடம்பில் இருந்தால், இருவர் உடலையும் உறுத்தாதோ?'' என்று கேட்டான் தம்பி. அதைக் கேட்டவுடன் அவளது உடம்பு சிலிர்த்தது போலத் தோன்றியது தம்பிக்கு!



''இப்படித் திரும்பி உட்கார். ஒவ்வொரு நகையாக நானே கழற்றி விடுகிறேன்.''

அவள் அவ்வாறே செய்ய, தம்பி, அவள் கழுத்தில் இருந்த தங்கநகைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி அருகில் இருந்த வட்ட மேஜைமீது வைக்கப்பட்டிருந்த வெள்ளித் தட்டில் வைத்தான்.

எல்லாவற்றையும் கழற்றிய பிறகு, அவளை மெதுவாகத் தன் பக்கம் திருப்பினான். அவளது மோவாயை நிமிர்த்தினான்.

''ஆகா.... என்ன அழகு!'' என்று அவனை அறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது.

''உன் தலைப்பின்னலைக் கலைத்து, தலைமுடியைத் தொங்கவிட்டால் கருமேகத்தினிடையே இருக்கும் சந்திரன்போல் இருக்கும் உன் முகம்'' என்றான்.

அதைக் கேட்ட அந்த மனோகரி மீண்டும் புன்னகை புரிந்தாள். கண்களில் வெட்கம் நடனமாடியது.

''என்னை உனக்குப் பிடிக்கிறதா?'' என்று அவள் கண்களைப் பார்த்தவாறே கேட்டான் தம்பி.

''உம்'' என்றாள் அவள்.

''இப்படிச் சொன்னால் போதாது. வாயைத் திறந்து சொல்லவேண்டும்'' என்று அவளை நிர்ப்பந்தித்தான்.

''மிகவும் பிடித்திருக்கிறது'' என்றாள் அவள்.

''உம்...இதைக்கேள். என் வாழ்நாளில் இப்படிப்பட்ட ஓர் அழகியை, இவ்வளவு அருகில் நான் பார்த்ததே இல்லை'' என்றான்.

சொல்லிக்கொண்டே அவன், அவள் நெற்றியில் விரலை வைத்து மெதுவாக மூக்கின் வழியாகச் சஞ்சரித்து, கீழே இறங்கி வாய், கழுத்து என்று இறங்கி நெஞ்சுப் பகுதிக்கு வந்தபோது, அவள் லேசாக அவன் கையைத் தட்டிவிட்டாள்.

"எனக்கு ஒரு பெண்ணை, பிறந்த மேனியாகப் பார்க்க இப்போதுதான் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே அவளை மெதுவாகப் படுக்கையில் கிடத்தினான். பட்டுத் தலையணையில் தலையை வைத்து அவள் மல்லாந்து படுத்திருந்தாள்.

"நான் பார்க்கலாமா?" மீண்டும் வாசுதேவன் கேட்க, அவள் "உம்" என்றாள்.

அவள் மேலே இருந்த ஆடையை மெதுவாக அகற்றி அருகில் வைத்தான். அதைத் தொடர்ந்து பட்டுத் துணி விலக்கப்பட்டது. ரவிக்கையின் கொக்கிகளை மிகவும் அவசரமாக விலக்கினான். அவளோ, அவன் கைகள் தன்மீது பட்டபோதும் சிலைபோல அசையாமல் படுத்திருந்தாள் – கிடந்தாள் என்று சொல்ல வேண்டும். அவன் கை மெதுவாக இடைப்பக்கம் நகர்ந்தது. அவள் அப்போதும் சந்தனச் சிலைபோலக் கிடந்தாள்.

"நான் உன்னை நன்றாகப் பார்க்கிறேனே" என்று சொல்லிக் கொண்டே, தம்பி எட்ட இருந்த கோல்விளக்கை அருகில் எடுத்துக்கொண்டு வந்தான். வந்ததும் 'சட்'டென்று மேலே தொடராமல் நின்றான்.

இரண்டு மார்பகங்களுக்கிடையே இருந்த இடத்தில், சற்று மேலே ஒரு கறுத்த மச்சம், ஒரு திலகத்தைப்போல இருந்தது.

தம்பி சட்டென்று அவள் முகத்தைப் பார்த்தான். அந்த முகத்தில் திடீரென ஒரு மாற்றம். முகமும் மாறிக்கொண்டே இருந்தது. அதைப்பார்த்த வாசுதேவன் அதிர்ச்சியடைந்தான். பயந்து நடுங்கினான்.

"ஆ! என் பகவதியே!" என்றவாறே அவன் திரும்பினான். ஆனால் அவனால் திரும்பவே முடியவில்லை.

திரும்ப முடியாதவாறு குளிர்ந்த கை ஒன்று அவனது தோள்மீது படிந்தது. இதயத்தில் நண்டு பிறாண்டுவது போன்ற



பயம் அவனைக் கவ்வியது – வலித்தது. நன்றாகத் திரும்பினான். அவன் பார்த்துப் பயந்த உருவம் இன்னமும் நிர்வாணக் கோலத்தில்தான் கட்டிலில் படுத்திருந்தது. ஆனால் அதன் கை மட்டும் நீண்டு வந்து அவன் தோளில் விழுந்திருந்தது. அவனை இழுத்தது. அவனால் திமிற முடியவில்லை. கட்டிலில் அமர்ந்தவாறே விழுந்தான். முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"இங்கே திரும்பிப் பார்!" என்றொரு குரல் கட்டிலிலிருந்து வந்தது. உடைந்த கண்ணாடித் துண்டுகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது போல, தகர டப்பாக்கள் ஒன்றோடொன்று உரசிக்கொண்டதுபோல இருந்தது அவள் பேசிய சப்தம்!

வாசுதேவன் தம்பி, அந்த நிர்வாணப் பெண்ணின் முகத்தைப் பார்த்தான்.

அவள் இவனைப் பார்த்து 'கலகல'வென சிரித்தாள். அவள் சிரித்தபோது, அவளது பற்கள் அவனுக்குத் தெரிந்தன. அவை கூர்மையாக இருந்தன போன்று அவனுக்குத் தெரிந்தன.

அவள் தனது மற்றொரு கையையும் உயர்த்தி அவனது தோள்மீது வைத்தாள். அந்தக் கையும் நீளமாகவே இருந்ததுபோல் அவனுக்குத் தெரிந்தது.

"என்னை உனக்கு அடையாளம் தெரியவில்லையா? நான் யாரென்று சொல் பார்ப்போம்" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் அவள்.

"கார்த்திகா அந்தர்ஜனம்!" என்று மெதுவாக நடுங்கிக்கொண்டே உச்சரித்தான் தம்பி.

(அந்தக் காலத்தில் வைதீக முறைப்படி வாழ்ந்த பிராமணர் வீட்டுப் பெண்கள், தங்கள் வீட்டிலிருந்தே வெளியில் வரமாட்டார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கு 'அந்தர்ஜனம்' என்று பெயர்).

"ஓ! என்னைத் தெரிந்து கொண்டாயா?" என்று கொடூரமாகச் சிரித்துக் கொண்டே கேட்டாள் அவள்.

"தெரிகிறது. தெரிந்து கொண்டேன்"

"முதலில் நீ என்னை எங்கே பார்த்தாய்? ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

இதைக்கேட்ட அடுத்த வினாடியே தம்பியின் மனத்தில் பதிந்திருந்த பழைய நினைவுகள்மீது படிந்திருந்த திரை தானாக விலகியது.

எப்போதுமே தோல்வி கண்டிராதவனும் வீரபராக்கிரமம் மிகுந்தவனுமான வாசுதேவன் தம்பி...எழமத்தூர் இல்லத்தில் வைதீகத்தில் ஊறிப்போன பரமசாதுவான கோவிந்தன் நம்பூதிரி.

சில வருடங்களுக்கு முன் கோவிந்தன் நம்பூதிரி அந்த ஊரிலேயே மிகவும் பெரிய ஜமீன்தாராக இருந்தவர். அந்தக் கிராமத்தில் இருந்த கோயிலும், அதைச் சுற்றியிருந்த வயல் மற்றும் பிற இடங்களும், தோப்புகளும் எழமத்தூர் இல்லத்திற்குச் சொந்தமாக இருந்தன.

சற்றுத் தொலைவில் இருந்த சிறு குன்றின்மீது எழமத்தூர் பகவதியின் கோயில் சற்று உயரமாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கோயிலுக்குத் தெற்கே, குன்றின் அடிவாரத்தில் இருந்த வயலோரத்தில்தான் இருந்தது இந்த எழமத்தூர் இல்லம். கோட்டையைப் போன்ற மதிற் சுவர்கள்.

அதற்குள் விசாலமான நாலுகட்ட வீடு. பெரிய நடுமுற்றம். அதில்தான் கோவிந்தன் நம்பூதிரியின் முன் சந்ததியினர் வாழ்ந்தார்கள்.

ஆனால் இப்போது பெரிய மனிதர்களாகக் காட்டிக் கொள்கிறார்களே அந்த இடசேரி இல்லத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் முன்பு எழமத்தூர் இல்லத்தின் காவல்காரர்களாக



இருந்தவர்கள்! வெறும் காவல்காரர்களாக இருந்த இவர்கள் நம்பூதிரிமாரின் பயந்த சுபாவத்தையும் ஒதுங்கிப் போகும் தன்மையையும், வைதீக நம்பிக்கையையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, எழமத்தூர் இல்லத்தைச் சேர்ந்த நிலங்களையும், சொத்துகளையும் கொஞ்சங்கொஞ்சமாக தங்கள் வசமாக்கிக்கொண்டு முதலாளிகளைவிடப் பெரிய பணக்காரர்களாகி விட்டார்கள்.

காலப்போக்கில் எழமத்தூர் இல்லத்தில் கோவிந்தன் நம்பூதிரியும், அவரது மகள் கார்த்திகாவும்தான் மிஞ்சினார்கள். கார்த்திகா, தன் இல்லத்தை விட்டு வெளிவருவதே இல்லை. வீட்டில் இருந்த மற்ற வாரிசுகள் ஒருவர் பின் ஒருவராக மறைய, கோவிந்தன் நம்பூதிரி மிகவும் துயரமடைந்தார். இயற்கையை எதிர்த்து என்ன செய்யமுடியும்?

காலப்போக்கில் கோவிந்தன் நம்பூதிரியும் ஒரு வழியாகப் போய்ச் சேர்ந்தார். அதனால் அப்பெண் கார்த்திகா அவ்வீட்டில் தனியாளானாள்.

இறக்கும் முன் கோவிந்தன் அவளது திருமணத்தை நிச்சயித்து வைத்திருந்தார். அவருடைய மரணத்தினால் திருமணம், வைதீகர்கள் யோசனைப்படி ஒரு வருடம் தள்ளி வைக்கப்பட்டது.

சர்க்கார் உத்தியோகத்தில் இருந்த ஒரு நல்லவருக்குத்தான், தன் பெண்ணை கோவிந்தன் நம்பூதிரி நிச்சயம் செய்து வைத்திருந்தார். மணமகனுக்கு வயது கொஞ்சம் அதிகம். முதல் மனைவி இறந்துவிட்டிருந்தாள். இருப்பினும் அந்த நபர் ஒரு தாலுக்காவின் தாசில்தாராக இருந்த காரணத்தினால் நம்பூதிரிக்கு இச் சம்பந்தத்தில் விருப்பம். தாசில்தாருக்கு முதல் மனைவி மூலம் இரு பையன்கள் இருந்தார்கள் என்பதுகூட நம்பூதிரிக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

தாசில்தார் விஷயம் தெரிந்தவர். சட்ட நுணுக்கங்களை நன்றாக அறிந்தவர். இறந்துபோன அவரது முதல் மனைவியின் சொத்துகளை, அவளது சகோதரர்கள் அனுபவித்தும், அபகரித்தும் இருந்ததை, பல வழக்குகள் மூலம் வெளிப்படுத்தி சொத்துகளைத் தனதாக்கிக் கொண்டவர் இந்தத் தாசில்தார்.

அப்படிப்பட்ட ஒரு நபர் கார்த்திகாவின் கணவராகப் போவதைக் கண்டு – கேட்டு – வாசுதேவன் தம்பி பயந்தான்.

ஏனெனில், கோவிந்தன் நம்பூதிரியின் சொத்துகளை, முறையற்ற வகையில் அபகரித்துக் கொண்டவர்களாயிற்றே இவர்கள்? தாசில்தார் வீட்டு மருமகனாக வந்தால், மீண்டும் நடவடிக்கை எடுத்து, அந்தச் சொத்துகளைப் பிடுங்கிக் கொள்ளமாட்டார் என்பது என்ன நிச்சயம்? பயந்தார்கள்.

இந்தச் சமயத்தில் இன்னொரு விஷயமும் மெதுவாக அரங்கேறிக் கொண்டிருந்தது, மூன்றாம் நபருக்குத் தெரியாமல்! வாசுதேவன் தம்பியும், கார்த்திகாவும் ஒருவரை ஒருவர் லேசாக விரும்பத் தொடங்கியிருந்தார்கள். அதே சமயத்தில் ஜாதி–மதம் ஆசாரம் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டுத் தம்பியைத் திருமணம் செய்துகொள்ள, கார்த்திகா பயந்தாள். அந்த அளவுக்கு வைதீகத்தில் ஊறிப்போன குடும்பமல்லவா அது?

சுயம்புவான எழமத்தூர் பகவதி தேவிக்குப் பூஜை செய்ய எழமத்தூர் இல்லத்தில் பிறந்த நம்பூதிரிக்குத் தான் உரிமை உண்டு. காலம் காலமாக உரிமை பெற்றவன்! அது நியதி.

மற்றொரு ஜாதிக்காரனைத் திருமணம் செய்தால், இந்த வேலைக்கு நிச்சயம் தடங்கல் ஏற்படும் என நினைத்தாள். பயந்தாள். தந்தை இறந்தபிறகு மாதத்திற்கு ஆறு நாள்கள் தவிர மீதி நாள்களில் கார்த்திகா தான், முறைப்படி தேவி பகவதிக்குப் பூஜை செய்து வந்தாள்.



மனத்தில் அவன் மீது ஆசையை வளர்த்துக் கொண்ட அவள், அதை உதறித் தள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தபோது ஒருநாள்...

அவள் எல்லாவற்றையும் உதறிவிட்டு வாசுதேவனைக் கல்யாணம் செய்துவிடலாம் என்று முடிவு செய்ய முடியாமல் யோசித்துக் கொண்டிருந்தபோது ஒருநாள்... சாயங்கால நேரம்... கார்த்திகா, தேவிக்குப் பூஜை செய்துவிட்டு புறப்படும் நேரம்...

கோயிலின் நடைக்கதவை மூட அவள் கை வைத்தபோது..... "கார்த்திகா" என்கிற குரல் மிகவும் மென்மையாக அவள் காதில் விழுந்தது.

திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள்.

அங்கே பார்த்தால் தேஜோமயமான ஒளிவீச, அதன் நடுவே சாட்சாத் பகவதிதேவி காட்சியளித்தாள்.

"அம்மா பகவதி தாயே" என்று கதறியபடி கார்த்திகா கீழே வீழ்ந்து வணங்கினாள்.

"நீ செல்லும் வழி தவறானது". தேவிதான் சொன்னாள். முகத்தில் கேள்விக்குறி தோன்ற, கார்த்திகா பகவதியைப் பார்த்தாள்.

"வாசுதேவன் தம்பி உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்வது, அவனுக்கு ஆதாயம் தேடிக்கொள்ளத்தான். அவனுக்குப் பல பெண்களின் தொடர்பு உண்டு. சொத்தெல்லாம் தன்வசமான பிறகு உன்னைக் கொன்றுவிடுவான்."

கார்த்திகா திகைத்துப் போய் பகவதி பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றாள். அவளால் எதும் பேசவும் முடியவில்லை. அந்த இடத்தை விட்டு அசையவும் முடியவில்லை. தேவியின் மென்மையான குரல் தொடர்ந்தது – "நீ இருக்கும் எழமத்தூர் இல்லத்தில் குடியேற அவனுக்கு யோக்யதை

கிடையாது. நீ அந்த வீட்டை விட்டுப் போகவும் முடியாது. சாத்தியமில்லை. எழமத்தூர் இல்லத்தில் வசித்த உன் மூதாதைகளின் ஆசார அனுஷ்டானங்கள் உன்னால் தான் தொடரப்பட - காப்பாற்றப்பட வேண்டும். அதை மறந்தால் பின்னால் விபரீத விளைவுகள் ஏற்படும். இதை உன் மனத்தில் பதிய வைத்துக் கொள்'' என்று கூறியவாறு தேவி மறைந்தாள்.

கார்த்திகா, தேவியின் திக்கு நோக்கித் தொழுதுவிட்டுப் பிராகாரத்தின் கதவை மூடிவிட்டுப் புறப்பட்டாள். அப்போது, அங்கே அவளைத் தவிர வேறு யாருமே இல்லை. வீட்டிற்குக் கிளம்பியபோது, அவளது மனம் மிகவும் தெளிவாக இருந்தது.

அடுத்த நாள் வழக்கம்போல் வாசுதேவன் தம்பி, அந்த வீட்டிற்கு வந்தான். வந்தவனுக்குச் சட்டென்று கார்த்திகாவிடம் தோன்றியிருந்த மாறுதல் நன்கு தெரிந்துவிட்டது. மனம் சஞ்சலமடைந்தான்.

''நான் இதுவரை உன்னிடம் சொல்லாமல் இருந்த ஒரு விஷயத்தைப் பேசவே இப்போது இங்கே வந்தேன்'' என்று வெட்கத்துடன் தயங்கிச் சொன்னான்.

''என்ன விஷயம் சொல்லு'' என்று கார்த்திகா தன் அறையின் வாயிலுக்கு வந்தாள். அவன் அருகே வந்து நிற்பது அவள் வழக்கம்.

''எப்படியோ அப்பா இறந்து விட்டார். உன்னைத் திருமணம் செய்து கொள்ள முதல் தாரத்தை இழந்த ஒருவர் இங்கே வரவிருக்கிறார் என்பதை அறிந்தேன். இவ்வளவு நடந்த பிறகு என்னால் ஏதும் சொல்லாமல் இருக்க முடியவில்லை'' என்று தம்பி தன் பேச்சுக்கு முகவுரை எழுதினான்.

அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை, கார்த்திகா ஓரளவுக்கு யூகித்து வைத்திருந்தாள்.

தம்பி தொடர்ந்தான்.



''என் மனத்தில் ஓர் எண்ணம். ஆசை என்றுகூடச் சொல்லலாம்! நான் கார்த்திகாவை மனமார நேசிக்கிறேன். என்னைத் திருமணம் செய்துகொள்ள விருப்பமிருந்தால் செய்து கொள்ளலாம். விருப்பமில்லை என்றால் வேண்டாம். நான் தொந்தரவு செய்யவில்லை. ஆனால் நீ எப்போதுமே திருமணம் வேண்டாம் என்று முடிவு எடுத்துக் கொண்டால் மட்டும் போதும்'' என்றான்.

வாழ்நாள் முழுதும் கன்னியாக இருக்கச் சொல்கிறானா? அல்லது அவனுக்கு மட்டும் ஆசைநாயகியாக இருக்கச் சொல்லுகிறானா? கார்த்திகாவுக்கு எரிச்சலாக இருந்தது.

''சீ... என்ன வார்த்தை சொன்னாய்? எழுந்து போ இங்கிருந்து!'' திடீரென வந்த கோபத்தினால் அவள் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் இவை!

வார்த்தைகளின் கடுமையை உணர்ந்த அவள், உடனே தன்னைச் சுதாரித்துக்கொண்டு அமைதியாகப் பேசத் தொடங்கினாள்.

''மன்னிக்க வேண்டும். நான் தெரியாமல் பேசிவிட்டேன். நீங்கள் இந்த இல்லத்தின் காவல்காரர்கள் என்பதை நான் ஒரு நிமிடம் மறந்து விட்டேன்'' என்றாள்.

தம்பியும் தான் அப்படிப் பேசியது தவறானது என்பதைப் புரிந்து கொண்டு சமாளித்தான்.

''தம்பிராட்டி! என்னை மன்னிக்க வேண்டும். என்ன பேசுவது என்று தெரியாமல், அளவுக்கதிகமாகவே பேசிவிட்டேன். இனிமேல் இப்படி கட்டாயம் நடக்காது. தம்பிராட்டி! என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். அப்போது தான் என் மனம் சமாதானமடையும்'' என்று வருத்தப்படுபவன் போலப் பேசி நடித்தான்.

"சரி... நான் மன்னித்து விட்டேன்" என்று எஜமானி சொல்ல...

"இப்போதுதான் என் மனம் சமாதானமடைந்தது" என்று கூறிக்கொண்டே வாசுதேவன் அங்கிருந்து புறப்பட்டு வெளியே போனான்.

ஒரு வாரம் கழிந்தது. எப்போதும் போல் கார்த்திகா கோயிலுக்குப் போய் பூஜை செய்துவிட்டு வந்தாள். ஒருநாள் மாலை கார்த்திகா வீட்டில் இருட்டாக இருந்த பகுதிகளில் விளக்கேற்றிப் பின் முற்றத்தில் இருந்த துளசி மாடத்திலும் விளக்கேற்றி வைத்தாள்.

அந்த நேரத்தில் யாரோ படி ஏறி வீட்டிற்குள் வரும் சப்தம் கேட்டு அவள் திரும்பினாள்.

வந்தவன், வாசுதேவன் தம்பிதான்.

அன்றைக்குப் பார்த்து அருகிலிருந்த சிவன் கோயிலில் ஏதோ திருவிழா என்று வீட்டிலிருந்த அவ்வளவு வேலைக்காரர்களும் வெளியே போயிருந்தார்கள்.

கார்த்திகா மட்டும் தனியாக இருந்தாள். அவனைப் பார்த்தவுடன் அவளுக்கு பகவதி தேவி சொன்ன விஷயங்கள்தான் முதலில் ஞாபகத்திற்கு வந்தன. அதை மனத்தில் வைத்துக் கொண்டு... "உட்காருங்கள்" என்றாள்.

கீழே கிடந்த பாயைத் தன் பக்கம் இழுத்து, அதில் அமைதியாக அமர்ந்தான்.

"என்ன இந்த நேரத்தில்?" அவள் கேட்க....

"நான் எப்போது வேண்டுமென்றாலும் இங்கே வரலாமே" என்று அவன் பதில் சொல்ல...

கார்த்திகா அப்போதுதான், தான் இல்லத்தில் தனியாக இருப்பதை உணர்ந்தாள். அதனால் உட்கார்ந்திருந்த தம்பியிடம் ஏதாவது பொது விஷயங்களைப்பற்றிப் பேசி, அவனை அங்கிருந்து



அனுப்பிவிட வேண்டும் என்று அவள் முடிவு செய்து கொண்டாள். மனத்தில் பயம் இருக்கத்தான் செய்தது.

அவனே பேசினான்.

"அப்பாடா, இன்று வெயில் மிகவும் அதிகம் இல்லையா? ஒரே புழுக்கமாக இருக்கிறது. குடிக்கக் கொஞ்சம் மோர் கிடைக்குமா?" என்று தம்பி கேட்க....

"இதோ கொண்டு வருகிறேன்" என்று அவள் உள்ளே போகும்போதே, இவனுக்கு மோர் கொடுத்து, எப்படியாவது இங்கிருந்து விரைவில் வெளியே அனுப்பிவிட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டாள். அங்கே இருந்த பித்தளை டம்ளரில் மோரை எடுத்துக் கொண்டு திரும்பும்போது, அவளது தோள்களின் மீது இருகைகள் அழுத்தமாகப் படிந்ததை உணர்ந்தாள்.

நன்றாகத் திரும்பிப் பார்க்க அவளை அவன் விடவில்லை. ஒரு சிறு குழந்தையைத் தூக்குவதுபோல் அவளை அவன் அலாக்காகத் தூக்கிக் கொண்டான். நேராகப் படுக்கை அறைக்குள் போய் அவளை மஞ்சத்தில் கிடத்தினான்.

அவளது ரவிக்கையைப் பிடித்து இழுத்த வேகத்தில் கொக்கிகள் தெறித்து விழுந்தன. அவள் மூக்கை அவன் வாயிலிருந்து வந்த மதுவாடை தாக்கியது.

அவளை எப்பக்கமும் திமிறவிடாமல் அழுத்திப் பிடித்துக்கொண்ட அவன், அவளது திருமேனியைக் கொஞ்சங் கொஞ்சமாக அனுபவிக்கத் தொடங்கினான்.

அவன் எழுந்தான். அவள் எழ முயன்றபோது வேறு இரு புதிய கரங்கள் அவளைப் படுக்கையில் அழுத்தின.

அவனைத் தொடர்ந்து வேறு நான்கைந்து பேர் அந்த இளம் கன்னியைக் கசக்கி முகர்ந்தார்கள். அவர்கள் எல்லாருமே தம்பியின் நெருங்கிய சிநேகிதர்கள்.

நன்றாகக் குடித்துவிட்டு, இன்று இந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டுதான் அவர்கள் வந்திருந்தார்கள்.

மறுநாள் கார்த்திகாவின் பிணம், அவள் வீட்டின் கூடத்தில் கிடந்ததைக் கண்டுபிடித்தவன் வீட்டு வேலைக்காரன். குளத்தின் தெளிந்த நீருக்கடியில் கார்த்திகா அமைதியாகக் கிடந்தாள்.

வேலைக்காரன், தம்பியிடம் தகவல் கொடுத்தான். பிறகு நடக்க வேண்டிய காரியங்கள் நடந்தன. நாள்களும், மாதங்களும் ஓடின.

ஐந்து வருடங்கள் மறைந்தன.

எழமத்தூர் இல்லம் வாரிசுகள் இல்லாததால் பாழடைந்து போயிற்று.

பகவதி தேவியின் கோயில் பூஜை நின்றது.

சுற்றிலும் புல் வளர்ந்து காடானது. கோயிலுக்குள்ளும் வெளியேயும் அதே நிலை.

கொஞ்சநஞ்சம் இருந்த சொத்துகளை வாசுதேவன் தம்பி தன் வசப்படுத்திக் கொண்டான்.

கடந்தகாலச் சம்பவங்களை எல்லாம், எல்லாரும் மறந்திருப்பார்கள் என்று நினைத்து தம்பி களிப்புற்றிருந்த வேளையில், அந்தச் சம்பவங்கள் எல்லாம் ஒன்று திரண்டு ஒரே ரூபத்தில் படுத்திருந்ததுபோல் கட்டிலில் ஓமனா கிடந்தாள்.

"என்னை மன்னித்துவிடு, மன்னித்துவிடு" என்று தம்பி கை கூப்பித் தொழுதான் அவளை நோக்கி.

"உன்னை மன்னிக்க வேண்டுமா? உம்... இந்தச் சம்பவத்திற்காக நான் எத்தனை வருடங்கள் காத்திருந்தேன் தெரியுமா?" என்றது அவ்வுருவம்.

அவன் பேசாமல் இருக்கவே, அது மேலும் தொடர்ந்தது.



"உன் இரத்தம் எனக்கு வேண்டாம். அது அசுத்தமானது. ஆனால் உன் உடலில் உள்ள சக்தி முழுதும் எனக்கு வேண்டும். அதை கொஞ்சங்கொஞ்சமாக. ஆனால் நிதானமாக நான் எடுத்துக் கொள்வேன். நிதானமாக!" என்று கூறிவிட்டு 'கலகல'வென நகைத்தாள். பிறகு அவனை வேகமாகத் தன் பக்கம் இழுத்தாள். அவனும் படுக்கையில் விழுந்தான்.

படுத்திருந்தவளுக்கு எந்தப் பொருளையும் தன் பக்கம் இழுத்துக் கொள்ளும் சக்தி இருந்தது நன்றாகத் தெரிந்தது. தம்பி, அவளைத் தடுக்கத் தன்னால் இயன்ற மட்டும் முயன்றான். முடியவில்லை. ஆனால் அவன் உடம்பில் இருந்த சக்தி முழுதையும் ஒரு வினாடிக்குள் அவள் தன்வசம் இழுத்துக்கொண்டதுபோல... அவன் தளர்ந்துபோனான். எப்பாடுபட்டாவது இவளிடமிருந்து தப்பிவிட வேண்டும் என்கிற எண்ணம் மனத்தில் தோன்ற, தம்பி, முட்டி மோதி படுக்கையை விட்டு எழுந்து ஓடினான். அவள் பின்னால் துரத்துவாள் என்று நினைத்தான். இல்லை!

ஆனால், அவளது அட்டகாசமான சிரிப்பு மட்டும் அவனுக்குக் கேட்டது.

இவன் வெளியே வந்த அந்த நேரத்தில், முற்றத்தின் ஒருபுறத்தில் அமர்ந்து இருவர் மது சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். திருமணத்திற்கு வந்த அவர்கள் வெகுதூரம் போக வேண்டி இருந்ததால், இரவை இல்லத்திலேயே கழிக்க முடிவு செய்திருந்தனர். அவளுக்குப் பயந்து ஓடிவந்த தம்பி, அவர்களைக் கண்டதும், தான் பயந்து வெளியே வந்தது தெரியாத வகையில் ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு, அவர்களின் அருகில் அமர்ந்தான். மூச்சு வாங்கியது.

முதல் இரவு அறையிலிருந்து வந்து அவர்கள் அருகே அமர்ந்த அவனைக் கண்டதும், அவர்கள் அவனை ஏற இறங்க வியப்போடு பார்த்தனர். தம்பியின் உடலில் வழிந்த வியர்வையைக் கண்டு

அவர்கள் சிரித்தனர். அதற்கு என்ன அர்த்தமென்று தம்பிக்குத் தெரியாதா? "என்ன தம்பி... நீயும் கொஞ்சம் சாப்பிடேன்" என்று அவர்களில் ஒருவர் கேட்டதுதான் தாமதம். அடுத்த வினாடி, தம்பி அருகே இருந்த மது பாட்டிலை எடுத்தான். அதில் மீதி இருந்த மதுவை அப்படியே தன் வாயில் கவிழ்த்துக் கொண்டான்.

அவர்களுக்கு அவன் நிலை புரியவில்லை. புரியாது! அவனுடன் நெருங்கிப் பழகும் நண்பர்கள் அவர்கள். மிகவும் அன்னியோன்யமாகப் பழகக்கூடியவர்கள். அவன் குடித்து முடித்தவுடன், அவர்களில் ஒருவன் சொன்னான்.

"நாங்கள் இருவரும் தூங்கப்போகிறோம். தூக்கமே வரவில்லை. உன் வேலைக்காரன் ஒருவன் எங்களுக்கு இந்தப் பாட்டிலைக் கொடுத்து உதவினான்" என்றான்.

தம்பியை விட்டு குடித்ததால் அவன் எங்கே கோபித்துக் கொள்கிறானோ என நினைத்து, அவன் சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தான்.

அதையெல்லாம் தம்பி காதில் போட்டுக்கொள்ளவே இல்லை.

வாழ்க்கையில் யாருக்குமே ஏற்படாத ஓர் அனுபவம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அதை வெளியில் சொன்னால் யாரும் நம்பப் போவதில்லை. சொன்னாலும் என்ன சொல்லுவார்கள்?

தான் மணந்துகொண்டு வந்த பெண், அதாவது இன்று முதல் அவனது மனைவியாகப்பட்டவள், எழமத்தூர் இல்லத்தின் குளத்தில் பிணமாகக் கிடந்த கார்த்திகாவின் உருவத்தில் தன் கட்டிலில் வந்து படுத்திருக்கிறாள் என்று அவன் சொன்னால் யாராவது நம்புவார்களா?

அதனால் தம்பி அவர்களிடம் அதைப்பற்றிப் பேசவில்லை. அவர்களிடம் பொதுவான பல விஷயங்களைப் பேசி, பொழுதைக் கழித்தான். தூக்கம் வந்தபோது அதே இடத்தில் படுத்துத் தூங்கியும் விட்டான்.



விடியற்காலை கோழி கூவியது.

தம்பி எழுந்தான். விடிந்தபிறகு பேய்-பிசாசுகளைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று அவன் தைரியமாக தன் படுக்கை அறைக்குள் நுழைந்தான்.

கட்டிலில் யாருமே இல்லை.

அப்படியென்றால் தான் திருமணம் செய்துகொண்டு வந்த அந்த ஓமனகுஞ்சம்மா எங்கே?

இதைப்பற்றி யாருடனும் பேசுவது நன்றாக இருக்காது என்று கருதி கையில் சோப், டவல் எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றான்.

குளித்துவிட்டு வந்த பிறகு சாப்பிடும் அறைக்குள் நுழைந்தான். அப்போது அங்கே அவனது சகோதரி நின்று கொண்டிருந்தாள்.

ஆவி பறக்கும் இட்லியும், பாலும் மேஜையின்மீது இருந்தன.

"ஓமனா அந்தச் சட்னியை எடுத்து வா" தம்பியின் சகோதரி சொன்னாள்.

தம்பி சமையலறைப் பக்கம் தன் பார்வையைச் செலுத்தியபடி இருந்தான்.

அவன் மனத்தில் முந்தின இரவு நடந்த சம்பவம்.... அது புதிய அனுபவம். இருப்பினும் அங்கே ஏன் ஓமனா வரவில்லை? ஒரு பயங்கரம் அப்போது நடந்ததென்னவோ உண்மை!

தம்பி குழம்பினான். எதை நம்புவது?

சில வினாடிகளுக்குப் பிறகு ஓமனா ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் சட்னியுடன் அந்த அறைக்குள் வந்தாள்.

வந்திருப்பவள் தன் மனைவியா அல்லது வேறு யாராவதா என்று அவளைத் தம்பி உற்று நோக்கினான்.

இரவு பார்த்த அந்த உருவத்திற்கும் இவளுக்கும் சம்பந்தமே இல்லை.

"ஏன் இவள் தன் அறைக்கு வரவில்லை?" என்கிற சந்தேகம் மட்டும் தம்பிக்கு இருந்தது. இதை எப்படி வெளிப்படையாகக் கேட்க முடியும்? "ஓமனா உட்கார்" என்றாள் சகோதரி சந்திரிகா. அவள் உட்காரவில்லை. தயங்கி நின்றாள்.

"உட்கார் ஓமனா. இந்த வீட்டில் அந்த மரியாதையெல்லாம் தேவையில்லை" என்று சந்திரிகா சொன்ன பிறகு ஓமனா உட்கார்ந்தாள்.

"உனக்கு விஷயம் தெரியுமா அண்ணா? நேற்றிரவு ஓமனாவுக்கு நல்ல தலைவலி. தேங்காய் குரும்பியுடன் குறுமிளகை வைத்து நன்றாக அரைத்து, நெற்றியில் பற்று போட்டு விட்டேன்" என்ற அவள் ஓமனா பக்கம் திரும்பி, "இப்போது தலைவலி பரவாயில்லையா?" என்று கேட்டாள்.

"உம்" என்பதுபோல் ஓமனா தலையை ஆட்டினாள்.

"அப்படியென்றால் கதை இதுதானா?" என்று வாசுதேவன் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

ஆக, இவள் முந்தின இரவு படுக்கை அறைக்கே வரவில்லை.

படுக்கையில் படுத்திருந்தது இறந்து போன கார்த்திகாதான்!

ஓமனாவுக்கு வந்திருந்தது சாதாரணத் தலைவலியில்லை! அதை உற்பத்தி செய்தவளே அந்தக் கார்த்திகாவாகத்தான் இருக்கும்!

இதை அவன் எப்படி வெளியே சொல்வான்? ஏதும் பேசாமல் இட்லியைச் சாப்பிடுவதில் அவன் கவனம் செலுத்தினான்.

அன்று மாலை திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் ஊருக்குப் போய்விட்டனர். வீட்டில் சந்தடியே இல்லை. அவ்வீட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும் இருந்தனர்.



வாசுதேவன் தம்பியின் சகோதரி சந்திரிகா நன்றாகப் படித்தவள். அவளுக்கு வயது இருபத்தியாறு. இராணுவத்தில் உத்தியோகம் பார்த்த ஒருவருக்கு சந்திரிகா வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவர் நான்கைந்து வருடங்களுக்கொரு முறைதான் விடுமுறையில் வருவார். வந்தால் ஒரு வாரம்... அல்லது பத்து நாள்கள் இங்கே தங்கியிருப்பார். அந்த நாள்களில்கூட பாதி நாள்கள் அவரது சொந்த ஊரான பாலக்காட்டுக்குப் போய்விடுவார்.

அங்கே போகும்போது கண்டிப்பாக சந்திரிகாவை அழைத்துக் கொண்டு போகமாட்டார்.

சந்திரிகாவுக்குப் புருஷ சுகம் என்பது கிடைத்தது நான்கைந்து வருடத்தில் நான்கைந்து மாதமே!

கணவர் வரும்போது, இவளுடைய உடம்பு சரியாக இல்லையென்றால் அந்தச் சுகமும் கிடைக்காமல் போய்விடும். சந்திரிகா ஆரோக்கியமான பெண்.

நல்ல வனப்புள்ள கட்டமைந்த கவர்ச்சியான உடல்! அவளுக்கும், வீட்டுக் காரியஸ்தன் மகன் கேசவனுக்கும் உறவு இருக்கிறதென்று குளக்கரையில் பெண்கள் தாராளமாகப் பேசிக் கொண்டார்கள்.

அந்த வீட்டில் சந்திரிகாவைத் தவிர அவளது தாயார் சாரதா அம்மாவும் இருந்தாள். வயதான அவள் ஒரு விதவை. தனது நேரத்தை பக்தியிலும், தியானத்திலும் கழித்தாள். இவர்களைத் தவிர அந்த வீட்டில் ஓரிரு வேலைக்காரர்கள் மட்டுமே உண்டு.

பகல் உணவருந்திய பின், வாசுதேவன் தம்பி கொஞ்சநேரம் தூங்கும் பழக்கம் உடையவன். இன்று அவன் உடலில் அசதி அதிகமாக இருக்கவே கட்டிலில் வீழ்ந்தான். வீழ்ந்தவனுக்குக் கட்டிலில் படுக்கவும் முடியவில்லை. படுக்கையின்மீது தூவப்பட்ட மல்லிகையின் வாசனை இன்னமும் அங்கே இருந்தது. பூக்கள்

மட்டும் வாடியிருந்தன. அந்த அறைக்குள் வேறு யாரும் வந்திருக்கவில்லை. படுத்தபடியே திரும்பினான்.

முந்தின இரவு நடந்த சம்பவம் முழுதும் ஒரு பயங்கரக் கனவுபோல அவன் மனத்திற்குப்பட்டது. அந்தப் படுக்கையில் கிடக்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. ஓமனா முந்தின இரவு இங்கே வரவில்லை என்பதை நினைக்கும்போது அவனது பயம் இன்னும் அதிகமாகியது. எழுந்தான். கட்டிலில் விரித்திருந்த விரிப்பை எடுத்துச் சுருட்டி ஒரு மூலையில் வீசி எறிந்தான்.

கொஞ்சங்கொஞ்சமாக மயக்கம் வந்தது. மீண்டும் படுக்கையில் விழுந்தான். தூக்கம் மெல்லத் தழுவியது போல இருந்தது.

அந்தச் சமயத்தில் அவன் மனத்தில் வீட்டின் குளத்திலிருந்து வெளியே எடுத்துப் போட்ட கார்த்திகாவின் உருவம் தெரிந்தது. கார்த்திகாவின் பிணத்தை, வடக்கு மூலையில் இருந்த எட்டி மரத்தின் வலப் பக்கத்தில் ஒரு பெரிய குழியைத் தோண்டி அதில் புதைத்தார்கள்.

அந்தக் குழியைத் தோண்டும்போது தனக்கேற்பட்ட அனுபவம் தம்பியின் மனத்தில் இப்போதும் நிழலாடியது.

மூன்றடி ஆழம் வரை மண்ணை எடுத்த பிறகு, அங்கே நீளமாக, அதே சமயத்தில் அகலம் குறைவாகவும், கருங்கல்லில் வெட்டி எடுத்தது போலவும் காணப்பட்ட ஒரு பெட்டி தென்பட்டது.

அப்பெட்டியின்மீது கல்லினால் செய்யப்பட்ட ஒரு மூடியும் இருந்தது. அந்த மூடியை அகற்றிவிட்டால் அதனுள் ஒரு நபர் நன்றாகப் படுத்துக் கொள்ளும் அளவுக்கு அப்பெட்டி வசதியாக இருந்தது. அந்தக் காலத்தில் பாண்டிய நாட்டுக் கொள்ளைக் காரர்களுக்குப் பயந்து, நல்ல வசதி படைத்தவர்கள் தங்கள் வீட்டு விலை மதிப்புள்ள பொருள்களையும், நகைகளையும்



இதைப்போன்ற பெட்டியில் பத்திரப்படுத்தி, புதைத்து வைப்பது வழக்கம்.

ஆனால், இந்தப் பெட்டியில் ஏதும் இருக்கவில்லை. இருந்தபோதிலும் தம்பிக்கு ஒரு யோசனை தோன்றியது. கார்த்திகாவின் பிரேதத்தை இந்தப் பெட்டிக்குள் வைத்து நன்றாக மூடி, மண்ணைத் தள்ளிவிட்டுப் பத்திரமாகப் புதைத்துவிட்டால்...!

எண்ணத்தை உடனே செயலாக்கியும் விட்டான். கார்த்திகா புதையுண்டாள்....! அதற்குப் பிறகு அவன் அந்த இடத்திற்குப் போகவே இல்லை.

தம்பிக்கு இப்போது நல்ல தூக்கம். அந்த நேரத்தில் கட்டிலுக்கடியில் ஏதோ சலனம் ஏற்பட்டதுபோல அவனுக்குத் தோன்றியது. எழுந்தான். படுக்கையைத் தடவிப் பார்த்தான். ஒன்றுமில்லை. ஏதோ பய உணர்வு தான் என்று மீண்டும் படுத்துக் கொண்டான்.

அவன் நன்றாகத் தூங்கி எழுந்த போது மாலையாகி இருந்தது. முகத்தைக் கழுவிக்கொண்டு, காப்பி சாப்பிட்டுவிட்டு அவன் வெளியே போனான். அவனை அறியாமல், அவனது கால்கள் எழமத்தூர் இல்லம் இருந்த திசையை நோக்கி நடந்தன. யாரோ அவனை இழுத்துக்கொண்டு போவதைப்போல் அவனுக்குத் தோன்றியது.

''ஏன் நான் அங்கே போக வேண்டும்?'' என்று அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டபோது அதற்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. கால்களையும் வேறு திசையில் திருப்ப முடியவில்லை. ஒரே திசையில் நடக்கவே முடிந்தது.

சூரியன் மறையும் நேரம். மேற்கு வானம் ரத்தச் சிவப்பாகத் தோன்றியது. நடந்துகொண்டே இருந்தவன் நேராக எழமத்தூர் இல்லத்தின் வாயிலருகே வந்து நின்றான்.

நின்றவனை யாரோ பிடித்து இழுத்துக்கொண்டு போவதைப்போலவே நடந்து, இல்லத்தின் ஒரு பக்கம் இருந்த குளத்தின் அருகே போய் நின்றான்.

குளத்தின் நீர் தெளிவாக இருந்தாலும், ஒரு பக்கம் பாசி, இன்னொரு பக்கம் நீர்ச்செடிகள் முதலியன தாராளமாகப் பரவி நீரை நன்றாகவே மூடியிருந்தன. அடுத்த பக்கம் இருந்த எட்டி மரம் கறுப்பாகியிருந்தது.

அதன் வடபுறத்தில்தான் சில வருடங்களுக்கு முன் அவன் கார்த்திகாவை அடக்கம் செய்திருந்தான். இருள் சூழ்ந்துகொண்டு வந்த அந்த நேரத்தில் தனியாகக் குளத்தருகே நின்று கொண்டிருந்த அவன் தன்னைச் சுற்றிலும் நன்றாக ஒருமுறை பார்த்தான்.

ஒரு காலத்தில் பசுஞ்சோலையாகவே இருந்த அந்த இடம் இப்போது மனித வாடையே இல்லாத காட்டுப் பிரதேசமாக இருந்தது. இதைப்போன்ற இடங்களில் தென்படும் வண்ணத்துப் பூச்சிகளின் நடமாட்டம்கூட அங்கே இல்லை.

நிசப்தமான நேரம். காற்றுகூட ஓய்வெடுத்துக் கொண்டது போலத் தெரிந்தது. குளத்தின் நீரில்கூட அசைவில்லை. அங்கே சில அலைகளும் தோன்றவில்லை.

இப்போது தம்பியின் கவனம் குளத்தின் பக்கம் திரும்பியது. அவன் குளத்து நீரையே உற்றுப் பார்த்தான். எங்கிருந்தோ வந்ததுபோல் காற்று திடீரென வீசியது. கீழே விழுந்து கிடந்த எட்டி மரத்தின் இலைகளை சப்தப்படுத்திக்கொண்டேபோன அக்காற்று கிழக்குப் பக்கமாகப் போய் மறைந்தது. அடுத்த நிமிடம் குளத்தின் நடுவே நீர்க் குமிழிகள் தோன்றின. நீர்ப்பரப்பில் சலனம். தம்பியின் கண்கள் நீரின் சலனத்தைக் கூர்ந்து கவனித்தன.

திடீரெனக் குமிழ் வந்த இடத்திலிருந்து 'கும்' என்கிற சப்தத்துடன் நீர் மேலே எழுந்தது.



## அத்தியாயம் - 2

நீர் மேலே எழுந்ததைப் பார்த்த வாசுதேவன் தம்பியின் உடல் குப்பென்று வியர்த்தது. மயிர்க்கால்கள் சிலிர்த்து நின்றன. உடல் நடுங்கியது.

''என்ன நான் காண்பது?'' என்று தன்னைத்தானே அவன் கேட்டுக் கொண்டான். கண் முன் நடப்பது நிஜம்!

நிச்சலனமாக இருந்த அந்தக் குளத்தின் நடுவே இருந்து ஒரு கறுத்த உருவம் எழுந்தது. பெண்!

தனக்கு நேர் எதிராக எழுந்த அந்தப் பெண்ணின் கூந்தல், குளத்தில் வலை வீசியது போல் பரந்து கிடந்தது. ஆழமான அந்தக் குளத்திலிருந்து எழுந்த அப்பெண் உருவம், நிதானமாக நீரின் மீது நடந்து வந்து, வடக்கே இருந்த எட்டி மரத்தை நோக்கி நடந்தது. தண்ணீரிலும், தரையிலும் அவளது கால்கள் படவே இல்லை.

தான் கனவு காண்கிறோமா என்கிற சந்தேகம் வாசுதேவன் தம்பிக்கு! கிள்ளிப் பார்த்துக் கொண்டான். வலித்தது.

தன் கண் முன் நடப்பது நிஜம். கனவன்று என அறிந்தபோது, அவனது நாடி நரம்புகளில் எல்லாம் பயம் ஊடுருவியது. உடல் விறைத்தது.

அவனுக்கு எதிர்ப்புறமாக அந்த உருவம் நடந்ததால் அவனால் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. பெண் என்று மட்டும் தெரிந்தது. ஆனால் அது எட்டி மரத்தின் பக்கம் சென்றதால், அவனுக்கு அப்போது கார்த்திகாவின் ஞாபகம்தான் வந்தது.

தன் உடலில் இருந்த பலத்தையெல்லாம் ஒருவாறு திரட்டிக்கொண்டு, அவன் சற்று முன்னால் அடி எடுத்து வைத்தான்.

இருட்டைப் போல் கறுப்பாக இருந்த உருவம் கார்த்திகாவின் கல்லறைக்குள் இறங்கியதை அவன் கண்டான்.

இனியும் இந்த இடத்தில் நிற்பது உசிதமன்று என்று தனக்குள் முடிவு செய்து கொண்ட அவன், வேகமாக அங்கிருந்து வெளியேறி வீடு வந்து சேர்ந்தான். அந்த நேரத்தில், தம்பிக்காக அவனுடைய நெருங்கிய நண்பனொருவன் வீட்டிற்கு வந்து காத்துக் கொண்டிருந்தான்.

அந்த நண்பனின் பெயர் சேகரவர்மா.

வர்மா பெரிய இடத்தைச் சேர்ந்தவன். அவனுடைய பெற்றோர் அந்த ஊரில் மிகவும் பெயர் பெற்ற ஒரு பழைய ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள்.

அவர்களின் வாரிசுதான் இந்த வர்மா! மிகவும் பெரிய இடத்துப் பையனாக இருந்தாலும், வாசுதேவன் தம்பிக்கு உயிர் நண்பன். வர்மாவைப் பார்த்தவுடன், தம்பியின் மனத்தில் ஆதி முதல் நடந்த சம்பவங்கள் எல்லாம் வரிசையாகத் தோன்றின.

அவனது முகம் வெளிறிப் போயிருந்ததைப் பார்த்த வர்மா,

"என்ன தம்பி, இரவு முழுதும் தூக்கமில்லையா? ஒரே இரவில் முகம் இவ்வளவு வாட்டமாக இருக்கிறதே?" என்று சிரித்துக்கொண்டே தமாஷ் செய்தான்.

"ஓ! என்ன வர்மா? இதையெல்லாம் நாம் இப்போதுதான் பார்க்கிறோமா அல்லது அனுபவிக்கிறோமா? உம்... நமக்கெல்லாம் பழகிய விஷயந்தானே?" என்று பதில் சொன்னான் தம்பி.

"நான் சந்தேகப்பட்டது சரிதானா, இல்லையா என்று உன் முகத்தைக் கண்ணாடியில் போய்ப் பார் தெரியும். உன்னை இந்த நிலைக்குள்ளாக்கிய அந்தப் பெண் நிச்சயம் சாதாரணப் பெண்ணாக இருக்கவே முடியாது. திருமணத்தின்போது நான் அந்தப் பெண்ணைப் பார்த்தபோதே நினைத்தேன். அவளது



மூக்கின் அழகைக் கண்டே நீ கீழே விழுந்துவிடுவாய் என்று..." வர்மா பேசிக்கொண்டே போனான்.

அதைக் கேட்ட தம்பி, பேச்சற்றுப் போனான். இவனிடம் நடந்ததை எப்படிச் சொல்லிப் புரியவைப்பதென்றே தம்பிக்குத் தெரியவில்லை. சொன்னாலோ இவன் நம்பப் போவதில்லை. அத்துடன் கார்த்திகாவின் மரணத்திற்கும் இவனுக்கும் நிறையப் பங்குண்டு! அதாவது அவளைக் கற்பழித்துக் கொன்ற கும்பலில் இவனும் ஒருவன். தம்பியின் மிக நெருங்கிய நண்பனாயிற்றே...

திருமணமான நேரத்திலிருந்து, முதலிரவுக்கான அறையில் நுழைந்து வெளிவரும்வரை கார்த்திகா தம்பியை என்ன பாடுபடுத்தினாள் என்பதை வர்மாவிடம் விவரித்தால் அவன் நம்பவா போகிறான்?

நுணுக்கமான அடிதடிக் கலைகளில் நன்றாகத் தேர்ச்சி பெற்ற தம்பி, ஒரு பேயின் முன்னால் செயலிழந்து நின்றான் என்று இவன்தான் வர்மாவிடம் எப்படிச் சொல்ல முடியும்? அதனால் தன் அனுபவங்கள் தன்னிடமே இருக்கட்டும்–நண்பர்களிடம் மறைத்து வைப்பதே அப்போதைக்கு நல்லது என்று தம்பி முடிவு செய்தான்.

"நான் என்ன புறப்படவா? என்றான் வர்மா, தம்பியின் மௌனத்தை வேறுவிதமாகப் புரிந்து கொண்டு...

"ஏன் ... தம்பிரானுக்கு இவ்வளவு அவசரம்? வேறேதாவது வேலை இருக்கிறதா?" வாசுதேவன் தம்பி கேட்டான்.

"தம்பி... உனக்கு இப்போது ஸ்திரமான ஆள் கிடைத்து விட்டாள் இல்லையா?.... நான் இப்போது சந்திரன் பிள்ளை வீட்டிற்குப் போய், அவனைப் பார்க்க வேண்டும்."

"என்ன வர்மா.. அவன் வீட்டில் அப்படி என்ன விசேடம்?"

"அங்கே எனக்கு வேலை ஏதும் இல்லை. சந்திரன் பிள்ளையின் வசம் பாருக்குட்டி என்றோர் அழகி இருக்கிறாள். பிள்ளையை இழுத்துக் கொண்டு போனால், பாருக்குட்டியைப்

பார்க்கலாம். அங்கே குடிப்பதற்கு பானமும் கிடைக்கும். பாருக்குட்டியும் கிடைப்பாள்'' என்றான் வர்மா.

''குடிப்பதற்கு அவ்வளவு தூரம், இன்னோர் ஆளைத் தேடிக் கொண்டு ஏன் போக வேண்டும்? என் கல்யாணத்திற்கு வாங்கிய சரக்கு இங்கேயும் கொஞ்சம் மீதம் இருக்கிறது. அதைச் சாப்பிட்டுவிட்டு பிறகு நீ பாருக்குட்டியைத் தேடிப் போகலாமே...'' என்றான் வாசுதேவன் தம்பி.

அவனுக்கும் இப்போது கொஞ்சம் 'மது' சாப்பிட்டால் நன்றாக இருக்கும் போல் தோன்றியது. மேலும் துணை வேறு கிடைத்திருக்கிறதே!

''சரி! அப்படியென்றால் முதல் காரியத்தை இங்கேயே முடித்துக் கொண்டு போகிறேன்...'' என்று சிரித்துக்கொண்டே சொல்லி விட்டான்.

வரவேற்பறையிலிருந்து வெளியே வந்த தம்பி, முற்றத்தில் இறங்கி, எதிர் அறையில் தன் சகோதரி சந்திரிகாவை அழைத்தான். மது அருந்தும்போது, உடன் சாப்பிட ஏதாவது வேண்டுமென, தம்பி அவளிடம் கேட்டான்.

இருவரும் ஒன்றாகச் சேர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போதே அடுத்து என்ன நடக்கும் என்று சந்திரிகாவுக்குத் தெரியும்–புரியும்! வழக்கமாக நடக்கும் விஷயந்தானே இது? சந்திரிகா சமையலறைக்குள் சென்று, மாங்காய் ஊறுகாய்த்துண்டுகள் சிலவற்றைத் தட்டத்தில் வைத்துக் கொண்டு, கையில் ஒரு செம்புத் தண்ணீருடன் வெளியே வந்தாள்.

சேகரவர்மா அவளைப் பார்த்தான். கொஞ்சம் கவர்ச்சியாக இருந்த சந்திரிகாவை வர்மாவின் கண்கள் விழுங்கின. அவன் தன்னைக் கவனிப்பது அவளுக்கும் தெரியும். கண்களால் எப்படி வேண்டுமானாலும் ரசித்துவிட்டுப் போகட்டும் என்று நினைத்தது போல், சந்திரிகாவும் அங்கே சில வினாடிகள் நின்றாள்.



தம்பி, ஓர் அயல் நாட்டு மதுக்குப்பியைத் திறந்து இரண்டு கண்ணாடித் தம்ளர்களில் ஊற்றினான். பிறகு தண்ணீரால் அந்தத் தம்ளர்களை நிரப்பினான்.

''சந்திரிகாவின் கணவன் இங்கே சமீபத்தில் வரவில்லையா?'' என்று வர்மா, சந்திரிகாவிடம் கேட்க...

''அவர் வந்து போய் ஒரு வருடந்தான் ஆகிறது. அதனால்தான் அவர் திருமணத்திற்குக்கூட வரவில்லை'' என்று சந்திராவுக்குப் பதிலாக பதில் கூறினான்.

''இனி அவர் எப்போது, அடுத்த படியாக இங்கே வருவார்?''

''சென்ற தடவை வந்துபோன பிறகு, ஐந்து வருடங்கள் கழித்துத்தான் இங்கே திரும்பவும் வந்தார்'' என்று தம்பி பதில் சொல்ல, இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டே, தலை குனிந்தவாறு சந்திரிகா அங்கே நின்று கொண்டிருந்தாலும், அவளது பார்வை முழுதும் வர்மாவின் மீதே பதிந்திருந்தது.

''இங்கே தனியாக இருந்தால் போரடிக்குமே. அதனால் எங்கள் வீட்டிற்கு வந்து என் தங்கை கொச்சம்மணியுடன் பேசிக் கொண்டிருக்கலாமே!'' என்று வர்மா சந்திரிகாவைப் பார்த்துச் சொன்னான்.

கொச்சம்மணி, வர்மாவின் தங்கை. வயது பதினேழு. நாகரிகமானவள். அதே சமயத்தில் புத்திசாலி! சந்திரிகாவுக்கும், அவளுக்கும் ஏற்கெனவே பழக்கமுண்டு–சிநேகிதிகள்.

இருவரும் ஒருவர் வீட்டுக்கொருவர் போய்க் கொண்டிருந்தவர்கள். வர்மா இப்படிச் சொன்னவுடன், சந்திரிகா அவனை ஒரு தடவை நன்றாகப் பார்த்துவிட்டு புன்முறுவலோடு திரும்பிப் போனாள்.

அவள் போனபிறகு வர்மா, தம்பியின் பக்கம் திரும்பினான்.

''நேற்றிரவு எப்படிக் கழிந்தது என்பதைப் பற்றி நீ என்னிடம் சொல்லவே இல்லையே! கல்யாண மேடையில் அவளை நான்

பார்த்தேன். என் பார்வைக்கு அவள் அழகாகவே இருந்தாள். மோசமாக இருக்கவில்லை. உனக்கேற்றவள். என்ன, நான் சொல்வது சரிதானே? இல்லை என் கணிப்பு தவறா?''

திரும்பத் திரும்ப மணப்பெண் பேச்சிலேயே வந்து நின்றான் வர்மா.

இவனுக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தம்பிக்குத் தெரியவில்லை. தனக்குண்டான அனுபவத்தை எப்படி அவன் சொல்ல முடியும்? அல்லது அதுதான் சொல்லக்கூடிய விஷயமா? சொன்னால் தான் அவன் நம்புவானா?

அதனால் அவன் மௌனம் சாதித்தான்.

"ஏன் ஒன்றும் பேசாமல் இருக்கிறாய்? நான் கேட்டதில் ஏதாவது தவறா?'' வர்மா விடாமல் கேட்டான்.

அப்போதும் தம்பி பேசாமல் மௌனம் சாதித்தான். ஆனால் அவனது கை மட்டும், மதுப்புட்டியை எடுத்து, காலியான டம்ளர்களை நிரப்பிக் கொண்டே இருந்தது. வர்மா தொடர்ந்து அந்த விஷயத்தைக் கேட்கவில்லை. வேறு பேச்சுகளில் கவனம் திரும்பியது. இப்படி பேசிக் கொண்டும், மது அருந்திக்கொண்டும் இருந்ததால், அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. கடிகாரத்தில் மணி பதினொன்றடித்தது. மணி அடித்த சப்தத்தைக் கேட்ட வர்மா திடுக்கிட்டு எழுந்தான்.

"அடே... மணி இவ்வளவாகி விட்டதா? இருவரும் உட்கார்ந்தால், நேரம் போவதே தெரியவில்லை. நான் புறப்படட்டுமா?'' என்று அவன் கேட்க, "இந்த நேரத்தில் நீ தனியாகப் போய் விடுவாயா?'' தம்பி பதில் கேள்வி கேட்டான்.

"ஏன் போகாமல்? எனக்கென்ன பயம்?'' என்று வம்ா திருப்பிக் கேட்டு விட்டு, அங்கே இருந்து புறப்பட்டான்.

நிலா ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது.



வர்மா தனியாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தான். மரங்களின் நிழல் செயற்கை இருட்டை உண்டாக்கிக் கொண்டிருந்தன. மேலே நிலா, கீழே மரங்களின் இருட்டு, பாதை நெடுக அப்படித்தான் இருந்தது.

கிழக்கே ஒரு பக்கமாக மேகங்கள் குவிந்திருந்தன. எதிரே இருந்த பாண்டவன் மலை உச்சியில் இருந்த அத்திமரங்கள் இலைகள் இல்லாமல் மொட்டையாக நின்றன. மலையில் வேறு மரங்கள் இல்லாததால், அத்தி மரங்களின் நிழல் மலைச்சரிவில் ஓவியங்களைப் போல் கறுப்பாக விழுந்திருந்தன. அவற்றைப் பார்த்தால் பயமாக இருக்கும். சேகரவர்மா ஒற்றையடிப்பாதையில் நடந்துகொண்டே இருந்தான்.

தம்பியின் வீட்டில் இருந்தவரை சந்திரிகாவின் வனப்பான உடல் அவன் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. இப்போது அந்த வீட்டிலிருந்து வெளியேறிவிட்டதால், அவன் மனத்தில் பாருக்குட்டி இடம் பிடித்துக் கொண்டாள்.

நினைவெல்லாம் பாருக்குட்டி...

அவளது நினைவே, கால்களை விரைவாக நடைபோட வைத்தது.

ஓர் இடத்தில் பாதை இரண்டாகப் பிரிந்து நின்றது. வலப் பக்கம் இருக்கும் பாதை வழியாகச் சென்றால் பாருக்குட்டியின் வீடு... இடப் பக்கம் போனால் அவனது வீடு.. இந்த நேரத்திற்கு அவன் வீட்டிற்குப் போய் என்ன செய்வது? அதுவுமில்லாமல் அவனை மகிழ்விக்க அங்கே எந்தப் பெண் இருக்கிறாள்? அதனால் வர்மா தனது நடையை வலப் பக்கம் திருப்பினான். அங்கே இருந்து சற்றுத் தூரத்தில் இருந்தது எழுமத்தூர் இல்லம்! அந்த இல்லத்தின் கிழக்குப் பக்கத்தில்தான் இருந்தது பாருக்குட்டியின் வீடு...

வழியில் இருந்த ஆலமரத்தின் கீழே யாரோ நிற்பது போல வர்மாவுக்குத் தெரிந்தது.

சற்று நெருங்கிப் பார்த்தபோது, தான் தேடி வந்தவள்தான் அங்கே நிற்கிறாள் எனத் தெரிந்தது அவனுக்கு..! அங்கே நின்றது சாட்சாத் பாருக்குட்டியேதான்.

மரத்தின் இலைகளின் இடையே தெரிந்த நிலா வெளிச்சத்தில் பாருக்குட்டி நன்றாகத் தெரிந்தாள்.

"என்ன பாருக்குட்டி... யாரை எதிர்பார்த்துக் கொண்டு இங்கே நிற்கிறாய்?" என்று அவளிடம் வர்மா கேட்டான்.

"நான் யாரை எதிர்பார்த்துக் கொண்டு இங்கே நிற்க முடியும்? எதிர்பார்க்கத்தான் எனக்கு யார் இருக்கிறார்கள். தம்பிரானைத் தவிர?" என்று அவள் சமயத்திற்குத் தகந்தாற்போல் பேசினாள்.

"என்னைக் கிண்டல் செய்கிறாயா பாருக்குட்டி?"

"தம்பிரானே! உங்களையா? நானா? எனக்கு அந்தத் தகுதி இருக்கிறதா என்ன?" என்று கேட்டுவிட்டு அவள் 'கலகல'வெனச் சிரித்தாள்.

பாருக்குட்டி இடையில் முண்டும், மேலே ரவிக்கையும் அணிந்து படு கவர்ச்சியாக இருந்தாள்.

அவளது வயிற்றுப் பிரதேசத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது. தொப்புள் குழி நிழலாகத் தெரிந்தது. மார்பகங்கள் ரவிக்கைக்குள் அடங்காமல் திமிறிக் கொண்டிருந்தன.

"போகலாம் பாருக்குட்டி. நானும் உன் பாதை வழியாகத்தான் வருகிறேன்" என்று வர்மா நடந்தான்.

"அதைத் தெரிந்துகொண்டு தானே நான் இங்கேயே நிற்கிறேன்? வீட்டில் இந்தச் சமயத்தில் மூன்று நான்கு பேர் இருக்கிறார்கள். எல்லாரும் சாராயம் குடிக்க வந்தவர்கள். குடித்தபிறகு அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமே! நான் ஒருத்தி மட்டும் என்ன செய்ய முடியும்? அதனால் தான் வீட்டின் பின்புற வழியாக நான் இங்கே வந்து நிற்கிறேன்" என்றாள் அவள்.



"நான் வருவேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?" வர்மாவின் கேள்வி.

"என் மனது எனக்குச் சொல்லியது"–அவள் பதில் அவனுக்குத் திருப்தி அளித்திருக்க வேண்டும்.

"இப்போது எங்கே போவது?"

"இடமா இல்லை? நிறைய இருக்கிறது. வாருங்கள் போகலாம்" பாருக்குட்டி முன்னால் நடக்க சேகரவர்மா அவளைப் பின் தொடர்ந்தான்.

எழமத்தூர் இல்லத்தின் முதல் கேட்டைத் தாண்டி இருவரும் உள்ளே பிரவேசித்தார்கள். அங்கே சுவரில் ஒரு கோல் விளக்கு செருகப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த சேகரவர்மா வியப்படைந்தான். "இந்த இடத்தில் யார் விளக்கை ஏற்றி வைத்தார்கள்?" என்று கேட்க...

"தம்பிரானை எதிர்பார்த்து நான் தான் அதை ஏற்றி வைத்தேன்..." என்றாள் பாருக்குட்டி. "விளக்கைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். நாம் உள்ளே போகலாம்" என்று அவள் சொல்ல, வர்மா விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு முன்னால் நடந்தான்.

உள்ளே இருந்த வாயிற்படி திறந்து கிடப்பதைப் பார்த்தான்.

"நீங்கள் உள்ளே போய் இருங்கள். நான் இப்போதெல்லாம் இங்கேதான் வருவது"என்றாள் பாருக்குட்டி.

அவன் உள்ளே நுழையும்போது, "தெற்குப் பக்கம் அறை திறந்திருக்கிறது. அங்கே போய் இருங்கள்..." அவள் சொல்ல, அவன் அறைக்குள் நுழைந்தான். கோல்விளக்கை மேஜை அருகே செருகி வைத்தான். விளக்கை வைத்துவிட்டுத் திரும்பியபோது, பாருக்குட்டி வாயிற்கதவை மூடுவது தெரிந்தது. மூடியபின் திரும்பினாள்.

அவளது ரவிக்கை முன்பக்கம் நன்றாகத் திறந்திருந்தது. வெளியே தெரிந்த பருத்த மார்பகங்கள் மீது அவனது கண்கள் நிலைத்து நின்றன. மனத்தில் ஏதோ சந்தேகம் ஏற்பட்டது போல் கண்களை மூடி மூடித் திறந்து பார்த்தான். அவளது மார்பின் மத்தியில் ஒரு கறுத்த பொட்டு....

''சேகரவர்மா... இது நான்தான்!'' சொல்லும்போதே உருவம் மாறியது. வர்மா பயந்து நடுங்கினான்.

அவன் நன்றாகத் திரும்பி, அந்த உருவத்தைப் பார்த்தபோது நன்றாக உற்று நோக்கியபோது, அங்கே நின்றவள் வேறு யாருமில்லை!

சாட்சாத் கார்த்திகா அந்தர்ஜனம்...!

அன்றொரு நாள் இரவு, அவனுடைய வலுவான பிடியில் சிக்கித்துவண்ட, இளம் தளிரான அதே கார்த்திகா!

ஆனால்...

இவள் முகத்தில் அப்பட்டமான வித்தியாசம்! இவள் சிரிக்கிறாள்...!

முல்லைப் பூக்களை வரிசையாக அடுக்கி வைத்தாற்போல் இருக்க வேண்டிய பல்வரிசை, கூர்மையான புலிநகங்களைப் போலக் காட்சி அளித்தன...

அவளை அந்த நிலையில் பார்த்தவுடன் சேகரவர்மாவின் கண்கள் மங்கின..

கண்களை மறுபடியும் தயார்படுத்திக்கொண்டு அவளைப் பார்க்க மனம் விரும்பவில்லை. கண்களை மூடியவாறே நின்றான்...

''அன்றைய தினம் இரவு நீ திருப்தியடையவில்லைபோல் தெரிகிறது... இல்லையா?'' என்று கேட்டுக்கொண்டே கார்த்திகா அவனை நெருங்கி வந்தாள்.



வந்தவள் அவள் மீது பட்டும் படாமலும் நின்றாள்... அவளது கரங்கள் அவனது தோள்மீது விழுந்தன... ஐஸ் கட்டி விழுந்தாற்போல் இருந்தது அவனுக்கு... பாம்பு தன் இரையை அழுத்துவதுபோல், அந்தக் கைகள் இரண்டும் அவனைக் கெட்டியாகப் பிடித்தன.

''அய்யோ'' என்று அலறினான் வர்மா.... ஆனால் அதைக் கேட்க, அங்கே யாரும் இல்லை... அடுத்து எழுந்த சப்தம் தொண்டையில் அடங்கி விட்டது. அவன் எதிர்பார்க்காத வகையில் திடீரென அந்தச் சம்பவம் நடந்தது.

அவளால் பலமாகத் தள்ளப்பட்டு, சேகரவர்மா கட்டிலில் மல்லாந்தபடி விழுந்தான். அவன்மீது இருந்த சட்டையை அவள் தனது கைகளால் பற்றி இழுத்தாள். பழைய கந்தல் துணி கிழிவதுபோல் சட்டை கிழிந்து பறந்தது. முடிந்தவரை அவளைத் தடுக்கப் பார்த்தான் வர்மா. அவனால் எதுவுமே முடியவில்லை. புதிய பலம் பெற்றதுபோல், அவள் அவன் மீது விழுந்தாள். அவனை நன்றாக அழுத்திக்கொண்டு, தனது கைகளால் ரோமம் நிறைந்த அவனது மார்பை அழுத்தித் தடவினாள். அவனுள் எழுந்த பயம் நெஞ்சை வெடிக்கச் செய்யும் நிலையில் இருந்தாலும், அந்தக் கைகளின் உணர்வை அவன் அனுபவிக்கவே செய்தான்.

''என்னைக் காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்'' என்று அவன் போட்ட கூச்சலைக் கேட்டு, அங்கே யாரும் வரவில்லை. யார் இருக்கிறார்கள் அந்த நேரத்தில்? ''என்னை விட்டுவிடு... விட்டுவிடு...'' என்று கதறினான். ஒவ்வொரு சப்தத்திற்கும் அழுத்தம் அதிகமாகியதே தவிர, குறையவில்லை... நன்றாக அழுத்தப்பட்ட உடல் நொறுங்கியது. தொடர்ந்து சப்தம் போட நினைத்த போது, சப்தம் வாயிலிருந்தே வெளிவரவில்லை... மதுவின் போதை போன இடம் தெரியவில்லை. தன் ஆபத்தான நிலை அவனுக்குப் புரிந்தது.

கோழி கூவும் நேரம் வந்தது...

கார்த்திகாவின் உருவம் அந்த இடத்தை விட்டு மெதுவாக நகர்ந்தது. நிழல்போல் நடந்து மெல்லக் குளத்தில் இறங்கியது. உள்ளே போய்விட்டது. இலைகள் மறைத்தன. அடுத்த வினாடி தண்ணீருக்குள் இருந்து குபீரென மேலெழுந்தது அவ்வுருவம்.

எழுந்தது மெதுவாக நடந்து ஒரு மூலையில் இருந்த அதன் கல்லறையை நோக்கி நடந்தது. பின் மறைந்தது.

பொழுது நன்றாக விடிந்தது. சேகரவர்மாவின் வேலைக்காரன், அவனைத் தேடிக்கொண்டு வாசுதேவன் இல்லத்திற்கு வந்தான்... வீட்டின் முன் திண்ணையில் அமர்ந்திருந்த வாசுதேவன், அவனை விசாரித்தான்...

"எங்கே வந்தாய்?"

"என் முதலாளி சேகரவர்மாவைத் தேடிக்கொண்டு வந்தேன்... இரவு முழுவதும் அவர் வீட்டிற்குத் திரும்பவில்லை."

அதைக் கேட்டவுடன் தம்பியின் உடல் நடுங்கியது.

"இரவு பதினோரு மணிக்கே வர்மா இங்கே இருந்து புறப்பட்டு விட்டானே! மது சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவன் வீட்டிற்குப் போகும் வழியில் சந்திரன்பிள்ளை வீட்டுப் பக்கம் போகவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்ததாக ஞாபகம்... ஒரு வேளை வர்மா அங்கே போயிருப்பானோ?" தம்பி இப்படி வேலைக்காரனிடமே கேட்டான்...

வந்திருந்த வேலைக்காரனுக்கு, தன் எஜமான் சந்திரன் பிள்ளை வீட்டிற்குப் போவதும் தெரியும்.... பாருக்குட்டியின்மீது ஒரு கண் வைத்திருப்பதும் தெரியும்!

"அப்படியென்றால் எஜமான்.... அங்கேதான் இருப்பார்..." என்று சொன்ன வேலைக்காரன், "இரவில் எங்கேயும் அவர் தங்குவது வழக்கமில்லையே" என்று சொன்னான்...



வாசுதேவன் சலித்துக் கொண்டான்...

"எப்படி இருந்தாலும் அவன் இங்கே இருந்து போய்விட்டான்... சந்திரன் பிள்ளை வீட்டிற்குப் போய்ப் பார்த்துக்கொள்..." என்றான்.

வேலைக்காரன் நேராக அங்கேயிருந்து புறப்பட்டு சந்திரன்பிள்ளை வீட்டிற்குப் போனான்...

வீட்டின் முன்புறம் இருந்த செவ்விநீர் மரத்தடியில் நின்றவாறு பல்தேய்த்துக் கொண்டிருந்தான் சந்திரன்பிள்ளை...

இரவு முழுதும் நன்றாகக் குடித்ததன் விளைவாக அவன் முகம் வீங்கியிருந்தது. வந்திருந்த வேலைக்காரனை அவனுக்கு நன்றாகத் தெரியும்.

"என்ன குருப்... இவ்வளவு தூரம்?" என்று விசாரிக்கவும் செய்தான்.

"எங்கள் தம்பிரானைத் தேடிக்கொண்டு வந்தேன்... வாசுதேவன் தம்பி வீட்டில் அவர் இல்லை... ஒரு வேளை இங்கே வந்திருக்கலாமென்று..."

"இங்கே வந்ததாக யார் சொன்னது?" பிள்ளை கடுப்பாகக் கேட்டான்.

"வாசுதேவன் தம்பிதான் சொன்னார்..."

பிள்ளை அடங்கினான்.

"இங்கே அவர் வரவில்லை... அதோடு வேறெங்கும் போக வழியும் இல்லை..." என்றான். வேறு எங்கும் என்று அவன் குறிப்பிட்டது பாருக்குட்டியின் வீட்டை! வழக்கமாக அங்கே போகவேண்டும் என்றால் வர்மா, இங்கு வந்து பிள்ளையைத் துணைக்கழைத்துப் போவான்... அதனால்தான் குருப்பிடம் பிள்ளை அவ்வளவு நிச்சயமாகச் சொன்னான்... ஆனால் குருப் சமாதானமடைந்து விடவில்லை. இவனைக் கூப்பிடாமல் தம்பிரான் நேராக அங்கே போய்விட்டிருந்தால்?

"அங்கேயும் இல்லை... இங்கேயும் இல்லையென்றால் அவர் நிச்சயம் அந்த இடத்திற்குத்தான் போயிருக்க வேண்டும்.. துணைக்கு வா... நாம் இருவரும் அங்கே போய்ப் பார்த்துவிட்டு வருவோம்!" என்றான் குரூப்.

"நீயே போய் உன் எஜமானைப் பார்த்துக்கொள்... எனக்கு வேறு வேலையும் இருக்கிறது... அதில்லாமல் பகல் நேரத்தில் அங்கே எப்படிப் போக முடியும்?" என்றான் பிள்ளை.

அவன் நிச்சயம் தன்னுடன் வரமாட்டான் என்பதைக் கண்ட குரூப், நேராக பாருக்குட்டியின் வீட்டை நோக்கி நடந்தான்.

போயும் பலனில்லை.

"இங்கேயும் அவர் வரவேயில்லை" என்று பாருக்குட்டி நிச்சயமாகச் சொன்னாள்...

"பின் எங்கே போயிருப்பார்? என்ன நடந்திருக்கும்?" குரூப் யோசித்தான்... அங்கே சில நிமிடங்கள் தங்கினான்... பிறகு திரும்பி நடந்தான்...

வேகமாக நடந்தவன், எழமத்தூர் இல்லத்தின் முன்னால் இருந்த ஆலமரத்தடியில் வந்து நின்றான்...

சூரியன் உச்சியில் தகித்துக் கொண்டிருந்ததால் நல்ல வெயில்!

பாருக்குட்டியின் வீட்டில் அவன் சாப்பிட்ட ஒரு டம்ளர் சாராயம் கொடுத்த தெம்பில் இதுவரை நடந்து வந்துவிட்டான். வெயிலின் பயங்கரம் அவனை மேலே நடக்கவிடாமல் செய்யவே, ஆலமரத்தடியில் சற்று நேரம் அமரலாம் என்று முடிவு செய்து உட்கார்ந்தான்.

உட்கார்ந்த இடத்திலிருந்து எழமத்தூர் இல்லத்தின் முன்புறம் நன்றாகத் தெரிந்தது.

முன் வாயிலில் ஒரு கதவு இல்லை.



நிலை ஒரு பக்கமாகச் சாய்ந்திருந்தது. வருடங்கள் பல ஆகிவிட்ட காரணத்தினால் வாயிலின் தென்புறத்தில் செவ்விளநீர் குலை குலையாகக் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தன... இது இங்கே இருப்பதால் யாருக்கு லாபம்? முதிர்ந்தும், இளசுமாகத் தொங்கிக் கொண்டிருந்த அந்த இளநீர்களை யாரும் வந்து எடுக்கவே பயந்தார்கள்... அவை இருந்த இடம் அப்படி! எழமத்தூர் இல்லத்தில் அல்லவா அவை இருக்கின்றன?

குரூப்பின் கண்கள் இளநீர்க் குலைமீது நிலைத்தன. வெயில்... சாராயத்தின் வேகம்.... தொண்டை காய்ந்திருந்தது... இளநீரைப் பார்த்தவுடன் தாகமும் தானாக வந்தது...

எப்போதும் அவன் இடுப்பில் கத்தி இருக்கும்... உள்ளே இருந்த சாராயத்தினால், மனத்தில் பயம் இல்லை...

குரூப் மரத்தை நோக்கி நடந்தான்....

நல்ல காயாகப் பார்த்து ஒன்றைப் பறித்து சீவினான்... நீரைக் குடித்தான்... நீர் தேனாக இனித்தது. சுகமான ஓர் ஏப்பம் தானாக வந்தது. நீரைக் குடித்தபிறகு, உள்ளே இருக்கும் தேங்காயை எடுத்துச் சாப்பிடுவதுதானே முறை...?

வீட்டுத் திண்ணைமீது மோதி அதை உடைத்தான். தேங்காய் இரண்டானது. ஒரு பகுதி எகிறிப் போய் வீட்டின் முற்றத்தில் விழுந்தது. அங்கே விழுந்துவிட்டதால் அதை விட்டுவிட முடியுமா?

குரூப் அதை எடுக்கப் போனான்.

அப்போது அவன் கண்களில் ஒரு குடை தென்பட்டது. அதைப் பார்த்த மாத்திரத்தில் அது யார் குடை என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது.

அது சேகரவர்மாவின் குடை!

அவனைவிட்டு எப்போதும் பிரியாதது.

அது அவன் முதலாளியின் குடை என்பதில் சந்தேகமே இல்லை.

இது மட்டும் ஏன் இங்கே கிடக்கிறது? குரூப் யோசித்தான். சுவரில் சாய்தவாறு அவன் கண்களை நாலா பக்கமும் ஓட்டியபோது, உள் வாசல் ஒன்று திறந்திருந்தது. அவன் கண்களில் பட்டது... அதைப் பார்த்தவுடன் அவன் மூளையில் பளிச்செனத் தோன்றியது ஓர் எண்ணம்.

சுட்டாயம் சேகரவர்மா இங்கே தான் இருக்க வேண்டும். குடை இங்கே கிடக்கிறது... அங்கே அறை திறந்திருக்கிறது. ஆள் அரவமே இல்லாத இடம்... வர்மா இங்கே இருப்பதற்கு இதைவிட சாட்சி வேண்டுமா? யாரோ ஓர் அழகான பெண் மிகவும் சௌகரியமாக வர்மாவிடம் கிடைத்திருக்கிறாள்.

அவளை இங்கே இழுத்துக் கொண்டு வந்து விட்டான்...!

பெண்கள் விஷயத்தில் வர்மா மிகவும் பலவீனமானவன் என்று குரூப்புக்குத் தெரியும்...

சில வினாடிகள் இந்தச் சிந்தனையில் இருந்த குரூப், அடுத்த படியாக நடக்க வேண்டியதைக் கவனிக்க நகர்ந்தான். மெதுவாக அடிமேல் அடிவைத்து, திறந்திருந்த அறை வழியாக உள்ளே போனான்... அறைக்குள் நுழைந்து சுற்றும் முற்றும் பார்த்தபோது தெற்குப் பக்கம் இருந்த அறை மட்டும் திறந்திருந்ததைக் கண்டான்... அந்த அறையின் இரு கதவுகளில் ஒரு கதவு மட்டும் திறந்திருந்தது.

குரூப் சப்தம் போடாமல், பூனையைப் போல் மெதுவாக அடியெடுத்து வைத்து அந்த அறையை நோக்கி நடந்தான்... அங்கே சென்றவுடன் மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தான்... முதல் பார்வையிலேயே அவனுக்கு அதிர்ச்சி! அறையின் ஜன்னல் திறந்திருக்க, அதன் வழியாக வந்த வெளிச்சம்... அறையில் இருந்த கட்டிலின் மீது விழுந்தது... சேகரவர்மா கட்டிலில்



கிடந்தான். தைரியமாக உள்ளே நுழைந்த குரூப், தன் எஜமானன் படுத்திருந்த நிலை கண்டு பயத்தால் "அய்யோ!" என்றான். உடல் 'வெட வெட' வென நடுங்கியது. எஜமான் நிர்வாணமாகக் கிடந்தான்.

அவன் மார்பு பிளந்திருந்தது. ரத்தம் கசிந்து உறைந்திருந்தது. அவன் கண்கள் பேயைப் பார்த்தது போல் வெளியே துருத்திக் கொண்டு நின்றன. குரூப் மெதுவாக தன் பார்வையைக் கீழே இறக்கினான்.

வர்மாவின் இரு தொடைகளிலும் இரத்தம் கட்டியாக உறைந்திருந்தது. தொடைகளில் சதை பிடுங்கப்பட்டு இருந்தது.

அவன் இறந்து கிடந்தான் என்பது குரூப்புக்குப் புரிந்து விடவே, வேகமாக வெளியே ஓடினான். ஓடியவன் வேறெங்கும் நிற்கவே இல்லை. நேராகப் போய் சேகரவர்மாவின் வீட்டில்தான் நின்றான்...! வியர்க்க விறுவிறுக்க அவன் வர்மாவின் தந்தையை அழைத்தான்.

எடுத்த எடுப்பில் விஷயத்தைச் சொல்ல முடியாமல் தடுமாறினான். வார்த்தைகள் தொடர்ச்சியாக வெளிவரவில்லை. பேச முற்படும்போது நாக்கு உள்ளே இழுத்துக் கொள்வது போலிருந்தது...

சில நிமிடங்கள் ஆயினும் எப்படியோ ஒரு மாதிரியாகச் சமாளித்துக் கொண்டு, தான் எழமத்தூர் இல்லத்தில் பார்த்ததைச் சொன்னான் குரூப்!

பதற்றப்படாமல், அவன் சொன்னதையெல்லாம் மிகவும் நிதானமாகக் கேட்ட வர்மாவின் தந்தை, குரூப்பிடம் கேட்டார்..

"இதை வேறு யாரிடமாவது சொன்னாயா?"

"தம்பிரான் பிணத்தைப் பார்த்தவுடன் நான் நேராக இங்கேதான் வருகிறேன்..."

"நல்லது... இனி யாரிடமும் அதைப்பற்றிச் சொல்லாதே... பேசாதே.. இந்த விஷயம் யாருக்கும் தெரியவும் வேண்டாம்... அதே சமயத்தில் ஒருவருக்கும் தெரியாமல் பிணத்தை மட்டும் இங்கே கொண்டு வந்துவிட வேண்டும். நமது வீட்டிலிருந்து இரண்டு ஆட்களை உனக்குத் துணையாக அழைத்துக் கொள்... மாட்டு வண்டியை எடுத்துக் கொண்டு போ... அவனை வண்டியில் போட்டு, இருபக்கமும் வைக்கோலைப் போட்டு நன்றாக மூடியபிறகு, வண்டியை இங்கே ஓட்டிக்கொண்டுவா. வழியில் யாரிடமும் பேசாதே. வேலைக்காரர்களிடமும் சொல்லிவை... ஜாக்கிரதை... எல்லாமே ரகசியமாக இருக்கட்டும்..."

குரலில் வருத்தம் தொனிக்க பெரிய தம்பிரான் சொன்னது போலவே குரூப் எல்லாவற்றையும் தயார் செய்துகொண்டு புறப்பட்டான்.

ஆலமரத்தடியில் வண்டியை நிறுத்தி, அதற்குக் காவலாக ஒருவனை நிறுத்திவிட்டு, இன்னொருவனுடன் குரூப் உள்ளே சென்றான்.

உள்ளே செல்லுமுன் பாருக்குட்டி அந்த வழியில் வருவதைப் பார்த்தான். பாருக்குட்டி மிகவும் பிரமாதமாக ஆடை அணிந்து கொண்டிருந்தாள். பக்கத்தில் உள்ள பட்டினத்திற்குப் போகும் பழக்கம் அவளுக்கு.

"வர்மாவைப் பற்றி ஏதாவது தகவல் தெரியுமா குரூப் அண்ணா?" என்று அவள் இவனைப் பார்த்துக் கேட்டாள்.

குரூப் தன் அருகில் இருந்தவனைப் பார்த்துவிட்டு.... பாருக்குட்டியை நோக்கிக் கண்ணடித்தான்... ரகசியமாக இருக்கும்படி!

"இங்கே வா குரூப் அண்ணா. உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும்!" என்று அவள் அழைக்க குரூப் அவளருகே சென்றான்.



முதலில் கேட்ட அதே கேள்வியை மிகவும் ரகசியமான குரலில் திரும்பவும் கேட்டாள்.

"தம்பிரான் விஷயமாக ஏதாவது தகவல் உண்டா?"

"இல்லை... ஒன்றும் தெரியவில்லை..." இவன் பதில்.

"நீங்கள் ஏன் இந்த இடத்தில் வந்து இப்படிச் சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை... சும்மா தான்... சரி.. நீ போகலாம்."

"இல்லை... எனக்கு அவசரம் இல்லை... நீங்கள் இங்கேயே இருக்கச் சொன்னால் இருக்கிறேன்..." என்றாள்.

"இவள் இங்கிருந்து போக மாட்டாளோ..." என்று குரூப் நினைத்தான். சங்கடப்பட்டான். ஒரு வழி தோன்றியது.

"நீ இப்போது போய் வா... நான் மாலை வந்து உன்னைப் பார்க்கிறேன்..." என்றான்.

"கட்டாயமாக வா... நான் காத்திருக்கிறேன்" என்று சொல்லியவாறு பாருக்குட்டி நகர்ந்தாள்.

வேறு யாரும் அந்த வழியில் வந்துவிடக்கூடாது என்கிற பயத்தில் குரூப்பும், மற்ற வேலைக்காரனும் உள்ளே நுழைந்தார்கள்.

உள்ளே இருப்பதைப் பார்த்து நீ பயப்படாதே. இதோ இந்தத் துணியால் பிணத்தை நன்றாக மூடி எடுத்துக் கொண்டு வா... வெளியில் போய் விடாதே. வாயிலில் நில்.. வண்டிக்கருகில் இருக்கும் சேக்குட்டி கையை ஆட்டியபிறகு நீ வெளியில் வரலாம்..." என்று சொல்லியவாறே குரூப் அந்த வேலைக்காரனின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு போனான்... குரூப் நடுங்கிக் கொண்டிருந்தது வேலைக்காரனுக்குத் தெரிந்தது. மெதுவாக நடந்து முதலில் அறைக்குள் தலையை எடுத்து வைத்த குரூப் திடுக்கிட்டான்...

27920

கட்டிலில் சேகரவர்மாவின் பிணத்தைக் காணவில்லை.. அறை இருட்டாகி இருந்தது... உள்ளே ஏதோ பறவை சிறகடித்துப் பறப்பது போன்ற சப்தம் அவர்கள் காதில் விழுந்தது.

குருப்புக்கும் வேலைக்காரனுக்கும் வர்மாவின் பிணத்தை அங்கே காணோம் என்றவுடன் மனத்தில் அதிர்ச்சியும் கவலையும் ஒருசேரத் தோன்றின... முதலில் இங்கே வந்து பார்த்துப் பயந்தபோது இதே இடத்தில் கிடந்த வர்மாவின் பிணம், அவன் வெளியே போய்த் திரும்பி வருவதற்குள் எங்கே போயிருக்கும்?

பிணத்தை எடுத்துக் கொண்டு போய் யார் என்ன செய்யப் போகிறார்கள்?

குருப் யோசித்தான்...!

இதைப் போய் பெரியவரிடம் எப்படிச் சொல்வது? தனது மகன், ஆள் அரவமில்லாத இடத்தில் பிணமாகக் கிடக்கிறான் என்று குருப் சொன்னது பொய்தான் என்று முடிவு கட்டிவிடுவார்.

சொந்த மகனைப் பற்றி அவதூறாகச் சொல்லி, அவன் பொய் பேசிவிட்டதாக நினைத்து, குருப்பை பெரியவர் சாட்டையினால் அடித்து நொறுக்கினாலும் நொறுக்கி விடுவார்.

"என்ன குருப் இப்படித் திகைத்துப் போய் நிற்கிறாய்? நாம் வந்த காரியம் என்னவாயிற்று?" என்று அருகில் இருந்த வேலைக்காரன் கேட்டான்.

"என்னடா பாச்சா... அதைப் பற்றித்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்... இப்போது பிணத்தை எங்கே கண்டுபிடிப்பது?" என்று கேட்டான் குருப்...

"நீ நிஜமாகவே பிணத்தைப் பார்த்தாயா?"

"அடே... நீ என்ன இப்படிக் கேட்கிறாய்? பார்க்காமலா இங்கே வருவேன்? இனி நான் என்ன செய்வது?" என்று கேட்டுக் கொண்டே குருப் அந்த அறையை விட்டு வெளியே வந்தான்...



அங்கே இருந்த எல்லா அறைகளையும் பார்த்தான்.

யாவும் திறந்து கிடந்தன...

எங்கேயும் வர்மாவின் பிணம் இல்லை.

குருப் வெளியே வந்து ஆலமரத்தடிக்குப் போனான்...

"போகலாம்... இங்கே நடந்ததைப் பெரியவரிடம் போய்ச் சொல்லலாம்" என்று மூவருமாகக் கிளம்பினார்கள்.

"இப்போது நாம் அங்கே போனால், இளைய தம்பிரான் நமக்கு முன்னால் அங்கே இருப்பார்...!" என்றான் பாச்சா...

"அப்படி எதுவும் நடந்து விடாது. நடந்தால் காக்காய் மல்லாந்துதான் பறக்க வேண்டும்" என்றான் குருப்... நடக்காத விஷயத்தை இப்படிக் குறிப்பிட்டான் அவன்...

பெரியவரிடம் சென்று தான் பார்த்தது அவ்வளவும் நிஜம் என்று சத்தியம் செய்து சொன்னான் குருப்..

"அப்படியென்றால் பிணம் எங்கேயடா போய்விட்டது?" என்று கேட்டார் பெரியவர்.

"அதுதானே எனக்குப் புரியவில்லை...!" என்றான் குருப்.

"அவன் வருகிறானா இல்லையா என்று நான் சற்று பொறுத்துப் பார்க்கிறேன்... அதற்குப் பிறகு என்ன செய்வது என்று யோசிக்கலாம்..." என்றார் தம்பிரான்.

சேகரவர்மாவின் மறைவு குறித்து யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

"வெளியில் தெரியவேண்டாம்" என்று பெரியவர் சொல்லிவிட்டதால் விஷயம் அப்படியே அமுங்கிவிட்டது.

மாலை நேரமாகியது... வாசுதேவன் தம்பிக்கு மனத்தில் தானாகப் பயம் ஏற்பட்டது.

## அத்தியாயம் - 3

முதல் நாள் இரவு கார்த்திகா, அவன் எதிரில் வரவில்லை, மேலும் அவன் மனைவி ஓமனாவும் இரவு அவனிடம் வரவில்லை. "ஏன் என் அறைக்கு வரவில்லை" என்று தன் மனைவியிடம் இவன் காரணம் கேட்கவில்லை. எதற்காகக் கேட்பது?

ஒருவேளை ஓமனாவாக வருவது கார்த்திகாவாக இருந்து விட்டால்?

ஈஸ்வரா! அதை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. உடல் நடுங்கியது. அன்று சொல்லி வைத்தாற்போல் பேசுவதற்குக்கூட யாரும் அவனிடம் வரவில்லை.

தன் வீட்டின் திண்ணையில் தம்பி தனியாக அமர்ந்திருந்தான். அப்போது ஓமனா கையில் விளக்கோடு வெளி முற்றத்திற்கு வந்தாள்.

அங்கே இருந்த துளசி மாடத்தின் அருகே சென்ற அவள் மெதுவாக 'தீபம் தீபம்' என்று சொல்லிவிட்டு விளக்கை மாடத்தில் வைத்து விட்டு வீட்டிற்குள் போனாள். போகுமுன், தம்பியை ஒரு தடவை ஆழமாகப் பார்த்து விட்டுப் போனாள்.

வெளியே நிலா காய்ந்து கொண்டிருந்தது. நல்ல வெளிச்சம். நிலா வெளிச்சம் துளசியின் தளிர்கள் மீது விழுந்தபோது, அலையும் சிறு விளக்குகள் போல மின்னின!

ஆனால் மாடத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டது. திரியிலிருந்து புகை மெதுவாகக் கிளம்பி உயரே எழும்பியது.



அப்புகை துளசியின் பல்வேறு கிளைகளுக்கிடையே புகுந்து வந்தபோது புகை பல பக்கத்திலிருந்து வருவது போலவே தெரிந்தது.

"அண்ணா சாப்பாடு தயார், சாப்பிட வருகிறாயா?"

தங்கை சந்திரிகா அண்ணனிடம் கேட்டாள்.

அமைதியாக இருந்த இடத்தில் திடீரென அவள் குரல் எழும்பியது அவனைத் திடுக்கிட வைத்தது.

சமாளித்துக் கொண்டான். எழுந்து உள்ளே போனான்.

அங்கே மனைவியும், தங்கையும் இருந்தனர்.

"நேற்றும் ஓமனாவுக்குப் பயங்கரத் தலைவலி" என்றாள் சந்திரிகா..

தம்பி நிமிர்ந்து தன் மனைவியைப் பார்த்தான்.

அவளிடம் இப்போது வெட்கம் இருக்கவில்லை. அவனைப் பார்த்து சிரித்தாள்.

"இப்போது ஒரு தொந்தரவும் இல்லையே?" என்று ஓமனாவின் இடுப்பைக் கிள்ளிக் கொண்டே கேட்டாள் சந்திரிகா! அதற்குப் பதில் இல்லை.

இதைப் போன்ற பேச்சுகளைப் பேசுவதற்கு சந்திரிகா எப்போதும் வெட்கப்பட்டதில்லை.

"நேற்றும், அதற்கு முன் தினமும் நாள்கள் நன்றாக இல்லை. பரணி, இன்று கார்த்திகை.. நல்ல நாள்..." என்றாள் சந்திரிகா...

"கார்த்திகை" என்று கேட்டவுடன் தம்பிக்கு உள்ளுக்குள் அதிர்ச்சி. பயந்து போனான்... ரோமம் சிலிர்த்துக் கொண்டது.

சாப்பிட்டுக் கொண்டிருந்த அவன், இதனால் பாதியில் நிறுத்திவிட்டு எழுந்து கை கழுவிக் கொண்டு வெளியேறினான்.

பின்னர் சந்திரிகா சொன்னாள்.

"இரண்டு நாள்கள் அண்ணனுக்கு அண்ணி மீது கோபமாக இருக்கும்.. அந்தக் கோபமெல்லாம் இன்றிரவு சரியாகி விடும்" என்றாள்.

ஓமனா, அவள் சொல்வதைக் கேட்டு வெட்கப்பட்டாள். சந்திரிகா அவள் பக்கம் திரும்பினாள்.

"சமாதானத்திற்கு நான் ஒரு வழி சொல்கிறேன் கேட்டுக்கொள்.. இரண்டு நாள்கள் நீ அறைக்குள் போகாததற்காக, இன்று சற்று முன்னதாகவே அங்கே போய்ப் படுத்துக் கொள். அவன் வரும்போது படுக்கையில் ஆள் இருந்தால் கோபம் காணாமற்போய்விடும்.."என்றாள்.

இதைக் கேட்ட ஓமனாவுக்குக் கோபம் வந்தது.

"இந்தச் சந்திரிகாவுக்கு கொஞ்சம்கூட வெட்கமே இல்லை!" என்று அவள் முணுமுணுத்துக் கொண்டாள். பிறகு இருவரும் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சந்திரிகாவுக்குத் தூக்கம் வந்தது.

"அண்ணி! நான் சொன்னதைப் போல், உள்ளே போய் படுத்துக் கொள். எனக்குத் தூக்கம் வருகிறது' என்று கூறி ஓமனாவை வாசுதேவன் தம்பியின் அறைக்குள் அனுப்பிவிட்டு சந்திரிகா தன் படுக்கை அறைக்குள் போனாள்.

கடிகாரத்தில் மணி ஒன்பது அடித்தது.

அந்தப் பெரிய கட்டடத்தில் அச்சப்தம் நாலாபக்கமும் எதிரொலிப்பதாகத் தெரிந்தது. அப்போதும் தம்பி வெளியில் திண்ணையில்தான் அமர்ந்திருந்தான்..

உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் விளக்கையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

சொந்த வீடாக இருந்த போதிலும் அவனுக்கு உள்ளே போக பயமாக இருந்தது.



ஓமனா வெள்ளைப் பட்டு விரித்த படுக்கையில் இடக் கையை தலைக்கு முட்டுக் கொடுத்தவாறு படுத்துக் கொண்டிருந்தாள்..

இடையில் முண்டும், மேலே ரவிக்கையும் மட்டும் அவளது உடலை மூடியிருந்தன.

இதுவரை கணவனின் அணைப்பையே அறியாத ஓமனா படுக்கையில் படுத்தவாறே, கணவனின் காலடி ஒலி கேட்கிறதா என, காதைத் தீட்டி வைத்துக்கொண்டு காத்திருந்தாள்.

தம்பியின் அழகும், தேக்குப் போன்ற உடலமைப்பும் அவளது மனத்தில் பதிந்து, அவளை இன்ப வேதனையில் ஆழ்த்தின!

உள்ளத்தில் ஆர்வம் வெள்ளமாகப் பொங்கி எழுந்து கொண்டிருந்தது.

எப்போது தனது கணவனின் அணைப்பில் விழுவோம் என்று ஆவலுடன் காத்திருந்தாள்..

நேரம் ஆக.. ஆக.. தொடர்ச்சியாக கடிகாரத்தில் மணிச் சப்தம் கேட்டுக் கொண்டே இருந்தது....

ஓமனா அதை எண்ணவே இல்லை. பலதடவை மணி அடித்துக் கொண்டேயிருக்க, ஓமனா படுத்துக் கொண்டே இருந்தாள்...

'ஜல்...ஜல்...' என்று கால் கொலுசின் சப்தம் போலக் கேட்டது.

அரைத் தூக்கத்தில் இருந்த ஓமனா தன் கண்களை நன்றாகத் திறந்தாள்...

கோல் விளக்கில் எண்ணெய் இல்லாததால் அது லேசாக மட்டும் எரிந்து கொண்டிருந்தது....

அந்த வெளிச்சத்தில் 'மசமச'வென ஓர் உருவம் தெரிந்தது. தெளிவாக இல்லை.

சுற்றிலும் புகை இருப்பது போலவும், அதற்கு நடுவே அந்த உருவம் நிற்பது போலவும் காட்சி அமைந்திருந்தது.. நெருப்புத் துண்டுகள் வளைய வருவது போலவும், மின்மினிப் பூச்சிகள்

பறப்பது போலவும் அவற்றின் நடுவே இந்த உருவம் நிற்பது போலவும் ஓமனாவுக்குத் தெரிந்தது.

தான் ஏதோ மாயா லோகத்துக் காட்சிகளைப் பார்க்கிறோமோ என்று யோசித்துக் கொண்டே படுத்திருந்தாள் ஓமனா.

அவள் அந்த உருவத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

திடீரென மின்மினிப் பூச்சிகள் ஒரே இடத்தில் நிலைத்தது போல இரு கண்கள் நெருப்புத் துண்டங்களாகக் காட்சியளித்தன.

கறுத்த புகை போன்று இருந்த அவ்வுருவத்திற்கு கண்கள் மட்டும் அக்னித் துண்டங்கள்.

எட்ட இருந்த அந்த உருவம் மெதுவாக ஓமனாவை நெருங்கி வந்தது...

"ஓ!" என்று அலறி சப்தம் போடலாம் என்று ஓமனா குரலெடுத்தபோது, சப்தம் எழவே இல்லை.

தொண்டைக்குள்ளேயே அடங்கி விட்டது.

அவள் அருகில் வந்த அவ்வுருவம் மெதுவாகக் குனிந்தது.

இருள் தன் போர்வையைக் கழற்றி எறிந்தாற்போல், அந்த உருவத்தின் தலைமுடி மொத்தமாக ஓமனாவின் மீது விழுந்தது.

அக்னிக் கண்கள் அவள் முகத்தை உற்று நோக்கின.

திடீரென ஒரு சிரிப்பு... கண்ணாடித் துண்டுகளை அள்ளி வீசியது போல!

உடலை ஊடுருவும் பயம் தோன்றும் சிரிப்பு அது!

சிரித்தபோது வாயில் கூர்மையான பற்களைக் கண்டாள்...

குனிந்த அடுத்த வினாடி... அவ்வுருவம் ஓமனாவை அலக்காகத் தூக்கி, தலைக்கு மேல் கொண்டு போய், 'கர கர' வென நான்கைந்து சுற்றுகள் சுற்றியபிறகு 'பொத்'தென்று கீழே போட்டது. நல்ல வேளையாக ஓமனா தன் படுக்கையிலேயே



விழுந்தாள். விழுந்த பிறகு மீண்டும் பயத்தோடு ஓமனா அந்த உருவத்தைப் பார்த்தாள்.

உருவம் அங்கேதான் நின்று கொண்டிருந்தது...

"நீ அவனோடு குடும்பம் நடத்த வந்திருக்கிறாயா? எப்படிக் குடும்பம் நடத்துகிறாய் என்று பார்க்கிறேன்... இப்போது என்ன நடந்ததென்று பார்த்தாயல்லவா? உம்... போய்விடு இங்கிருந்து!" அது கர்ஜிக்கவே ஓமனா படுக்கையிலிருந்து வாரிச்சுருட்டி எழுந்து பயத்தோடு வெளியே ஓடினாள்.

"அய்யோ... என்னைக் கொல்லுகிறார்களே..." என்று ஓமனா சப்தம் போட்டாள்...

தனி அறையில் படுத்திருந்த சந்திரிகா இந்தச் சப்தத்தைக் கேட்டு உள்ளே ஓடி வந்தாள்..

தம்பியும் எழுந்து உள்ளே ஓடி வந்தான்.

"என்ன நடந்தது?" மனைவியிடம் கேட்டான்...

"பேய்.. பேய்...! என்று கத்தினாள் ஓமனா...

"அண்ணிக்கு அப்படி ஒரு பயம்" என்றாள் சந்திரிகா...

"இல்லை... இல்லை.. உள்ளே அது இருக்கிறது..!" என்றாள் ஓமனா வீரிட்டபடி..

"உள்ளேயா? யார் இருக்கிறார்கள் என்று நானே போய்ப் பார்க்கிறேன்" என்று சந்திரிகா விளக்கை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்..

போனவள்.... அங்கிருந்தபடியே கத்தினாள்...

"அண்ணி, இங்கே யாருமே இல்லையே"

"இல்லை.. இல்லை அது அங்கேதான் இருக்கிறது" என்றாள் ஓமனா, சப்தத்தோடு.

"அண்ணி, இங்கே வந்து பாருங்கள்... ஒன்றுமே இல்லை. நீங்கள் தனியாக இருக்கும்போது ஒருவேளை அப்படித் தோன்றியிருக்கும்..

சந்திரிகா இவ்வளவு பேசியும் ஓமனா உள்ளே போக பயந்தாள்.

ஆனால் சந்திரிகா விடவில்லை.

"அண்ணி இங்கே வாருங்கள்" என்று வெளியே வந்து சந்திரிகா அவளை அழைத்துக்கொண்டு உள்ளே போனாள்... கட்டிலில் படுக்க வைத்தாள்.

தான் ஒருவேளை கனவுதான் கண்டிருக்கக்கூடும்... என்று நினைத்துக் கொண்டே ஓமனாவும் படுக்கையில் நன்றாகப் படுத்தாள்.

"அண்ணியைத் தனியே விடாதே" என்று தம்பியைப் பார்த்துச் சொல்லிவிட்டு அவனை உள்ளே அனுப்பிவிட்டு சந்திரிகா தன் அறைக்குப் போனாள்.

தம்பி உள்ளே நுழைந்த அடுத்த வினாடி, அரை ஜீவனுடன் எரிந்து கொண்டிருந்த விளக்கு, யாரோ ஊதி விட்டதைப் போல் 'பட்'டென்று அணைந்தது.

அதே சமயத்தில்...

"அய்யோ... யாரோ... என்னைக் கொல்லுகிறார்களே' என்கிற சப்தம் கட்டிலிலிருந்து வந்தது. ஓமனா தான் கத்திக் கொண்டிருந்தாள்.

இந்தச் சப்தத்தைக் கேட்டவுடன், தம்பி நெருப்புப் பெட்டியைத் தேடிக் கொண்டே, "என்ன... என்ன?" என்று கேட்டான். அவன் குரலில் பதற்றம் தெரிந்தது. அந்த சமயத்தில் மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த குத்துவிளக்கு கீழே விழுந்தது.

இவன் குரல் எழும்பியவுடன் கட்டிலிலிருந்து எந்தவிதமான சப்தமும் வரவே இல்லை.



விளக்கு கீழே விழுந்து அணைந்து விட்டதால் அறையில் நன்றாக இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. தம்பிக்கு ஏற்பட்டிருந்த அதிர்ச்சியால் ஏதுமே புரியவில்லை. அவன் எதேச்சையாக ஜன்னல் பக்கம் திரும்பியபோது, அங்கே யாரோ நிற்பது போல் தெரிந்தது... "யாரது?" என்று கேட்டுக் கொண்டே தம்பி ஜன்னலருகே மெதுவாக நகர்ந்தான். அதற்குள் அந்த உருவம் 'சட்'டென்று மறைந்துவிட்டது. தம்பி நெருப்புப் பெட்டியை எடுக்க நாலாபக்கமும் நிதானமாகத் தேடினான்.

அதே சமயத்தில்...

"அய்யோ! என்னைக் கொல்லுகிறார்களே..." என்று சப்தம் போட்டுக்கொண்டே, ஓமனா படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள். "பயப்படவேண்டாம்.. நான்தான்" என்று தன் மனைவிக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டே தம்பி விளக்கைப் பற்றவைத்தான். ஓமனா படுக்கையில் மீண்டும் படுத்துக்கொண்டவள் போல இருந்தாள். அவன் விளக்கை அவள் பக்கம் திருப்பியபோது அவளது முகம் தலையணையில் அழுந்தியிருந்தது.

"பயப்படாதே ஓமனா. இதோ நான் தான்!" என்று சொல்லிக்கொண்டே அவள் தோளைப் பிடித்துத் திருப்பினான் தன் பக்கமாக!

அவன் திருப்பியதால், அவளும் தன் முகத்தை அவன் பக்கம் திருப்பினாள்.

அதைப் பார்த்த தம்பி...

"அய்யோ என் பகவதியே!" என்று பயங்கரமாகக் கூச்சல் போட்டுவிட்டான். முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சௌந்தர்ய தேவதையாக இருந்த ஓமனாவின் முகம் பல்லிளிக்கும், வெறும் மண்டையோடாகக் காட்சியளித்தது அவன் கண்களுக்கு!

கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு குழிகள். மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் முக்கோணம் போன்ற குழி. அவன் அலறியதைக் கேட்ட அவள், "என்ன ஆயிற்று?" என்று கேட்டபடியே கட்டிலிலிருந்து எழுந்தாள்.

அவள் எழுந்த சப்தத்தைக் கேட்டுத் தம்பி திரும்பினான். அதே தலையுடன் நிமிர்ந்து நின்ற ஓமனாவைப் பார்த்தவுடன் தம்பி, பயந்தவாறு, கதவைத் திறந்து கொண்டு ஓடினான். ஆனால் ஓமனா அவனைப் பின்தொடரவில்லை.

தன் கணவன் அதிகமாக மது அருந்திய காரணத்தினால் எதையோ கண்டு பயந்து ஓடுகிறான் என்று அவள் நினைத்தாள். தன்னைக் கண்டுதான் அவன் பயந்தான் என்று அவளுக்குத் தெரிய நியாயமில்லை. தான் அந்த அறைக்குள் வந்தபிறகு நடந்த சம்பவங்கள் எல்லாம் ஏதோ மர்மம் நிறைந்தனவாயும், அதே சமயத்தில் பயந்து ஆச்சர்யப்படத் தக்கவகையிலும் அமைந்துள்ளனவே, இது எதனால், என அவள் நினைத்தாள்.

முதலில் தான் ஓர் ஆவி ரூபத்தைப் பார்த்தது; அடுத்தபடியாக, இப்போது தன்னைக் கண்டு தன் கணவன் பயந்து ஓடுவது போன்ற விஷயங்களுக்கு என்ன அர்த்தம்? இவற்றுக்கு அடிப்படை என்ன? ஓமனாவுக்குப் புரியவில்லை!

அவள் அங்கே இருந்த விளக்கை எடுத்துக் கொண்டு சந்திரிகா படுத்துக்கொண்டிருந்த அறைக்குள் போனாள். அவள் தூங்கிக் கொண்டிருந்தாள்.

"சந்திரிகா... சந்திரிகா" ஓமனா அவளை அழைத்தாள்.

சப்தத்தைக் கேட்டவுடன் திடுக்கிட்டு வாரிச் சுருட்டிக்கொண்டு சந்திரிகா எழுந்தாள். ஓமனாவைப் பார்த்தாள்.

"என்ன விஷயம்? மீண்டும் பயந்து விட்டாயா?" என்றாள்.

"என்ன ஆயிற்றென்றே எனக்குத் தெரியவில்லை. அவர் அறையை விட்டு வெளியே ஓடிவிட்டார். என்னென்னவோ



எதிர்பாராத சம்பவங்கள் இங்கே நடக்கின்றன. எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது" என்றாள்.

"எல்லாவற்றிற்கும் பரிகாரம் இருக்கிறது. நீ இப்போது இங்கேயே படுத்துத் தூங்கு" என்று சந்திரிகா சொன்னாள்.

பிறகு ஓமனாவும் சந்திரிகாவும் ஒரே கட்டிலில் படுத்துக்கொண்டனர். ஓமனா சந்திரிகாவை கெட்டியாகக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். அந்தப் பிடிப்பில் அவளது பயம் தெரிந்தது.

மறுநாள்...

சேகரவர்மாவின் வீட்டிலிருந்து மீண்டும் குரூப் தம்பியைத் தேடிக் கொண்டு வந்தான். வர்மாவைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை என்று குரூப் சொன்னான்.

"எல்லா இடத்தையும் தேடியாயிற்றா?" வாசுதேவன் கேட்டான்.

"இனித் தேட வேண்டிய இடமே பாக்கி இல்லை" என்று குரூப் சொல்ல, வாசுதேவன் தம்பியின் மனத்தில் கவலை சூழ்ந்தது. சேகருக்காக அவன் துக்கப்பட்டான். தன்னுடைய உயிர் நண்பர்களில் ஒருவனான வர்மா காணாமற்போய்விட்டான். அவனுக்கு என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை! யோசித்தான். மனத்தில் எதையோ தீர்மானித்தவனாய்...

"சரி குரூப், உன்னுடன் நானும் வருகிறேன். இரண்டு பேரும் போய்த் தேடலாம்" என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் போய் உடையை மாற்றிக் கொண்டு வந்து குரூப்புடன் புறப்பட்டான்.

"இப்போது எங்கே போய்த் தேடலாம் என்று நீ நினைக்கிறாய்?" நடந்து கொண்டே கேட்டான் தம்பி.

"எனக்கு மனத்தில் ஒரு சந்தேகம். இதுவரை அதை யாரிடமும் சொல்லவில்லை" என்றான் குரூப்.

"என்ன சந்தேகம்?"

தான் எழமத்தூர் இல்லத்திற்குள் போனதும், அங்கே சேகரின் பிணத்தைப் பார்த்ததும், பிறகு அது காணாமற்போனதும்பற்றி விவரமாக இப்போதுதான் குரூப் வாசுதேவனிடம் சொன்னான்.

இதைக் கேட்டவுடன் சேகரவர்மா எங்கே இருப்பான் என்கிற நம்பிக்கை வாசுதேவன் முகத்தில் துளிர்த்தது.

“”எழமத்தூர் இல்லத்தில்தானே பார்த்தாய்?”

“எனது இரண்டு கண்களால் பார்த்தேன் எஜமானே!” என்று குரூப் சொன்னான்.

“சேகரவர்மா இறந்து கிடந்ததைத் தானே பார்த்தாய்?”

“என்ன எஜமானே இப்படி சந்தேகத்துடன் கேட்கிறீர்கள்? பொய் பேசவேண்டிய அவசியம் என்ன எனக்கு? அதுவும் என் முதலாளியைப் பற்றி!”

“உம்.. என்றான் தம்பி. பிறகு தொடர்ந்து, “சரி.. நாம் எல்லா இடத்திலும் மீண்டும் ஒருமுறை தேடலாம். எழமத்தூர் இல்லத்திலும் தேடலாம்” என்றான்.

போகும் வழியில் இருந்த எழமத்தூர் இல்லத்தின் வாயிலில் இருவரும் காலடி எடுத்து வைத்தார்கள். பல வருடங்களுக்குப் பிறகு இப்போது தான் தம்பி அந்த வீட்டிற்குள் நுழைகிறான். இல்லத்தினுள் காலடி எடுத்து வைத்ததும் ஏதோ குளிர் காற்று தாக்கியதுபோல் தன் உடல் அதிர்வதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. ரோமங்கள் சிலிர்த்தன. உடம்பின் பலம் போய் இலகுவாக ஆகியதைப் போல அவன் உணர்ந்தான்.

இல்லத்தினுள் நுழைந்தவுடன், முதல் வேலையாக “எங்கே சேகரவர்மாவைப் பார்த்தாய்?” என்று அவன் குரூப்பைக் கேட்டான்.

“இதோ இந்த அறைக்குள்” என்று குரூப் ஓர் அறையைக் காண்பித்தான்.



“சரி. இப்போது போய் உள்ளே பார்த்துவிட்டு வா!”

“நான் தனியாகப் போகமாட்டேன். என்னுடன் நீங்களும் வாருங்கள்” என்று குரூப் சொல்ல, அவனுடன் நடந்தான் வாசுதேவன். இருவரும் முன்பு சேகரைக் கண்ட இடத்திற்குப் போனார்கள்.

“இங்கேதான் கிடந்தார்!” என்று குரூப் சொல்லிக் கதவைத் திறக்க– வாசுதேவன் உள்ளே பார்த்தான். அங்கே யாருமில்லை.

“சரி வா. நாம் மற்ற இடங்களையும் பார்த்துவிடலாம்” என்று திறந்து கிடந்த அறைகளையெல்லாம் சென்று பார்த்துவிட்டு, கடைசியாக இல்லத்தின் வெளியே, சற்று ஒதுக்குப்புறமாக இருந்த குளத்தினருகே வந்தார்கள்.

தனக்கேற்பட்ட சொந்த அனுபவங்களை வைத்துப் பார்க்கையில் தன் நண்பன் வர்மாவுக்கு ‘ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் என்று அவன் மனத்திற்குப் பட்டது.

குளத்தினுள் பார்க்கலாம் என்று அவனுக்கு உள்ளுணர்வு ஏற்பட்டது. அதனால்தான் நேராக அவன் இங்கே வந்தான்.

இருவரும் குளத்தருகே வந்தனர். இப்போது குளத்தின் நீர் சற்று தெளிவாக இருந்தது. குளத்தில் இருந்த செடிகள் ஒரு பக்கமாக ஒதுங்கிவிட்டன போலத் தெரிந்தது.

தம்பியின் கவனம் சட்டென ஓர் இடத்தில் பதிந்தது.

“டேய் குரூப், அதோ பார். அந்த ஆம்பல் மொட்டருகில் ஏதோ துணி போலத் தெரிகிறது” என்று சொன்னான் தம்பி.

குரூப் வலப் பக்கம் கரைக்குப் போய் நன்றாகப் பார்க்க, “ஆமாம்! தெரிகிறது. தம்பிரானின் வேட்டி போல் இருக்கிறது” என்றான் குரூப்.

“நன்றாகப் பார். நீளமான ஒரு குச்சியை எடுத்து அதைக் குத்திப் பார்” என்று வாசுதேவன் சொன்னான்.

உடனே குரூப் அதைச் செயலாக்க, அங்கே காய்ந்து கிடந்த, நீளமான கொஞ்சம் பொருத்தமான ஒரு குச்சியை எடுத்து துணியைத் தொட்டுக் குத்திப் பார்த்தான். குச்சி துணியைத் தொட அது உள்ளே போயிற்று.

குரூப்பும் குச்சியை விட்டான். கீழே போய்ச் சேர்ந்ததும் எதன் மீதோ தட்டுப்பட்டது போல் குச்சி நிற்க, குரூப் தன் பலங்கொண்ட மட்டும் அதை இழுக்க, குச்சியில் சிக்கிய வர்மாவின் பிணம் மேலே வந்தது. குரூப் பின்னடைந்தான். இப்படித்தான் இருக்கும் என்று வாசுதேவன் அனுமானித்தது சரியாக இருந்தது.

"குரூப், இப்போது நீ நேராக வர்மாவின் வீட்டிற்குப் போய் விஷயத்தைச் சொல். அவன் குளத்தில் விழுந்து இறந்துவிட்டான் என்று மட்டும் சொன்னால் போதும்" என்றான் தம்பி.

குரூப் தலையை ஆட்டிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

சேகரவர்மாவின் உடல் குளத்திலிருந்து எடுக்கப்பட்டு சகல சடங்குகளுக்குப் பிறகு எரிக்கப்பட்டது.

அவன் இறந்ததற்குக் காரணம் என்னவென்று யாருக்குமே தெரியவில்லை.

வாசுதேவன் தம்பிக்கு மட்டும் மனத்தில் பல சந்தேகங்கள்!

கார்த்திகாவைக் கெடுத்ததில் ஒரு நபரான வர்மாவின் மரணத்தைப் பார்த்ததும், தம்பிக்கு மனத்தில் பயம் அதிகமாகியது.

தன் மரணமும் வெகுதூரத்தில் இல்லை என்று அவனுக்குப் புரிந்தது, தெரிந்தது!

இதற்குத் தக்கவாறு ஏதாவது பரிகாரம் செய்யாவிட்டால், அந்த பிரம்ம ராட்சஸின் பிடியில் சிக்கி மீதமுள்ளவர்கள் ஒவ்வொருவராக இறப்பார்கள் என்று அவன் மனத்திற்குப்பட்டது.

நன்றாக யோசித்தபின் குரூப்பிற்கு ஆள் அனுப்பி வரவழைத்தான் வாசுதேவன் தம்பி.



"நான் உன்னை எதற்காக வரவழைத்தேன் தெரியுமா?" என்று தம்பி கேட்டான்.

"ஏதாவது விஷயமில்லாமல் நீங்கள் என்னை இங்கே அழைக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டு, தம்பி என்ன சொல்லப் போகிறான் என்று கேட்கக் காதைத் தீட்டிக் கொண்டு நின்றான் குரூப்.

"குரூப்! உனக்குத் தெரிந்த வகையில் நல்ல சக்தி வாய்ந்த மந்திரவாதிகள் யாராவது இருக்கிறார்களா?" தம்பி கேட்டான்.

அதைக் கேட்டவுடன் குரூப் அப்படியே அமர்ந்தான்.

"நிதானமாக நன்றாக யோசித்துச் சொன்னால் போதும். உபயோகமில்லாத ஆளைச் சொல்லாதே. எனக்கு மிகவும் சக்தி வாய்ந்த நபர்தான் வேண்டும்."

குரூப் சில விநாடிகள் யோசித்துக் கொண்டிருந்தான். பிறகு சொன்னான்.

"வடக்கே கிளிக்கொல்லூர் வனத்தில் ஒரு வாரியர் இருக்கிறார். அவரது பெயர் சங்கரவாரியரோ என்னவோ! அந்த நபர் ஒரு பயங்கரமான மந்திரவாதி என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் அழைத்தால், காது கொடுத்துக் கேட்காத துர்தேவதையே இல்லை என்று சொல்வார்கள். எதையும் அடக்கும் சக்தி பெற்றவர்.

"பிரம்மராட்சஸை ஒழிக்க அவரால் முடியுமா?"

"என்ன எஜமானே இப்படிக் கேட்டு விட்டீர்கள்?சங்கர வாரியர் நீங்கள் நினைக்கிற அளவுக்கு மோசமானவரல்லர்! அவரால் எல்லாம் முடியும்" என்று குரூப் சொன்னான்.

"அவர் ஏதாவதோர் அற்புதமான மாந்தீரீக வேலையைச் செய்ததை நீ பார்த்திருக்கிறாயா?" தம்பி கேட்டான்.

"கண்டதில்லை என்றாலும் அவரைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றேன் எஜமானே! உங்களுக்கு மட்டமானவனையா நான் சிபாரிசு செய்வேன்? என்னைச் சந்தேகிக்காதீர்கள்!" என்று குரூப் பதில் சொன்னான்.

தம்பியின் மனம் ஓரளவுக்குச் சமாதானமடைந்தது.

"சரி, நாளை நாம் இருவரும் அங்கே போகிறோம். நீ தயாராக வந்து விடு" என்று தம்பி சொல்ல, "வருகிறேன் அவசியம் வருகிறேன்" என்று பதில் சொல்லிவிட்டு குரூப் விடைபெற்றுக் கொண்டான்.

இரவு வந்தபோது ஓமனாவுக்கு பயம் தானாக வந்துவிட்டது. சந்திரிகா எவ்வளவோ சமாதானம் சொல்லியும், அவள், தன் கணவனின் படுக்கை அறைக்குச் செல்ல மறுத்துவிட்டாள். தம்பி, தன் வீட்டு வாசலில் அமர்ந்திருந்தான். அவன் மனம் குழப்பத்தில் இருந்தது.

"அண்ணி, உனக்கு அங்கே போய்ப் படுக்கத்தானே பயம்? போகாதே. என் அறைக்குள் போய்ப் படுத்துக்கொள். நான் உன் அறைக்குப் போகிறேன். எனக்கு எந்தவிதமான பயமும் கிடையாது" என்று ஓமனாவிடம் சொன்ன சந்திரிகா, நேராக ஓமனாவின் அறைக்குப் போய், அங்கே இருந்த மெத்தை, தலையணை, போர்வை எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வந்து இங்கே அவர்களுக்குப் படுக்கை போட்டுவிட்டு, தனது மெத்தை, தலையணை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, ஓமனாவின் அறைக்குப் போனாள்.

நன்றாக வசதியாக அங்கே அவள் படுத்துக்கொண்டாள. தூக்கந்தான் வரவில்லை. கடிகாரத்தில் சரியாக மணி பன்னிரண்டடித்தது.

அதைச் சந்திரிகா கேட்டாள்.



அதே சமயத்தில் ஜன்னலருகே லேசாக ஏதோ சப்தம் கேட்டது போலவே இருந்தது.

ஆடைகளை யாரோ உதறுவது போலவும், பெருமூச்சு விடுவதுபோலவும், விதவிதமான சப்தங்கள்.

"இந்த நேரத்தில் அங்கே இருப்பது யாராக இருக்கும்?" தூக்கம் பிடிக்காத சந்திரிகா யோசித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென குளிர் அதிகமாக இருந்ததால், போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டாள். முகத்தையும் மூடிக் கொண்டால் குளிர் அடங்கும் போல் தெரிந்தது. மூடிக் கொண்டாள்.

மறுபடியும் அந்தச் சப்தம் கேட்டது.

யாரோ அங்கே இருக்கிறார்கள் என்பது நிச்சயமாகிவிட்டது.

சந்திரிகா போர்வையை நன்றாக விலக்கிவிட்டு சப்தம் வந்த ஜன்னல் பக்கம் பார்த்தாள். அது பெரிய ஜன்னல், கம்பி இல்லாதது.

அவள் பயந்து நடுங்கினாள்.

ஜன்னல் வழியாக ஓர் உருவம் புகை மூட்டத்திற்கு நடுவே சாவதானமாக அறைக்குள் நுழைந்தது.

இருந்த இடத்தைவிட்டு சந்திரிகாவினால் எழவே முடியவில்லை. தம் உடம்பில் இருந்த ரத்தம் முழுதும் உறைந்து விட்டதுபோல ஓர் உணர்வு அவளுக்கு அப்போது ஏற்பட்டது. அவ்வளவு பெரிய உருவம் ஜன்னலுக்குள் சுருங்கி, புகைபோல நுழைந்ததைக் கண்டுதான் அவளுக்குப் பயம் அதிகமாகிவிட்டது. காற்றாக மாறி அவ்வுருவம் உள்ளே நுழைந்தது போலவும், பாறைகளுக்கிடையே சிறு மீன் புகுந்து வெளிப்படுவதுபோலவும், அது உள்ளே நுழைந்ததாக அவள் உருவகித்துக் கொண்டாள்.

சந்திரிகா பிரமை பிடித்தவள் போல், சப்தம் போட இயலாமல், அவ்வுருவத்தைப் பார்த்துக்கொணடு இருந்தாள். உள்ளே

நுழைந்து விட்ட பிறகு சற்றுப் பெரிதாகிவிட்ட அவ்வுருவம் மெதுவாக நடந்து, சந்திரிகா படுத்துக் கொண்டிருந்த கட்டில் அருகே வந்து நின்றது.

ஜன்னல் வழியாக வந்த லேசான நிலா வெளிச்சத்தில் அந்த உருவத்தின் முகத்தைப் பார்த்தாள் சந்திரிகா!

அவள் திடுக்கிட்டு.. பயத்தால் உறைந்தாள். வந்திருந்தது கார்த்திகா அந்தர்ஜனம்! "தெய்வமே!" என்றாள் சந்திரிகா.

விபத்தினால் குளத்தில் விழுந்து இறந்ததாகச் சொல்லப்பட்ட கார்த்திகா, இப்போது அவள் முன் நின்றாள்.!

"உன்னை இங்கே வந்து படுக்கச் சொல்லியது யார்?" என்று கேட்டது அவ்வுருவம். காய்ந்து கிடந்த இலைச் சருகுகளை ஒருசேர தேய்த்ததுபோல இருந்தது அது பேசிய சப்தம்!

சந்திரிகாவின் ரோமங்கள் வழியாக பயம் உள்ளே நுழைந்தது... பயத்தின் உணர்வு இதயத்தைப் பிசைவது போலிருந்தது.

நடுங்கிக் கொண்டே பேசாமல் கிடந்தாள் அவள்...

அவ்வுருவத்தின் கைகள் நீண்டு வந்தன!

"அய்யோ!" என்று சந்திரிகா சப்தம் எழுப்பும் முன், அந்தக் கைகள் அவளைத் தூக்கி ஜன்னல் வழியாக வெளியே எறிந்தது..

வெளியே வளர்ந்திருந்த சிறு செடிகள்மீது போய் சந்திரிகா விழுந்தாள்...

விழுந்ததும் அவள் சப்தம் போட்டாள். ஆனால் அந்தச் சப்தம் அவளது தொண்டையை விட்டு வெளியே வரவில்லை.

அந்த உருவம் தான் வந்தபடியே வெளியேறிவிட்டது. தூக்கம் வந்த போது வாசுதேவன் தம்பி தன் அறைக்குத் திரும்பி வந்தான். அங்கே கட்டிலில் யாருமே இல்லை.



ஓமனாவைக் கூப்பிட நினைத்த அவன், "சந்திரிகா" என்றான்.

அவனுக்குப் பதில் குரல் வீட்டிற்கு வெளியே இருந்து வந்தது.

தம்பி வியப்படைந்து, விளக்கோடு சப்தம் கேட்ட திசையை நோக்கி நடந்தான். அதற்குள் சந்திரிகா விழுந்த இடத்திலிருந்து எழுந்துவிட்டாள்.

"நான் இங்கே இருக்கிறேன் அண்ணா!" என்று பதறிய குரலில் பதில் சொன்னாள் தங்கை, அண்ணனின் குரலுக்கு. செடிகளின்மீது விழுந்ததால் குச்சிகளினால் ஏற்பட்ட சிராய்ப்புகளைத் தடவியபடியே வந்தாள்.

தம்பிக்கு வியப்பு...

"என்ன ஆயிற்று சந்திரிகா உனக்கு?" தம்பி கேட்டான்.

வராந்தாவின் வழியாக வந்த அவள் வீட்டிற்குள் நுழைந்தாள்.

நடந்ததை அவள் தம்பியிடம் விவரமாகச் சொன்னாள்... அவனுக்குப் புரிந்தது.

"அப்படியா விஷயம்? சரி.. நீயும் ஓமனாவும் ஒரே அறையில் படுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி, சந்திரிகாவை அழைத்துக் கொண்டு போய் ஓமனாவின் அருகில் படுக்க வைத்தான்.

அதற்குப் பிறகு தம்பி, ஏற்கெனவே அமர்ந்திருந்த வராந்தாவிற்கு வந்தான்... விளக்கெண்ணெய் விட்டுத் திரியை வெளியே இழுத்து நன்றாக எரிய வைத்தான்...

அங்கேயே அமர்ந்தவன்... சோர்ந்து... அப்படியே தூங்கிப் போய்விட்டான்...

விடியற்காலையில் கோழி கூவியது கேட்டுத் தம்பி திடுக்கிட்டு விழித்தான். உடம்பெல்லாம் ஒரே வலி!

மணல்மீது படுத்துப் புரண்டது போல முதுகெல்லாம் ஒரே எரிச்சல்.. இங்கே மண் எங்கிருந்து வந்தது? மெதுவாகத் தரையை

கையினால் தடவிப் பார்த்தான்.... சுற்றிலும் இருட்டு... தம்பி ஆர்வத்துடன் எழுந்து உட்கார்ந்திருந்தான்... ஏதோ தரையில் உராய்ந்தபடி ஓடும் சப்தம்... தண்ணீரில் 'கிளக்' என்னும் சப்தத்துடன் குதிக்கும் சப்தம்.

தம்பிக்கு திடீரென மனத்தில் சந்தேகம்.

தான் ஏதோ குளத்தின் அருகில் தான் உட்கார்ந்திருப்பதாக நினைத்தான். கைகளால் தன்னைச் சுற்றிலும் தேடினான். வலக் கைபட்ட இடம், குளத்தின் தண்ணீர்... அதனால் திடுக்கிட்டு இடப்பக்கமாகச் சாய்ந்தான். அருகில் மிகவும் ஆழமான குளம்...!

அதன் அருகில்தான் அவன் இவ்வளவு நேரம் படுத்திருக்கிறான்! திடுக்கிட்டு இடப் பக்கமாகச் சாய்ந்தான்... வலப் பக்கத்தில் சாய்ந்திருந்தால்...?

இந்தக் குளத்தில்தான் கார்த்திகாவின் பிணத்தைக் கொண்டு வந்து அவர்கள் போட்டார்கள்.

தூக்கக் கலக்கத்தில் தம்பி குளத்தில் விழுந்திருந்தால்...

அவனது பிணம் இந்நேரம் அடியில் கிடந்திருக்கும். பிறகு மேலே வரலாம்! அப்போது பார்த்தால் உண்டு... இல்லை என்றால்?

கற்பனையே பயமாக இருந்தது.

அங்கே அமர்ந்தவாறு தன்னைச் சுற்றிலும் ஒரு முறை நன்றாகப் பார்த்தான். இருள் பிரிந்து வெளிச்சம் லேசாக பரவிக் கொண்டிருந்தது... அவன் கண்களில் தூரத்தில் இருந்த எட்டிமரமும்... எழமத்தூர் இல்லத்தின் ஒரு பக்க காம்பவுண்ட் சுவரும் லேசாகத் தெரிந்தன...!

தன்னை யாரோ இங்கே கொண்டு வந்து போட்டிருக்கிறார்கள் என்பதில் அவனுக்குச் சிறிதும் சந்தேகமே இல்லை...! கார்த்திகாவைத் தவிர வேறு யாரும் இந்த வேலையைச் செய்திருக்க மாட்டார்கள்...



எப்பாடுபட்டாவது இந்த பிரம்ம ராட்சசை ஒழிக்காவிட்டால் தனக்கு இனி வாழ்க்கையில் நிம்மதியே இல்லை என்று அவன் நினைத்தான்.

எழுந்து வீட்டிற்கு வந்து வராந்தாவில் மீண்டும் படுத்துத் தூங்கிவிட்டான். சூரிய வெளிச்சம் அவன்மீது நன்றாகப் பட்டபிறகுதான் அங்கிருந்து எழுந்தான்.

அப்போதுதான் சந்திரிகாவும் குளித்துவிட்டு வந்தாள்.

"அண்ணனுக்கு நல்ல தூக்கம் போலிருக்கிறது. நான் பல முறை கூப்பிட்டும் எழவே இல்லை" என்றாள்...

"ஆமாம்! நான் என்னை அறியாமல் அசதியாகத் தூங்கிவிட்டேன்... உம்.. குரூப் வந்தானா?" தம்பி கேட்டான்...

"இல்லை... வரவில்லை" என்று சந்திரிகா சொன்னபோது வெளியில் யாரோ கனைக்கும் சப்தம் கேட்டது. ஓமனா பார்த்துவிட்டு வந்து "யாரோ வந்திருக்கிறார்கள்" என்றாள். குரூப்பாகத்தான் இருக்கும் என்று நினைத்தபடி தம்பி வெளியே வந்தான்... குரூப்தான்!

"என்ன குரூப்... நாம் புறப்படலாமா?" என்று தம்பி கேட்க...

"போகலாம்.. நான் தயாராகத்தான் வந்திருக்கிறேன்" என்றான்...

தம்பி வீட்டிற்குள் சென்று பிரயாணத்திற்கு ஆயத்தமாய் வெளியே வந்தான்...

சந்திரிகாவிடம் சொன்னான்.

"இன்று மாலைக்குள் நான் திரும்பிவிடுவேன். ஒருவேளை வரத் தாமதமானால்... பெரிய கோயிக்கல் வீட்டில் இருக்கும் தாமோதரனின் தங்கைகளில் யாராவது ஒருத்தியை இங்கே அழைத்துக் கொண்டு வந்து துணைக்கு வைத்துக்கொள்..." என்றான்.

சந்திரிகாவும் ஓமனாவும் வெளியில் வந்து நின்று இவர்கள் போவதை வேடிக்கைப் பார்த்தார்கள்.

அவர்கள் போனதும், ஓமனா சந்திரிகாவிடம் பேசினாள்.

"இரவு நீ பார்த்ததும், நான் பார்த்ததும் ஒரே ஆளாகத்தான் இருக்க முடியும்... அது யார்?" என்றாள்.

"அதுவா...? சற்று தூரத்தில் பாழடைந்திருக்கும் எழமத்தூர் இல்லத்தின் கடைசி வாரிசாக இருந்த அப்பெண் அங்கே இருந்த குளத்தில் விழுந்து இறந்து கிடந்தாள்.. அவள் பெயர் கார்த்திகா அந்தர்ஜனம்! அவள்தான் நேற்றிரவு வந்தது!" என்றாள்.

"அவள் யாராக இருந்தால் நமக்கென்ன?... ஆனால் சந்திரிகா.. அவளுக்கு இந்த வீட்டில் என்ன வேலை?

"அதைத்தானம்மா நானும் திருப்பிக் கேட்கிறேன். இங்கே அவளுக்கு எந்த வேலையும் இல்லையே! அவள் ஏன் இங்கு வந்தாள்?" என்று சந்திரிகா ஓமனாவிடமே கேட்டாள்...

"ஒருவேளை நீங்கள் அவளுக்கு ஏதாவது கெடுதல் செய்தீர்களோ?" சந்தேகத்தோடு ஓமனா கேட்டாள்.

"எனக்குத் தெரிய ஏதும் இல்லை. அந்த வீட்டு வேலைகளை எல்லாம் என் அண்ணன்தானே கவனித்துக் கொண்டு இருந்தார்..."

"எது எப்படி இருந்தாலும், நாம் இங்கே தொடர்ந்து வசிக்க வேண்டுமென்றால், ஏதாவது பரிகாரம் செய்து, அந்தப் பெண்ணைக் கட்டிப் போடவேண்டும்" என்று ஓமனா சொல்ல...

"நான் நினைக்கிறேன்... அண்ணனும் குருப்பும் அந்த வேலையாகத் தான் இப்போது போகிறார்கள் போலத் தெரிகிறது..." என்றாள்.

உண்மையே அதுதானே!



வாசுதேவன் தம்பியும், குருப்பும் போய்க் கொண்டிருந்தபோது எழமத்தூர் பகவதி கோயில் அருகே பெரிய கோயிக்கல் வீட்டைச் சேர்ந்த தாமோதர உன்னித்தனைச் சந்தித்தார்கள்...

தாமோதரன், வாசுதேவன் தம்பியின் எல்லாத் திருவிளையாடல்களிலும் கலந்து கொள்பவன்... நண்பன் சேகரவர்மாவைப் போன்றவன்...

"நீங்கள் இருவரும் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" தாமோதரன் கேட்டான்.

"ஒரு வேலை இருக்கிறது... போகிறோம்.. ஆனால் அது பரம ரகசியம்" என்றான் தம்பி...

"அதெப்படி? அதைத் தெரிந்து கொள்ளாமல் உங்களை நான் இங்கிருந்து போகவிடமாட்டேன்..." என்று பிடிவாதம் பிடித்தான் தாமோதரன்.

சொல்லாமல் விடமாட்டான் என்று தம்பிக்கும் தெரியும்.

அதனால் நடந்த சம்பவங்களைக் கொஞ்சமாகச் சுருக்கி வாசுதேவன் தம்பி, அவனிடம் சொன்னான்.

அதைக் கேட்ட தாமோதரன் சிலையானான்!

"ஓ! அப்படியா சமாச்சாரம்?" என்று அவன் வியப்புடன் கேட்கும்போது, மற்ற இருவரும் நெடுந்தூரம் போய் விட்டிருந்தார்கள்.

அங்கே நின்ற தாமோதரன் எழமத்தூர் பகவதியின் கோயிலை நோக்கித் திரும்பி நின்று, இரு கைகளையும் கூப்பியவாறு,

"அம்மா தேவி, பகவதி தாயே...! அறிவில்லாதபடி, நான் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னித்து விடம்மா...! இனிமேல் நான் எந்தத் தவற்றையும் செய்யமாட்டேன்..." என்றான்.

அந்த நேரத்தில் பகவதி தேவி கோயில் வெளிப் பிராகாரத்தில் நின்றிருந்த பூதகண சிலையொன்றில் இருந்த பல்லி ஒன்று சப்தமிட்டது...

தாமோதரனுக்கு பல்லியின் குரல் பேசுவது போலவே இருந்தது. அந்தக் குரல்...

“அடுத்தது நீதான்... நீதான்...!” என்று சொல்லுவது போலவே அவனுக்குத் தோன்றியது.

“பகவதி...” என்று அழைத்தவாறே உன்னித்தன் அந்தப் பல்லியைப் பார்த்தான்.

அதன் கண்கள் பெரிதாகவும், ரத்தச் சிவப்பாக இருந்தது போலவும், அவனுக்குத் தெரிந்தது!

அத்துடன் அது அவனையே உற்றுப் பார்ப்பது போலவும் இருந்தது. ஒருகணம் அதைப் பார்த்துத் தடுமாறிய அவன் சமாளித்துக் கொண்டு, திரும்பி தன் வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டை அடைந்ததும், அவனால் நிம்மதியாக இருக்கவே முடியவில்லை. அவன் மனைவி ரேவதி குஞ்சம்மா வெளியே வந்து அவனைப் பார்த்தாள்.

தன் கணவனுக்கு மனது சரியில்லாதது போல அவளுக்குத் தோன்றியது. “என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?” என்று அவள் அவனிடம் கேட்க...

“உம்... ஒன்றுமில்லை” என்று பதில் சொல்லிவிட்டு அவன் தன் படுக்கை அறைக்குள் நுழைந்தான். ரேவதி அத்துடன் விட்டுவிட்டாள்.

வாசுதேவன் தம்பியும், குரூப்பும் கிளிக்கொல்லூரை அடைந்தபோது, மாலை நேரமாகிவிட்டது. அங்கே இருந்து கோயில் வனத்திற்கு அவர்கள் வழி கேட்டார்கள்.



“இந்த நாலு ரோட்டிலிருந்து அதிக தூரம் இல்லை” என்று வழி சொல்லி அனுப்பினார்கள்... கோயிலை அடைந்தபோது நன்றாக இருட்டிவிட்டது. மிகவும் பழைய கோயிலாக இருந்தது அப்பெரிய கோயில்... சுற்றிலும் மதில் சுவர்கள் இல்லை.. அருகருகே சிறிய கோயில்களும் இல்லை... இருப்பினும் அது சக்திவாய்ந்த பெரிய கோயிலாகக் கருதப்பட்டது. மக்கள் திரளாக வரும் திவ்ய க்ஷேத்திரம்!

கோயிலில் குடியிருந்த தெய்வம் ருத்ரபகவதி என்று கோயில் அருகில் இருந்த பலாமரத்தின் அடியில் அமர்ந்திருந்த பெரியவர், கேட்டபோது சொன்னார். கோயிலைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த அப்பெரியவரின் தாடி, அவரது மடியில் மறைந்து கிடந்தது.

“நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள்?” பெரியவர் கேட்டார்.

“தெற்கே இருந்து வருகிறோம்” என்றான் குரூப்.

“இந்த நேரத்தில் இங்கே யாரைப் பார்க்க வந்தீர்கள்?”

“சங்கர வாரியரைப் பார்க்க வந்தோம்...”

“ஓ! அதற்காக வந்திருக்கிறீர்களா?” என்று பெரியவர் கேட்க, எதிரில் இருந்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கிழவர் தங்களைக் கேட்ட கேள்வியிலேயே பதிலும் அடங்கியிருந்தது போல அவர்களுக்குப்பட்டது. அதனால் அவர்கள் பதில் சொல்லாமல் நின்றார்கள்...

“சங்கர வாரியர் கோயிலுக்குப் பின்னால்தான் குடியிருக்கிறார்... இந்த வழியாகப் போனால் போதும்...” என்று அவர்களுக்கு அவர் கையை நீட்டிக் காண்பித்தார். அவர்கள், அவர் காட்டிய திசையில் பார்த்தார்கள். தூரத்தில் நீலமாக வெளிச்சம் மின்னிக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் - 4

அவர்கள் தயங்கியதைப் பார்த்த பெரியவர், "ஏன் யோசித்துக் கொண்டு நிற்கிறீர்கள்?நீல வெளிச்சம் தெரிகிற இடந்தான்... நீங்கள் செல்ல வேண்டிய இடம்... புறப்படுங்கள்."

பெரியவர் சொல்ல அவர்கள் இருவரும் அந்த இடத்தை விட்டு அவர் காட்டிய வழியில் மௌனமாக நடந்தார்கள். சற்று தூரம் சென்ற பிறகு திரும்பிப் பார்த்தார்கள். அந்தப் பெரியவரை அங்கே காணோம்.

"அவரைக் காணோமே!" என்று தம்பி சொல்ல "அதற்குள் எங்காவது போயிருப்பார்..." என்றான் குரூப்.

அவன் சொல்லி முடித்த அதே சமயத்தில், அந்தப் பலா மரம் பயங்கரமாக, யாரோ ஆட்டியது போலக் குலுங்கியது. மரம் கீழே விழுவது போன்ற அதிர்ச்சி... சப்தம்!

'சட்'டென்று அச்சப்தம் நின்றது.

இருவரும் அதிர்ச்சி அடைந்தாலும், சப்தம் நின்றவுடன் பழைய நிலைக்குத் திரும்பினார்கள்.

"குரூப்...! சங்கர வாரியர் சாதாரணமானவரல்லர் என்று தான் எனக்குத் தோன்றுகிறது" என்றான் தம்பி.

"அப்படி நீங்கள் நினைக்க என்ன காரணம் எஜமானே?"

"நாம் அவரைப் பற்றித் தெரிந்து கொள்ளத்தான் இதையெல்லாம் செய்கிறார் என்று நான் நினைக்கிறேன்" என்றான் தம்பி.



"அப்படியும் இருக்கலாம்...!" குரூப் அதை ஆமோதித்தான்.

நீல வெளிச்சம் வீசிக்கொண்டிருந்த அந்த இடத்தை இலக்காகக் கொண்டு அவர்கள் நடந்தார்கள். பெரியவர் சொன்னதுபோல் அந்த இடம் பக்கத்தில் இருக்கவில்லை. நடக்க, நடக்க வளர்ந்து கொண்டே போனது.

கடைசியாக அவர்கள் இருவரும் ஒரு வீட்டின் காம்பௌண்டு வாயிலருகே வந்து நின்றனர். வாயிற்கதவு திறந்திருந்தது.

உள்ளே பார்த்தபோது, தெரிந்த சிறிய வீட்டிற்குள் யாரோ இருப்பது போலத் தெரிந்தது.

இருவரும் உள்ளே நுழைந்தனர்.

"யாரது?" வராந்தாவிலிருந்து சப்தம் வந்தது.

"தூரத்திலிருந்து வருகிறோம்." என்றான் தம்பி பதில் சொல்லும் வகையில்...

"உள்ளே போ!" என்று அக்குரல் சொல்ல அந்த நீல வெளிச்சம் பின்னால் நகர்ந்ததை அவர்கள் கண்டனர். சற்று உற்றுப் பார்த்தபோது அது ஒரு பெரிய பாம்பாக இருந்தது. அது உள்ளே ஓர் அறைக்குள் போனதும் நீல வெளிச்சம் முழுதும் மறைந்துவிட்டது. அந்த நாகப் பாம்பின் வாயிலிருந்த மாணிக்கந்தான், நீல வெளிச்சத்திற்குக் காரணம் என்று குரூப் நினைத்தான். நாகத்திடம் மாணிக்கம் இருக்கும் என்பதை அவன் கேள்விப்பட்டிருக்கிறான். இப்போது நேரில் பார்க்கும் சந்தர்ப்பமும் கிடைத்திருக்கிறது.

"உட்காருங்கள்" என்கிற குரல். வராந்தாவில் இருந்தவர் சொன்னார்.

அவர் அருகே இருந்த விளக்கின் திரியை நன்றாகத் தூண்டிவிட்டபோது, அது பிரகாசமாக எரிந்தது. உட்கார்ந்தார்கள்.

"என்ன விசேடம்?" அவர் கேட்டார்.

"நாங்கள் சங்கர வாரியரைப் பார்க்க வந்தோம்..." என்றான் குருப்.

"சந்தேகப்பட வேண்டாம். நீங்கள் வரவேண்டிய இடத்திற்குத்தான் வந்திருக்கிறீர்கள்..."

"நாங்கள் வந்தது..." என்று குருப் தொடங்கியபோது, சங்கர வாரியரான அவர் கையமர்த்தினார்.

"நீங்கள் சொல்லவேண்டாம். நான் கண்டுபிடித்துக் கொள்கிறேன்..." என்று சொல்லிவிட்டு அவர் உள்ளே போய், சற்று கழித்துத் திரும்பி வந்தார்.

அப்போது அவரது கையில் இராசிகள் படம் வரைந்த பலகையும், சோழிகள் அடங்கிய பையும் இருந்தன.

"இப்போது இராசிப் பலகையில், சோழிகளை வைத்து குறி கேட்க ஏற்ற நேரம் இல்லை. இருந்தாலும் நீங்கள் நினைக்கும் ஆளைக் கண்டுபிடிக்க இதுதான் நல்ல சமயம்..." என்று சொன்ன அவர், பலகையை விரித்து வைத்து அதில் சோழிகளை வைக்கத் தொடங்கினார். பிறகு ஏதேதோ கணக்குப் போட்டுப் பார்த்தார். ஒரு கட்டம் வந்ததும், அவர் முகம் இறுகியது. சங்கரவாரியர் வாயிற்பக்கம் பார்த்தார். அவர் கண்களில் பயம் தெரிந்தது.

"வாரியரே... என்னவாயிற்று?" என்று குருப் கேட்க...

அவர் சொன்னார்..

"நீங்கள் இருவர் மட்டும் இங்கே வந்ததாகத் தெரியவில்லை.. உங்களுடன் வேறு யாரோ ஒரு நபரும் வந்திருக்கிறார்."

வாரியர் சொன்னதைக் கேட்டவுடன் அவர்கள் வியப்படைந்தனர். அவர்கள் இருவர் மட்டுந்தானே வந்தார்கள்? என்னவோ மாதிரி ஆகிவிட்டது அவர்களுக்கு! ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு பேசாமல் ஏதோ யோசிப்பவர்கள் போலக் காணப்பட்டார்கள். அவர்களுக்கு ஏதும் புரியவில்லை.



வாரியர் அவர்களைப் பயமுறுத்துகிறாரோ?

அவரே பயப்படுவது போலல்லவா அவர்களுக்குத் தெரிந்தது?

வாரியர் வாயிலைப் பார்த்தவாறே தொடர்ந்து பேசினார்.

'இங்கே வந்து யாரையும் பயப்படுத்த வேண்டாம். சங்கர வாரியர் அப்படியொன்றும் லேசுப்பட்டவன் அல்லன்! நான் நினைத்தால் எது செய்ய வேண்டுமோ, அதைவிட அதிகமாகவே செய்வேன் ஞாபகத்தில் வைத்துக் கொள்.'

தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தது போல் இருந்த அதைக் கேட்ட தம்பி திருப்தியடைந்தான்.

"வாரியரே... இப்போது நீங்கள் சொன்னதைச் செய்தாலே மட்டும் போதும்... அதுவே எங்கள் மனத்திற்குத் திருப்தி" என்றான் தம்பி.

"நீங்கள் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இன்றிரவு நீங்கள் வெளியில் போகக்கூடாது. இங்கேயே படுத்துக் கொள்ளுங்கள். நான் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுகிறேன்.." என்று வாரியர் அவர்களுக்கு ஆறுதல் சொன்னார்.

"நாங்கள் ஏதாவது விவரங்கள் உங்களுக்குச் சொல்ல வேண்டுமா?"

"வேண்டாம்... நான் சொல்கிறேன். இப்போது உங்கள் மீது கோபமாக இருப்பது ஒரு பிரம்ம ராட்சஸ்! அதுதான் உங்களை நிழல் போலத் தொடர்ந்து இங்கேயும் வந்து வாயிலில் நின்றுகொண்டு இருக்கிறது. அது இங்கே உள்ளே வாமுடியாது. உங்களை அது எங்கேயும் தீர்த்துவிடலாம். சொல்ல முடியாது.

இந்த இரவு நீங்கள் திரும்பிப் போனால்கூட உங்கள் கணக்கு முடிந்துவிடும்!'' என்றார் வாரியர்.

தம்பிக்கும் குரூப்புக்கும் வியர்த்துக் கொட்டியது. நடுங்கியபடியே இருந்தார்கள்.

''நாங்கள் இங்கே வந்து விட்டதால், நீங்கள் எங்களுக்கு எல்லாவற்றையுமே முடித்துத் தரவேண்டும் என்றே விரும்புகிறோம். நீங்கள்தான் எங்களை ரட்சிக்க வேண்டும்.'' என்றான் தம்பி.

''ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கே இருக்கும் மூர்த்திகளை மீறிக் கொண்டு 'அது' ஏதும் செய்துவிட முடியாது'' என்றார் சங்கர வாரியர், அவர்களைத் தைரியப்படுத்தும் வகையில்!

பார்வைக்கு ஒரு ஐம்பது வயது மனிதரைப் போன்று காட்சியளித்த சங்கரவாரியர், மெல்லிய உருவம் படைத்தவராயும், சதுர வடிவமான முகத்தைக் கொண்டவராயும் இருந்தார். தலைமுடி விரிந்து பரந்து கிடந்தது. முகத்தில் லேசான முட்புதராக வளர்ந்திருந்த தாடி, மீசை, அடர்த்தியான புருவங்கள். ருத்ராட்ச மாலை ஒன்று கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்தது, துறவிக்கோலம்!

எப்போதும் கெட்ட தேவதைகளின் சகவாசத்தால் கெடுதலையே செய்யும் சங்கர வாரியர், பெரிய மந்திரவாதி தான். தன் தொழிலின் தொடக்கத்தையும், முடிவையும் கண்டவர் அவர்.

தன்னுடைய காம இச்சையைத் தீர்த்துக் கொள்ள, அவள் எந்த உலகத்துப் பெண்ணாக இருந்தாலும் சரி, அவளைத் தன் படுக்கைக்கு வரவழைத்துவிடும் சக்தி அவருக்கு இருந்தது.



அபரிமிதமான அழகு படைத்த யட்சிகளும், கந்தர்வப் பெண்களும் வாரியரின் படுக்கைக்குப் பல முறை வந்திருக்கிறார்கள்!

தலைமுறை, தலைமுறையாக அவரது மூதாதையர் சம்பாதித்து வைத்த அபூர்வ சித்திகளும், இவர் தனது சிறு வயது முதற்கொண்டே கற்றுக்கொண்ட துர்தேவதைகள் உபாசனை சக்திகளும், அவரது சொந்த சுகபோகத்திற்காகவே உபயோகப்பட்டன. உபயோகித்தார்... இதற்காக அவர் வெட்கப்படவும் இல்லை. வேதனைப் படவும் இல்லை.

எதிர்பாராமல் துர்மரணம் அடைந்தவர்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் சக்தி அவருக்கு இருந்ததென நிறையப் பேர் பேசிக் கொண்டார்கள்.

வாசுதேவன் தம்பியும், குரூப்பும் சங்கரவாரியர் வீட்டில் ஒரு பக்கம் படுத்து நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வெகு தூரம் நடந்து வந்த களைப்பு அவர்களை அப்படித் தூங்க வைத்தது.

அவர்கள் தூங்கியபிறகு வாரியர் தன் அறையில் இருந்த பழைய ஓலைச்சுவடிகளை எடுத்து சற்று நேரம் படித்தார். பிறகு தூங்குவதற்காக தன் பூஜை அறையை விட்டு வெளியே வந்தார். அவரது கண்களில் 'தேடல்' தெரிந்தது. இன்றிரவு அவர் தூங்குவதற்கு, அவருக்குத் துணையாக ஒரு பெண் வேண்டுமே!

அறையை விட்டு வெளியே வந்து, வீட்டின் தெற்குப் பக்கத்தில் இருந்த துளசி தளத்தைத் தாண்டி, அதற்குப் பின்னால் சற்று தூரத்தில் இருந்த எட்டி மரத்தின் அடியில் வந்து நின்றார்.

அம்மரத்தின் நடுப்பாகத்தில் நூற்றுக்கணக்கான ஆணிகள் அடிக்கப்பட்டிருந்தன. ஒவ்வோர் ஆணியிலும் ஒவ்வொரு சேலைத்துண்டு சுற்றப்பட்டிருந்தது. ஆணியோடு சேர்த்து

அடிக்கப்பட்டன போன்று தெரிந்தன. ஒவ்வோர் ஆணியிலும் ஒரு யட்சியையோ, அல்லது பிசாசையோ அவர் கட்டி வைத்திருந்தார் என்று அர்த்தம்.

தம்பியும் குருப்பும் அங்கே வந்த போது, வாயிற்படியில் மங்கலான வெளிச்சத்தில் 'மச மச' வென ஓர் உருவம் நிற்பதை வாரியர் பார்த்தார். அவர்களுடன் வந்திருக்கும் பிரம்ம ராட்சஸ்தான் அது என்ற அவர் புரிந்து கொண்டார்.

இந்த பிரம்மராட்சஸுக்கு தன் சக்தி எப்படி இருக்கிறது என்று காட்ட வேண்டும் என்ற எண்ணமும் இப்போது வாரியர் மனத்தில் இடம் பிடித்துக் கொண்டது. அதனால் தான் மரத்தில் கட்டி வைத்திருக்கும் யட்சியை, தன் படுக்கைக்கு அழைத்துப் போக, அவர் இப்போது மரத்தடிக்கு வந்தார்.

அவர் கையில் கொண்டு வந்திருந்த குத்து விளக்கின் பிரகாசத்தில் வாரியர் மரத்தில் அடித்திருந்த ஆணிகளை ஒவ்வொன்றாகச் சோதித்தார். கடைசியில் ஓர் ஆணியைப் பிடுங்கிக் கீழே வீசினார். ஆணி விழுந்த இடத்தில் ஒரு கறுத்த நிழல் குபீரெனத் தோன்றியது. பிறகு அதுவே அதி சுந்தரியான ஒரு பெண்ணாக மாறியது.

"என் பின்னால் வா!" என்று வாரியர் அதனிடம் சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்காமல் தன் இல்லத்தை நோக்கி நடந்தார். பெண்ணாக இருந்தது ஒரு யட்சி!

அவர் நேராகத் தன் படுக்கை அறையில் நுழைந்தார். கட்டிலில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்தபிறகு அவர் வெளியில் எட்டிப் பார்த்தார்.

சில வினாடிகள் கழிந்தபிறகு வாசலில் ஒரு பெண் தென்பட்டாள். அவள் மெதுவாக உள்ளே வந்து வாரியர் இருந்த கட்டில் ஓரத்தில் அமர்ந்தாள். அதிசுந்தரியாகத் தெரிந்த அவள்,



மெல்லிய ஆனால் வெளிச்சத்தில் பிரகாசிக்கும் பிரகாசமான துணியினால் தன் மார்பகங்களையும், இடையையும் மட்டுமே மூடி இருந்தாள். மீதி இடம் வெற்றுடம்பாக இருந்தது. அத்துணியால் மூடியிருந்தும், மூடியிருந்த பாகங்கள் கண்ணாடித் துணியால் மறைத்தவை போல வெளியே தெரிந்தன. அவளது தலைமுடி அவிழ்ந்து பரவலாகத் தொங்கிக்கொண்டிருந்தது. கண்களில் அதீதமான பிரகாசம்! காமனின் அம்புகளை வீசும் கவர்ச்சியான, பருத்த மார்பகங்கள்.

எந்தச் சந்நியாசியும் பார்த்த மாத்திரத்தில் உடனே சரணடைந்துவிடக்கூடிய இடைப்பிரதேசம் கொண்ட அவளைப் பார்த்தார் வாரியர். 'இதற்கு முன் தான் இப்படி ஒரு பெண்ணைப் பார்த்ததே இல்லையே' என்று யோசித்தார்.

இவள் ஒரு புதிய பெண்.

எட்டி மரத்திலிருந்து இன்று அவர் பறித்த ஆணியை இதுவரை அவர் தொட்டதே இல்லை. ஒருவேளை தன் மூதாதையர் யாரோ இங்கே பதிய வைத்த யட்சியாக அவள் இருக்கக்கூடும் என்று வாரியர் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டார்.

"என்னை உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா?" என்று வசீகரமாகச் சிரித்துக்கொண்டே அவள் கேட்டாள்.

"இல்லை... இல்லை... நான் இப்போதுதான் உன்னைப் பார்க்கிறேன்"

"என்னைப் போல உள்ளவளைக் கூட நீங்கள் இதற்கு முன்பும் பார்த்திருக்க முடியாது... இல்லையா?"

"அதென்ன அப்படிச் சொல்லி விட்டாய்?"

"இல்லை... பார்த்திருக்கவே முடியாது" என்றாள் அவள்.

வாரியரின் கண்கள் அவளது சரீரத்தை ஆசை தீர விழுங்கிக் கொண்டிருந்தன.

அவளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே வாரியர் வேறு ஒரு ரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டார். இந்தப் பெண்மீது யட்சியின் மீது சாதாரணமாக வீசும் – அவருக்குப் பழக்கமான – வாசனை வீசவில்லை. அதற்குப் பதிலாக நீரில் வளரும் செடியின் மீது வீசும் வாசனை அவள் மீது கமழ்ந்தது.

கோயில் குளத்தில் இருக்கும் பாசியின் மணம்... அதில் இறங்கினால் என்ன வாசனை வருமோ... அவ்வாசனை இவள் மீது!

வாரியருக்கு இது புதிய வாசனை... யோசித்தார்.

"என்னைத் தொட்டுப் பாருங்கள்" என்ற அவள் தன் கையை அவர் பக்கம் நீட்டினாள்.

அவர் அதைத் தொட்டுப் பார்த்தார்.

தொட்டவுடன், பயந்து விட்டதைப் போல, தன் கையை வேகமாக அவர் பின்னுக்கு இழுத்துக் கொண்டார். அவ்வளவு பெரிய மந்திரவாதி அந்தக் கணத்தில் பயத்தினால் நடுங்கினார்.

இறந்து கிடக்கும் ஒரு பிரேதத்தைத் தொட்டால் எப்படி இருக்குமோ அப்படி 'ஜில்'லென்றிருந்தது அவளது கை.

"இன்னொரு முறை தொட்டுப் பாருங்கள்" அவள் அவசரப்பட்டது போல் தெரிந்தது. வாரியர் பயப்படத் தொடங்கி விட்டதால் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

"என்ன பார்க்கிறீர்கள்? என் மீது விருப்பமில்லையா?" என்று சிரித்தபடியே அவள் கேட்டாள்.

அந்தச் சிரிப்பின் ஒலி வாரியரை மேலும் பயத்தினால் நடுங்க வைத்தது.



பயங்கரமான பேய்ச் சிரிப்பு அது!

துஷ்ட தேவதைகளை அடக்கும் அந்த வாரியரே இச்சிரிப்பைக் கேட்டு நடுங்கினார் என்றால், அச்சிரிப்பு எப்படி இருந்திருக்கும்?

"என்னைத் தொட்டுப் பாருங்கள்! நான் எப்படியும் உங்களைத் தொட்டுத்தானே ஆகவேண்டும்?" என்று சொல்லிக் கொண்டே எழுந்து அவள் பின்னால் சற்று தூரம் போனாள். அவள் கை மட்டும் முன்னால் நீண்டு வந்தது.

சங்கர வாரியர் கட்டிலிலிருந்து எழ முயன்றார்.

மகாசக்தி வாய்ந்த, மிகப் பெரிய மாந்திரீகன் என்று அழைக்கப்படும் சங்கர வாரியருக்கு இதைப் போன்ற அனுபவம் எப்போதும் ஏற்பட்டதில்லை. மாடன், ரத்தக் காட்டேரி, குட்டிச் சாத்தான் போன்ற பயங்கரப் பிசாசு இனங்கள் எதுவாக இருந்தாலும் அவற்றை மிகவும் சர்வசாதாரணமாகக் கட்டிப் போடும் சக்தி வாய்ந்தவர் இந்த வாரியர்!

யட்சிகள் அவருக்கு விளையாட்டுப் பொம்மைகள்...

அவை அவரது வீட்டில் எல்லா வேலைகளையும் செய்து பழக்கப்பட்டவை கூட!

அந்தச் சுற்று வட்டாரத்தில் மாந்திரீகத்தில் வாரியரை வெல்ல ஆட்களே இல்லை என்றபடி முடிசூடா மன்னராக இருந்தார்.

இப்போது என்னவென்றால் ஒரு சர்வசாதாரணமான பெண்ணின் பிரேதம் அவரை பயமுறுத்தப் பார்க்கிறது.

இன்னும் மனத்தைத் தளரவிடாமல் வாரியர் அவளை உற்று நோக்கினார்.

அவள் அணிந்திருந்த அந்தக் கண்ணாடி போன்ற மெல்லிய துணியைத் தாண்டி, அவளது சௌந்தர்யம் ஜொலிப்பதைப் பார்த்தார்.

அதே சமயத்தில் அவளது கை நீண்டு வந்ததைப் பார்த்தபோது அவருக்கு மிகவும் பயமாக இருந்தது.

அந்தக் கைகள் வாரியர் கழுத்து வரை வந்தன. பிறகு விரல்கள் மட்டும் நீண்டன.

திடீரென அவை வாரியரின் கழுத்தைச் சுற்றிப் பிடித்தன. ஒரு பாம்பு கழுத்தை நன்றாக இறுக்கியது போல இருந்தது அந்தப்பிடி. குளிர்... கொடுங்குளிர்!

நேரத்தின் பயங்கரத்தை அனுசரித்து, தனது பலத்தையெல்லாம் உபயோகித்து, அவர் பெருங்குரலெடுத்து சப்தம் போட நினைத்தார். ஆனால் சப்தம் வெளியே வரவில்லை.

கழுத்தில் அந்தப்பிடி மேலும் இறுகியது.

பிறகு தன் பலமனைத்தும் சேகரித்த அந்த உருவம் வாரியரைத் தூக்கி வீட்டிற்கு வெளியே எறிந்தது.

வீசிய வேகத்தில் காற்றில் பறப்பது போலச் சென்ற வாரியர், எட்டி மாத்தில் அடிக்கப்பட்டிருந்த ஆணிகள் மீது மோதிக் கொண்டார்.

மிகவும் வேகமாகப் போய் மோதியதால் அவர் உடம்பின் பல இடங்களில் ஆணிகள் குத்திக் கொண்டன.

அதனால் ஏற்பட்ட வலியினால் அவர் நெளிந்தார்.

உடலை அசைத்ததும், ஆணிகளின் தொடர்பு விட்டுக் கீழே விழுந்தார். உடம்பிலிருந்து ரத்தம் வழிந்தது. அப்படியிருந்தும் வாரியர் அங்கிருந்து எழ முயற்சி செய்தார். அவரை இந்த நிலைக்குள்ளாக்கிய அப்பெண் அவர் எதிரில் வந்து நின்றாள்.

நிமிர்ந்து பார்த்தார்...

முகத்தில் எவ்வித மாறுதலும், சலனமும் இல்லாமல், முன்பு அவர் பார்த்த அதே பேரழகோடு, அவள் அங்கே நின்றாள்...



நிலவின் வெளிச்சம் அவளது சரீரத்தின்மீது விழுந்தது—

அவள் பலமாகச் சிரித்தாள்...

உருவத்திற்கும் சிரிப்புக்கும் சம்பந்தமே இல்லை.

அந்தச் சிரிப்பு அனைவரையும் பயப்படவைக்கும் பயங்கரச் சிரிப்பு!

அவள் கேட்டாள்...

"என்னை முடித்துவிடலாம் என்று பார்த்தாயல்லவா?"

வாரியர் அவளுக்குப் பதில் சொல்லாமல், துர்சக்திகளை ஸ்தம்பிக்கச் செய்யும் மந்திரமொன்றை உச்சரித்தார். அதைக் கேட்ட அவள் பயங்கரமாகச் சிரித்தாள்...

"நீங்கள் இப்போது உச்சரிக்கும் மந்திரங்களையும், இனி உச்சரிக்கப்போகும் மந்திரங்களையும் நான் கர்ப்பத்தில் இருந்தபோதே படித்தவள். நன்றாகத் தெரிந்து கொண்டவள். இருந்தாலும், இப்போதும் சொல், கேட்டுக் கொள்கிறேன்..."

சொல்லிவிட்டு அவள் தொடர்ந்து சிரித்துக் கொண்டே இருந்தாள். சிரிப்பைக் கேட்டதால், வாரியர் மந்திரம் சொல்வதை நிறுத்திவிட்டார்.

"உனக்கு என்னைப் பற்றித் தெரியாது. கொடி கட்டிப் பறந்த யட்சியையும், பிரேதப் பிசாசுகளையும் நான் அடக்கும் சக்தி பெற்றவன். என் முன்னால் அவை ஒன்றும் செய்ய முடியாது. உன்னை நான் என்ன செய்கிறேன் பார்..." என்று சொல்லிக் கொண்டே இருந்த இடத்தைவிட்டு எழுந்த வாரியர், தன் தலையிலிருந்த முடியில் ஒரு கொத்தைப் பிடுங்கி எடுத்தார். அதைக் கண்ட அவள் பலமாகச் சிரித்தாள்.

திடீரென சிரிப்பை நிறுத்தினாள்.

அவரை எட்டிப் பிடித்து தூக்கி தலைகீழாக நிறுத்தினாள்.

பிறகு தன் இரு கைகளினால், அவரது இரு கால்களையும் தனித்தனியாகப் பிடித்து உடலை இரண்டாகக் கிழித்தெறிந்தாள். வாரியர் கதை முடிந்தது!

"என்னை நாசம் செய்ய வந்தவர்களுக்கு நீ துணை போனாய் அல்லவா?" என்றாள் அவள்.

அதேசமயத்தில் அங்கே நின்ற எட்டி மரம் வேரோடு பூமியில் சாய்ந்தது.

இரவில் நடந்த சம்பவம் அது.

மறுநாள் காலையில் தம்பியும் குரூப்பும் நன்றாகத் தூங்கி எழுந்தனர். அவர்கள் கண்களுக்கு சங்கர வாரியார் தென்படவே இல்லை.

அந்த நேரத்தில் ஓர் ஆள் அங்கே ஓடி வந்தான்.

"மாமா எட்டி மரத்தடியில் இரண்டாகக் கிழிக்கப்பட்டு இறந்து கிடக்கிறார். பகவதி! அந்தக் காட்சியைப் பார்க்கவே முடியவில்லை!" என்றான்.

"நீங்கள் யார்?" தம்பி கேட்டான்.

"வாரியருக்கு ஒரு வகையில் மருமகன். அவருக்கு பூஜை சாமான்களைத் தயார் செய்து தருவது என் வேலை" என்றான்.

"வாரியருக்கு இந்த நிலை ஏற்பட என்ன காரணம்?" குரூப் கேட்டான்.

"எந்தக் காரணத்தைச் சொல்ல முடியும்? பல துர்தேவதைகளின் கோபத்திற்காளாகிவிட்டாரோ என்னவோ? நடப்பது நடந்துதானே தீரும்...? நீங்கள் என்ன, மாமாவைப் பார்க்க வந்தீர்களா?"



"ஆமாம். அவரே போய்விட்டார். இனி இங்கிருந்து என்ன செய்வது? திரும்பிப் போவதுதான் வழி..." என்றான் குரூப்.

வாசுதேவன் யோசித்தான். இனிமேல் இங்கிருந்து தான் என்ன பயன்? வாரியரைத் தவிர வேறு மந்திரவாதிகள் இங்கே இல்லை... அதனால் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

வழியில்...

"என்ன குரூப் பார்த்தாயா? இது நம்முடைய ஆள் வேலைதான். அவள் இங்கேயும் வந்துவிட்டுப் போயிருக்கிறாள்..." என்று வாசுதேவன் சொல்ல...

"இங்கே எல்லாம் அது வரமுடியாது எஜமானே!" என்று அடித்துச் சொன்னான் குரூப்.

"சரி... இப்போது அடுத்தபடியாக நாம் என்ன செய்யலாம் அதைச் சொல். நாம் இந்த இக்கட்டிலிருந்து எப்படி வெளியேறுவது?" தம்பி கேட்டான்.

"எல்லாவற்றிற்கும் வழி இருக்கிறது எஜமானே! நாம் ஊருக்குப் போய்ப் பேசிக் கொள்ளலாம். வாரியரைவிட பெரிய ஆள் நமக்குக் கிடைக்கலாம்..." என்று குரூப் சமாதானம் சொன்னான்..

அப்படித்தானே மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டும்?

இருவரும் வீட்டை அடைந்தார்கள்.

"மீண்டும் நான் சாயங்காலம் வருகிறேன் எஜமானே..." என்று சொல்லிவிட்டு குரூப் விடை பெற்றுக் கொண்டான்.

தான் சென்ற விஷயம் தோல்வியாக முடிந்ததால், மிகவும் துக்கப்பட்டுப் போன தம்பி, மனச்சாந்திக்காக மதுவை நாடினான். குடித்துவிட்டு மயக்கமாக விழுந்து கிடந்தான். பகல் முழுவதும் இதே நிலை.

ஓமனாவுக்குத் துளசி மாடத்தில் விளக்கு வைக்கவும் பயமாக இருந்தது. சந்திரிகாவுக்கோ, அவளைவிட பயம் அதிகமாக இருந்தது. அவ்வளவு பெரிய நாலுகட்ட வீட்டில் ஏற்பட்ட சிறிய சப்தம்கூட அவர்களுக்குப் பயத்தை உண்டாக்கியது. கோல் விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு போகும்போது ஏதாவதொரு பக்கம் விழும் தங்கள் நிழலைக் கண்டும் அவர்கள் பயந்தார்கள்.

அவர்களைத் தொடர்ந்து பயமுறுத்த, வீட்டிற்கு வெளியே யாரோ காத்துக் கொண்டு இருப்பதைப் போலவே அவர்கள் நினைத்து பயந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு தடவை சந்திரிகா, ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்குப் போவதைப் பார்த்து ஓமனா "ஓ!" வென அலறினாள்.

"அங்கே என்ன சப்தம்? இங்கே இருப்பது நான்தான்!" என்று சந்திரிகா சொல்ல, "உன் பின்னால் யாரோ நிற்பதைப் போல என் கண்களுக்குத் தெரிந்தது" என்று ஓமனா பதில் சொல்ல... சந்திரிகா அதைக்கேட்டு மிகவும் பயந்தாள்.

பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அழைத்துக் கொண்டபோதுகூட திடுக்கிட்டுப் பயந்தார்கள்...

இரவு எட்டு மணி.

குருப்பும், தாமோதர உன்னித்தனும் அங்கே வந்தனர். நண்பர்கள் சேர்ந்தவுடன், மதுபாட்டில் உடைக்கப்பட்டது... சாப்பிட்டனர்...

"நேற்றிரவு இங்கு ஏதாவது விசேடம் நடந்ததா?" என்று தம்பி, உன்னித்தனிடம் கேட்டான்..

"நான் யாரையும் பார்க்கவும் இல்லை... இங்கே யாரும் வரவும் இல்லை" என்றான் அவன்.



"இதை ஒன்றும் அப்படி லேசாக நினைத்துவிடாதே தாமோதரா! சேகரவர்மாவுக்கு ஏற்பட்ட கதியை நினைத்துப் பார். மீதம் இருப்பது நாம் மூவர்தான். கார்த்திகா நம் பக்கம் திரும்புவதற்குள் நாம் ஏதாவது செய்தாக வேண்டும்."

"இதற்குப் பரிகாரம் செய்யும் யோசனையுடன் தான் நான் வந்திருக்கிறேன்..." உன்னித்தன் சொன்னான்.

"என்ன பரிகாரம்?"

"விஷயம் கொஞ்சம் கஷ்டமானதுதான். ஆனால் கஷ்டத்தைப் பார்க்காமல் நாம் அதைச் செய்துவிட்டால் நம் பக்கம் ஜெயம் நிச்சயம்"

"நிச்சயமாகவா?"

"இல்லையென்றால், அத்திட்டத்துடன் நான் இங்கே வருவேனா?"

"சொல் கேட்போம்..."

"விவரமாகச் சொல்கிறேன். கொஞ்சம் மது உள்ளே போகட்டும்" என்று உன்னித்தன் வேகமாகக் குடிக்கத் தொடங்கினான்.

தொடர்ந்து மூன்று டம்ளர்களும் விரைவாக நிரப்பப்பட்டு காலியாயின.

டம்ளர் காலியானவுடன், வாய் நன்றாகத் துடைக்கப்பட்டது.

பிறகு சிகரெட் பற்றவைப்பு.

நான்கைந்து இழுப்புக்குப் பிறகு உன்னித்தன் கனைத்துக்கொண்டு, தான் சொல்ல வந்ததைச் சொல்லலானான்—

"நான் மிகவும் நன்றாக யோசித்துப் பார்த்தேன். எழமத்தூர் இல்லம் இம்மாதிரி பாழடைந்து, இடிந்து கிடப்பதால்தான் இதைப்போன்ற சம்பவங்கள் நிகழுகின்றன.."

"இதுதான் தெரிந்த விஷயமாயிற்றே... அதற்கு இப்போது என்ன செய்யலாம் சொல்லப்பா..."

"அதைத்தான் நான் இப்போது சொல்லப் போகிறேன்..." அவன் இப்படி ஆசையை வளர்த்ததால், அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று ஆவல் நிறைந்த முகத்தினராய் அவர்கள் இருவரும் அவனைப் பார்த்தவாறே இருந்தார்கள்.

தாமோதர உன்னித்தன் அவ்வளவு சாதாரண ஆளல்லன் என்பது தம்பிக்குத் தெரியும்.

"நான் ஒன்று கேட்கிறேன்.. சரியாகப் பதில் சொல்லுங்கள். இப்போது அந்த இல்லத்திற்குச் சொந்தக்காரர்கள் என்று யாராவது இருக்கிறார்களா?" உன்னித்தன் கேட்டான்.

"இல்லை... எனக்குத் தெரிந்த வரையில் இருந்திருந்தால் இந்த ஐந்து வருடம் விட்டு வைத்திருப்பார்களா? வீட்டைக் கைப்பற்றி இருப்பார்களே."

"ஏதாவது ஒருவிதத்தில்... ஏதாவது காரணத்தை வைத்துக்கொண்டு இனிமேல் யாராவது உரிமை கொண்டாடிக்கொண்டு வரமுடியு ்ா?"

"முடியாது.."

"நிச்சயமாகவா?"

"நான்தான் இந்த இல்லத்தின் சகல விஷயங்களையும் கவனித்தவன். அப்படி ஏதாவது இருந்திருந்தால் எனக்குத் தெரியாமல் இருக்குமா? நானும் ஏதும் கேள்விப்பட்டதும்



கிடையாது... யாரும் வந்ததும் இல்லை... இல்லத்தவர்களுக்கு வேறு சந்ததியே இல்லை..."

"அப்படியென்றால் ஒரு காரியம் செய்வோம்.... இந்த எழமத்தூர் மனையை விற்போம்..."

"என்ன சொல்கிறாய் உன்னித்தன்? இந்த இல்லத்தை நாம் எப்படி விற்க முடியும்?"

"ஏன் விற்க முடியாது? விற்கலாம். விற்ற பணத்தைக் கொண்டு பகவதி கோயிலைப் புதுப்பித்துக் கட்டி கும்பாபிஷேகம் செய்ய உபயோகிக்கப் போகிறோம் என்று சொன்னால் போதும்.. யாருடைய எதிர்ப்பும் இருக்காது. இல்லாவிட்டால் மட்டும் இந்த வாரிசு இல்லாத சொத்துக்கு யார் உரிமை கொண்டாடி எதிர்ப்புத் தெரிவிக்கப் போகிறார்கள்?" என்று உன்னித்தன் கேட்டான்.

"சரி... இதை எப்படி விற்க முடியும் என்று நீ சொல்கிறாய்? விற்றால் நமக்கென்ன லாபம்?"

"இந்த இல்லம் விற்பனைக்குள்ளது என்று பத்திரிகையில் ஒரு விளம்பரம் தருவோம். அதைப் பார்த்து நிச்சயம் யாராவது வாங்க வருவார்கள். வாங்கியவர் நிச்சயம் இதை இப்படியே வைத்துக் கொள்ளப் போவதில்லை. புதிதாக வீடு கட்ட இதை இடித்துத் தரைமட்டமாக்குவார்கள். அப்போது நமது பிரச்னைகள் யாவும் முடிந்துவிடும்" என்றான் உன்னித்தன்...

"அது எப்படி முடியும்?"

"விவரமாகவே சொல்கிறேன் கேள். இந்த இல்லத்தை வாங்குபவன் இதை இப்படியே வைத்துக் கொள்ள மாட்டான். தன் சௌகர்யத்திற்காக, பழைய கட்டடத்தை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டுத்தானே புதிய கட்டடம் எழுப்புவான்? கார்த்திகா அந்தப் புதிய வீட்டில் எப்படி குடியேற முடியும்? வீட்டை வாங்கிக் குடிவருபவன் மாமிசம் சாப்பிடுபவனாக

இருந்துவிட்டால், நமக்குத் தொல்லையே இருக்காது'' என்று உன்னித்தன் சொன்னான.

''அதுவும் நல்ல யோசனைதான்... மாமிசம் சாப்பிடும் வீட்டுப் பக்கம் இந்த பிரம்மராட்சஸ் வரவே வராது. அத்துடன் எல்லாமே முடிந்து விடும். ஆனால் பத்திரிகையில் விளம்பரம் தந்தால், அதை யார் இந்தக் கிராமத்தில் படிக்கப் போகிறார்கள்?'' என்று குருப் சந்தேகத்தைக் கிளப்பினான்.

''இன்னொரு விஷயம்... இந்த இல்லம் நமக்குச் சொந்தமானது என்று நாம் எப்படி நிரூபிக்க முடியும்?'' என்று தம்பி கேட்டான். உன்னித்தன் சிரித்தான்.

''இது என்ன பெரிய காரியம்? ஆறு வருடங்களுக்கு முன்னால் இந்த இல்லத்தை கோவிந்தன் நம்பூதிரி உனக்கு எழுதி வைத்து விட்டதுபோல் ஒரு பத்திரத்தைத் தயார் செய். பிறகு அதை ரிஜிஸ்தர் ஆபீஸுக்கு எடுத்துக் கொண்டு போ... கொஞ்சம் பணம் செலவு செய்தால்... எல்லாமே இலகுவாக முடிந்துவிடும்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தான் உன்னித்தன். அவன் சொன்னது மிகவும் நல்ல யோசனை என்றே தெரிந்தது மற்ற இருவருக்கும்.

தம்பிக்குப் புதிய சந்தேகம் முளைத்தது.

''நீ சொன்னதெல்லாம் சரி உன்னித்தன். இந்தக் காரியமெல்லாம் முடியும் வரை நாம் எப்படிச் சமாளிக்க முடியும்?''

அவன் கார்த்திகாவை மனத்தில் நினைத்துக் கொண்டுதான் பேசினான்.

''அதற்கும் வழி இருக்கிறது தம்பி! நான் சொல்லித் தருகிறேன்...'' என்றான் உன்னித்தன்.

''என்ன வழி?''



''நம் வீட்டுச் சுவர்களில் நாலு பக்கமும், பூஜை செய்து மந்திரம் எழுதிய தாமிரத் தகடுகளைப் பதித்துவிட்டால், அவற்றைத் தாண்டி எதுவுமே வீட்டிற்குள் வராது. இதில் நன்றாகப் பயிற்சி பெற்றவன் ஒருவனை எனக்குத் தெரியும்...'' என்றான் உன்னித்தன்.

தம்பி யோசித்தான்.

''இதில் நன்றாகப் பயிற்சி பெற்ற ஒரு நபரை எனக்குத் தெரியும். அவரைக் கொண்டு இந்த வேலையை முடித்துக் கொள்ளலாம்'' என்றான் உன்னித்தன்.

மீண்டும் சொன்னான்.

''யார் அவர்?''

''முஸ்லிம் அன்பர். ஹஜ் போய்த் திரும்பியவர். ஹாஜியார் என்றுதான் அவரை அழைப்பார்கள். அதர்வண வேதம் படித்தவர், தெரிந்தவர். நாம் அவரிடம் நாளை போகலாம்'' என்றான் உன்னித்தன்.

கடிகாரத்தில் மணி பதினொன்று அடித்தது...

''அப்போது நான் புறப்படட்டுமா? நேரமாகிறது'' என்று உன்னித்தன் சொன்னான்.

''குருப்பும் அந்தப் பக்கந்தானே போகிறான்? இருவரும் ஒருவருக்கொருவர் துணை... போய் வாருங்கள்'' என்று அவர்களைத் தம்பி வழியனுப்பி வைத்தான்.

அவர்கள் இருவரும் வீட்டை விட்டு வெளியே வந்து வேகமாக நடந்தனர்.

வீடு போய்ச் சேருவதற்குள் எதுவும் ஆகிவிடக்கூடாதே என்கிற கவலை அவரவர்கள் மனத்தில் இருந்தாலும், அதை வெளியில் சொல்லவில்லை.

சற்று தூரம் சென்றதும் பாதை இரண்டாகப் பிரிந்தது.

ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்தார்கள்.. தம் வழியே நடந்தனர்.

குரூப் எழமத்தூர் பகவதி கோயில் பக்கமாக வந்து கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் நிலா மேகங்களுக்கிடையே திடீரென மறைய இருள் சூழ்ந்தது.

நிசப்தமான நேரம்... மரத்தில் ஓர் இலைகூட அசையவில்லை... குரூப் நடந்து கொண்டே இருந்தான்..

அப்போது தன்னை யாரோ பின் தொடர்ந்து வருவதுபோல அவனுக்குத் தோன்றியது.

குரூப் நின்றான்...

அவன் மனம் யோசித்தது. அது யாராக இருக்கும்?

இம்மாதிரி சமயங்களில் திரும்பிப் பார்க்கக்கூடாதென குரூப் அறிவான்.

பிசாசுகள் பின்னால் வந்தால் திரும்பிப் பார்க்கக்கூடாது.

இது பொது விதி என்பர்.

பின்னால் அது பல சப்தங்கள் செய்யும்!

சில நேரத்தில் பெண்களோ, அல்லது குழந்தைகளோ அழுவது போல இருக்கும். இன்னும் சில சமயத்தில் கழுத்தை நெரித்தால் சுவாசம் முட்டுவது போன்ற சப்தத்தை எழுப்பும். தெரிந்தவர் பெயரைச் சொல்லி அழைப்பது போன்ற குரல்...

ஏமாந்துபோய், இதையெல்லாம் கேட்டுத் திரும்பினால் மரண அடி கிடைக்கும்.



ரத்த வாந்தி எடுத்து கீழே விழுந்து இறக்க நேரிடும்! அப்படிக் கீழே விழுந்து இறப்பவன் அடிவயிற்றிலோ, அல்லது இடுப்புக்கு சற்று மேலேயே நீல நிறக் கோடுகள் காணப்படும். அப்படிப்பட்டவர்களை போஸ்ட்மார்ட்டம் செய்தால் கூட மரணத்தின் காரணத்தைக் கண்டுபிடிக்க இயலாது. இம்மாதிரி சம்பவங்களில் அபூர்வமாகப் பிழைப்பவர்களும் உண்டு. அப்படி எதிர்பாராத விதமாகத் தப்பிப் பிழைத்தவர்கள் சொல்ல குரூப் இதைக் கேட்டிருக்கிறான். கடந்த வாரம் நடந்த ஒரு சம்பவம் கூட குரூப் மனத்தில் மின்னல் போல் பளிச்சிட்டது.

அவன் பக்கத்துவீட்டு அம்மணி, அடுப்பங்கரையில் சாதம் வடித்துக் கொண்டிருந்தாள்... பின்னால் அம்மா அழைப்பது போன்ற சப்தம்... திரும்பிப் பார்த்தாள்... அவள் மீது பலமான அடி விழுந்தது... வாயிலிருந்து ரத்தம் கொட்டியது. உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போன பிறகும், அவள் நிலைக்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

மாந்திரீக வேலைகள் மூலம் காரணம் கண்டுபிடிக்கப்பட்டது. இதே அனுபவம், அதே வீட்டில் முன்பும் ஏற்பட்டிருந்தது தெரிந்தது. அந்த வீட்டிற்கு மருமகளாக வந்தவள் அம்மணி. அதனால் அவளுக்கு முன்பு நடந்த சம்பவங்கள் தெரிய நியாயமில்லை.

குரூப் பழைய நினைவிலிருந்து மீண்டான். நடந்தான்..

"என்ன இவ்வளவு வேகமாகப் போகிறாய்?"

ஒரு பெண்ணின் குரல் பின்னாலிருந்து வந்தது...

குரூப் நிற்கவில்லை... முன்னால் பார்த்தவாறே வேகமாக நடந்தான்.

கோயிலின் இடிந்து கிடந்த மதிற்சுவரை அவன் கடந்து சென்றபோது திடீரென பலமான காற்று வீசியது...

திடீரென வீசிய அந்தக் காற்று எந்தப் பக்கத்திலிருந்து வந்தது என்றே குரூப்பிற்குத் தெரியவில்லை. காற்று அவன் மீது மோதுவது தெரிந்தது... மோதுவது, அவனைக் கிள்ளி விடுவது போலவே இருந்தது. 'சுருக்''சுருக்' என்று கிள்ளப்பட்டால் வலிக்காதா? அவனால் மேலே அடி எடுத்துவைக்க முடியவில்லை.

முயன்று அவன் தன் காலை எடுத்து முன் வைக்க முற்பட்டபோது, யாரோ அவனைப் பின்னால் இருந்து இழுப்பதுபோல் தெரிந்தது..

நகர முடியாததால், அவனை அறியாமல் குரூப் பின்னால் திரும்பிப் பார்த்தான். அது கட்டாயம்!

சாவித்திரி குட்டி அங்கே சிரித்த படி நின்று கொண்டிருந்தாள்.

''நீயா சாவித்திரி!'' என்று குரூப் உற்சாகத்தோடு கூவினான்.

மேலிடத்து கேசவன் நம்பூதிரியின் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரிதான் இந்த சாவித்திரி... அவளுக்கு இருபத்தியோரு வயது! 'சுந்தரி' என்று மட்டும் சொன்னால் போதாது. சித்திரப்பாவை அவள்... சாவித்திரியின் அம்மா, அந்த வீட்டில் காரியஸ்தி! அவளும் தன் வயதில் அழகானவளாகவே இருந்தாள்.. யாருக்கும், இல்லை என்று சொல்லாத வகையைச் சேர்ந்தவள் அவள்! அவள் காலத்தில் அவள் மிகவும் பிரபலமானவளாக இருந்தாள்.

சாவித்திரிக்குத் தந்தை யார் என்று கேட்டால், அது கேசவ நம்பூதிரியாகவே இருக்க முடியும் என்பதற்குச் சாட்சிகள் தேவையே இல்லை. காரணம், அந்த முக ஒற்றுமையே சாட்சி! சாவித்திரியின் இந்தக் களையான முகத்தைப் பலரும் பார்த்து ஏங்கித் தவித்துத் தோல்வியே கண்டனர். சந்தன நிறம். பேரழகு படைத்த உருவம். கழுத்தில் சன்னமான தங்கச் செயின்... அந்தச் செயின் பளிச்சிடும்போதுதான் – கழுத்தில் அது கிடப்பது தெரியும்.



இல்லையென்றால் அது தேகத்தோடு சேர்ந்தே இருக்கும். அங்கே தங்கம் இருப்பதாக யாரும் சொல்ல முடியாது.

''என்ன இந்த இரவில் தனியாக?'' குரூப் கேட்டான்...

''நான் உன் பின்னாலேயேதான் வந்து கொண்டிருக்கிறேன்... இல்லத்தின் வழியாக வந்தபோது நான் வாயிலோரமாக நின்றிருந்தேன். உன்னைப் பார்த்தவுடன் தொடர்ந்து வந்தேன்...'' என்று வசீகரமாகச் சிரித்து தன் உடல் அழகை அவன் நன்றாகப் பார்க்கும்படி காட்டிக் கொண்டு நின்றாள்...

குரூப் மயங்கினான்... மதுவின் துணை வேறு!

''இப்போது எங்கே போகிறாய் சாவித்திரி?''

''நீ எங்கே சொல்லுகிறாயோ அந்த இடத்திற்குத்தான்'' என்றாள்.

அவன் உள்ளம் துள்ளியது.. மகிழ்ச்சி கொப்பளித்தது. இப்படி ஒரு பாக்கியம் தனக்குக் கிடைக்குமா என்று நினைத்துக் கொண்டான்.

அவன் மௌனமாக நிற்கவே...

''உன் வீட்டிற்கு வரட்டுமா?'' என்று அவள் கேட்டாள்.

''அய்யய்யோ... அங்கே வேண்டாம். என் மனைவியும், சிறு குழந்தைகளும் இன்னமும் தூங்காமல் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்!''

''அப்படியென்றால்... அதோ.. அங்கே போகலாம்!'' என்று எழமத்தூர் இல்லத்தை அவள் காண்பித்தாள். நிலா வெளிச்சத்தில் அமைதியாக இருந்த மனை அவன் கண்களில் பட்டது.

அங்கே இந்த நேரத்தில் யாரும் போகவும் மாட்டார்கள். அப்பக்கம் திரும்பிப் பார்க்கவும் மாட்டார்கள். நன்றாகவே

27920
4289

குடித்திருந்த மதுவின் போதையினால் குரூப்பிற்கு ஏதும் தெரியவில்லை.

அதனால் அவளுக்குப் பின்னால் நடக்க முனைந்தான். மிகவும் தெரிந்த இடத்தைப் போல சாவித்திரி எழமத்தூர் இல்லத்தின் வாயிலினுள் நுழைந்து உள்ளே போனாள். திரும்பிப் பார்த்தாள்... குரூப் பின்னால் வருகிறான் என்று தெரிந்தவுடன் அவள் முன் திண்ணையில் அமர்ந்தாள்.

"இங்கேயெல்லாம் வருவதற்கு உனக்குப் பயமில்லையா?" குரூப் கேட்டான்...

"இங்கே என்ன பயம்? யாரைக் கண்டு பயப்பட வேண்டும்?" என்று ஒன்றுமே தெரியாதது போலவே சாவித்திரி அவனிடம் கேட்டாள்.

தான் ஒன்று கிடக்க ஒன்று சொல்லி அவள் பயந்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்த குரூப், கார்த்திகாவைப்பற்றி அவளிடம் பேசவே இல்லை. இல்லையென்றால்கூட தான் ஏன் அதைப் பற்றிப் பேச வேண்டும்?

குரூப் அவளருகில் சென்று அமர்ந்தான்... தனக்கு இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதே என நினைத்து மகிழ்ந்தான். முற்றத்தில் நிலா காய்ந்து கொண்டிருந்தது.

துளசிச் செடியின் நிழல் நீளமாகத் தரையில் விழுந்திருந்தது. இரவுப் பூச்சிகளின் ரீங்காரம் கூடக் கேட்கவில்லை.

"என்ன யோசனை?" என்று கேட்டவாறு சாவித்திரி குரூப்பின் தோள் மீது கை வைத்தாள்...

அவளது கை பனிபோன்று 'ஜில்'லென்றிருந்தது.

அதே சமயத்தில் நல்ல பாம்பின் படம் தோளில் விழுந்து அழுத்தினால் எப்படி இருக்குமோ அப்படி கனமாகத் தெரிந்தது கை!



திடீரென ஒரு கேள்வி கேட்டாள் அவள்... "என்னைத் தெரிகிறதா?" அவள் குரலில் மாற்றம்.

அதே சமயத்தில் வீட்டின் வாயிற்படியில் வைக்கப்பட்டிருந்த, தேய்ந்து போன நிலவிளக்கு திடீரென பிரகாசமாக எரியத் தொடங்கியது. அந்த வெளிச்சத்தில் குரூப் தன் அருகிலிருந்த சாவித்திரி உட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தான்.

அவன் அருகில் அமர்ந்திருந்தவள்... சாட்சாத் கார்த்திகா அந்தர்ஜனம்!

இவனும் அவளுடைய மரணத்திற்குக் காரணமாக இருந்தவன்தானே!

'அட பகவதியே' அந்த பிரம்ம ராட்சஸ் அல்லவா தன் அருகில் உட்கார்ந்திருப்பது?' என்று நினைத்து குரூப்பின் உடல் திடீரென வியர்த்துக் கொட்டியது. பயத்தால் உடல் 'வெட வெட'வென நடுங்கிற்று. மயிர்க்கால்கள் நிமிர்ந்து நின்றன. பாத நுனியிலிருந்து கிளம்பிய வேகமான ரத்த ஓட்டம்... இருதயத்தை வேகமாக வந்து தாக்கியது.

இங்கிருந்து ஓடிவிடலாம் என்று குரூப் தீர்மானித்தான்... எழுந்தான்... தனது பலத்தை எல்லாம் திரட்டி, அவன் வலக் காலை எடுத்து வைத்தபோது... பின் பக்கமாக நீண்டு வந்த ஒரு கை அவன் தோள்மீது அமர்ந்து இழுத்தது. அதனால் அவன் வராந்தாவில் மல்லாந்து விழுந்தான். விழுந்த வேகத்தில் தலையின் பின் பாகத்திற்கு நல்ல அடி. அதனால் ஏற்பட்ட வலியோடு அவன் அவளைப் பார்த்த போது, கார்த்திகா சிரித்தாள்.

ரத்தத்தை உறைய வைக்கும் சிரிப்பு அது... வாயிலிருந்த பற்கள் வைரக் கற்களைப் போல் ஜொலித்தன. நில விளக்கின் வெளிச்சத்தில் அப்பற்கள் நன்றாக வளைந்தும், கூராக இருந்தவை போன்றும் அவனுக்குத் தெரிந்தன.

ஆம், முகம் குரூப்பின் அருகில் குனிந்து வந்தது. பக்கத்தில் பார்க்க பற்கள் நன்றாகவே தெரிந்தன.

திடீரென அவனது இடக் கன்னத்தில் அவளது கூரிய பற்கள் பதிந்தன. தொடர்ந்து அவன் கழுத்தை நன்றாகக் கவ்விப் பிடித்துக் கடிப்பது போல் தெரிந்தது.

தன் பலத்தையெல்லாம் உபயோகித்து அவளிடமிருந்து விடுவித்துக் கொள்ள குரூப் படாதபாடு பட்டான்... முடியவில்லை.

கழுத்தைக் கவ்விப்பிடித்தவள் சற்று நேரம் கடித்தவளாகவே இருந்தாள். சற்றைக்குப் பின் அவனை அலாக்காகத் தூக்கி, ஒரு பந்தைப் போல் எறிய, அவன் இல்லத்திற்கு வெளியே இருந்த பாதையில் போய் விழுந்தான்.

அங்கே இந்த குரூப்பின் பிணத்தை மறுநாள் கண்டவன் உன்னித்தன்.

தம்பியின் வீட்டிற்குப் போகும் வழியில் அவன் குரூப்பின் பிணத்தைப் பாதையில் கண்டான்.

ராத்திரி சாப்பிட்ட பிறகு, மீண்டும் எங்கோ போய்க் குடித்துவிட்டு இங்கே வந்து விழுந்து கிடக்கிறான் என்று அவன் முதலில் நினைத்தான். அதனால் அவனைத் தொட்டு உலுக்கு.. உலுக்கென்று உலுக்கினான் "குரூப்.. குரூப்" என்ற அழைத்தும் பார்த்தான்..." பதில் இல்லை. அதனால் அவனைப் புரட்டினான். ரத்தம் வற்றிக் கிடந்த குரூப்பின் முகம் அவன் கண்களில் பட்டது. முகமெல்லாம் காயம்!

உன்னித்தன் பார்த்தவுடன் பயந்தான். உடனே அங்கிருந்து ஓடிப்போய் தம்பியிடம் விஷயத்தைக் கூற அவனும் திடுக்கிட்டான். இதற்குள் கிராமம் இச்செய்தியை அறிந்தது. எழமத்தூர் இல்லத்தின் முன்னால் இறந்து கிடந்ததால், குரூப்புக்கு



துர்மரணம் எற்பட்டிருக்கக்கூடும் என்றே ஊரார் முடிவு கட்டினார்கள்...

சில தினங்களாகவே அந்த ஊராருக்கு மனத்தில் பல சந்தேகங்கள் ஒவ்வொன்றாக எழுந்தன...

வர்மாவின் மர்மமான மரணத்தைப் பற்றிய செய்தியும் கொஞ்சங்கொஞ்சமாக வெளிவந்தது.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு வாசுதேவன் தம்பி மிகவும் வேதனைக்குள்ளானான். மரணம் எந்த நேரத்திலும் தன்னையும் பிடிக்கக்கூடும் என்றே அவனுக்குத் தோன்றியது.

## அத்தியாயம் - 5

குரூப்பின் மரணச் சடங்குகள் எல்லாம் முடிந்தபிறகு வாசுதேவனும், தாமோதர உன்னித்தனும் இடசேரி இல்லத்தில் சந்தித்தனர். இருவர் முகத்திலும் பயத்தின் நிழல் நன்றாகவே படிந்திருந்தது.

இருவர் சிந்தனையும் ஒன்றில் தெளிவாக இருந்தது. அதாவது மரணம் தங்களையும் எந்த நேரத்திலும் பிடிக்கலாம் என்கிற எண்ணம் தான் அது.

கார்த்திகாவின் கதையில் பங்கு கொண்ட நபரில் இருவர் மட்டுமே பாக்கியாக இருந்தனர். அந்த இருவரும் தாங்கள்தான் என்பதை இவர்களே நன்றாக அறிந்திருந்தார்கள்.

ஆனால் இந்த இருவருடன் மட்டும் பழிவாங்கும் படலம் முடிந்துவிடும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்தால்?

இருவரும் மது சாப்பிட அமர்ந்தனர்.

"இனி என்ன செய்வது உன்னித்தனே?" என்று தம்பி கேட்டான்.

"அதைப்பற்றித்தான் நானும் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறேன். நாம் முன்னரே பேசிக் கொண்டது போல, முதலில் இந்த வீட்டை யாருக்காவது விற்றுவிட வேண்டும். அதற்குமுன் இந்த ராட்சசைத் தீர்த்துக்கட்ட ஒரு நல்ல மந்திரவாதியைப் பிடிக்க வேண்டும்.

"நீ ஒரு ஹாஜியாரைப் பற்றிச் சொன்னாயே அது என்னவாயிற்று?"

"போகலாம் என்றுதான் இருந்தேன். குரூப்பிற்கு இப்படி மரணம் சம்பவித்துவிட்டதால் முடியவில்லை. நாளைக் காலையில் போகிறேன்" என்றான் உன்னித்தன்.

"ஒவ்வோர் இரவும் ஏதாவது நடக்கிறது . அதனால் இன்றிரவு நீ உன் வீட்டிற்குக்கூட போகாதே. இங்கேயே படுத்துக்கொள்!... நாளை காலையில் முதல் வேலையாக... எழமத்தூர் இல்லம் விற்கப்படும் என்று பத்திரிகையில் விளம்பரம் தரலாம். அப்படியே ஹாஜியாரையும் போய்ப்பார்க்கலாம்" என்று தம்பி சொல்ல, அது நல்ல ஏற்பாடாக இருந்ததால் உன்னித்தன் ஒப்புக் கொண்டான். இரவு அங்கேயே படுத்துக் கொண்டான்.

ஒதுக்குப்புறம் போன்று தோன்றினாலும் அது வீட்டின் ஒரு பகுதியே. முன்பக்கத்தில் சற்று உள்ளே தள்ளி, ஒரு 'ஷெட்' போன்ற அந்த அறை விசாலமாக இருந்தது. உன்னித்தன் அங்கே இருந்த கட்டிலில் படுத்தான். அவனுக்குத் தூக்கமே வரவில்லை. ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.



இரவு மணி பன்னிரண்டு அடித்தது. அந்தச் சப்தம் உன்னித்தன் மனத்தில் பயத்தை ஏற்படுத்தியது. அதே சமயத்தில் மூடியிருந்த கதவை யாரோ லேசாகத் தட்டினார்கள். அவன் நடுங்கிப் போனான்... நாக்கு உள்ளே இழுத்துக் கொண்டது.

"நான்தான்!" என்று ஒரு பெண்ணின் குரலைக் கேட்டபோது, அவனது பயம் அதிகமானது. உடலில் வியர்வை ஆறாகப் பெருகியது.

"இது நான்தான்... சந்திரிகா!"என்று வெளியில் இருந்தவள் குரல் கொடுத்தாள்.

அவள் பெயரைக் கேட்டவுடன், உன்னித்தன் மனத்தில் சந்திரிகாவின் கட்டமைந்த அழகான உருவம் தோன்றியது... அதே விநாடியில் அவனிடம் இருந்த பயம் முழுதும் விடைபெற்றுக் கொண்டுவிட்டது.

அவளை அணைத்து மகிழவேண்டும் என்கிற ஆசை மனத்தில் இடம்பிடித்துக் கொண்டது. சுவரில் இருந்த கோல் விளக்கைச் சுற்றுத் தூண்டிவிட்டு உன்னித்தன் கதவைத் திறந்தான். வந்திருந்தவள் சந்திரிகாவேதான்.

அவள் உள்ளே வந்ததும், மல்லிகையின் வாசனை குப்பென்று அறைக்குள் புகுந்து கொண்டது.

அவள் படுக்கையில் அமர்ந்தவாறே, "இதுவரை தூங்கி இருக்க மாட்டீர்களே!" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்...

"இல்லை!"

"ஏன் தூக்கம் வரவில்லையா?"

பயத்தினால் தூக்கம் வரவில்லை என்று அவன் சொல்லவில்லை.

"தூக்கம் ஏனோ வரவில்லை!" என்றான்.

சந்திரிகா மேலே ஒரு துண்டை மட்டும் போர்த்திக் கொண்டு இருந்தாள். இடையில் ஒரு முண்டு மட்டும்.

காற்றே இல்லாத காரணத்தினால், அந்த அறை மிகவும் சூடாக இருந்தது.

"என்ன இந்த அறையில் காற்றே கொஞ்சம் கூட இல்லையே" என்று சொல்லியவாறே மேலே போட்டிருந்த துண்டைக் கீழே எடுத்துப் போட்டாள்.

ரவிக்கை போடாத உடம்பு!

சந்தனத்தில் தோய்த்தெடுத்த உடம்பு...

சிற்பி அளவாகச் செதுக்கிய கவர்ச்சிகரமான உடல் அமைப்பு!

கோயில்களில் உள்ள தூண்களில் வேலைப்பாடுகள் நிறைந்த சிறிய பெண் சிலைகளைச் செதுக்கி வைத்திருப்பார்களே... அதில் ஒரு சிலை போல இருந்தாள் சந்திரிகா.

அவள் அசைந்தபோது ஒவ்வோர் அவயவமும் அழகுடன் அசைந்தன. உன்னித்தனைக் கவ்வின...

அருகே அமர்ந்த அவள், தன் கைகளை உன்னித்தன் மார்பில் விளையாட விட்டாள்... ரோமம் நிறைந்த மார்பின் மீது விரல்கள் புகுந்து வெளியே வந்தன.

அவளை இந்தக் கோலத்தில் பார்த்ததிலிருந்து, அவள் கை தன் மீது படும் வரையிலும் பிரமை பிடித்தவன் போலவே இருந்தான் உன்னித்தன். நடப்பதெல்லாம் நிஜந்தானா என்கிற சந்தேகம்.

நிஜந்தான் என்பதை அவள் நிரூபித்துக் கொண்டிருந்தாள்.



அவளது மிருதுவான மார்பகங்கள் அவன் மீது மெதுவாக அழுந்தின; உடல் உராய்ந்தது.

இதுவரை அவன் வாழ்நாளில் அனுபவித்திராத ஒரு சுகானுபவத்தின் தாள லயத்தில் சந்திரிகாவின் மூச்சு அவன் கன்னத்தில் பதிந்தது.

மெதுவாக அவள் முத்தமிட்டாள்.

உன்னித்தன் இன்பலோகத்திற்குப் பயணமானான்.

சந்திரிகாவின் வேகம் அதிகமாக இருந்தது. இடையே போடப்பட்டிருந்த அணையை உடைத்துக் கொண்டு நதி சீறிக்கொண்டு கிளம்பியது.

இருமருங்கிலும் இருந்த கரையிலும் மண் சரிவு! எவ்வளவோ நாள்கள் அடக்கி வைத்திருந்த வேட்கை ஒரே நாளில் திருப்தி அடையத் துடித்தது. இருவரும் சங்கமித்திருந்த அதே நேரத்தில் திடீரென வீட்டிற்கு வெளியே சூறாவளிக் காற்று சுழன்று சுழன்று அடிக்கத் தொடங்கியது.

இந்தக் காற்றால் துளசி மாடத்தில் இருந்த பெரிய துளசிச் செடி வேரோடு பிடுங்கப்பட்டது. அது ஆகாயத்தில் பறந்தது.

பரவலாகச் சுற்றிக் கொண்டிருந்த அந்தக் காற்று ஒரே இடத்தில் நின்றது தூண்போல. நின்ற இடத்திலேயே சுழன்றது.

சற்றுப் பொறுத்து அதன் மையம், மெதுவாக உன்னித்தன் படுத்திருந்த அறைப் பக்கம் நகர்ந்தது. அந்த அறைப்பக்கம் வந்த காற்று, மூடியிருந்த கதவைப் படீரென இடிப்பது போல் அதன் மீது மோதியது.

வெளியிலிருந்து யாரோ திறக்க முயலுவது போல, விட்டு விட்டு கதவின் மீது அந்தக் காற்று மோதியது. இவ்வளவு பலமான

மோதல்களினால், எந்தச் சமயத்திலும் கதவு உடைந்து கீழே விழுந்துவிடும் என்பது போன்ற நிலை.

முதலில் அதைப் பொருட்படுத்தாமல் கருமமே கண்ணாக இருந்த உன்னித்தன், கதவு தொடர்ந்து இடிக்கப்பட்டதால் "என்ன அது?" என்று கேட்டவாறே எழ முயன்றான்.

"காற்று போலத் தெரிகிறது..." என்றாள் சந்திரிகா உன்னித்தனை நகரவிடால் பிடித்துக் கொண்டு.

இவர்கள் கேள்வி கேட்டு பதிலைப் பெறுவதற்குள், கதவு காற்றினால் பலமாக இடிக்கப்பட்டு, திறந்து கொண்டது.

உள்ளே வந்த காற்று, அறையைச் சுற்றிச் சுற்றி வந்தது. இவர்கள் படுக்கையை விட்டு எழுந்துவிட்டனர். இவ்வளவு காற்று இங்கே வீசிக் கொண்டிருந்த போதிலும், அறைக்குள் இருந்த கோல் விளக்கு ஆடாமல் அசையாமல் எரிந்து கொண்டிருந்ததைக் கண்ட உன்னித்தன் வியப்படைந்தான். தன் மேல் போட்டுக் கொண்டு வந்த துண்டை ஒரு பக்கமாக வீசி எறிந்திருந்தான் அல்லவா? சுழன்றடித்த காற்று, அந்தத் துண்டை பந்துபோல் சுற்றி, மேலே கொண்டு போனது. துண்டு உருண்டையாக, அந்தரத்தில் இங்குமங்குமாக ஆட்டம் காட்டிக்கொண்டு இருந்தது. உன்னித்தன் அதை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால் சந்திரிகாவின் கவனம் அதன் மீது விழவே இல்லை. அவள் படுக்கையிலிருந்து நிர்வாணமாக எழுந்து நின்றாள். அந்த நேரத்தில் அந்த அதிசயம் நடந்தது.

மேலே பந்தாகச் சுழன்ற துண்டின் ஒரு நுனி தானாக இறங்கி வந்தது, யாரோ பிடித்து இழுப்பதைப்போல்!

அத்துண்டின் நுனி நின்று கொண்டிருந்த சந்திரிகாவின் வலக் கைப்பக்கம் உள்ளே நுழைந்து, இடப் பக்கம் வெளியே வந்து அங்கே பலமான ஒரு முடிச்சு போட்டது.



சந்திரிகாவின் உடல் பகுதி மூடப்பட்டது. துண்டு தானாகக் கட்டியவுடன் அப்படியே நிற்கவில்லை... சந்திரிகாவை அலாக்காக மேலே தூக்கியது. அவள் உயரே எழும்பினாள். யாரோ அவளைப் பிடித்துத் தூக்குவது போலவே இல்லை. அவள் தானாக உயரப்போவது போலவே இருந்தது!

"அய்யோ... என்ன இது? என்று அவள் கை கால்களை உதறிய போது அந்தரத்தில் இருந்தாள்.

அவளால் ஏதுமே செய்ய முடியவில்லை... இடுப்பில் இருந்த துண்டின் ஆதாரத்தில் அவள் மேலே தனியாய்த் தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த உன்னித்தன் பயந்தான். அவனுக்கு உடல் வியர்த்தது.

தொங்கிக் கொண்டிருந்தவள் யாரோ மேலே இழுப்பது போல் மேலே போனாள். கூரையின் உச்சி, அவளது தலையை இடித்தது.

"அய்யோ!" என்று வலி தாங்காமல் கூச்சலிட்டாள் சந்திரிகா.

தென்னை மரத்திலிருந்து தேங்காயைக் கீழே தள்ளுவது போல, சந்திரிகா மேலே இருந்து கீழே தள்ளி விடப்பட்டதைப் போல் 'பொத்'தென்று விழுந்தாள்.

கீழே விழுந்தவள் தட்டுத்தடுமாறி எழ முயலுவதற்குள் மீண்டும் மேலே கொண்டு போகப்பட்டாள் வேகமாக! தலை இப்போதும் இடிபட்டது...

அதே வேகத்தில் கீழே விழுந்தாள். அவளால் இந்த முறை எழ முடியவில்லை.

இந்த முறை அவள் கீழே விழுந்தவுடன், யாரோ இழுத்துக் கொண்டு போவதைப் போல் அவள் அறைக்கு வெளியே வேகமாக இழுத்துச் செல்லப்பட்டாள்.

உன்னித்தன் வெளியே போய்ப் பார்த்தான். துளசி மாடத்திற்கு அருகே சந்திரிகா சற்று உயரத்தில், எந்த விதப் பிடிப்பும் இல்லாமல் தொங்கிக் கொண்டிருந்தாள். அவளை அந்த நிலையில் பார்த்த உன்னித்தன், மிகவும் பயந்து, ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று மனத்தில் முடிவு செய்து கொண்டு வெளியே போகாமல் அங்கேயே நின்றுவிட்டான்...

உயர எழும்பியிருந்த சந்திரிகா, திடீரெனக் கீழே விழுந்தாள்.

இதுவரை பலமாக வீசிக் கொண்டிருந்த காற்று சட்டென்று நின்றது.

அவள் விழுந்த சப்தத்தைக் கேட்ட உன்னித்தன் வெளியே ஓடி வந்து அவளைத் தூக்கி நிறுத்தினான்...

"வேண்டாம்... நீங்கள் போய் விடுங்கள்..." என்றவாறு எழுந்த சந்திரிகா, துணியினால் தன் உடலை நன்றாகச் சுற்றிக் கொண்டு உள்பக்கம் ஓடிப்போனாள். உன்னித்தன் திரும்பவும் தான் படுத்திருந்த அறைக்கே போனான்...

இன்ப நினைவுகளுக்குப் பதில் பயம்தான் மனத்தில் அதிகமாக இருந்தது. தூக்கம் பிடிக்காமல், அப்படியே படுக்கையில் கிடந்தான்.

இந்த வேலை நிச்சயம் அவளுடையதாகத்தான் இருக்கும் என்று முடிவு கட்டிய அவன்...

"இனி தாமதிக்கவே கூடாது... உடனே மாந்திரீகனைப் போய்ப் பார்க்க வேண்டும்" என்று தீர்மானம் செய்து கொண்டான்.

விடியற்காலை! கோழி கூவியது. உன்னித்தன் படுக்கையை விட்டு வெளியே வந்தான். வராந்தாவில் வாசுதேவன் தம்பி காப்பி குடித்துக் கொண்டிருந்தான்.



"என்ன உன்னித்தன், இரவு சரியாகத் தூங்கவில்லையா?" என்று தம்பி அவனைக் கேட்டான்...

"இல்லை! தூங்கவே இல்லை!" என்று தம்பியைப் பார்க்காமல் பதில் சொன்னான் உன்னித்தன்...

வாசுவுக்குச் சந்தேகம்...

"ஏன், புதிய அனுபவம் ஏதாகிலும் உண்டா?" கேட்டான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை... ஏதேதோ பலவிதமான யோசனைகளினால் தூக்கம் வரவில்லை" என்றான்.

"சற்றுப் பொறுத்துப் புறப்படலாமா?" தம்பி கேட்க... "புறப்பட்டு விடுவோம்... இனியும் தாமதிக்கக் கூடாது... வழியில் வேறு சில காரியங்களைப் பார்க்க வேண்டும்."

"அதென்ன சில காரியங்கள்?" தம்பிக்குப் புரியவில்லை.

"இல்லத்தை விற்கும் விஷயத்தைக் கவனிக்க வேண்டுமா? வேண்டாமா?"

"ஆமாம்! அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்!" தம்பி ஒப்புக் கொண்டான்...

"சந்திரிகா... சந்திரிகா" என்று தம்பி அழைக்க ஓமனா காப்பி கொண்டு வந்தாள்.

"சந்திரிகாவுக்கு உடல்நிலை சரியாக இல்லை" என்றாள் ஓமனா.

காப்பியைக் குடித்துவிட்டு, உன்னித்தன் புறப்பட்டான்...

"நீ பஸ் நிலையத்தில் எனக்காகக் காத்திரு... நான் அங்கே வந்துவிடுகிறேன்..."

"சீக்கிரம் வந்துவிடு" என்று தலையை ஆட்டிக்கொண்டே போனான் உன்னித்தன்.

8

"இதோ நான் புறப்படுகிறேன்" என்றவாறே வாசுதேவன் தம்பி வீட்டிற்குள் நுழைந்தான்.

அவர்கள் இருவரும் பஸ்ஸை விட்டு இறங்கி ஒன்றாகவே நடந்தனர்... அவர்கள் போய்ச் சேர்ந்த நேரத்தில் ஹாஜியார் வீட்டில்தான் இருந்தார். அவர்களைப் பார்த்ததும், தாடியை நீவிவிட்டுக் கொண்டே "உட்காருங்கள்" என்றார் மரியாதையாக...

அறுபது வயதிற்கு மேற்படாதவராகத் தெரிந்த ஹாஜியார் தலையில் ஒரு சிவப்புத் தொப்பி. அவரது மீசையும், தாடியும் வெள்ளிக் கம்பிகளாகக் காட்சியளித்தன. அவை இரண்டும் ஒழுங்காக வெட்டி ஒதுக்கப்பட்டிருந்தன. குனிந்து தொழுவதால் நெற்றியில் வடு. கண்கள் பிரகாசமாக ஜொலித்தன. அவர் அதிக உயரமில்லாத, தடித்த மனிதராக இருந்தார்.

"தெற்கேயிருந்து வருகிறீர்களா?"

"ஆமாம்!"

"பெண் விஷயமா?"

"ஆமாம்!"

அவர் இப்படிக் கேட்டவுடனேயே மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவர்களாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களை உடனே புரிந்து கொண்ட ஹாஜியார், அவர்கள் விஷயம் எல்லாமே தனக்குத் தெரியும் என்பது போன்ற பாவனையைத் தன் முகத்தில் தேக்கிக் கொண்டார். முகத்தில் குறுஞ்சிரிப்பு! இதைக் கவனித்த உன்னித்தன், இவருக்கு எல்லாமே தெரியும் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். அத்துடன் இவரால்தான் விஷயம் சுமுகமாக முடியும் என்றும் முடிவு கட்டிவிட்டான்...



ஹாஜியார் எழுந்து தன் வீட்டிற்குள் போனார். சற்றுக் கழித்துத் திரும்பி வந்தார்...

அவரது கையில் வெற்றிலை... அந்த வெற்றிலையில் எழுதுகோல் வைத்து, அராபிய மொழியில் எதையோ எழுதினார். பிறகு அந்த வெற்றிலையை ஒரு பலகை மீது வைத்தார். பிறகு அதை உற்று நோக்கினார்...

வெற்றிலை லேசாக ஆடியது... சட்டென்று நிமிர்ந்து நின்றது...

காம்பின் பலம்...

நிமிர்ந்து நின்ற அது உச்சியில் லேசாக வளைந்து கொடுத்தது...

அப்போது அதைப் பார்த்தால், பாம்பு படம் எடுத்து நிற்பது போலத் தோன்றியது.

ஹாஜியார் அதைப் பார்த்தவாறே, அராபிய மொழியில் சில மந்திரங்களைச் சொன்னார்.

பிறகு தன் அருகிலிருந்த பித்தளைப் பாத்திரத்திலிருந்த தண்ணீரை எடுத்து அந்த வெற்றிலை மீது தெளித்தார்.

சூடான இரும்புக் கம்பியின் மீது தண்ணீர் விழுந்ததுபோல், வெற்றிலை மீது தண்ணீர் பட்டவுடன்... "உஸ்... உஸ்..." என்று சப்தம் கேட்டது.

சூடு தணிந்தது போன்ற நிலை. ஏதோ காணாததைக் கண்டுவிட்டவர் போல ஹாஜியார் முகத்தில் வியப்பு! ஆனால் கண்களில் மட்டும் தோல்வி நிழல்!

திரும்பவும் தண்ணீரை எடுத்து வெற்றிலை மீது தெளித்தார். திரும்பவும் அதே சப்தம்!

d

"விஷயம் கொஞ்சம் கடுமையானது போலத் தெரிகிறதே" என்று ஹாஜியார் சொல்ல, "என்ன ஆயிற்று?" உன்னித்தன் கேட்டான்.

"பழிவாங்கத் துடிக்கிறது..."

அதுதான் இவர்களுக்குத் தெரியுமே...

"அதற்கு என்ன செய்வது?"

"பார்க்கலாம்" என்று சொன்ன ஹாஜியார் திரும்பவும் உள்ளே போனார்...

சற்றுப் பொறுத்து அவர் திரும்பி வந்தார்...

"நீங்கள் இரண்டு நாள் கழித்து திரும்பி வாருங்கள்... நீங்கள் வந்தவுடன் ஒரு கிடா (எருமை)வின் தலையில் மாந்திரீகம் செய்து தருகிறேன். அந்தத் தலையை எடுத்துக் கொண்டு போய், எழமத்தூர் இல்லத்து வாயிலில் வைத்து விட்டால் போதும்... எல்லாமே சரியாகிவிடும்!" என்றார்.

"நிச்சயமாக எல்லாம் சரியாகிவிடுமா?" என்று உன்னித்தன் கேட்டான்.

"நிச்சயமாக...! இதைக் கண்டிப்பாக நான் தீர்த்துத் தருகிறேன்... நான் சொன்ன தினத்தில் இங்கே வாருங்கள்..." என்று சொல்லி அனுப்ப... அவர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள். வழியில் இல்லத்தை விற்க, பத்திரிகையில் விளம்பரம் கொடுக்க தம்பி ஏற்பாடு செய்து விட்டு வந்தான்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு அவர்கள் இருவரும் ஹாஜியாரைத் தேடிப் போனார்கள்.

அவர்கள் அங்கே செல்லும் போது, குட்டன் என்கிற பெயருடைய ஒரு வேலைக்காரனையும் உடன் அழைத்துக் கொண்டு போனார்கள்.



இந்தக் குட்டன் இருக்கிறானே, அவன் ஒரு சகலகலா வல்லவன். தேங்காய் பறித்து சீவித் தரவும் தெரியும்... கொப்பரை தயார் செய்யவும் தெரியும்... தன் எஜமானர் சொல்லும் எல்லா வேலைகளையும் கன கச்சிதமாகச் செய்யவும் தெரியும். குட்டனுக்கு வயது இருபத்தி இரண்டு. ஹாஜியார் மந்திரித்துக் கொடுக்கும் கிடாவின் தலையைத் தூக்கிக் கொண்டு வர ஆள் வேண்டுமல்லவா? அதற்காகவே குட்டன்...

குட்டனுக்கு நல்ல ஆரோக்கியமான உடல். இரண்டு மூன்று நபர்களை ஒரே நேரத்தில் சமாளிக்கும் திறமை படைத்தவன்... எந்தக் காரியத்தையும் துணிந்து செய்யக்கூடியவன். அவனுக்கு இன்னும் திருமணமாகவில்லை.

தம்பியுடைய சில குறிப்பிட்ட அக்கிரமங்களுக்கு குட்டன் துணையாக இருப்பதுண்டு. அவனுக்கு அவ்வப்போது கள் சாப்பிடவும், செலவுக்கும் பணம் தருவான்... அதனால் எப்போதும் குட்டன் தம்பியுடன் ஒத்துப் போகக் கூடியவன்.

இவர்கள் இருவரால் கிடாவின் தலையைத் தூக்கி வருவதென்பது இயலாத காரியம்... அதனால் அவர்களுக்குக் குட்டன் தேவைப்பட்டான். மேலும் குட்டனிடமிருந்து எந்த ரகசியமும் வெளியில் போகாது!

ஹாஜியார் வீட்டில் எல்லாமே தயாராக இருந்தன. திரும்பவும் அவர்கள் பதினேழு கிலோமீட்டர் நடக்க வேண்டும். கிடாவின் தலையை எந்த வாகனத்திலும் ஏற்றிக் கொண்டு போக முடியாது. யாராவது இது என்ன என்று சந்தேகப்பட்டுவிட்டால் விஷயம் மிகவும் விபரீதமாகிவிடும். பஸ்ஸிலும் எடுத்துப் போக முடியாது... வேறேதாவது வாகனத்தில் ஏற்றிச் செல்லலாம் என்றால் போலீஸ் கேஸ் வந்தாலும் வரலாம். சமீப காலத்தில் வழியில் போலீஸ் தொல்லையும் அதிகம். செக்கிங் என்கிற பெயரில் உயிரை வாங்குவார்கள்!

அதனால் நடந்து போவதே உத்தமம். அப்படித்தான் அவர்கள் முடிவுக்கு வந்தார்கள்.

கிடாவின் மந்திரித்த தலையை ஒரு சாக்குப்பையில் போட்டு, அந்தச் சுமையைக் குட்டன் தன் தலையில் எடுத்து வைத்துக் கொண்டான். நடந்தான். மற்ற இருவரும், சற்று இடைவெளிவிட்டு அவனைப் பின் தொடர்ந்தனர்.

அதாவது ஏதாவது வம்பென்றால், அதைக் குட்டனே சமாளித்துக் கொள்ள வேண்டும்.

இவர்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாத மாதிரி பார்க்கிறவர்களுக்குத் தெரிய வேண்டும்.

எவ்வளவு வேகமாக வந்தாலும், அவர்கள் எழமத்தூர் இல்லத்தின் வாயிலை அடைந்தபோது இரவு மணி பன்னிரண்டாகி விட்டது.

முதல் வாயிலில் நின்று உள்ளே பார்த்தார்கள்... எங்கும் நிசப்தம்!

ஆகாயத்தில் நிலவும் இல்லை.

இருட்டு கருமையாக அப்பிக் கொண்டிருந்தது.

இரவு சில்வண்டுகளின் சப்தம் கூடக் கேட்கவில்லை.

குட்டன், வாசுதேவன் தம்பியிடம் கேட்டான்... "என்ன செய்யலாம் தம்பி அய்யா?"

"ஹாஜியார் என்ன சொன்னார்? விவரமாகச் சொல்" தம்பி கேட்க உன்னித்தன் சொன்னான்.

"கிடாவின் தலையை வீட்டு வாயிலில் கிழக்கைப் பார்த்தது போல் வைக்கவேண்டும். வைத்தபிறகு, திரும்பிப் பார்க்காமல் இங்கிருந்து வேகமாகப் போய்விடவேண்டும்"



குட்டன் அங்குமிங்கும் பார்த்தான். இருட்டு அவனுக்குக் கொஞ்சம் பரிச்சயமாகி இருந்தது!

உன்னித்தன் தம்பியை மெதுவாக அருகே அழைத்தான்.

"என்ன?" என்று கேட்டுக் கொண்டே தம்பி வந்தான்.

"தம்பி! இங்கு நாம் ஏன் இருக்க வேண்டும்? இங்கிருந்து போய்விடலாமே...?" உன்னித்தன் கேட்டான்.

"வேலை முடியும்வரை இங்கே நின்றால் என்ன?"

"வரப்போவதும்... நடக்கப்போவதும்... என்னவென்று நிச்சயம் சொல்ல முடியாது... அதனால்தான் நாம் போய்விடலாம் என்கிறேன்..."

தம்பி ஒரு நிமிடம் யோசித்து விட்டு... "அதுவும் சரிதான்..." என்றான். பிறகு குட்டனை அழைத்தான். அவன் அருகே வந்து "என்ன தம்பி அய்யா" என்றான்.

"ஹாஜியார் சொன்னபடி செய்துவிட்டுவா... நாங்கள் இங்கே நிற்பது சரியில்லை..." என்று தம்பி சொன்னான்.

"சரி அய்யா... நீங்கள் நிற்க வேண்டாம் போங்கள்..." என்றான் குட்டன்.

அதைக் கேட்டார்களோ இல்லையோ... இருவரும் மிகவும் வேகமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தனர். குட்டன் எழமத்தூர் இல்லத்தின் முற்றத்திற்கு வந்தான்..

அந்தப் புராதன இல்லத்திற்குள் இப்போதுதான் முதன்முதலாக 'மாமிசம்' வருகிறது... அதாவது வெட்டுப்பட்ட கிடா ரூபத்தில்! மாந்திரீகம் செய்த கிடாவின் தலை!

இப்படிப்பட்ட ஒரு கிடாவின் தலையில் மாந்திரீகம் செய்தால் உயிருள்ளவன் தலையே அறுந்து விழுந்துவிடும் என்று குட்டன் கேள்விப்பட்டிருக்கிறான்.

இப்போது என்ன நடக்கப் போகிறதோ தெரியவில்லை. இதனால் யார் தலை அற்று விழவேண்டும் என்று இவர்கள் இருவரும் மாந்திரீகம் செய்திருக்கிறார்களோ தெரியவில்லை என்றும் குட்டன் நினைத்தான்... என்றுமே விவரம் கேட்டுப் பழக்கப்பட்டவனல்லன் அவன்!

வீசப்படும் அம்பு... எறியப்படும் கட்டாரி!

ஏதோ காரியம் சாதிக்கத்தான் இது வைக்கப்படுகிறது என்பதை அவன் மேலோட்டமாக அறிவான்.

அவனுக்குத் தெரிந்தவரை, தம்பியும்.... உன்னித்தனும் ஒரு காரியம் செய்தால், அது நிச்சயம் உபயோகமில்லாத காரியமாக இருக்கவே இருக்காது.

குட்டன் சாக்குப் பையை எடுத்து முன் வராந்தாவில் வைத்தான்...சுற்றிலும் பார்த்தான்... யாருமே இல்லை...மயான அமைதி..

சாக்குப் பையை அவிழ்த்தான்!

அதற்குள் ரத்தம் சிந்திய கிடாவின் தலை இருந்தது. அதன் இரண்டு கொம்புகளையும் பிடித்து, பையிலிருந்து வெளியே எடுத்தான்.

சாக்கை நன்றாக விரித்துப் போட்டு அதன் மீது அந்த வெட்டுண்ட கிடாவின் தலையை வைத்தான்.

கிழக்குப் பக்கம் வைக்க வேண்டும் என்று தம்பி சொன்னது அவனுக்கு ஞாபகத்தில் இருந்தது...

தன் மடியிலிருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு தீக்குச்சியைக் கிழித்தான்...



அதன் வெளிச்சத்தில் இல்லத்தின் முன் இருந்த விளக்கு அவன் கண்களில் பட்டது. அதில் எண்ணெயில் நனைந்த திரியும் இருந்தது.. விளக்கை ஏற்றினான்.

அந்த வெளிச்சத்தில் கிடாவின் தலையைக் கிழக்குப் பக்கமாகத் திருப்பி வைத்தான்.

அதுவரை மேகங்களால் சூழப்பட்டிருந்த நிலவும் வெளியே வந்தது. இருள் அகன்றது.

கிடாவின் தலையை நன்றாக ஒரு முறை பார்த்தபின் அவன் வராந்தாவிலிருந்து இறங்கினான்.

"வந்த வேலை முடிந்தது. இனி போக வேண்டியதுதான்" என்று அவன் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். வாயில் பக்கம் அவன் வேகமாக நடந்தான்... அதே சமயம் திடீரென பின்னால் ஏதோ சப்தம் கேட்டது.... நின்றான். திரும்பவில்லை... காதுகள் மட்டும் கவனித்தன.

பின்னால் கிடாவின் சப்தம் கேட்டது... தனக்கு ஏதோ மனப்பிரமை என்று முடிவுகட்டிவிட்ட அவன், அடுத்த அடியை வேகமாக எடுத்து வைத்தான். மீண்டும் கிடாவின் சப்தம்! குட்டன் திரும்பி நின்றான். அங்கே அவன் கண்டதென்ன?

வராந்தாவில் வைத்திருந்த கிடாவின் தலை... வாயைப் பிளந்தது... தலையை இரண்டு பக்கமும் ஆட்டியது... மெதுவாக அத்தலை உயர எழுந்தது.

"கனவு காண்கிறோமோ?" என்று நினைத்த குட்டன், கூர்ந்து அதையே பார்த்தான்.

வைத்த இடத்திலிருந்து மெதுவாக உயரே எழுந்த அந்தத் தலை, இவன் பக்கமாக மெதுவாக வந்தது. வரும்போது, அதன் தலை இருபுறமும் ஆடிக்கொண்டே இருந்தது...

தலை மட்டும் தனியாக!

குட்டனின் உடம்பில் இருந்த தைரியமெல்லாம் ஒரே வினாடியில் வற்றிவிட்டது! அவன் அங்கிருந்து வேகமாக ஓட முயன்றான்.

திடீரென அவன் அருகில் வந்து நின்ற அந்தக் கிடாவின் தலை தன் இரு கொம்புகளால் அவனைக் குத்தித் தள்ளியது... ஒவ்வொரு குத்தும் கத்தியால் வெட்டுவதைப் போல இருந்தது! "அய்யோ" என்று அலறிக்கொண்டே உடம்பெல்லாம் ரத்தம் வழிய, அவன் வாயிலை நோக்கி ஓடினான்.

அந்தத் தலையும் அதே வேகத்தில் அவனைப் பின்தொடர்ந்தது.

எழமத்தூர் இல்லத்தின் வாயிலைத் தாண்டியதும், அது அவன் முன்னால் வந்து அவனைக் குத்தியது. இந்த முறை குட்டன் கீழே விழுந்து விட்டான்.

கர்ஜித்தவாறே அந்தத் தலை அவனைக் குத்திக் கொண்டே இருந்தது. இந்தச் சமயத்தில் அது முழு உருவம் பெற்ற கிடாவாக ஆகிவிட்டது... மிகவும் பயங்கரமான உருவம் கொண்டதாக இருந்தது அது.

சாதாரண எருமையே பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கும்.

அதுவும் இது ஆண்! உருவத்தில் மிகவும் பெரியது—கருமை நிறம்..

ஏதோ வெறி பிடித்தாற்போல், அவனை மாறி மாறிக் குத்திக் கொண்டே இருந்தது. குட்டனுக்கு நினைவு தவறியது.

அது அத்துடன் அவனை விடவில்லை. தனது இரு கொம்புகளால் அவனை வாரி எடுத்துக்கொண்டு வாசுதேவன் தம்பி வீட்டிற்குப் போனது. வாயிலில் குட்டனைக் கீழே போட்டது... பிறகு உள்ளே வந்தது.



துளசி மாடம் இருக்குமிடத்தில் நின்றுகொண்டு, அது பயங்கரமாகச் சப்தம் செய்தது.

அப்போதுதான் தூங்கத் தொடங்கிய வாசுதேவன் தம்பியை இந்தச் சப்தம் பயப்படுத்தியது. தொடர்ந்து கேட்கவே... படுக்கையிலிருந்து திடுக்கிட்டு எழுந்தான்..

தான் கேட்ட சப்தம் நிஜமானது தானா... அல்லது கனவா என்று அவனுக்குச் சந்தேகம். தனது காதுகளை மிகவும் கூர்மையாக்கிக் கொண்டு காத்திருந்தான்.

அடுத்த நிமிடமே அந்தப் பயங்கரச் சப்தம்! "கிடா இங்கே நம் வாயிலுக்கு வந்து விட்டதா?" என்கிற சந்தேகம் அவன் மனத்தில் எழவே, தன் அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். பிறகு வாயிற்கதவையும் திறந்தான்...

நிலா நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அவன் கண்ட காட்சி ரத்தத்தை உறைய வைக்கப் போதுமானதாக இருந்தது. உடல் இல்லாத ஒரு கிடாவின் தலை அந்தரத்தில் நின்றதுமல்லாமல், தலையை இப்படியும் அப்படியுமாக ஆட்டிக்கொண்டும் இருந்தது. சப்தம் அதனிடமிருந்துதான் வந்தது. திடீரென அச்சப்தம் நிற்க, ஒரு பெண் சிரிப்பதுபோல புதிய சப்தம் கேட்டது... "ஹி...ஹி...ஹி" என்பது போல... அதுவும் கிடாவின் தலையிலிருந்தான் வந்தது. வாசுதேவன் பயந்தான். ஸ்தம்பித்துப் போனான். என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை. பெண்ணின் சிரிப்பு தொடர்ந்து சில நிமிடங்கள் கேட்டுக் கொண்டே இருந்தது. பிறகு சட்டென்று நின்றது. அதே சமயத்தில் அந்தக் கிடாவின் தலையும் கீழே விழுந்தது. யாரோ போட்டது போல... தம்பி வீட்டிற்குள் திரும்பினான். கதவை நன்றாக மூடினான்.

படுக்கை அறைக்கு வந்தபோது ஓமனா நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். இதைப்போன்ற ஒரு சம்பவத்தை அவள் பார்த்து பயப்படாமல் இருந்தது ஒரு விதத்தில் திருப்தியளிக்கும் விஷயம் என்றே நினைத்தான்.

அவள் மட்டும் பார்த்திருந்தால்? அதை நினைக்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. படுத்தான்.

விடியற்காலையில் கோழி கூவியபோது அவன் படுக்கையை விட்டு எழுந்தான்.

கிடாவின் தலையை அங்கிருந்து அகற்றவேண்டும். அதற்கு முதலில் குட்டனை அழைக்க வேண்டும். அவன் வந்துதான் அதைப் புதைக்க வேண்டும். ஹாஜியாரின் மந்திரம் பலித்துவிட்டதாக அவன் நினைத்துக் கொண்டான். இல்லத்தில் எல்லாம் முடிந்து விட்டதென்பதை அறிவிக்கத்தான் அந்தத் தலை இங்கே வந்து விழுந்திருக்கவேண்டும் என்றும் தம்பி மனத்தில் முடிவு செய்து கொண்டான். வீட்டை விட்டு வெளியே வந்தவன் துளசி மாடத்திற்குப் பக்கத்தில் தலை கிடந்த இடத்தைப் பார்த்தான்.

அது அங்கே இல்லை. எங்கே போயிருக்கும்? எல்லா இடங்களையும் பார்த்துவிட்டு, அவன் வெளியே வந்தான். யாரோ குப்புறப்படுத்திருப்பது போல் தெரிந்தது. குனிந்து பார்த்தான். குட்டன்! அவன் உடல் முழுதும் காயம். மூக்கின் அருகே கை வைத்துப் பார்த்தான். சுவாசம் இருந்தது. அவன் இறக்கவில்லை. தம்பி அவனைப் பெயர் சொல்லி அழைத்தான். சப்தமில்லை. அசைவுமில்லை. வேலைக்காரர்களை அழைத்து ஒரு வாளி தண்ணீரை அவன் மீது ஊற்றியபோது மெதுவாகக் கண்களைத் திறந்தான். திறந்தவுடன் "அம்மா ... பகவதி.. என்னைக் காப்பாற்று" என்று சப்தம் போட்டான்.



"பயப்படாதே... நான் இருக்கிறேன். எழுந்திரு குட்டா..." என்றான் தம்பி. அதைக்கேட்ட குட்டன் எழ முயன்றான்... அவனால் முடியவில்லை. உடம்பெல்லாம் வலி. எலும்புகள் நொறுங்கிவிட்டதைப் போன்ற நிலை. காயங்களில் ரத்தம் உறைந்திருந்தது. எல்லா விவரமும் தம்பிக்குத் தெரியும் என்றதால், அவன் குட்டனிடம் ஏதும் கேட்கவில்லை.

கிராமத்துக் குஞ்சுராமன் வைத்தியரிடம், குட்டனை வேலைக்காரர்கள் துணையோடு அனுப்பி வைத்தான். இரண்டு ஆட்கள், அவன் தோளில் கை கொடுத்து அவனைக் கைத்தாங்கலாக அழைத்துப் போக வேண்டியிருந்தது. அவர்கள் போனபிறகு வாசுதேவன் வீட்டிற்குள் வந்தான்.

அவனைத் தேடிக் கொண்டு சந்திரிகா ஓடி வந்தாள்.

"அண்ணா, குளத்தில் தண்ணீர் ரத்த நிறமாக இருக்கிறது. குளத்தின் அடியில் ஏதோ இருக்கும் போலத் தெரிகிறது. வந்து பார்" என்றாள். அவள் குரலில் பயம் தெரிந்தது. வாசுதேவன் வேகமாகத் தன் படுக்கை அறைக்குப் போனான். ஓமனா இன்னமும் நன்றாகத் தூங்கிக் கொண்டுதான் இருந்தாள்.

"ஓமனா!" தம்பி அழைக்க அவள் திடுக்கிட்டு எழுந்தாள்.

"என்ன ஆயிற்று?" என்று அவள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை... சும்மா அழைத்தேன்..."

தன் மனைவிக்கு ஆபத்து ஏதும் இல்லை என்று தெரிந்துகொண்ட பிறகு, வாசுதேவன் தம்பி குளத்தருகே போனான். குளத்தின் கடைசி படிக்கட்டில் இறங்கி, குளத்தின் உள்ளே பார்த்தான்.

## அத்தியாயம் - 6

தெளிந்த நீருக்கடியில் கிடாவின் தலை கிடந்தது. அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. அதிலிருந்து புகைச் சுருள் போல இரத்தம் ஒரு பக்கமாக மேலே வந்து பரவியது. பிறகு தண்ணீரோடு கலந்து விட்டது!

"வேலைக்காரர்கள் யாரையாவது கூப்பிடு" என்றான் அவன் சந்திரிகாவிடம், அவள் அழைத்து வந்தாள்.

வந்தவர் இருவர். ஒருவன் தொம்மி, மற்றவன் கொச்சு பாப்பு. இருவரும் தேங்காய் நார் உரிப்பவர்கள். உரமேறிய உடல் படைத்தவர்கள். குளத்தின் அருகே வந்தனர்.

"குளத்தின் உள்ளே பாருங்கள். ஒரு கிடாவின் தலை தெரிகிறது. யாரோ இதை இங்கே கொண்டு வந்து போட்டிருக்கிறார்கள். யாராக இருந்தாலும், அவனை விரைவில் பிடித்து, கட்டிவைத்து உதைக்கப் போகிறேன்" என்றான் தம்பி கோபத்தோடு.

தொம்மி, எஜமான் சொன்னவுடன், குளத்தில் முதலில் இறங்கினான். கண்களில் பட்ட கிடாவின் தலையை எடுக்க முயன்றான். அவன் அதைத் தொடும் அதே நேரத்தில் கிடாவின் கண்கள் அகலமாக விரிந்து ஒரு தடவை சுழன்று, அவனை பயமுறுத்தியது.

அதைப் பார்த்த தொம்மி, "அய்யோ" என்று சப்தமிட்டவாறே மேலே வந்துவிட்டான்.

"என்னடா?"

"அதற்கு உயிர் இருக்கிறது."

"என்னடா சொல்கிறாய் மடையா? வெறும் தலைக்கு எப்படியடா உயிர் இருக்கும்? அதுவும் தண்ணீருக்கடியில்?" தம்பி கொஞ்சம் அதட்டிக் கேட்டான்.



பதிலில்லை.

நீயே திரும்பவும் உள்ளே போ..."

"இல்லை எஜமானே, அதைப் பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கிறது" என்றான்.

"சரி, ஒரு காரியம் செய்யுங்கள். நீங்கள் இருவருமே உள்ளே இறங்கி, அந்தத் தலையை கொண்டு வாருங்கள்" என்ற தம்பி அவர்களுக்கு உத்தரவு போட்டான். போனாலும் தொல்லை. போகாவிட்டாலும் தொல்லை. அதனால் எப்படியோ நடக்கட்டும் என்று தீர்மானித்துவிட்ட அவர்கள் இருவரும் பயந்து கொண்டே தண்ணீரில் இறங்கினார்கள்.

ஆனால் இவர்கள் அந்தக் கிடாவின் தலையைத் தொடுவதற்குள்... அதுவாக, யாரோ தூக்கி எறிந்தது போல 'குபீ'ரென எகிறி குளத்தின் கரையில் வந்து விழுந்தது! அந்தத் தலையில் சலனமில்லை! வாசுதேவனக்குத் திருப்தி.

"இந்தா இதை எடுத்துக் கொண்டு போய் ஒரு குழியைத் தோண்டிப் புதைத்து விடுங்கள்" என்று வேலையாட்களுக்கு உத்தரவு கொடுத்து விட்டுப் போனான்.

இந்த முயற்சியும் தோல்வியடைந்து விட்டதே என அவன் மனம் சங்கடப்பட்டுக் கொண்டு இருந்தது. அணு அணுவாக தம்பியைச் சாகடிக்க கார்த்திகா முடிவு செய்து விட்டாள் என்றே அவனுக்குத் தெரிந்தது! இனி அடுத்தபடியாக உள்ள ஒரே நம்பிக்கை, எழமத்தூர் இல்லத்தை யாராவது வாங்கினால் தான் உண்டு.

அந்த வீடு வேறு யார் கைக்காவது போய்ச்சேர்ந்தால்தான், வாங்கியவர்கள் அதை இடித்து விட்டுப் புது வீடு கட்டுவார்கள். குளத்தை மூடுவார்கள். அதற்குப் பிறகுதான் கார்த்திகா இவர்கள் பக்கம் திரும்பாமல், புது வீட்டுக்காரர்களைக் கவனிப்பாள். இப்படி ஒரு நம்பிக்கை தம்பிக்கு!

அவனைப் பொறுத்தவரையில், இதுதான் கடைசி எண்ணமும்கூட!

புதிய யோசனைகள் தோன்ற மனதில் இடமில்லை.

பத்திரிகையில் 'எழமத்தூர் இல்லம் விற்கப்படும்' என்கிற விளம்பரம் வந்தது. அதை உன்னித்தனும், தம்பியும் படித்தார்கள்.

"இதைப் பார்த்துவிட்டுப் பார்த்துவிட்டு யாராவது வராமல் இருக்கமாட்டார்கள்" என்று தம்பி நிச்சயமான குரலில் சொன்னான். உன்னித்தன் நம்பிக்கையோடு தலையை ஆட்டினான்.

அவர்கள் நினைத்தது போலவே நடந்தது.

இலட்சாதிபதியான ஓர் இளைஞன் அந்த விளம்பரத்தைப் பார்த்தான். அவன் பெயர் விஜயமோகன்.

விளம்பரத்தைப் பார்த்த அவன், இந்தப் பெயரை எங்கோ கேட்டிருக்கிறோமே என்று யோசித்தான். சில நிமிடங்களில் அவன் மனத்தில் பல எண்ணங்கள். இதைப் போலவே, வேறு ஏதோ ஒரு பெயர் எனக்குத் தெரிந்து இருப்பதால், இதே விஜயமோகன் சரித்திரம் படித்துப் பட்டம் பெற்றவன். புராதன காலத்திய யோக முறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆராய்ச்சி செய்பவன்.

அதே சமயத்தில் மாந்திரீகத்தைப் பற்றியும் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய பெரிய மாமா மெலாட்டூர் கிருஷ்ணன் நம்பூதிரி ஒரு பிரபல மந்திரவாதி! அவர் தனது 104 வயதில்தான் இறந்தார். அவருக்கு இளையவரான மித்திரன் நம்பூதிரியும் இதேபோல் பெயர் பெற்றவர்தான். "இந்தப் பெயரை எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா மாமா?" கேட்டான்.

அவர் விளம்பரத்தைப் படித்தார்.

"எழமத்தூர் கிராமம்... எழமத்தூர் இல்லம்..." என்று பல தடவை அந்தப் பெயர்களை உச்சரித்தார்.



"ஆம்! நான் இந்தப் பெயர்களை எங்கோ கேள்விப்பட்டிருக்கிறேன். அண்ணன் என்னிடம் சொல்லியதாக ஞாபகம். அந்த இல்லத்தில் வசித்து வந்தவர்கள் எல்லாம், பல வருடங்களுக்கு முன் பெரிய மாந்திரீகர்களாக இருந்தார்கள். கால ஓட்டத்தில் அந்தப் பெயர் எப்படியோ மறைந்துவிட்டது. இல்லமும் மிகவும் பழையதாகி இருக்கும். இதனால்தான் அது விற்பனைக்கு வருகிறதோ என்னவோ? அதுசரி, உனக்கு அந்த வீட்டை வாங்கும் எண்ணம் இருக்கிறதா?" என்று கேட்டார் மாமா.

விஜயமோகன் தயங்கித் தயங்கிச் சொன்னான்...

"எனக்கு ஒரு சிறு ஆசை. அங்கே, அந்த வீட்டில் பழைய விஷயங்கள் ஏதாகிலும் கிடைக்கக்கூடும். வாசுதேவன் தம்பி என்பவரைப் பார்த்தால் போதும் என்று போடப்பட்டிருக்கிறது. அந்த நபர்தான் இப்போதைய சொந்தக்காரராக இருக்கலாம்."

"உனக்கு வாங்கும் எண்ணம் இருந்தால் வாங்கிக் கொள்ளலாம். அந்த நபர்தான் வாரிசாக இருக்க வேண்டும். அவனைப் போய்ப் பார். அவன் கேட்கும் விலையைக் கொடுத்துவிடக் கூடாது! அதில் பாதி தொகைக்குத்தான் நாம் கேட்க வேண்டும்..."

"சரி மாமா... நான் நாளை புறப்படுகிறேன்.."

"போய் வா! நீ கேட்கும் விலை படிந்தால் கொஞ்சம் அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வா!"

"அப்படியே ஆகட்டும் மாமா..."

மறுநாள் காலையில் விஜயமோகன் புறப்பட்டான். வாசுதேவன் தம்பியைப் பார்த்தான். பேசினான்.

"இவ்வளவு தூரத்திலிருந்து இங்கே வந்து இந்த இல்லத்தை நீங்கள் வாங்குவதற்கு ஏதாவது தனிப்பட்டக் காரணம் இருக்கிறதா?" தம்பி அவனிடம் கேட்டான்.

"அந்த எழமத்தூர் இல்லத்தில் இருந்தவர்கள் எல்லாம் பெரிய மந்திரவாதிகளாக இருந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் எனக்கு அதை வாங்குவதில் விருப்பம்..." என்று விஜயமோகன் சொல்ல, அதைக் கேட்ட தம்பியின் கண்கள் பிரகாசமடைந்தன. அவன் அருகில் இருந்த உன்னித்தனைப் பார்த்தான். அவனும் பூடகமாகச் சிரித்தான்.

"நல்லது. இப்படிப்பட்ட ஒரு நபரைத்தான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்..." என்று தம்பி சொன்னான்.

தம்பி இவ்வாறு சொன்னதும் தன் மாமா சொல்லி அனுப்பிய விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

"இந்த வீட்டின் சொந்தக்காரர் யார்?"

"சத்தியமாக இப்போது யாரும் இல்லை. வாரிசு என்றும் யாரும் இல்லை. தற்போது நான்தான் இந்த வீட்டைப் பார்த்துக் கொள்கிறேன். எழமத்தூர் பகவதி கோவிலைப் புதுப்பித்துக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யவே, இப்போது இந்த இல்லத்தை விற்க வேண்டி இருக்கிறது..."

"இந்த வீட்டை விற்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?"

"இந்த ஊர் மக்களுக்கு இருக்கிறது. எல்லோருமாகச் சேர்ந்து ஒரு கமிட்டியை ஏற்படுத்தி இருக்கிறோம்! அந்தக் கமிட்டி எனக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது..." என்று தம்பி சொன்னான்.

"இதை வாங்கினால் ஏதாவது பிரச்சினை வருமா?"

"வராது! நான் அதற்கு உத்தரவாதம் தருகிறேன். ஜாமீனாக என் வீட்டையும் நிலத்தையும் கொடுக்கிறேன். போதுமா?" என்றான் தம்பி.

இவன் வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போய்விடக்கூடாதே என்கிற கவலை அவனுக்கு!



விஜயமோகனக்கு, தம்பி சொன்னதைக் கேட்டவுடன் திருப்தி.

"இந்த வீட்டின் விலை ஒரு லட்சம்" என்று தம்பி சொன்னான்.

"வீட்டைப் பார்க்காமல் எப்படி விலை பேசுவது?" என்று கேட்டான் விஜயமோகன்.

"நீங்கள் பார்த்துவிட்டே பேசுங்கள். வாருங்கள் போய்ப் பார்க்கலாம்."

வாசுதேவன் தம்பியும், உன்னித்தனும், விஜயமோகனை அழைத்துக் கொண்டு நடந்தனர்.

அவர்கள் மூவரும் எழமத்தூர் இல்லத்தை அடைந்தனர். அந்த இல்லத்திற்கு ஏற்கனவே பரிச்சயமானவன் போல, விஜயமோகன் அவர்கள் இருவருக்கும் முன்னால், காம்பௌண்டு வாயிலைக் கடந்து, இல்லத்திற்குள் நுழைந்தான். எல்லா இடங்களையும் நிதானமாகச் சுற்றிப் பார்த்தான்.

அவர்கள் இருவரும் இல்லத்தின் வாயிலிலே நின்றுகொண்டு இருந்தனர்.

விஜயமோகன் வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வெளியே வந்தான்.

"இந்த இல்லத்தைச் சேர்ந்த குளம் எங்கே இருக்கிறது?" என்று அவர்களிடம் கேட்டான்.

திடுக்கிட்டுப் போன அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

வீட்டைச் சுற்றிப் பார்த்தவன், திடுமென இப்படிக் கேட்கிறானே என்பதுதான் அவர்கள் பரிமாறிக் கொண்ட பார்வையின் அர்த்தம்.

"அதோ பாருங்கள்... அங்கே இருக்கிறது" என்று தம்பி, பின்னால் இருந்த குளத்தின் பக்கம் கையைக் காட்டினான்.

விஜயமோகன் அந்தப் பக்கம் போனான். அவர்களும் மெதுவாகத் தொடர்ந்தார்கள். குளத்தை நன்றாகப் பார்த்த விஜயமோகன், ''இந்தக் குளத்தில் இருக்கும் நீரைச் சுத்தமாக முதலில் வெளியேற்ற வேண்டும். பிறகு நன்றாகக் குளத்தைச் சுத்தப்படுத்தி புதிய நீரை நிரப்பவேண்டும்'' என்றான்.

''ஏன்? என்ன காரணம்?'' தம்பி கேட்டான்.

''இதில் ஒரு பிணம் கிடந்ததல்லவா?''

தம்பி இதைக் கேட்டுத் திடுக்கிட்டான். இவன் எல்லாம் தெரிந்தவன் போலிருக்கிறது..

''என்ன பதறிப் போனவனைப் போல் கேட்டான் தம்பி.

''இருந்தாலும் அதைப்பற்றிப் பரவாயில்லை. இங்கே ஒரு துர்மரணம் நிகழ்ந்திருக்கிறது என்பதை அறிவேன்...! ஏதோ நீங்கள் ஒரு நல்ல காரியம் செய்தீர்கள். அதனால் என் விலை இந்த வீட்டிற்கு ஐம்பதாயிரம் மட்டுமே... என்ன?'' என்று விநுயமோகன், தம்பியைப் பார்த்துக் கேட்க, அவன் உன்னித்தனைப் பார்த்தான்.

''எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்'' என்று தம்பி, விஜயமோகனிடம் கேட்டான்.

''என்ன விஷயமென்றாலும், நீங்கள் பேசி, இன்றைக்கே முடிவு சொல்ல வேண்டும். இனி இதற்காக என்னால் இன்னொரு தடவை வரமுடியாது!'' என்று விஜயமோகன் முடிவான குரலில் சொல்லிவிட்டான்.

இருவரும் பேசியபிறகு, விஜயமோகன் கேட்ட அதே விலைக்கு, ''சரி!'' என்று சொல்லிவிட்டான் தம்பி.

ஐயாயிரம் ரூபாயை முதலில் அட்வான்ஸ் கொடுத்து அதற்கு ஒரு ஒப்பந்தப் பத்திரம் எழுதி வாங்கியாயிற்று. மூன்று நாட்கள் கழித்து, பதிவு அலுவலகத்தில், விவரமான பத்திரம் எழுதி, முழு பணத்தையும் பெற்றுக்கொண்ட பிறகு, பத்திரத்தைப் பதிவு



செய்துகொள்ளலாம் என்று விஜயமோகன் முடிவு செய்து கொண்ட பிறகு அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டான்!

தன் வீட்டிற்கு வந்த விஜயமோகன், தன் மாமாவிடம் எல்லா விவரங்களையும் சொன்னான்.

''இல்லம் எப்படி இருக்கிறது?''

''மிகவும் பழைய கட்டிடம். பல வருடங்களாக யாரும் அதில் குடி இல்லாததால் பராமரிப்பு இல்லை. கட்டிடம் பாழாகிப் போயிருக்கிறது. இல்லத்தின் காரியங்கள் எல்லாவற்றையும் தம்பி என்ற ஒருவன் தான் முன்னின்று கவனிக்கிறான். வீட்டை விற்ற பணத்தில்தான் பகவதியின் கோவிலைப் புதுப்பிக்கிறார்கள்.''

''திடீரென்று பின்னால் வாரிசுதாரர்கள் யாராவது வந்து தொல்லை கொடுத்தால்... நம் பணத்திற்கு பாதுகாப்பு?''

''வாசுதேவன் தம்பியின் வீடும், நிலமும் ஜாமீனாகத் தரப்படுகின்றன.''

''அப்படியென்றால் பிரச்சினையே இல்லை...'' என்று முடித்தார் மாமா.

ஏற்கனவே திட்டமிட்டதுபோல எழமத்தூர் இல்லத்தின் விற்பனை முடிந்து, பத்திரப் பதிவும் ஆகியது.

இறந்துபோன கார்த்திகா, வாசுதேவன் தம்பிக்கு, இந்த இல்லத்தை விற்க அதிகாரம் கொடுத்திருந்ததாக ஒரு போலி பத்திரத்தை தம்பி, உன்னித்தன் பேச்சைக் கேட்டு தயார் செய்து வைத்திருந்தான். இந்தப் பத்திரத்தின் அடிப்படையில்தான் இப்போது புதிய பத்திரம் பதிவு செய்யப்பட்டது. வேறு எந்தச் சிக்கலும் இருக்கவில்லை.

ஒரு வாரத்திற்குப் பிறகு விஜயமோகன் ரிஜிஸ்தார் காரியாலயத்திற்குப் போய் பத்திரங்களை வாங்கிக் கொண்டான்.

அதைத் தன் மாமாவிடம் காட்டினான். அவர் பத்திரத்தை நிதானமாகப் படித்துப் பார்த்தார். பிறகு கடைசிப் பக்கத்தைப் புரட்டியபோது, அவர் முகத்தில் கேள்விக்குறிகள்.

"மகனே இங்கே வா!" அழைத்தார்.

விஜயமோகன் அருகில் சென்றான்.

"ஏன் அழைத்தீர்கள் மாமா?"

"இந்தப் பக்கத்தைக் கொஞ்சம் பார். யாரெல்லாம் சாட்சிக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். கவனி." மாமா காட்டிய கடைசிப் பக்கத்தில் இருந்த சாட்சிகளின் கையெழுத்துக்களையும், மற்ற கையெழுத்துக்களையும் படித்தான்.

"இடசேரி ராகவன் தம்பியின் மகன் வாசுதேவன் தம்பி, செருவல்லில் விஜயமோகன் நம்பூதிரி..." இது இல்லத்தை விற்றவரும், வாங்கியவருமாகிய இருவரின் பெயர்கள்.

அடுத்து சாட்சிகளாகப் பதிவு செய்யப்பட்ட பெயர்களில் ஒரு பெண்ணின் பெயர் இருந்தது.

எழமத்தூர் இல்லத்தின், பெரிய சங்கரன் நம்பூதிரியின் மருமகள் கார்த்திகா அந்தர்ஜனம். அந்தப் பெயருக்கெதிரே கையெழுத்தும், கைரேகையும் இருந்தது. விஜயமோகன் இப்பெயரைப் படித்தவுடன் மாமா கேட்டார்.

"யார் இந்த கார்த்திகா அந்தர்ஜனம்?"

"எனக்கும் தெரியவில்லை மாமா. ஆனால் பதிவுசெய்யும் போது பெண் யாரும் அங்கே வரவில்லையே" என்றான் விஜயமோகன்.

"மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இந்தப் பெண் யார் என்பதை முதலில் விசாரிக்க வேண்டும்!" மாமா சொன்னார்.

"விசாரிக்கிறேன்" என்று சொன்ன விஜயமோகன் அன்று மாலையே எழமத்தூர் கிராமத்திற்குப் பயணப்பட்டான்.



இருள் பரவும் நேரத்தில் அவன் பஸ்ஸை விட்டு இறங்கினான். இல்லத்திற்குப் போகும் முன், முதலில் தம்பியைப் பார்த்து விசாரிக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான். சற்று தூரம் நடந்த போது நன்றாக இருட்டாகி விட்டது. ஜனநடமாட்டமே இல்லாத இடம். கிராமத்தின் ஒற்றையடிப் பாதையில்தான் கொஞ்சதூரம் நடக்க வேண்டும். கையில் வைத்திருந்த டார்ச்சுடன், விஜயமோகன் தைரியமாக நடந்தான்.

அரை கிலோமீட்டர் நடந்தபிறகு, வழி இரண்டாகப் பிரிந்தது.

இந்த இரண்டு பாதையில், எந்தப் பாதையில் போவது என்று தெரியாமல் விஜயமோகன் ஸ்தம்பித்து நின்றான் சில வினாடிகள்..

"எங்கே போகவேண்டும்?" என்று ஒரு பெண் குரல் அவனுக்குப் பின்னால் கேட்டது.

திரும்பிப் பார்த்த விஜயமோகன் தன் கையில் இருந்த டார்ச்சை அவள் பக்கம் திருப்பினான்... டார்ச்சின் வெளிச்சத்தில், அங்கே பேரழகுடன் கூடி நின்ற ஒரு பெண் தெரிந்தாள்.

இவள் யாராக இருக்கும்?

இந்த இரவில், ஆள் நடமாட்டமே இல்லாத பாதையில் வந்து நிற்கும் இந்த அழகி யாராக இருக்கும்?

விஜயமோகன் யோசித்தான்.

சுந்தரி!

தன்னை வலை வீசிப் பிடிக்க வந்திருக்கும், யாராவது ஒரு விலை மாதாக இருக்குமோ?

"எங்கே போகிறீர்கள்?" என்று அவள் மறுபடியும் கேட்டாள்.

"நான் போகவேண்டிய இடம் எழமத்தூர் இல்லம்! ஆனால் இப்போது போய்க் கொண்டிருப்பது இடசேரி இல்லத்திற்கு!" என்றான் அவன்...

"இப்படி நீங்கள் சொல்வதற்கு பிரத்தியேகக் காரணம் ஏதாவது இருக்கிறதா?"

என்ன இவள் இப்படிக் கேட்கிறாள்? அக்காலத்தில் அந்த ஊரில் மிகவும் பிரசித்துப் பெற்றவன் வாசுதேவன் தம்பி... அவனை அறியாதவர் இந்த வட்டாரத்தில் யாரும் இருக்கமுடியாது! இவள் ஒரு விலைமாதாக இருந்தால், அவன் வீட்டின் பெயரைக் கேட்டவுடன் போயிருக்க வேண்டுமே! போகவில்லை...

"பிறகு ஏன் நீங்கள் போக வேண்டிய இடத்திற்குப் போகாமல், இப்போது வேறு இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

இவள் யாரோ புத்திசாலிப்பெண். இவளை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும்...

அவன் நடந்தால், அவளும் நடந்தாள்– அதாவது தொடர்ந்தாள்!

தன்னை விடாமல் தொடர்ந்து கொண்டிருக்கம் அவளை மேலும் கீழுமாகப் பார்த்தான் விஜயமோகன்.

கால் தரையில் இருந்தது. யட்சி அல்ல!

முதலில் நினைத்ததுபோல் இவள் ஒரு விலைமாதாகத்தான் இருக்க வேண்டும்.

"நீங்கள் யார்?"

"நானா? நான் எழமத்தூர் இல்லத்தின் வாரிசுகளில் ஒருத்தி..."

"அப்படி யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே..."

"நீங்கள் ஆதாரத்தைச் சரியாகப் பார்க்கவில்லையோ?"

"நன்றாகப் பார்த்தேன்..."

"அதில் சாட்சி போட்டிருந்த நபரை நீங்கள் மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது..."



"உம்... பார்த்தேன்! எழமத்தூர் இல்லத்தின் பெரிய சங்கரன் நம்பூதிரியின் மருமகள் கார்த்திகா அந்தர்ஜனம்!"

"அப்படியென்றால்... நீங்கள் நிச்சயம் மறக்கவில்லை."

"இல்லை! அது யார் என்று பார்க்க வேண்டும் என்றுதான் என் மாமாவும் சொல்லியிருந்தார்" என்று விஜயமோகன் பதில் சொல்ல, "சரி... நான்தான் அது என்று தெரிந்துவிட்டபடியால் இடசேரி இல்லத்திற்குப் போக வேண்டிய அவசியம் என்ன? என்று அவள் கேட்டாள்!

விஜயமோகன் யோசித்தான்.

தான் வாங்கிய அந்த இல்லத்தின் சொந்தக்காரி – அதாவது வாரிசு என்று கூறிக்கொண்டு ஒருத்தி தன் எதிரில் நிற்கிறாள்... இடசேரி வீட்டிற்கு இப்போது போகவேண்டிய அவசியம் இல்லை என்கிறாள்... அப்படியென்றால், தன்னைத் திரும்பிப் போ என்கிறாளா?

"கார்த்திகா குடியிருப்பது எங்கே?" விஜயமோகன் கேட்டான்.

"இங்கிருந்து சற்று தூரத்தில் இருக்கிறேன்.. வீட்டுப் பத்திரம் பதிவு செய்யப்படும்போது நான் இங்கே இல்லை... விற்றபிறகு, பத்திரத்தில் நான் அவசியம் சாட்சிக் கையெழுத்துப் போட வேண்டும் என்று வாசுதேவன் தம்பி நிர்ப்பந்தம் செய்தார்... ஒரு நல்ல காரியத்திற்கு நம் உதவியும் இருக்கட்டுமே என்றுதான் நான் சாட்சிக் கையெழுத்துப் போட்டேன்..." என்றாள் அவள்.

ஒன்றைக் கேட்டால் ஒன்பது சொல்கிறாள்...!

"இந்த இரவு நேரத்தில் நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்?"

தங்கு தடை இல்லாமல் வந்தது பதில்...

"எனது பொருள்கள் கொஞ்சம் இல்லத்தில் இருக்கின்றன... அதை நான் எடுத்துக் கொண்டு போக வேண்டும்! இல்லத்தை

விற்றபின், சொந்தக்காரர் அனுமதி இல்லாமல் நான் எப்படி இல்லத்தினுள் பிரவேசிக்க முடியும்?... அதனால்தான் இப்போது வந்தேன்...''

விஜயமோகன் மீண்டும் யோசித்தான்... அவள் நியாயத்தைத்தான் பேசுகிறாள்.

இப்போது தான் வாங்கிய இல்லத்தில், அவளுக்குப் பாத்தியதை இருப்பினும், அதை வைத்துக் கொண்டு வேறு நடவடிக்கைகள் எடுத்துத் தகராறு செய்யாமல், சாட்சிக் கையெழுத்து மட்டும் போட்டுவிட்டுப் போன அவளை, அவன் ஏன் இல்லத்திற்குள், அவள் பொருள்களை எடுத்துப் போக அனுமதிக்கக்கூடாது?

''நான் இப்போது தம்பியின் வீட்டிற்குப் போகிறேன்... நாளைக்கு நீ இல்லத்திற்கு வா... நானும் வருகிறேன்...'' என்றான் விஜயமோகன்.

''பிறகு?'' என்று கேட்டவாறு அவள் அவன் முகத்தைப் பார்த்தாள்...

''நீ எங்கே இருக்கிறாய் சொல்! வா... என்னை அழைத்துப் போய் உன் வீட்டில் விட்டு விடுகிறேன்'' என்றான் அவளிடம்!

''நான் கொஞ்சதூரத்தில் குடியிருக்கிறேன் என்று முன்பே சொல்லவில்லை? நீங்கள் இந்தப் பக்கம் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நான் உங்களுக்காகக் காத்திருக்கிறேன்'' என்றாள் அவள்.

இதற்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியாமல் சில வினாடிகள் தடுமாறினான் விஜயமோகன்.

சுந்தரியான ஒரு பெண்... இரவில் தனியாக, வெகுதூரத்தில் இருந்து தன்னைக் காண வந்து காத்துக்கொண்ட இருக்கிறாள் என்றால், அது எதற்காக? தன்னுடைய அனுமதி பெற்று, அவள் வீட்டில் இருக்கும் தன் உடைமைகளை எடுத்துக்கொண்டு போக! இவளை இப்போது தனியாக விட்டுவிட்டுப் போவது அவ்வளவு சரியான காரியமல்ல.



''சரி... அப்படியென்றால் நாம் இல்லத்திற்கே போவோம்! ஆனால் நான் ஏதும் சாப்பிடவில்லையே'' என்றான் மோகன்.

''நீங்கள் வருவீர்கள் என்று தெரிந்து, கொஞ்சம் ஆகாரத்தை நான் கொண்டு வந்து இல்லத்தில் வைத்திருக்கிறேன்...''

''எங்கே இல்லத்திலா?''

''ஆமாம்! அங்கே எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டுத்தான் உங்களுக்காக நான் இங்கே வந்து காத்துக் கொண்டிருக்கிறேன்...''

''அப்படியா? வியப்படைந்து போனான் விஜயமோகன்.

பேச்சுகளுக்கிடைய அவன் அவளது அழகான உடலையும் கவனிக்கத் தவறவில்லை.

''நீ இவ்வளவு வற்புறுத்திச் சொல்வதால் போகலாம். அது மட்டுமல்ல, நீ தனியாக இருக்கிறாய், அதனால் உனக்குத் துணையாகவும் வருகிறேன்...'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். அவள் முன்னால் போக விஜயமோகன் பின்னால் நடந்தான்.

ஆனால் அவளோ, அவன்மீது உராய்ந்தவாறே நடந்தாள். மேலே ரவிக்கை.. ஒரு மேல் துண்டு... இடையில் ஒரு முண்டு, தலைமுடி இடைவரை நீண்டு இருந்தது. அவன் கூடவே நடந்தாள்.

விஜயன் சற்றுப் பின் தங்கினான். அவளது பின்புறத்தை டார்ச் அடித்துப் பார்த்தான்.

அவன் மாந்திரீகம் படித்தவன். யட்சிகளுக்கும், பிசாசுகளுக்கும் பின்பக்கம் ஏதும் இராது என்று படித்தவன்— அறிந்தவன்.

இவளுக்குப் பின்புறம் மிகவும் அழகாகவே இருந்தது.

தன் உடன் வரும் பெண், அப்படி ஒன்றும் துர்தேவதை அல்ல என்றும், அவள் ஒரு சாதாரண பெண் என்றும் அவன் முடிவு கட்டினான். அத்துடன், இவளோடு இல்லத்திற்குச் சென்று இரவைக் கழிப்பதில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது என்றும் அவன் நம்பினான்.

அதுமட்டுமல்ல, இரவுக்குத் தனக்கு இப்படி ஒரு துணை கிடைத்திருக்கிறதே என்றும் அவன் மகிழ்ந்தான்.

அவளுக்கும் இவன் தன்னோடு தங்குவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதையும் அவள் பேச்சின் மூலமே அறிந்தான்.

நடந்துகொண்டே அவள் பேசினாள்.

"இந்த வழியில் எல்லாம் நீங்கள் வந்திருக்கமாட்டீர்கள் இல்லையா?"

"இல்லை... இதுதான் முதல் தடவை" என்றான் அவன்.

"ஏன் இந்தப் பழைய இல்லத்தை வாங்கவேண்டும் என்று முடிவு செய்தீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"பிரத்தியேகக் காரணங்கள் ஏதும் இல்லை. இந்த இல்லத்தின் சொந்தக்காரர்கள், அவர்கள் காலத்தில் பெரிய மாந்திரீகர்களாக இருந்தவர்கள். இந்த வீட்டை நான் வாங்கினால், அவர்கள் விட்டுச் சென்ற உபயோகமான பொருள்கள் ஏதாவது எனக்குக் கிடைக்காதா என்கிற நப்பாசைதான் எனக்கு மனதில் ஆசையைத் தோற்றுவித்தது."

"நீங்கள் மாந்திரீகம் படிக்கிறீர்கள் இல்லையா?"

"ஆமாம்!"

"இப்போது உங்களுக்கு ஏதும் தெரியாது இல்லையா?"



"படிப்பே இப்போதுதான் ஆரம்பம்! ஆனால் என் மாமா ஒரு பெரிய மந்திரவாதி. யார் என்ன படித்து என்ன பயன்? இந்த இல்லத்தை எடுத்துக்கொள். இங்கே பெரிய பெரிய மாந்திரீகர்கள் எல்லாம் வாழ்ந்திருக்கின்றனர். கடைசியில் என்ன ஆயிற்று? இல்லம் இப்படி பாழாகிக் கிடப்பதுதான் நிதர்சனம்" என்று சொல்லி பெருமூச்சு விட்டான் விஜயமோகன்.

தொடர்ந்து அவர்கள் வழியில் ஏதும் பேசவில்லை.

இருள் அதிகமாகிக்கொண்டே வந்தது.

பாதையின் இருபக்கமும் இருந்த மரங்கள் நன்றாக வளர்ந்து, பாதைக்குக் கூரை போட்டதுபோல் மூடி இருந்தன. அதன் நடுவே நடப்பது ஏதோ ஒரு குகைக்குள் நடப்பதுபோல இருந்தது. நல்ல இருட்டு வேறு சேர்ந்து கொண்டது. கையில் இருந்த டார்ச்சை அடிக்க விஜயமோகன் ஏனோ மறந்தே போய்விட்டான்.

அவள் பேசாமல் நடந்தாள்.

ஒரு இடத்தில் டார்ச் அடிக்க சுவிட்சை அமுக்கினான். ஆனால் அது எரியவில்லை.

"அட, ஏன் டார்ச் எரியவில்லை?" என்று கேட்டபடியே அவன் அதைக் குலுக்கினான்... எரியவில்லை.. பின்னால் திருகி, 'செல்'களை வெளியே எடுத்து மாற்றிப் போட்டான். அப்போதும் எரியவில்லை.

அவன் டார்ச்சை நோண்டிக் கொண்டிருப்பதைப் பார்த்த அவள், "ஏன், விளக்கு எரியவில்லையா?" என்று கேட்டாள்.

"உள்ளே இருக்கும் 'செல்' தீர வழியில்லை. பல்புதான் கெட்டுப் போயிருக்கும். என்ன செய்வது இப்போது? நல்ல இருட்டாக அல்லவா இருக்கிறது" என்றான் அவன் வருத்தமடைந்த குரலில்.

"எரியாவிட்டால் பரவாயில்லை. எதற்காகப் பயப்படவேண்டும்? நான் வழிகாட்டுகிறேன். நீங்கள் என் பின்னாலே வாருங்கள்.

அப்போதும் வழி தெரியவில்லை என்றால், என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்ன அவள், தன் கையை அவன் பக்கம் நீட்டினாள்.

கார்த்திகா அணிந்திருந்த ஆடை வெள்ளை. அது இருட்டிலும் பளிச்சிட்டது.

''சரி என்றான் அவன். ஆனால் அவள் கையை அவன் பற்றிக் கொள்ளவில்லை.

''வழியில் எந்தத் தடங்கலும் இல்லையல்லவா?'' என்று பேசிக் கொண்டே நடந்தாலும், அவன் கை மட்டும் டார்ச்சில் விஷமம் செய்து கொண்டே இருந்தது.

''இதோ நாம் வந்து சேர்ந்து விட்டோம்'' என்று கூறியவாறு அவள் இல்லத்தின் வாயிலருகே வந்து நின்றாள்.

''இவ்வளவு விரைவாக எப்படி இங்கே வரமுடிந்தது?'' என்று அவன் நினைத்தான். ஆனால் கேட்கவில்லை.

அவள் முன்னால் வீட்டிற்குள் போக, வராந்தாவுக்கு வந்தாள்.

''இங்கே நெருப்புப் பெட்டி வைத்தேன்...'' என்று சொல்லிக் கொண்டே தேடினாள்.

''இதோ கிடைத்துவிட்டது'' என்று நெருப்புப்பெட்டியை அவன் கையில் தருகிறாள்.

''விளக்கு இதோ இருக்கிறது. பற்ற வையுங்கள்'' என்கிறாள்.

விஜயமோகன் பெட்டியிலிருந்து தீக்குச்சியை எடுத்து எரியவிட, அங்கே ஒரு நில விளக்கு வராந்தாவில் இருந்தது. அதில் நிறைய எண்ணெய், ஒரு திரி காணப்பட்டன.

அவன் திரியைப் பற்ற வைக்க, அந்த இடம் பிரகாசமானது.

''நேரம் அதிகமாகி விட்டதா?'' அவள் கேட்டாள்.

''இப்போது இரவு மணி ஒன்பது.''



''உங்களுக்குப் பசிக்கிறது... இல்லையா?''

''கொஞ்சமாக...''

''இருங்கள் வருகிறேன்'' என்று வராந்தாவின் வடக்குப் பக்கம் போனாள் அவள். விஜயமோகன் அவள் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

''இந்த வீட்டைப் பார்க்க வந்த போதும், இதை வாங்கி ரிஜிஸ்தர் செய்தபோதும், இப்படி ஓர் அழகான பெண் இங்கே இருப்பதாக யாருமே சொல்லவில்லையே, ஏன்?'' என்று அவன் யோசித்தவாறு இருந்தான்.

தான் இல்லத்தை வாங்கியபிறகு இவள் எந்தவிதமான மறுப்பும், எதிர்ப்பும் தெரிவிக்காமல், சாட்சிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறாள்.

அவள் திரும்பி வரும் காலடி ஓசை கேட்கவே, அவன் சிந்தனை கலைந்தது.

''இது அந்த அறையின் சாவி'' என்று ஒரு சாவியை அவள் அவனிடம் கொடுத்தாள். அந்தச் சாவி ஒரு சிறு கயிற்றில் கட்டப்பட்டிருந்தது. உள்ளே பூட்டியிருந்த ஓர் அறையை அவள் காண்பித்தாள்.

''அந்த அறையைத் திறந்து, அதற்குள் போய்ப் பாருங்கள். அங்கே ஒரு பெரிய வாள் இருக்கும். அதை எடுத்துக்கொண்டு வாருங்கள். பிறகு நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று நான் சொல்கிறேன்'' என்றாள்.

''சாப்பிடுவதற்கு வாள் எதற்கு?'' என்று அவன் கேட்க,

''அதை எடுங்கள். நான் சொல்கிறேன்...'' அவள் சொல்ல,

விஜயமோகன் அறையைத் திறந்தான். அதனுள்ளே மூலையில் ஒரு வாள் நிறுத்தப்பட்டிருந்தது.

அந்த வாள், நிலவிளக்கின் பிரகாசத்தில் மின்னியது. அவள் சொன்னதைப் போல் அவன் வாளைக் கையில் எடுத்தான். "என்னுடன் வாருங்கள்" என்று அவள் வீட்டின் பின்பக்கம் நடந்தாள். அவனும் அவள் பின்னால் நடந்தான்.

நிலவிளக்கு அவள் கையில் இருந்தது.

"இதோ பாருங்கள். இந்தத் தென்னை மரத்தில் கைக்கொட்டிய தூரத்தில் இளநீர்க்குலை.. இதில் இரண்டை வெட்டுங்கள். இன்றிரவுக்கு இது போதாதா? நாளைக்கு வேறு ஏற்பாடு செய்து கொள்ளலாம்" என்று அவள் சொல்ல, அவன் பதில் பேசாமல், அவள் சொன்னபடி இரண்டு இளநீரை வெட்டினான். கீழே போட்டான். ஒன்றை வெட்டி இளநீரைக் குடித்தான். இன்னொன்றை வெட்டி அவளிடம் நீட்டினான். "எனக்கு வேண்டாம். நீங்களே குடியுங்கள். நாளைக்கு உங்கள் சாப்பாட்டிற்கு வழி கண்டுபிடிக்கிறேன்" என்றாள்.

இளநீர் கற்கண்டைப் போல் இனித்தது.

தனக்கு வேண்டிய ஆகாரத்தை தயாராக வைத்திருப்பதாக அவள் சொன்னது பொய் என்று அவனுக்குப் புரிந்தது. பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன?

"இன்னும் இளநீர் வேண்டுமா?" என்று அவள் கேட்டாள்.

"வேண்டாம்."

"இது உங்கள் இடம்... உங்கள் பொருள்.. உங்களுக்கு இது வேண்டுமா.. வேண்டாமா என்று நான் கேட்டது தவறுதான். அதற்காக மன்னியுங்கள்..." என்றாள்.

அவள் குறிப்பிட்டது இளநீரை!

"இதில் உனக்கும் உரிமை இருக்கிறதல்லவா? அதனால் பரவாயில்லை" என்றான் அவன்.



"இப்போது அதெல்லாம் போய்விட்டது இல்லையா... உம்.. சரி. வாருங்கள் போகலாம்" என்ற சொல்லியவாறு அவள் நடந்தாள்.

வராந்தாவில் இறங்கி, வாயிலில் இருந்த இன்னொரு கதவைத் திறந்தபோது, இதுவரை அங்கே குடியிருந்த வௌவால்களும், வேறு சில பறவைகளும் பறந்து வெளியேறின.

"இதுவரை இவைகளெல்லாம் இங்கே குடியிருந்தன. இனிமேல் தான் நாம் இங்கே குடி வந்துவிடப் போகிறோமே" என்று அவள் சொல்ல,

அப்படியென்றால், இந்தப் பெண்ணும் தன்னுடன்தான் குடியிருக்கப் போகிறாளோ என்கிற சந்தேகம் அவனுக்கு வந்தது.

"இங்கே தூங்கலாம். இந்த அறையை நான் சுத்தம் செய்து வைத்திருக்கிறேன்..." என்றாள்.

தெற்குப் பக்கம் இருந்த ஒரு அறையின் கதவைத் திறந்தபடி, "இந்த அறைக்கள் கட்டிலும், மெத்தையும் போட்டிருக்கிறேன்" என்றாள்.

அவள் சொன்னது சரியாக இருந்தது. கட்டிலில் மெத்தை விரிக்கப்பட்டு இருந்தது. தலையணை வைக்கப்பட்டு இருந்தது.

விஜயமோகன் கட்டிலில் அமர்ந்தான்.

அவள் கையில் இருந்த விளக்கை மேஜையின்மீது வைத்துவிட்டு, அருகில் இருந்த ஸ்டூலில் அமர்ந்தாள்.

பிறகு திடீரென தன்மீது போர்த்திக் கொண்டிருந்த துண்டை எடுத்து தலையணைமீது போட்டாள். மேலே ரவிக்கை, கீழே முண்டு மட்டுமே அணிந்து அவள் அங்கே

அவள் அங்கே அமர்ந்திருந்தாள். அங்க அசைவுகளில் இருந்து அவள் உள்ளே பிராவும், பாவாடையும் அணிந்திருக்கவில்லை என்று தெரிந்தது.

"நல்ல கட்டான உடம்பு..." என்று அவன் அவளைப் பற்றி நினைத்தான்.

"என்ன யோசிக்கிறீர்கள்? என்னைப் பற்றித்தானே?" என்று கேட்டுவிட்டு லேசாகச் சிரித்தாள்.

"ஆமாம்! உன்னைப் பற்றித்தான் நினைத்தேன்.. இப்படி ஓர் இரவில், ஒரு யுவதிக்கு முன்பின் பழக்கமில்லாத ஓர் இளைஞனுடன், ஒரே அறையில் இரவைக் கழிக்க எப்படித் தைரியம் வருகிறது? என்று யோசிக்கிறேன்..." என்றான்.

"இதில் என்ன இருக்கிறது? இங்கே நீங்கள் மட்டுந்தானே இருக்கிறீர்கள்? வேறு யாரும் இல்லை அல்லவா? அதிக நபர்கள் இருந்தால் பயப்பட வேண்டும். ஒரு புருஷன் இருக்கும் இடத்தில் ஒரு ஸ்திரி இருப்பதற்குப் பயம் தேவையே இல்லை.. அப்படிக்கூட இல்லையென்றால், அது என்ன வாழ்க்கை?" என்றாள்.

தான் நினைத்தது போல் இவள் இல்லை; இவள் ஒரு கணவனுக்காக ஏங்குகிறாள் போலிருக்கிறது என்று விஜயமோகன் நினைத்தான்....

"உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?"

"இல்லை"

"ஏன்?"

"யாருமில்லாத அனாதையான ஒரு பெண்ணை யார்தான் மணப்பார்கள்?"

"அது என்ன அப்படிச் சொல்லி விட்டாய்?"

"அப்படித்தான்...! சரி... நீங்கள் இங்கே நிரந்தரமாகத் தங்கப் போகிறவர்தானே?"

"ஆமாம்!" என்றான்.



"அப்படியென்றால் நானும் இங்கேயே உங்களுடன் இருந்து விடுகிறேன்.. இந்த விஷயத்தை மட்டும் தயவுசெய்து வேறு யாரிடமும் சொல்லிவிட வேண்டாம்" என்றாள் அவள்..

"அது எப்படி முடியும்?"

"இதற்கெல்லாம் காரணம் பின்னால் சொன்னால் போதாதா?".. உங்களுக்கு இப்போது தூக்கம் வரவில்லையா?"

"வருகிறது"

"நான் விளக்கை அணைக்கிறேன்..."

"வேண்டாம் விளக்கு இருக்கட்டும்..."

"விளக்கு வேண்டுமா?"

"ஆமாம்! நாம் இருவர் இங்கே இருக்கிறோமல்லவா?" என்றான்.

"அதுவும் சரிதான்" என்று சொல்லிக்கொண்டே அவள் கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

அவளது ரவிக்கையின் முன்பாகம் திறந்திருந்தது. அப்போது அவளது கை அவன் மார்பைத் தடவியது. அப்போது அவளது கை குளிர்ந்திருந்ததாக அவனுக்குப் பட்டது–பனிக்கட்டிகளை அவன் மீது தடவியதுபோல குளிர்ந்தது. மெதுவாக அவளது கைகள் அவனது உடம்பில் ஊர்ந்தன.. அவளது தலைமுடி, அவன் கழுத்திலும், கன்னத்திலும் விளையாடியது. அவளது சுவாசத்தில் சூடு இருந்தது. அவளது மார்பகங்கள் அவன் உடம்பில் அழுந்தின..

அவனை மெதுவாக அணைத்துக் கொண்ட அவளது கைகளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாக சக்தி கூடிக் கொண்டிருப்பதாக அவனுக்குத் தெரிந்தது.

## அத்தியாயம் - 7

ஒரு பெண்ணுக்கு இவ்வளவு சக்தி இருக்குமா என்று விஜயமோகன் யோசித்தான். அவள் மீண்டும், மீண்டும் அவனைத் தன்னுடன் இறுக்கிக் கொள்ளவே, அவனுக்கும் உணர்ச்சி அதிகரித்தது. அந்த அவளின் ஆவேச அணைப்பின் காரணமாக, அவளுக்குள் ஏதோ பிசாசு புகுந்து கொண்டிருக்குமோ என்றுகூட அவன் நினைத்தான்.

தன்னை ஒத்த வயதினர்களைவிட, தனக்குக் கொஞ்சம் பலம் அதிகம் என்பதை விஜயமோகன் அறிவான். தேவையான சமயத்தில் உபயோகித்துக்கொள்ள அவன் சில கலைகளையும் கற்று வைத்திருந்தான்.

திடீரென அவன் மனதில் ஒரு யோசனை தோன்றியது. அவன் மெதுவாக அவளது முதுகில் 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தைத் தன் விரல்கொண்டு எழுதினான்.

தீயைத் தீண்டியவள் போல் அவள் "அய்யோ" என அலறினாள்.

தன்னை அவன் புரிந்து கொண்டான் என்பதை உணர்ந்த அவள், தனது பிடியைக் கொஞ்சம் தளர்த்தினாள்.

தான் அவளைத் தெரிந்து கொண்டதை அவள் அறியக்கூடாது என்பதற்காக விஜயமோகன் அவளைத் தடவிக் கொடுத்தவாறே அணைத்து மகிழ்வித்தான். அவனோ தன் விருந்தாளி அவ்வளவு மோசமானவன் அல்ல என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு, தன் பிடியை அதிகமாக இறுக்கவில்லை. தன் சக்தி அவனிடம் விலை போகவில்லை என்பதை அறிந்துகொண்ட அவள், மிகவும் சாதாரணப் பெண்ணாகவே



தன்னைக் காட்டிக் கொள்ள முயன்றாள். இரு உடலும் சங்கமித்தன.

விஜயமோகன் அனுபவத்தில், இவள் ஒரு புதிய அனுபவந்தான்!

பெரிய இடத்துப் பிள்ளை என்பதால் விஜயமோகனுக்கு எவ்வளவோ இரகசிய சம்பந்தங்கள் உண்டாகி இருந்தன! இந்த பந்தங்களுக்கு அவனது அழகும் கவர்ச்சியும் காரணமாக இருந்தன. எப்படிப்பட்ட பெண்ணாக இருந்தாலும், அவனது பார்வைக்கு மயங்காதவர்கள் இல்லை. ஊரில் பல பெண்கள் தங்கள் உள்ளங்களில் அவனது உருவத்தை வைத்து ஆராதித்துக்கொண்டு இருந்தார்கள். சொல்லப் போனால், பெண்கள் விஷயத்தில் அவன் ஒரு கிருஷ்ணன்!

கார்த்திகா மெதுவாக படுக்கையிலிருந்து எழுந்து, தன் ஆடைகளை அணிந்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

விஜயமோகன் யோசித்தான்.

"இது யார்?"

முதலில் தன் மனதில் தோன்றியதுபோல இவள் ஒரு யட்சி அல்லள்! யட்சி என்றால் முதுகைத் தொடமுடியாது! இவளது முதுகோ ஆம்பல் இலைபோல் மிருதுவாக இருந்தது! தலைமுடியில் ஒரு சுகந்தமான மணம், யட்சிகள்மீது மல்லிகை மணம் வீசும்... மாமா மித்திரன் நம்பூதிரியின் பூஜையின்போது இவன் யட்சியைப் பார்த்திருக்கிறான். பூஜை சமயத்தில் அவள் வரும்போது மல்லிகையின் மணம் பிரமாதமாக வீசும்! சில காலங்களில் மல்லிகை சீசன் இருக்காது. ஆனால் அப்போதும் யட்சிகள்மீது அந்த வாசனை வரும். இவள் யட்சி இல்லை என்றால் பின் யார்?

அவன் இந்த யோசனையில் மூழ்கியிருக்கும்போதே அவள் திரும்பவும் வந்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை!"

"என்னைப் பற்றித்தான் இப்போதும் யோசனை இல்லையா? நான் யாரென்று சிந்தித்துக் கொண்டு இருக்கிறீர்கள்... நீங்கள் என்னை ஒரு விபச்சாரி என்று முடிவு கட்டிவிட்டீர்கள் இல்லையா?" அவன் எதிரில் வந்து நின்றவாறு அவள் கேட்டாள்.

"இல்லை... இல்லை... நான் அப்படி நினைக்கவேயில்லை.. என்றான் அவசர அவசரமாக.

"நான் சொல்கிறேன்.... இந்த இல்லத்தில் எனக்கும் பந்தம் இருக்கிறது என்பதை மட்டும் நீங்கள் இப்போது தெரிந்துகொண்டால் போதும்" என்றாள்.

"உன்னைப் பார்த்தது மிகவும் நல்லதாகப் போய்விட்டது" என்றான் விஜயமோகன்.

"எனக்கும்தான் உங்களைப் பார்த்தது மிகவும் சௌகர்யமாகப் போய்விட்டது. சரி.. நீங்கள் தூங்குங்கள்" என்று சொல்லிக் கொண்டே அவன் பக்கம் வந்து அமர்ந்தாள். அவன் நெற்றியில் கைவைத்து, தலைமுடியைப் பின்னுக்குத் தள்ளி நீவிவிட்டாள். அவளது இதமான தடவலில் அவன் உடனே தூங்கிவிட்டான்.

அவள் எழுந்து முற்றத்தையும், வாயிலையும் கடந்து குளத்தருகே போய் சற்று நின்றபிறகு, மெதுவாக கல்லறை அருகே சென்று மறைந்தாள்!

நன்றாக சூரியன் மேலெழுந்தவுடன்தான் விஜயமோகன் தன் படுக்கையை விட்டு எழுந்தான். வாயில் கதவு திறந்திருந்தது.

வெளியில் ஒரு செம்பு நிறைய தண்ணீர் வைக்கப்பட்டு இருந்தது. அதை எடுத்து முகத்தையும், வாயையும் நன்றாகக் கழுவிக் கொண்டான் விஜயமோகன்.

அவன் கழுவி முடித்தவுடன், ஒரு அழகான யுவதி கையில் ஆவிபறக்கும் காப்பியுடன் வந்து அருகில் நின்றாள்.



சந்தேகத்தோடு அவன் அவளைப் பார்த்தான். வயது 21 இருக்கும். நல்ல நிறம். கவர்ச்சியான உடல். கண்களை ஈர்க்கும் அழகு. மேலே ரவிக்கையும், கீழே முண்டுமாக இருந்தாள் அவள். ஈரமாக இருந்த தலைமுடி நுனியில் கட்டப்பட்டு இருந்தது. நெற்றியில் சந்தனப் பொட்டு.

"என்னை உங்களுக்குத் தெரியாது இல்லையா?" என்று அவள் காப்பியை நீட்டிக்கொண்டே கேட்டாள்.

"இல்லை" என்றான் அவளை முழுமையாகப் பார்த்தவாறு.

"என் பெயர் சாவித்திரி. அருகில்தான் இருக்கிறேன். அப்பா பெயர் மாதவ வாரியர்" என்று அவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"யார் சொல்லி அனுப்பி... நீ இங்கே வந்தாய்?" என்ற அவன் கேட்க,

"நேற்று இரவு இந்த இல்லத்தின் தம்பிராட்டி என் வீட்டிற்கு வந்திருந்தார்கள்.."

"யார்... தம்பிராட்டியா?" என்று அவளை வியப்போடு பார்த்தான் விஜயமோகன்.

"ஆமாம். திருமேனியின் தம்பிராட்டி..." என்றாள்.

"அப்புறம்?"

"தம்பிராட்டி இப்போது இங்கே வரமாட்டாள்... பட்டினத்தில் கொஞ்சம் வேலை இருக்கிறது. அதனால் உங்களுக்கு ஆகாரம் செய்து கொடுக்க எனக்குக் கட்டளை..." என்றாள்.

"ஓகோ...!" என்ற விஜயமோகனுக்கு அவளுடைய பேச்சில் நம்பிக்கை இல்லை. இருந்தாலும் தனது சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள அவன் தொடர்ந்து பேசலானான்.

"அதற்கப்புறம் அவள் என்ன சொன்னாள்?"

27920
42892

"விடியற்காலை நேரத்தில் தம்பிராட்டி பட்டினத்திற்குப் புறப்பட்டுப் போயாயிற்று. காலையில் என்னை இங்கே போகச் சொல்லி உத்தரவு..."

எத்தனை தடவை கேட்டாலும் இதற்கு மேல் அவள் சொல்லப் போவதில்லை.

"சரி... சரி... யாராவது இங்கே இருப்பது நல்லது. உனக்கு நன்றாக சமைக்க வருமா?"

"நன்றாகச் செய்வேன்."

"சரி... போய் வேலைகளைப் பார். பணம் வேண்டும்போது கேட்டு வாங்கிக்கொள்" என்றான்.

"சரி" என்றாள் அவள்.

விஜயமோகன் வெளியே வந்து குளத்தில் நன்றாகக் குளித்தான். குளித்தவுடன் அவன் உடலுக்கு புத்துணர்வு வந்துவிட்டது போல் இருந்தது. திரும்பவும் அவன் உள்ளே வந்தபோது, அவனுக்குக் காப்பியும், தோசையும் தர சாவித்திரி தயாராக இருந்தாள்.

"சமையல் சாமான்களை இங்கே வாங்கிப் போட்டது யார்?"

"அப்பாதான் கொண்டு வந்தார். பணத்தைத் தம்பிராட்டி கொடுத்தார்."

"அப்படியா? சரி... நான் பக்கத்து ஊருக்குப் போய் வருகிறேன்" என்று புறப்பட்டான்.

ஆடை மாற்றிக் கொண்டான். பர்சைத் திறந்து பார்த்தபோது நூறு ரூபாய் நோட்டுகளைக் காணவில்லை. சாவித்திரி சொன்னதுபோல் கார்த்திகாதான் அந்தப் பணத்தை எடுத்துக் கொடுத்திருக்க வேண்டும்.

வாசுதேவன் தம்பி வீட்டிற்குத்தான் விஜயமோகன் புறப்பட்டான். அவன் கையில் வீட்டுப் பத்திரம் இருந்தது.



பத்திரத்தில் காணப்பட்ட கையெழுத்தின் சொந்தக்காரியான கார்த்திகா அந்தர்ஜனத்தின் சரித்திரத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள அவன் விரும்பினான். திடீரென, நேற்று இரவை தன்னுடன் கழித்த அவள் யார் என்பதை அறிய அவனுக்கு ஆவல் மிகுதியாக இருந்தது. தெரிந்து கொள்ளவில்லையென்றால் குழப்பம் ஏற்படும் என்று அவன் மனதிற்குப் பட்டது.

விஜயமோகன், தம்பியின் வீட்டை அடைந்தபோது, அங்கே தம்பியும், உன்னித்தனும் இருந்தார்கள். அவர்கள் இருவரும் விஜயமோகனை சந்தேகத்தோடு பார்த்தனர்.

அவர்களைப் பார்த்த அவன், "என்ன நீங்கள் இருவரும் ஒரு மாதிரியாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நேற்று இரவு நீங்கள் இல்லத்தில்தான் தூங்கினீர்களா?" தம்பி கேட்டான்.

"ஆமாம்...!" என்றான் விஜயன் எந்தவிதமான சலனமும் இல்லாமல்.

இருவராலும் இவன் சொன்னதை நம்பவே முடியவில்லை. இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"இதற்கென்ன அர்த்தம்?" என்று கேட்டதுதான் அந்தப் பார்வையின் அர்த்தம்.

"இப்படி உட்காருங்கள்! நாங்கள் உங்கள் வரவுக்காகவே காத்துக் கொண்டிருக்கிறோம்! நேற்று இரவு எட்டு மணிக்கே இங்கே வருவதாகச் சொன்னீர்களே... பரவாயில்லை... குடிக்க ஏதாவது..."

"இப்போது ஒன்றும் வேண்டாம்..." என்று சொல்லிக்கொண்டே விஜயமோகன் ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

"இங்கே சாப்பிடத் தயக்கம் என்றால் சொல்லுங்கள், ஓட்டலிலிருந்து ஏதாவது வரவழைக்கிறேன்..."

"அப்படி ஒன்றும் இல்லை. மாமிசம் சமைக்காத எல்லா வீட்டிலும் நான் தாராளமாகச் சாப்பிடுவேன். மாமிசம் மட்டும் எனக்குப் பிடிக்காது.."

"நீங்கள் காலையில் ஏதும் சாப்பிட்டு இருக்க மாட்டீர்களே?"

"நானா? தோசையும், காப்பியும் சாப்பிட்டுவிட்டேனே!"

"எங்கே?"

"இல்லத்தில் ஒரு வேலைக்காரி இருக்கிறாள். அவள் உபயம்."

"திடீரென வேலைக்காரியா? எங்கிருந்து வந்தாள்?"

"இல்லத்தின் அருகில் மாதவ வாரியர் என்று ஒருவர் இருக்கிறாராமே... அவரது மகள் சாவித்திரிதான் அந்த வேலைக்காரி."

இதைக் கேட்டவுடன், அவர்கள் மீண்டும் அதிர்ச்சி அடைந்தனர். மறுபடியும் ஒருவரையொருவர் வினாக்குறியோடு பார்த்துக் கொண்டனர். கேள்விக்குப் பதில் கிடைக்காத நிலை. உள்ளத்தில் பயம்...

விஜயமோகன் திரும்பவும் கேட்டான்: "என்ன நீங்கள் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லையே..." உன்னித்தன் அவசரமாகச் சொன்னான்.

"நான் இங்கேதான் இரவைக் கழிக்க வேண்டும் என்று வந்தேன்."

"ஆனால் முடியவில்லை..."

"ஏன்?" மீண்டும் உன்னித்தன்.

"இந்த ஊருக்குள் வந்தபோது, எழமத்தூர் இல்லத்தின் வாரிசு என்று சொல்லிக்கொண்ட ஒரு பெண்ணை நான் வழியில் சந்தித்தேன். தன்னை அவள் என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டபோது நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்."



"ஐயையோ... அது யார்? அப்படி வாரிசு என்று யாருமே இல்லையே... இருந்திருந்தால் பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்யும்போதே வந்திருக்க வேண்டுமே..." என்று தம்பி அலறினான்.

"ரிஜிஸ்தர் ஆபீஸுக்கு அவள் வரவில்லை, இருந்தாலும் இதைப் பாருங்கள்..." என்று கூறிய விஜயமோகன் தன்னிடம் இருந்த வீட்டுப் பத்திரத்தை எடுத்து அதில் கார்த்திகா கையெழுத்துப் போட்டிருந்த இடத்தை அவர்களுக்குக் காட்டினான்.

தம்பி முதலில் அதைப் பார்த்தான். அதில் இருந்த கையெழுத்தும், கைரேகையும் எழமத்தூர் இல்லத்தைச் சேர்ந்த கார்த்திகா அந்தர்ஜனத்தினுடையது.

"உன்னித்தன்... இதைப் பார்!"

அதை அவனிடம் காட்டியபோது தம்பியின் கை நடுங்கியது. கூடவே பத்திரமும் ஆடியது. "என் பகவதியே!" என்று உன்னித்தனும், மெதுவான ஆனால் பயந்த குரலில் வியப்படைந்தான். இவர்கள் இருவர் பயந்தும் வியப்படைந்தும் போனதை விஜயமோகன் கவனிக்கத் தவறவில்லை.

"யார் இந்த கார்த்திகா அந்தர்ஜனம்?" – அவன் கேட்டான்.

"இது... இது..." என்று மேலே தொடர முடியாமல் தடுமாறினான் தம்பி. குரல் நடுங்கியது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு...

"இவளைத்தான் நீங்கள் வழியில் பார்த்தீர்களா?" என்று கேட்டான் தம்பி. உடல் லேசாக நடுங்கியது. பயத்தால் வியர்வை.

கையெழுத்தைப் பார்த்த உன்னித்தன் தன் நெஞ்சில் வைத்த கையை இன்னும் எடுக்கவில்லை. அவர்கள் இருவருக்கும் கார்த்திகாவின் கையெழுத்து நன்றாகத் தெரிந்ததே!

“ஆமாம்! அவள் கார்த்திகா தான்...”

“பிறகு?” இருவரும் ஒரே நேரத்தில் கேட்டார்கள்.

“நேற்று இரவு, அவள் எழுமத்தூர் இல்லத்தில் என்னோடுதான் இருந்தாள்!” விஜயமோகன் சொன்னான்.

இதைக் கேட்டவுடன் தம்பிக்குப் பயம் இன்னும் அதிகமாகியது.

“உங்களுக்கு ஏதும் நேரவில்லையே?” தம்பி நடுங்கிக் கொண்டே கேட்டான்.

அதற்கு விஜயமோகன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

“நான் எல்லாவிதத்திலும் பாக்கியசாலி. இரவு எப்படிப் போயிற்று என்றே தெரியவில்லை. நல்ல பெண்... அழகானவள்..” இதைச் சொல்லும்போது எதிரில் இருந்த அவர்கள் இருவரையும் கவனித்துக் கொண்டான். வேறு யாராவது கவனிக்கிறார்களா என்று தன்னைச் சுற்றிலும் ஒரு தடவை பார்த்துக்கொண்டான். இவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

ஆனால், இதைக் கேட்ட தம்பியும், உன்னித்தனும் பூனையைக் கண்ட எலிபோல பயந்து நடுங்கினார்கள்.

‘அட, இது என்ன புதிய வம்பை நாமாக விலை கொடுத்து வாங்குவது போலாகிவிட்டதே’ என்று தம்பி தன் மனதிற்குள் குமுறினான்.

“அப்பெண்ணுக்கும் இல்லத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது இல்லையா?” என்று விஜயன் விடாமல் பழைய இடத்திற்கே வந்தான்.

“கொஞ்சம் இருக்கிறது” என்று தம்பி தயங்கியவாறு சொன்ன பிறகு, “அய்யோ” என்று அலறினான்.

அதற்குக் காரணம், அவன் கழுத்தை யாரோ பலங்கொண்டமட்டும் நெரித்ததுபோல் இருந்ததுதான். தம்பி போட்ட இந்தச் சத்தத்தைக் கேட்ட விஜயன்,



“என்ன ஆயிற்று?” என்று கேட்க...

“ஒன்றுமில்லை” என்று தம்பி தன் கழுத்தைத் தடவிக் கொண்டான்.

“சரி.. நான் புறப்படுகிறேன்” இனி ஏதாவது உதவி தேவைப்பட்டால் நான் நேராக இங்கேயே வருகிறேன்” என்று விஜயமோகன் கூறிவிட்டு அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினான்.

அவன் படியிறங்கிப் போனதைப் பார்த்துத அவர்கள் இருவரும், ஏதோ அற்புதத்தைப் பார்ப்பது போல வியப்புடன் அவனைக் கண்களால் தொடர்ந்தார்கள்.

“ஆச்சரியமாக இருக்கிறதல்லவா உன்னித்தன்? இந்தத் திருமேனிக்கு வேலைக்கு ஆள் அனுப்பியது யாராக இருக்கும்?”

“மாதவ வாரியர் மகள் சாவித்திரியாமே!”

“யாருக்குத் தெரியும்? ஏதாவது பிசாசாக இருக்கும்.”

“அப்படியென்றால் சாவித்திரி?”

“அது இன்னொரு பிசாசாக இருக்கும்.”

“இதற்கெல்லாம் அர்த்தமென்ன உன்னித்தன்?”

“அதைத்தான் நான் அப்போதிருந்து யோசித்துக் கொண்டிருக்கிறேன்...” என்று சொன்ன உன்னித்தன் தலைமீது கை வைத்தவாறு சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.

“இனி யாரைப் போய்ப் பார்ப்பது? இப்போதுள்ள சூழ்நிலையைப் பார்த்தால், எல்லா பிசாசுகளும் சேர்ந்து நம்மைச் சரிப்படுத்திவிடும் போலிருக்கிறதே!” தம்பி அங்கலாய்த்துக் கொண்டான்.

“எல்லாம் சரியாகப் போயிடும், கவலைப்படாதீர்கள்.”

“விஜயமோகனுக்கு இதெல்லாம் ஏதும் புரியவில்லையே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது...”

"இந்தப் பிரம்மராட்சஸைப் பிடித்துக் கட்ட யாராவது ஒரு நபரைப் பிடித்துத்தான் ஆகவேண்டும்."

"இப்போது அதற்குத் தகுந்த ஆட்கள் வேறு யார் இருக்கிறார்கள்? தெரிந்த இரண்டு நபர்களால்தான் ஏதும் முடியவில்லையே...! விளைவைத்தான் நாம் நேரில் பார்த்தோமே!"

"கொஞ்சம் பொறு. நான் இன்னொரு நபரைக் கண்டு பேசிப் பார்க்கிறேன். பந்தனத்தில் எனக்கு ஒரு மாமா இருக்கிறார். அவரே ஒரு பிசாசு! அதாவது ஒரு துர்மந்திரவாதி. அவரைப் போய்ப் பார்த்து அவர் மூலமாக வேறு யாரையாவது பார்க்கலாம்..." என்று உன்னித்தன் நம்பிக்கையோடு சொல்ல..

"எது செய்தாலும் உடனே செய்யவேண்டும்" என்று தம்பி அவசரமும், வேதனையும் நிரம்பிய குரலில் சொல்ல, உன்னித்தன் அங்கிருந்து கிளம்பினான்.

எதிர்பாராத விதத்தில் உன்னித்தனின் மாமா பந்தனத்திலிருந்து வந்திருந்தார்.

"மாமாவுக்கு நூறு ஆயுசு. இப்போதுதான் உங்களைப் பற்றிப் பேசிவிட்டு வருகிறேன்.." என்றான் உன்னித்தன் மகிழ்ச்சியாக, மாமாவைப் பார்த்தவுடன்.

அவர் அருகில் வந்து பவ்யமாக அமர்ந்தான்.

"என்னைப்பற்றிப் பேச வேண்டுமென்றால் ஏதாவது காரியம் இருந்திருக்கவேண்டுமே..." எனறு மாமா உன்னித்தனிடம் கேட்டார்.

"பிரம்மராட்சஸைக் கட்டிப் போடக்கூடிய மந்திரவாதிகள் யாராவது இருக்கிறார்களா மாமா?" உன்னித்தன் கேட்டான்.

"ஆணா. பெண்ணா?"

"பெண்தான்!"

"ஆள் இருக்கிறது. கொஞ்சம் பணம் செலவாகுமே..."



"பணத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். எவ்வளவு வேண்டுமானாலும் செய்யலாம். ஜீவ மரணப் போராட்டத்திற்கு முடிவு ஏற்பட்டால் சரி!"

"சரி... அப்படியென்றால் நீ நாளை என்னுடன் வா! உனக்கு ஒரு சரியான நபரைப் பிடித்துத் தருகிறேன்."

"நிஜமாகவா மாமா?"

"இந்த மாதிரி விஷயத்திலெல்லாம் நான் ஏன் பொய் சொல்கிறேன்? பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டுவிட்டேன். சரி.. அது எங்கே இருக்கிறது?"

"இங்கேதான் எழமத்தூர் இல்லத்தில்."

"உம்.." என்று ஒரு தடவை மாமா உறுமினார். பிறகு தன்னிடமிருந்த சிறிய வெள்ளிப் பெட்டியை எடுத்தார். அதைத் திறந்து அதிலிருந்து ஒரு தாயத்தை எடுத்தார். அதில் நிறைய தாயத்துகள் இருந்தன.

"இப்போதைக்கு நான் ஒரு சிறு வேலையைச் செய்கிறேன்" என்று கூறிக்கொண்டே ஒரு செப்புத் தகட்டை எடுத்தார். எழுத்தாணி கொண்டு அதில் ஒரு யந்திரம் வரைந்தார். பிறகு மந்திர எழுத்துக்களைத் தகட்டில் எழுதி, அதைச் சுருட்டி அந்தத் தாயத்துக்குள் அடைத்து அவனிடம் கொடுத்தபின் சொன்னார்:

"இதை அந்த இல்லத்து வாயிலில் கொண்டுபோய் வை. பகல் நேரத்தில் போகக்கூடாது. மாலை முடிந்து இரவு ஆரம்பிக்கும் வேளையாக இருக்க வேண்டும். ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், பகலில் வைத்தால் யாராவது தூக்கித் தூர எறிந்துவிடுவார்கள்..." என்றார். உன்னித்தன் பக்தியோடு அதைத் தன் இரு கைகளால் வாங்கிக் கொண்டான்.

அன்று மாலை கழிந்தது. இருள் பரவ ஆரம்பித்த நேரம். உன்னித்தன் வேகமாக எழமத்தூர் இல்லத்திற்குப் போனான்.

வீடு திறந்திருந்தது.

"யார் உள்ளே?" என்று குரல் கொடுத்தான்.

பதில் இல்லை.

அதனால் நேராக உள்ளே போய் வாயிலருகில் அந்தத் தாயத்தை வைத்தான்.

திருப்தி!

அதே சமயத்தில் வீட்டுக்குள்ளிருந்து சாவித்திரி வெளியே வந்தாள். அவளது கையில் கோல்விளக்கு இருந்தது. அந்த வெளிச்சத்தில் சாவித்திரியை உன்னித்தன் பார்த்தான்.

"அய்யோ... என் பகவதியே என்று கத்திக்கொண்டே அவன் அங்கிருந்து ஓடினான்.

அவளைப் பார்த்தபிறகு அங்கே நிற்க அவனுக்கென்ன பைத்தியமா? நிற்காமல் ஓடினான். திரும்பிப் பார்க்காமல் ஓடினான்.

அவன் வாழ்க்கையில் இதைப் போல் என்றுமே பயப்பட்டது இல்லை.

தான் கண்டது கனவல்ல..நிஜந்தான் என்று அவன் மனதில் எண்ணம் தோன்றியபோது, அவனது ஓட்டத்தின் வேகம் மிகவும் அதிகமானது!

இப்போது நேராக அவன் தன் வீட்டிற்குப் போனால், மாமா வேகமாகத் திரும்பி வந்ததற்காக அவனிடம் காரணம் கேட்பார். அவரிடம் அவன் எழமத்தூர் இல்லத்தில் பார்த்த அந்தப் பெண்ணைப் பற்றி எப்படிச் சொல்ல முடியும்?

எழமத்தூர் பகவதி கோவிலின் படிக்கட்டில் போய் அமர்ந்தான் உன்னித்தன்.

இல்லத்தில் பார்த்த அந்த யுவதி அவன் மனதில் நின்றாள்.

ஆம்! அது அவளாகத்தான் இருக்க வேண்டும்.



அவன் மனதில் பழைய சம்பவங்கள் சினிமா நிகழ்ச்சிகள் போன்று ஓடின!

வாசந்தி!

அவள் சங்கர வாரியர் மகள். வாரியருக்கு அவள் ஒருத்திதான் மகள். வாரிக! அவரது மனைவி முன்பே இறந்துபோயிருந்தாள். இரண்டாந்தாரமாக யாரையாவது மணந்தால், அது தன் மகளுக்குத் தொந்தரவாக முடியுமே என, அவர் மனைவி இறந்தபின் மணமே செய்துகொள்ளவில்லை. வாசந்தி பேரழகி!

ஒருநாள் எதிர்பாராத விதமாக உன்னித்தன் அவளை கோவிலில் பார்த்தான். அன்று வாரியர் அவளுடன் வரவில்லை. இவள் மட்டும் கோவிலுக்கு மாலை கொண்டு வந்து இருந்தாள். அப்போது பார்வையில் ஆரம்பித்த இவர்களது நட்பு... பிறகு காதலாக மலர்ந்தது. அது ஒருதலைக் காதல்.

வாசந்தி மட்டும் உன்னித்தனை மனதார நேசித்தாள். அவனுக்கோ அவள் புதிதாகக் கிடைத்துள்ள இன்னொரு இரை! பலவிதமான வாக்குறுதிகளை அள்ளிவீசி உன்னித்தன் அவளை வசீகரித்தான்.

ஒருநாள்...

ஆடுகளை மேய்க்கக் கோயில் 'பக்கம் வந்திருந்த வாசந்தியை உன்னித்தன் எதிர்பாராத விதமாக பார்த்துவிட்டான்.

அக்கம் பக்கம் யாருமே இல்லை. கோவிலோடு ஒட்டி இருந்த ஓர் அறை... கோயில் சாமான்களை அந்த அறையில் போட்டு வைப்பது வழக்கம். அந்த அறைக்குப் பூட்டு கிடையாது. அது உன்னித்தனுக்குத் தெரியும்!

அறைக்கருகில் போய் நின்று கொண்ட அவன், "வாசந்தி!" என்று அழைத்தான்.

அவள் வந்தாள்.

"உனக்கொரு பொருள் கொண்டு வந்திருக்கிறேன்..."

"என்ன"

"இந்த அறைக்குள் இருக்கிறது. நீயே உள்ளே போய் எடுத்துக் கொள்."

காதல் வயப்பட்ட அவள், அவன் பேச்சைக் கேட்டு உள்ளே போனாள். அவனும் பின்னால் போனான். உள்ளே போனவன் தன் கால்களால் எட்டி உதைத்துக் கதவை மூடியபிறகு, வாசந்தியைக் கட்டிப் பிடித்தான். அவள் திமிறிக்கொண்டு சத்தம் போட முயன்றபோது வாயை மூடிக்கொண்டான். மூர்க்கத்தனமாக நடந்த போராட்டத்தின்போது அவளது இடையில் இருந்த முண்டு அவன் கைக்கு வந்துவிட்டது. அவளை கஷ்டப்பட்டுக் கீழே கிடத்தினான். பலமுள்ள, அதே சமயத்தில் காமத்தினால் முரட்டுத்தனம் அதிகமாயிருந்த அவன் பிடியிலிருந்து அவளால் திமிறிக்கொண்டு எழ முடியவில்லை.

கடைசியாக உன்னித்தன் தனது ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டான்.

வாசந்தியின் வாழ்க்கையிலும் அது முதல் அனுபவம். ஆனந்தமான அனுபவமாகத் தெரிந்தது. சற்றுப் பொறுத்தபிறகு, அவளது கை, அவன் முதுகை மெதுவாகத் தடவிக்கொடுத்தது, அணைத்தது!

அடுத்த நாள் வாசந்தி, அதே நேரத்தில் அங்கு வந்தாள். அவளாகவே கோவில் அருகில் இருந்த அறையைத் திறந்தாள். உன்னித்தனின் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா?

தொடர்ந்து இது ஒரு தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகிவிட்டது.

சில தினங்களுக்குப் பிறகு, ஒரு நாள் வாசந்தி அவனிடம் சொன்னாள்.

"இந்த மாதம் எனக்கு மாதவிலக்குத் தள்ளிப் போகிறது எனக்குப் பயமாக இருக்கிறது..."



"இது ஒரு பெரிய விஷயமே இல்லை வாசந்தி! உடம்பில் ஏதாவது கோளாறு இருந்தாலும் இப்படி ஆகலாம். இரண்டு மூன்று நாட்கள் பார்க்கலாம்..." என்ற அவன் அவளைச் சமாதானப் படுத்தினான். நான்காவது நாள் அவள் வந்து சொன்னாள்.

"எனக்கு வாந்தி வருகிறது... தலை சுற்றுகிறது... மயக்கமாக இருக்கிறது."

"நான் இருக்கிறேன்.பயப்படாதே.." என்று ஆறுதல் சொன்னான்.

நாட்கள் நிற்காமல் நகர்ந்தன.

"இனி தாமதிக்கவே முடியாது. இது கர்ப்பந்தான்! சந்தேகத்திற்க இடமே இல்லை. என்னைக் காப்பாற்றுங்கள்..."

"முதலில் ஒரு டாக்டரைப் பார்த்துப் பரிசோதனை செய்து கொள்ளலாம். அதற்குப் பிறகு செய்ய வேண்டியதைச் செய்வோம்."

அவர்கள் இருவரும் ஒருநாள் பட்டினம் போனார்கள். அவர்களுடன் வாசுதேவன் தம்பியும் வந்தான். மூவரும் ஒரு ஓட்டலில் அறை எடுத்துத் தங்கினார்கள்.

இவர்கள் இருவரும் மது சாப்பிட்டார்கள். வாசந்தி சந்தேகப்படாவண்ணம் அவளுக்கும் ஏற்றிக் கொடுத்தார்கள். அதனால் ஏற்பட்ட மயக்கத்தில் அவர்கள் இருவரும் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஈடுகொடுத்தாள் வாசந்தி!

அன்று இரவு வரை அவர்கள் அங்கே இருந்தார்கள்... அவள் தெளிவு பெற்றபோது அவர்கள் இருவரும் அங்கே இல்லை. இரவு நேரம்!

அவளுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. உடலில் ஏதேதோ உபாதைகள்! வலி!

அங்கிருந்து ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு தனியாக தன் வீட்டிற்குத் திரும்பினாள் வாசந்தி.

மறுநாள் காலை...

அவள் வீட்டின் பின்பக்கம் இருந்த ஒரு மரத்தில் அவள் பிணமாகத் தொங்கினாள். போஸ்ட் மார்ட்டம் செய்து பார்த்தபோது அவள் கர்ப்பிணியாக இருந்தது தெரிந்தது. அவளது பிணத்தை அவள் வீட்டு காம்பௌண்டுக்குள்ளாகவே புதைத்துவிட்டனர். இதனால் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்க முடியாமல் சங்கர வாரியர் விஷத்தைச் சாப்பிட்டுவிட்டு தற்கொலை செய்துகொண்டார். அத்துடன் அக்குடும்பம் நிர்மூலமாகியது. வாரிசுகள் இல்லை.

சில தினங்கள் கழிந்தபின்–

சங்கர வாரியரின் தூரத்துச் சொந்தக்காரர் ஒருவரின் மருமகன் அந்த வீட்டில் வந்து தங்கினான்.

அந்த வீட்டில் இரவிலும், பகலிலும் பல உபத்திரவங்கள் உண்டாகத் தொடங்கின. அதனால் அந்த வீட்டையும், அவன் வாசுதேவன் தம்பியிடம் விற்றுவிட்டுப் போய்விட்டான்.

இந்தச் சம்பவங்கள் நடந்து ஏழு வருடங்கள் கழிந்தன.

இறந்தவை யாவும் இப்போது தான் எழுந்து நடமாடத் தொடங்கி இருக்கின்றன போலும்! அதே வாசந்தி இப்போது எழமத்தூர் இல்லத்தில்! உன்னித்தனுக்க ஒரு மாதிரியாக இருந்தது. வாசந்திக்கு நிச்சயம் ஞாபகம் இருக்கும். இல்லையென்றாலும் பிசாசுகள் இனம் கண்டுகொள்வது கடினமான காரியம் அல்ல!

தன்னைச் சுற்றிலும் உன்னித்தன் ஒரு தடவை பார்த்தான். எதிலும் சலனமே இல்லை. எங்கும் அமைதி!

இருட்டு தனிமையை விரட்டியது.



இப்போது எங்கே போவது? அவனுக்கு விளங்கவே இல்லை.

இதை யாரிடமாவது சொல்ல வேண்டும். ஆனால் யாரிடம்... எப்படிச் சொல்வது?

தம்பியிடம் சொல்லலாம்!

இதைப்பற்றிப் பேசக்கூடிய நபர் அவனைத் தவிர அந்த வட்டாரத்தில் வேறு யாருமே இல்லை.

உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்தான். கோவில் பக்கம் திரும்பினான்.

"ஏ! பகவதித் தாயே! என்னைக் காப்பாற்று..." என்று பெருங்குரலெடுத்துக் கூவினான். அப்போது ஒரு பல்லி சப்தம் செய்தது. அதுவும் அவனை பயமுறுத்துவது போலவே இருந்தது. அங்கிருந்து அவன் வேகமாக நடந்தான்.

அவன் வாசுதேவன் தம்பியின் வீட்டு முற்றத்தை அடைந்தபோது, தம்பி, விஜயமோகனுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டான்.

"என்ன உன்னித்தன் இவ்வளவு வேகமாக வருகிறாய்? ஏதாகிலும் விசேடம் உள்ளதா?"

அதற்கு அவன் பதில் சொல்லாமல், அங்கே மெதுவாக அமர்ந்தவாறு குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கேட்டான்.

"சந்திரிகா...சந்திரிகா..." தம்பி தன் சகோதரியை அழைத்தான்.

"என்ன?" என்று கேட்டுக் கொண்டே அவள் எட்டிப் பார்த்தாள். உன்னித்தனைக் கண்டாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்ன வேண்டும்?" என்று அவள் கேட்க,

"உன்னித்தனுக்குக் குடிக்க ஏதாவது..." என்று தம்பி சொல்ல–

அவள் உள்ளே போய், சில வினாடிகளில் தம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை வாங்கிக் குடித்த அவன்.

''இன்னும் கொஞ்சம் வேண்டும்'' என்றான்.

காலி தம்ளரை அவளிடம் நீட்டினான்.

''ஒரு பெரிய செம்பில் கொண்டு வா!'' என்று தம்பி சொன்னான்.

''என்ன உன்னித்தன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று விஜயமோகன் அவனிடம் வினவ,

தான் கண்டதை திருமேனியிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் விழித்தான் உன்னித்தன்!

''ஒன்றுமில்லை... சற்று வேகமாக நடந்துவந்ததால் தண்ணீர் தாகம் எடுத்தது'' என்று சொல்லிவிட்டு சந்திரிகாவின் கையிலிருந்த செம்பை வாங்கினான் உன்னித்தன்!

''சரி... நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். நான் வருகிறேன்'' என்று விஜயமோகன் எழுந்தான்.

அவன் போவதை வியப்போடு பார்த்துக்கொண்டு இருந்தான் உன்னித்தன்.

''என்ன விஷயம் உன்னித்தனே? ஏதாவது புதுத் தொல்லையா?'' என்று கேட்ட தம்பி தன் சகோதரி அங்கே இல்லை என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டான்.

''எல்லாம் ஒரே குழப்பந்தான் போ!''

''ஏன்? என்ன ஆயிற்று?''

''நான் இல்லத்திற்குப் போனேன் ஒரு சிறு வேலையாக அங்கே இருந்தது யார் தெரியுமா? – வாசந்தி!''

''என்ன... வாசந்தியா? நீ ஏதாவது கனவு கினவு கண்டாயா?''



''இல்லை.. நிஜந்தான்! கார்த்திகா தம்பிராட்டியைப் போல் இவளும் ஒருத்தி...''

''என்ன? இறந்தவர்கள் எல்லாம் எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டார்களா? நான் கனவு காண்கிறேனா? இல்லை இதெல்லாம் நிஜமா?''

''அந்தத் திருமேனி சொன்னாரே ஞாபகம் இருக்கிறதா? அங்கே ஒரு வேலைக்காரி இருக்கிறாள், அவள் மாதவ வாரியர் மகள் சாவித்திரி என்று. அது சாவித்திரி இல்லை! வாசந்தி! சங்கர வாரியர் மகள் வாசந்தி! அவள் பிசாசு! இப்போது எழுந்து வந்திருக்கிறாள்!'' என்று அவன் ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்.

''இப்போது அந்த நபர் தூங்கிக்கொண்டிருந்த பிசாசுகளை எல்லாம் எழுப்பிவிடத்தான் இங்கு வந்திருக்கிறானோ?''

''நமக்கு நாமே குழி தோண்டிக் கொண்டது போலாகிவிட்டது இல்லையா?''

''இனி நாம் என்னதான் செய்வது?'' தம்பி கேட்டான். இதற்கு என்ன மாற்று என்று அவன் மூளை யோசிக்கத் தொடங்கியது.

''அந்தத் திருமேனியை ஏதாவது ஒரு வழி செய்ய இந்தப் பிசாசுகள் அங்கே குடியேறியிருக்கலாமோ?''

''அப்படியும் இருக்கலாம்.''

''அப்படி ஏதாவது நிச்சயமாக நடக்கப் போகிறதென்றால், நாம் தப்பித்துவிட்டோம் என்று நம்பலாம் இல்லையா?'' என்று சொன்ன தம்பி, உன்னித்தனிடம்,

''இன்று இரவு இங்கேயே தங்குகிறாயா நீ?'' என்று கேட்டான்.

''அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். வேறு இடத்தில் படுத்தால்... பல தொல்லைகள். இப்போதைக்கு இந்த இடமே மேல்.''

அன்று இரவு உன்னித்தன் அங்கேயே படுத்தான். எப்போதும் அவன் படுக்கும் இடம்.

வாசந்தியைப் பார்த்தபிறகு அவன் உடலில் பயம் நிரந்தரமாக இடம் பெற்றிருந்தது. அதனால் படுக்கையில் படுத்தும் அவனுக்கு சரியாகத் தூக்கம் வரவில்லை. விழித்துக்கொண்டே படுத்திருந்தான்.

வெளியில் நல்ல மழை.

மழையின் சப்தம், இடையிடையே காற்று விர்ரென்று அடிக்கும் சப்தம் அவன் காதில் விழுந்தது. ஜன்னல் திறந்திருந்ததால் சாரல் அடித்தது. எழுந்து போய் ஜன்னலை மூடிவிட்டு வந்து படுக்கையில் விழுந்தான். அப்போது மூடியிருந்த வாயிற்கதவை யாரோ லேசாகத் தட்டும் சப்தம்..

அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் உன்னித்தனுக்கு ஒரு நடுக்கம்.

"யாரது?" என்று கேட்க வாயெடுத்தான். சப்தம் வரவில்லை. இவன் எழவில்லை.

மீண்டும் தட்டும் சப்தம்.

உன்னித்தன் எழுந்து தீப்பெட்டியை எடுத்து விளக்கை ஏற்றினான். அறையில் வெளிச்சம் பரவியபோது, உடலில் கொஞ்சம் தைரியமும் வந்தது. மெதுவாக வாயிலருகில் போய் நின்றான்.

வெளியில் இருந்து ஒரு பெண் குரல்..

"நான்தான் சந்திரிகா... கதவைத் திறவுங்கள்." கிசுகிசுத்தாள் அவள்.

அவன் மீண்டும் பயந்தான். "இது நிஜமாகவே சந்திரிகா தானா? இல்லை அவள் வேஷத்தில் தன்னைக் கொல்ல வந்திருக்கும் வாசந்தியா?"



"என்மீது கோபமா?" வெளியிலிருந்து அவள் கேட்டாள். இப்படிக் கேட்பது நிச்சயம் சந்திரிகாவேதான். அதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை. உன்னித்தன் நடுங்கும், கரங்களோடு கதவைத் திறந்தான்.

சந்திரிகாதான் அங்கே வந்திருந்தது.

அவள் உள்ளே வந்தாள்..

தனது தலைமுடியை அவிழ்த்து விட்டவாறு அவள் படுக்கையில் வந்து அமர்ந்தாள்.

தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள உன்னித்தன் அங்கே இருந்தபடியே அவளை உற்றுப் பார்த்தான்.

"என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்? நான்தான் சந்திரிகா! சந்தேகமே வேண்டாம்..." என்று கூறி அவன் கையைப் பிடித்து இழுத்து கட்டிலில் அமர்த்தினாள்.

அவளது வேகம், புயலைவிட வேகமாக இருந்தது. முந்தைய அனுபவத்தைப் பற்றியே கவலைப்படாமல் அவனை இழுத்து அணைத்து ஆசைதீர முத்தமிட்டாள். அவன் மடியில் நன்றாகப் படுத்துக் கொண்ட பிறகு தன் விரல்களை அவன் மார்பில் ஓடவிட்டாள். இவ்வளவு நடந்தபிறகும் உன்னித்தனின் உணர்ச்சிகள் விழித்துக் கொள்ளாமலேயே இருந்தன! இங்கே இருப்பது வாசந்தி என்கிற ஞாபகமே அவன் மனதில் வேரூன்றி இருந்தது.

விஜயமோகன் இல்லத்திற்குச் சென்றபோது விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. உள்ளே யாரோ அமர்ந்து படித்துக் கொண்டு இருப்பது போல் தெரிந்தது. அவன் அருகில் சென்று பார்த்தான். கார்த்திகா!

அவளது கையில் இருந்தது ஒரு பழைய ஏடு... அதைத்தான் அவள் படித்துக் கொண்டிருந்தாள்.

"இது என்ன?"

"திருமேனியா? வாருங்கள். இங்கே அமருங்கள்" என்று அவள் இடத்தைவிட்டு எழுந்தவாறு சொன்னாள்.

"எழாதே... கையில் இருப்பது என்ன என்று மட்டும் சொல்... அதைத் தெரிந்து கொள்ள எனக்கு விருப்பம்..."

எழுந்தவளை தோளில் கை வைத்து மீண்டும் அமரச் செய்தான்.

"நீங்கள் அறைக்குள் சென்று கத்தியை எடுத்துக் கொண்டு வந்தீர்கள் இல்லையா? பிறகு நீங்கள் அந்த அறையின் கதவை மூடாமலேயே வந்துவிட்டீர்கள். அங்கே தான் இருந்தன இந்தப் பழைய ஏடுகள். அதைத்தான்.. நான் எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"இவை எல்லாம் என்ன? எதைக் குறித்து எழுதப்பட்டவை?"

"இங்கே.. இந்த இல்லத்தில் வசித்த பெரியவர்கள் எழுதியவை எல்லாம் கொடுமையான மாந்திரீகர்கள். இறந்தவரை எழுப்பும் வித்தை வரை இதில் எல்லாமே உண்டு! இதோ இதைப் பாருங்கள்..." என்று அவன் கையில் தான் படித்துக் கொண்டிருந்ததைக் கொடுத்தாள்!

விஜயமோகன் அந்த ஏடுகளை வாங்கிப் பரிசோதித்தான். அவள் சொன்னது சரியே!

"இதை ஏன் நீ முன்பே படிக்கவில்லை?" என்று அவன் கேட்க.

"அப்போது இவையெல்லாம் எனக்குத் தேவையாக இருக்கவில்லை. மேலும் சமயம் சரியாக வாய்க்கவில்லை" என்றாள்.

"சரி... இங்கிருந்த வேலைக்காரி எங்கே?"

"அவள் பகலில் மட்டும்தான் வருவாள். இரவில் உங்களுக்கு உதவ நான் இருக்கிறேனே போதாதா? ஏதாவது ஆகாரம் சாப்பிட வேண்டுமா?"



"வேண்டும்"

"நான் பரிமாறுகிறேன்... எழுந்திருங்கள்..."

விஜயன் அவளை மிகவும் கவனமாகப் பார்த்தான்...

அவளிடம் ஏதோ அற்புதமான சக்தி இருக்கிறது என்றே அவன் மனத்திற்குப் பட்டது!

இருந்தும், அவள் ஒரு பிரம்மராட்சஸ் என்று அவனுக்குப் புரியவே இல்லை!

உணவருந்தியபின் அவன் மீண்டும் போர்ட்டிகோவிற்கு வந்தான்..

"தம்பி வீட்டிற்குப் போயிருந்தீர்கள்... இல்லையா?"

"ஆமாம்!"

"அவன் இந்த இல்லத்தின் காரியஸ்தராக இருந்தான்... இப்போது அவன் அனுபவிக்கும் சொத்துக்கள் யாவும் இங்கிருந்து அபகரித்துக் கொண்டு போகப்பட்டவையே! இன்னும் அவன் ஒயவில்லை.."

"ஏன், அபகரிக்க வேண்டியது மீதி ஏதாவது இருக்கிறதா?"

"இல்லை... ஆனால் இந்த இல்லத்தை விட்டுவிட்டுப் போக நினைத்தால்... அப்போது இதையும் அவன் சுவீகரித்துக் கொள்ளவே முயற்சிப்பான்..."

"நான் இந்த இல்லத்தைவிட்டுப்போக வரவில்லை.."

"நீங்கள் இப்போது அப்படிச் சொல்லலாம் திருமேனி... ஆனால் நீங்கள் இங்கிருந்து போக அவன் வழிவகைகள் செய்வான்..."

"அது எப்படி?"

"ஏதாவது மாந்திரீக வேலைகள் செய்வான்... அதையெல்லாம் தடுக்க தகுந்த சக்தி வேண்டும்... இல்லையென்றால் உயிருக்கே ஆபத்து ஏற்படும்..."

விஜயமோகன், இதைக்கேட்டு யோசனையில் ஆழ்ந்தான்... இவள் சொன்னது சரியாக இருக்கலாம்...

தம்பியும், உன்னித்தனும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதை இவன் பார்த்திருக்கிறான்... அதற்கு அர்த்தமே இதுதானோ?

"இந்த ஓலைச் சுவடிகளை திருமேனி நன்றாகப் படிக்க வேண்டும். இது உங்களுக்குப் பயன்படலாம். இதைப்போல இன்னும் பல சுவடிகள் இந்த இல்லத்தில் இருக்கலாம்.. நானும் உங்களுக்கு இந்த விஷயத்தில் உதவுகிறேன்" என்றாள் கார்த்திகா... அந்த சமயத்தில் குளிர்ந்த காற்று வீசியது... விளக்கின் திரிகள்... எரிந்தாலும், காற்றினால் ஆடின.. அவற்றின் நிழலும் ஆடின...!

"நல்ல மழை பெய்யும் போலிருக்கிறது" என்று கார்த்திகா ஆகாயத்தைப் பார்த்தவாறே சொன்னாள்.

அவள் சொல்லி முடிப்பதற்குள்... மழைத்துளிகள்... மணலை வாரி இறைத்தாற்போல் கொட்டத் தொடங்கின!

"இதையெல்லாம் பகலில் படியுங்கள்" என்று அவள் சொல்ல, விஜயமோகன் அந்தக் கிரந்தம் உள்ள ஓலைச் சுவடிகளை உள்ளே வைத்து கதவை மூடினான்.

படுக்க தன் அறைக்குப் போனான்.. அவள் வாயிலருகே நின்றாள்...

உள்ளே சென்று திரும்பியவன், அவள் நிற்பதைப் பார்த்தான்.

"ஏன் அங்கேயே நிற்கிறாய்?" கேட்டான்...

"நீங்கள் அழைக்காமல் நான் எப்படி உள்ளே வரமுடியும்? இதற்கெல்லாம் வாரிசு நீங்கள் அல்லவோ?" இன்று புதுவிதமாக அவள் எதற்காக இப்படிச் சொன்னாள் என்று அவனுக்குப் புரியவே இல்லை.



காலையில் எழுந்தபோது படுக்கையில் மல்லிகைப் பூக்கள் வாடிக்கிடந்தன... அவன் உடலிலும் அதே வாசனை!

கார்த்திகா காலையில் எங்கே போனாள் என்றே அவனுக்குப் புரியவில்லை.

சமையல் அறையில் சப்தம் கேட்டது. உள்ளே இருந்தது சாவித்திரி...

காலையில் டிபன் சாப்பிடும்போது விஜயமோகன், சாவித்திரியைக் கூர்ந்து கவனித்தான்... கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்ததுபோல அவள் கழுத்தில் கறுத்த அடையாளம்!

அது என்ன?

## அத்தியாயம் - 8

விஜயமோகன் சாவித்திரியின் கழுத்தில் இருந்த கறுத்த வடுவைப் பார்த்தான். அவன் பார்வையைக் கவனித்த அவள் –

"என்ன பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"உன் கழுத்தில் என்ன வடு?"

"அதுவா? ஒன்றுமில்லை" என்று சொல்லிக் கொண்டே அவள் தன் தலைமுடியைக் கொண்டு வடுவை மறைக்கப் பார்த்தாள்.

தன் பின்னால் தொங்கிக்கொண்டிருந்த தலைமுடியை இடதுதோள் வழியாக எடுத்துக் கழுத்தின் வலது பக்கமாகச் சுற்றி விட்டாள்.

அப்போதும் முடி மீதமிருந்தது.

"உனக்கு ஏதாவது உடல்நிலைக் கோளாறா?" என்று அவன் கேட்க...

"இல்லையே" என்றாள்.

ஒரு வார்த்தையில் பதில் சொன்னதால், கேள்விகளைத் தவிர்ப்பது போல் தோன்றியது.

அவனும் மேலும் கேள்வி கேட்டு ஆராய்ச்சியில் இறங்கவில்லை...

ஆகாரத்தை முடித்துக் கொண்டு வந்த அவன் தன் அறையில் அமர்ந்து, நேற்று இரவு கார்த்திகா அவனிடம் கொடுத்து ஏடுகளை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

அதில் இருந்த, ஓர் அற்புதமான, ஆனால் பிரமிக்கத்தக்க விஷயத்தை அவன் சுவாரஸ்யமாகப் படித்தான்.

தேவநகரி லிபியில் எழுதியிருந்த ஒரு மந்திரம், மலையாளத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அந்த மந்திரத்தை இலட்சித்தி ஒரு தடவை நன்றாக ஜெபித்து, மனித இரத்தத்தைக் கொண்டு யாகம் செய்தால், அகால மரணமடைந்தவர்கள், சவக்குழியில் இருந்து எழுவார்கள். அவர்கள் சாதாரண மனிதனைப் போலவே நடந்து கொள்வார்கள்... ஆனால் அவர்களிடம் சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களிடம் 'பேய்க் குணங்கள்' இருக்கும்.

அந்த மந்திரத்தை விஜயமோகன் பார்த்துக் கொண்டு இருந்தான்.

ஒரு தடவைக்கு இருதடவை படித்தான்.

ஏறக்குறைய மிருத சஞ்சீவினி மந்திரம் போல் இருந்த அந்த ஸ்லோகங்கள், பல இடங்களில் லேசாக அழிக்கப்பட்டிருந்தன. யாரோ புத்திசாலியான மனிதன்தான் இப்படி முக்கியமான இடத்தில் கை வைத்திருக்க வேண்டும்...

இது குறித்து கார்த்திகாவிடம் பேசவேண்டும் என்று விஜயமோகன் தீர்மானித்துக் கொண்டான்.



"யாரோ பார்க்க வந்திருக்கிறார்கள்" என்று சாவித்திரி வாயிலில் இருந்து சொன்னாள்.

"யாராக இருக்கும்?" என்று யோசித்தபடியே விஜயமோகன் அந்த இடத்தைவிட்டு எழுந்து வெளியே வந்தான்.

வராந்தாவில் வாசுதேவன் தம்பி நின்றிருந்தான்.

"யாரது? தம்பியா? வாருங்கள்..." என்று அவனை வரவேற்றான் விஜயமோகன்.

இருவரும் அருகில் இருந்த சாவடியின் பக்கம் நடந்தனர். தம்பியின் கண்கள் நாலா பக்கமும் சுழன்று எல்லாவற்றையும் பார்த்தன. பிறகு அறைக்குள் போனான்.

"நான் வந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?" தம்பி கேட்டான்.

"இங்கே ஒரு வேலைக்காரி இருக்கிறாள் என்று உங்களிடம் நான் சொல்லவில்லை? சொல்லி இருக்கமாட்டேன்..."

"இல்லை... சொன்னீர்கள். மாதவ வாரியார் மகள் சாவித்திரி."

"ஆமாம்! அவளேதான்." விஜயமோகன் ஆமோதித்தான்.

சாவடிக்குள் அமர்ந்த தம்பி தன்னைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்தான்.

அங்கே போடப்பட்டிருந்த நாற்காலிகள் எல்லாமே சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருந்தன.

"இதையெல்லாம் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்தியது, அந்த வேலைக்காரிதானா?" என்று தம்பி கேட்க,

"இங்கே இன்னொரு ஆள் இருக்கிற விஷயத்தை நான் உங்களிடம் சொல்லவில்லை அல்லவா? கார்த்திகா அந்தர்ஜனமும் இங்குதான் இருக்கிறாள்..."

"என்ன கார்த்திகாவா?" தம்பி அரண்டுபோய்க் கேட்டான்.

"நான் அன்று ஊருக்கு வந்தபோது என்னுடன் வந்த அவள் இப்போது இங்கேதான் இருக்கிறாள்."

இதைக் கேட்ட தம்பி உள்ளுக்குள் பயந்து நடுங்கினான். அதை வெளியில் காண்பித்துக் கொள்ளாமல் இருக்கப் படாதபாடு பட்டான்.

தம்பி இங்கு வந்ததற்குக் காரணமே இதைத் தெரிந்து கொள்ளத்தானே.

ஆக, கார்த்திகா இங்கே இருக்கிறாள்...

கார்த்திகாவின் காரியங்கள் யாவையும் தெரிந்து கொள்ளவே அவன் விரும்பினான்.

அவள் இங்கே வருவது பற்றி நன்றாகத் தெரிந்தால், அதற்கு ஏதாவது பரிகாரம் செய்யலாம் என்றும் அவன் நம்பினான்.

"தம்பி... நீங்கள் டீ குடித்து விட்டுத்தானே வந்தீர்கள்? இதை ஏன் கேட்கிறேன் என்றால், இங்கே நினைத்த மாத்திரத்தில் எதுவும் கிடைத்துவிடாது. குறிப்பிட்ட நேரத்தில்தான் அவை கிடைக்கும். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்..." என்றான் விஜயமோகன்.

டீ குடிக்கும் சாக்கில், தூக்கில் தொங்கி இறந்த வாசந்தியைப் பார்க்க விருப்பம்... இப்போது உள்ள நிலையைப் பார்த்தால் அவள் வெளியே வர சந்தர்ப்பமே இல்லைபோல் தெரிகிறது... இங்கே வந்ததற்கு அதுவும் ஒரு காரணம் அல்லவா?

"கார்த்திகா பகலில் ஏதாவது வேலைக்குப் போகிறாளா?" என்று தம்பி, ஏதும் அறியாதவன் போல் கேட்டான்.

"இருக்கும் போல்தான் தெரிகிறது. ஆனால் அதைக் குறித்து நான் எதையுமே கேட்டுக் கொள்வதில்லை. மேலும் அதில் எனக்கு விருப்பமும் இல்லை" என்றான் விஜயமோகன்.



"என்ன இருந்தாலும், இப்போது அவள், இங்கே உங்களுடன் வசிக்கிறாள். உடன் இருப்பவளைப் பற்றித் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?"

"என் சொந்த விஷயத்தைக் கவனிக்கவே எனக்கு நேரமில்லை. மற்றவர்களுடைய விஷயத்தைப் பற்றி எனக்கு என்ன அக்கறை?"

தம்பிக்கு மேற்கொண்டு பேசத் தயக்கம். விஜயமோகன் பதில்தான் முகத்திலடிப்பது போல் இருக்கிறதே!

"கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கிடைத்தால் நன்றாக இருக்கும்."

தம்பி எழுந்தான்.

அவன் எழுந்ததற்குத் தடையோ, இல்லை 'இருங்கள் நான் கொண்டு வரச் சொல்கிறேன்' என்று விஜயமோகன் சொல்லாததால் தம்பி நேராகக் கிணற்றடிக்குப் போனான். அங்கே வாளியும், கயிறும் இருந்தன.

அதன்மூலம் தண்ணீர் இறைத்து, வாளியைச் சாய்த்துத் தண்ணீரைக் குடித்தான் – தாகம் அடங்கிற்று. மீதித் தண்ணீரைக் காலில் ஊற்றிக் கொண்டான். வாளியைப் பழைய இடத்தில் வைத்தான்.

"கேட்டிருந்தால் நானே தண்ணீர் இறைத்துக் கொடுத்திருப்பேனே!" ஒரு பெண்ணின் குரல்.

தம்பி தலை நிமிர்ந்து பார்த்தான்...

அங்கே நின்றது வாசந்தி.

அதே முகம்.

கோயிலில் உன்னித்தன் அவளைப் பார்த்துக் காதல் வலை வீசியதிலிருந்து பட்டினம் ஓட்டலில் அவளைக் கெடுத்தது வரை

அவ்வளவும் சில விநாடிகளில் அவன் மனத்தில் தோன்றி மறைந்தன.

"ஹா! என் பகவதியே, என்ன இது?" என்று அவனை அறியாமல் அவன் வாய் சப்தமிட்டது.

அந்தச் சப்தம் வெளியிலும் நன்றாகக் கேட்டது.

"என்னை ஞாபகம் இருக்கிறதா?" அவள் கேட்டாள். தம்பி அவள் முகத்தைப் பார்த்தான்.

அவளது கண்கள் வைரத்துண்டுகள் போல் ஜொலித்தன. உதடுகள் இரத்தச் சிவப்பாக இருந்தன.

இப்போது யார் அவளைப் பார்த்தாலும், பயந்து போய்விடும் தோற்றத்தில் இருந்தாள் அவள்.

அங்கே நிற்கப் பயந்து, தம்பி திரும்பி நடந்து சாவடிக்கு வந்தான்.

"தண்ணீர் குடித்தாயிற்றா?" விஜயமோகன் கேட்டான்.

"குடித்துவிட்டேன்..."

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" விஜயன் கேட்டான்.

அதற்குப் பதில் சொல்லாமல், தம்பி தனது பழைய இடத்தில் வந்து அமர்ந்து பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

உன்னித்தன் சொன்னது சரியாகவே இருந்தது அவனுக்குப் புரிந்தது.

அது அவளேதான்!

வாசந்தியே!

இந்த ராட்சசிகள் குடியிருக்கும் இவ்விடத்தில் வசிக்கும் விஜயமோகன் நிஜமான மனிதனா? இல்லை அவனும் ஒரு பிசாசா? தம்பிக்கு இந்தச் சந்தேகம் மனத்தில் எழுந்தது.



"கார்த்திகா அந்தர்ஜனத்தை உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று திடீரென விஜயமோகன் தம்பியிடம் கேட்டான்.

"என்ன? அவளை நான் அறிவேனா? இல்லை சாமி இல்லை... நான் அவளைப் பார்த்ததே இல்லை" என்று தம்பி வேகமாகப் பதில் சொன்னவுடன்,

அங்கே சுவரில் இருந்த பல்லி ஒன்று சப்தமிட்டது. அந்தச் சப்தம் வழக்கமாகப் பல்லிகள் போடும் சப்தமாக இல்லாமல், சற்று விசித்திரமாகவே இருந்தது.

தம்பி சப்தம் வந்த இடத்தைப் பார்த்தான். தலைக்கு மேலிருந்த கூரையில் அசாதாரண உருவத்துடன் இருந்த பல்லி ஒன்று ஒட்டிக் கொண்டிருந்தது. அதன் நீளம் ஏறக்குறைய ஒரு முழம் இருக்கும். பார்ப்பதற்கு அது ஒரு முதலைக் குட்டி போலவே காட்சியளித்தது.

அதைப் போன்ற ஒரு பல்லியை தம்பி, தன் வாழ்நாளில் இப்போதுதான் முதல் தடவையாகப் பார்த்தான். அதையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த தம்பிக்கு, அதன் கண்கள் வைரக்கற்களைப் போல் மின்னிக்கொண்டிருந்ததைப் போலத் தெரிந்தது.

"இப்படியும் உண்டோ பல்லிகள்?" என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்ட தம்பி, சுவரைச் சுற்றிலும் பார்த்தான். இந்தப் பல்லியைத் தவிர வேறு எந்த ஜீவனும் அங்கே இல்லை.

"இந்த வீட்டில் தனக்கும் சம்பந்தம் இருப்பதாக அல்லவா அவள் என்னிடம் சொன்னாள்? மேலும் வீட்டை வாங்கிக் கிரயம் செய்த பத்திரத்தில் அவள் சாட்சிக் கையெழுத்தும் போட்டிருக்கிறாளே" என்று சந்தேகக் குரலில் விஜயமோகன் கேட்டான். தம்பி தனக்குத் தெரியாது என்று சொன்னதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று விஜயமோகன் யூகித்தான். அத்துடன் தம்பி தன்னிடயம் எதையோ கட்டாயமாக மறைக்கிறான் என்பதையும் அவன் அறிந்தான்.

"நான் அதைக் குறித்து விசாரித்துச் சொல்கிறேன்'' என்று தம்பி அப்போதைக்கு சமாளித்துக் கொள்ள ஒரு பதில் சொன்னான்.

"இன்னொரு சந்தேகம் இருக்கிறது?'' என்று விஜயமோகன் சொல்ல,

"என்ன அது?''

"அந்தக் கிரயப் பத்திரத்தில் கார்த்திகா எப்படி சாட்சிக் கையெழுத்துப் போட்டாள்? ரிஜிஸ்தர் ஆபீஸில் நமக்குத் தெரியாமல் அது எப்படி நடந்திருக்கும்?''

"சாட்சிகளிடம் கையெழுதுத்து வாங்குபோது, நாம் அங்கே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம். நாம் இல்லாத நேரத்தில்கூட அந்தப் பெண் வந்து கையெழுத்துப் போட்டிருக்கலாம்'' என்றான் தம்பி.

"உம்... சரி. அப்படியும் நடந்திருக்கலாம்'' என்று விஜயமோகன் சொல்லவே...

மீண்டும் கூரையில் இருந்த பல்லி பலமாகச் சப்தமிட்டது. தம்பி இப்போதும் அதைப் பார்த்தான்.

அது அவனையே பார்ப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

அய்யோ! இது என்ன? அதன் முகம்கூட கார்த்திகாவின் முகத்தைப் போலவே இருக்கிறதே. என் கண்களுக்கு அப்படித் தெரிகிறதா? அவன் பயந்தான். எழுந்தான்...

"நான் புறப்படுகிறேன். நேரமிருக்கும்போதும், முக்கியமான வேலை இருக்கும்போதும், கட்டாயம் நீங்கள் என் வீட்டிற்கு வரவேண்டும்'' என்று சொன்ன தம்பி, "இன்னொரு விஷயம்'' என்றான்.

"என்னது?''விஜயன் ஆர்வமாகக் கேட்டான்.



"திருமேனி இந்த இடத்திற்குப் புதியவர். வேலைக்காரியை வேலைக்கு வைக்கும்போது எங்களையெல்லாம் கேட்டுவிட்டு வைப்பது நல்லதல்லவா?'' என்று கேட்டான்.

"இங்கு வேறு ஆண்கள் யாரும் இல்லையே. அதனால் புதிதாக சிக்கல் வர இடமிருக்காது இல்லையா?''

"அருகில் ஓர் ஒட்டல் இருக்கிறது. போத்தி ஒட்டல். ஆகார வகைகள் ருசியாக இருக்கும். திருமேனி அங்கே போய்ச் சாப்பிடலாம், தங்கலாம்.''

"அப்படியா? அப்படி ஓர் ஓட்டல் இருப்பது எனக்குத் தெரியாதே...''

"உண்டு. நீங்கள் அங்கேதான் போய்ச் சாப்பிடுகிறீர்கள் என்று நான் நினைத்தேன். உங்களைப் போன்றவர்கள் அங்கே போய்ச் சாப்பிட்டால் அதை நடத்தும் போத்திக்குக் கொஞ்சம் சகாயமாக இருக்கும் என்று நான் நினைத்தேன்...''

"நான் பார்க்கிறேன்.''

"சரி... நான் கிளம்பட்டுமா? போகும் வழியில் போத்தியிடம் சொல்லிவிட்டுப் போகிறேன்'' என்று கூறிய தம்பி அங்கிருந்துப் புறப்பட்டான்.

தம்பி சாவடியை விட்டு இறங்கியபோதும் அந்தப் பல்லி முன்பைப் போலவே சப்தமிட்டது.

இப்போது விஜயமோகன் கூரையைப் பார்த்தான். அப்போதுதான் அந்தப் பல்லி மெதுவாக தன் இடத்தைவிட்டு நகரந்து பிறகு மெதுவாக மறைந்தது.

வெளியில் தெரியாத பல இரகசியங்கள் இந்த இல்லத்தில் மறைந்திருக்கின்றன என்று விஜயமோகன் நினைத்துக் கொண்டான்.

அன்று மாலை அவன் கால் போன வழியில் மெதுவாக வெளியே நடந்தான். வெளியில் யாரிடமாவது பேசிப் பார்த்தால், இந்த வீட்டைப் பற்றி ஏதாவது புதிதாக அறிய வாய்ப்புண்டு என்றும் அவன் நினைத்தான்.

நடந்தான்... நடந்துகொண்டே இருந்தான்...

கிராமத்திற்குள் ஒரு மாலைச் சந்தை இருந்தது. அங்கே ஒரு சிறு ஓட்டலும், டீக்கடையும் இருந்தன. மற்றும் பார்பர் ஷாப், பலசரக்குக் கடை, பீடா ஸ்டால் முதலியவையும் இருந்தன.

பலசரக்குக் கடையில், ஒரு பகுதியாக ஜவுளிக்கடையும் இருந்தது. மேலே துணி போடாத மனிதர்கள்தான் அங்கே அதிகமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

விஜயமோகன் ஓட்டலில் புகுந்து ஆள் இல்லாத இடமாகப் பார்த்து அமர்ந்தான்.

"டீயா? காப்பியா?" என்று பூணூல் போட்ட ஒரு மத்திய வயதினன் அருகில் வந்து, விஜயமோகனிடம் கேட்டான்.

"டீ வேண்டும்."

"சாப்பிட ஏதாவது வேண்டுமா?"

"ஏதாவது கொடுங்கள்."

அந்த நபர் ஒரு மெதுவடையையும், வெங்காய பஜ்ஜியையும் இலையில் கொண்டு வந்து வைத்தான். விஜயமோகன் சாப்பிட ஆரம்பித்தான். அருகில் இருந்த பெஞ்சில் ஒரு வயோதிகன் அமர்ந்திருந்தான்.

"இந்தக் கிராமத்திற்கு நீங்கள் புதியவர் போலத் தெரிகிறதே... எங்கே குடியிருக்கிறீர்கள்..." வயோதிகன் கேட்டான்.

"புதியவன்தான்..."

"எங்கே தங்கல்?"

"எழுமந்தூர் இல்லத்தில்..."



அதைக் கேட்டவுடன் பயந்து போன முகத்துடன் அக்கிழவன் விஜயமோகனைப் பார்த்தான்.

"உங்கள் பெயர்?"

"விஜயமோகன். அந்த இல்லத்தை நான் விலைக்கு வாங்கி இருக்கிறேன்..."

"அங்கேயா தங்கி இருக்கிறீர்கள்?" நம்பிக்கை இல்லாதவன் போலப் பார்த்தான். கேட்டான்...

"ஆமாம்!"

"எவ்வளவு நாள்களாக அங்கே குடியிருக்கிறீர்கள்?"

"இரண்டு மூன்று நாள்களாக!"

"நீங்கள் மிகவும் தைரியசாலி போலத் தெரிகிறது!"

"என்ன ராமன் நாயரே, தேவையில்லாத விஷயங்களை எல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஓட்டல் முதலாளி, கிழவனைப் பார்த்துச் சப்தம் போட்டார்.

"இல்லை... யாருக்கும் வேண்டாத இடத்தில்கூட குடியிருக்க ஆள் இருக்கிறதே என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன்" என்றான் கிழவன்.

"போதும்... நிறுத்திக்கொள்" முதலாளி மீண்டும் சப்தம் போட, கிழவன் மேற்கொண்டு ஏதும் பேசாமல் வாயை மூடிக் கொண்டான். சற்றுப் பொறுத்து அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டான்.

சாப்பிட்டு முடித்த விஜயமோகன் டீயைக் குடித்துவிட்டு பணம் கொடுக்கும் நேரத்தில் ஓட்டல் முதலாளி பேச்சுக் கொடுத்தார்.

"என்ன?"

"இப்படி உட்காருங்கள். நீங்கள் யாரென்பதை நான் அறிவேன். எப்போதிருந்து இங்கே வந்து தங்குகிறீர்கள்?" என்று முதலாளி கேட்க,

"என்னைப் பற்றி இங்கே யார் வந்து சொன்னது?" விஜயமோகன் கேட்டான்.

"வாசுதேவன் தம்பி! அவன்தான் அந்த இல்லத்தின் பழை காரியஸ்தன். ஏற்கெனவே அங்கிருந்து நிறைய சொத்துக்களை அபகரித்துக் கொண்டவன்... இப்போது எல்லாவற்றையுமே தனதாக்கிக் கொண்டவன்."

பதில் பேசாமல் விஜயமோகன் அதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"கடைசி வாரிசாக அந்த இல்லத்தில் ஒரு பெண் இருந்தாள். அவளும் குளத்தில் விழுந்து இறந்துவிட்டாள்..." என்று சொன்ன கடை முதலாளி எதையோ யோசிப்பவர் போலக் காணப்பட்டார். பிறகு பேசினார்:

"அவள் இறந்தது இயற்கையான மரணமா? இல்லை கொலையா? என்று மக்கள் தர்க்கித்துக் கொண்டதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அதில் எது சரி என்றுதான் தெரியவில்லை" என்றார்.

"இதைப் போல் சரித்திரம் உள்ள பல இல்லங்கள் இருப்பதை நான் அறிவேன்" என்றான் விஜயமோகன்.

"இருக்கலாம். உம்... இன்னொரு விஷயம். அந்த இல்லத்தில் இருந்தவர்கள் எல்லாம் பெரிய மாந்திரீகர்களாக இருந்தார்கள். அநேக அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். உம்... அதைப்பற்றி யெல்லாம் சொல்லி இப்போதென்ன? அப்படி இருந்த இல்லந்தான் இப்போது இவ்வளவு மோசமான நிலைக்குள்ளாகி இருக்கிறது. கடவுளை ஒரு நிமிடம் மறந்தால் போதும். எல்லாமே குட்டிச் சுவராகிவிடும்!"

"நீங்கள் சொல்வது போலெல்லாம் ஒன்றும் இருக்காது! எல்லாருமே விதியின் கையில். இல்லையென்றால், உயிரோடு இருந்த போது அவர்கள் செய்த பாவங்களின் விளைவாக இருக்கும்."



"அப்படியும் இருக்கலாம்."

"நான் போய்விட்டுப் பிறகு வருகிறேன்."

"பிறகு சாப்பாடு?"

"சாப்பாடு அங்கேதான்."

"ஏன், இங்கே சாப்பிடக் கூடாதா?"

"யோசிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு விஜயன் கடையிலிருந்து இறங்கி வந்தான். அவனைப் பலர் பயத்தோடு பார்த்தனர்.

"இவனைப் பார்த்தால் மோசக்காரனாகத் தெரியவில்லை" என்று பலர் அவனைப் பற்றி ஒரே மாதிரியாக நினைத்தார்கள்.

விஜயமோகன் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது, அங்கே விளக்கேற்றப்பட்டிருந்தது.

சாவித்திரியைக் காணவில்லை. அவள் போய்விட்டாள் போலத் தெரிந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் கார்த்திகா அங்கே வந்தாள்.

"சாப்பாட்டை நீங்கள் வேறு இடத்தில் வைத்துக்கொள்ளும் எண்ணம் ஏதாகிலும் இருக்கிறதா?" அவள் கேட்டாள்.

"யார் சொன்னது?"

"அதையெல்லாம் நான் அறிவேன்" என்று சொல்லிவிட்டு, அவனிடம் ஒரு ஓலைச்சுவடியை நீட்டினாள்.

"இதுதான் மற்றொரு கிரந்தம்" என்றாள்.

அவன் அவளைப் பார்த்தான்.

"மரணத்திலிருந்து தப்பிக்க எல்லா வித்தைகளும் இதில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. பரீட்சை செய்து பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. தெரிந்து கொண்டால் போதும்" என்றாள்.

அன்று இரவு அவனது மார்பின்மீது ஒட்டிக்கொண்டு படுத்திருந்தபோது அவள் கேட்டாள்.

"நாளை மாலை நீங்கள் வாசுதேவன் தம்பியின் வீட்டிற்குப் போகும்போது என்னையும் அழைத்துப் போகலாமே!"

"அதில் என்ன சிரமம்? போகலாம்."

"நான் யாரென்று அங்கே சொல்வீர்கள்?"

"கார்த்திகா அந்தர்ஜனம்."

"அப்படிச் சொன்னால் தம்பி நம்பப் போவதில்லை."

"பின் என்ன செய்யலாம்?"

"நான் உங்கள் ஊரிலிருந்து வந்திருக்கிறேன் என்று சொன்னால் போதும்."

"அது மட்டும் அவனுக்குத் தெரியாதா?"

"இல்லை! அதற்கு ஒரு வழி இருக்கிறது."

"அப்படியா? சரி" என்று விஜயமோகன் ஒப்புக்கொண்டான்.

பேசிக்கொண்டிருந்தபோதே அவள் மீது மல்லிகை மணண் குப்பென்று வீசியது. அவளது கைகள் அவனது மார்பை அழுந்தத் தடவிக் கொண்டன. ஒரு கை விலகி அவனது வயிற்றுப் பக்கம் சஞ்சாரம் செய்தபோது, அவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அவளது மூச்சு அவனது இடக் கன்னத்தில் சூடாகப் பட்டுக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் உன்னித்தன் வாயிலில் ஒரு பக்கமாக வைத்து விட்டுப் போன தாயத்து, தானாகத் திறந்து கொண்டது. அதிலிருந்து புகைச் சுருள் சுருளாகக் கிளம்பியது. பின் அதுவே ஒரு பெண் உருவமாக மாறியது. அதே சமயத்தில் மூடியிருந்த கதவும் திறக்கப்பட்டது. விஜயமோகன் அந்தப் பக்கமாகப் பார்த்தான். யாரோ வாயிலில் நிற்பது போலவே விஜயமோகனுக்குத் தெரிந்தது. விஜயமோகன் அதை நன்றாக உற்றுப் பார்த்தான். வெளியில் இருந்த மங்கிய வெளிச்சத்தில் அந்த ரூபம் நிழல்போல நின்றது. ஒரு பெண் உருவம் மார்பகங்களை மூடாது நின்றிருந்தது. மார்பகங்கள் ஓர் இளம் பெண்ணுடையது போலவே இருந்தன. மிகவும் மெலியதாக ஒரு முண்டு மட்டும் அவளது இடுப்பில் இருந்தது. அந்த மெல்லிய வஸ்திரத்தின் ஊடே, உள்ளே இருந்த அவளது கால்கள் நன்றாகத் தெரிந்தன.



"யாரது?" விஜயமோகன் கேட்டான்.

உடனே கார்த்திகா அதைத் திரும்பிப் பார்த்தாள். திடீரென அந்த உருவம் மறைந்துவிட்டது.

"சாவித்திரியா அது?" விஜயன் கேட்டான்.

"இல்லை! அவளாக இருக்கவே முடியாது. இந்த நேரத்தில் இங்கே வர அவளுக்கு தைரியம் இருக்காது."

"பின் அது யாராக இருக்கும்?"

"யாரென்றாலும் பரவாயில்லை. வரட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று அவள் மெதுவாக விஜயன் காதில் சொன்னாள்.

ஆனாலும், அந்த நிழல் உருவம், சந்தேகத்தின் நிழலை அவன் மனத்தில் பதித்தது.

சற்று நேரத்திற்குப் பிறகு கார்த்திகா கோல்விளக்கின் திரியைப் பெரிதாக்கினாள். மங்கி எரிந்த விளக்கு இப்போது பிரகாசமாக இருந்தது. அந்த வெளிச்சத்தில் அவன் கார்த்திகாவைப் பார்த்தான்.

அவள் எல்லாவற்றையும் பெற்றிருந்த ஓர் அபூர்வ சுந்தரியாக இருந்தாள்.

"உனக்கு நகை ஒன்றும் இல்லையா?" விஜயன் கேட்டான்.

“எனக்கு எதற்கு நகைகள்?” என்று அவள் கேட்டுக் கொண்டே, தன் இருகைகளாலும் அவனது கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள்.

“சந்திரனில் உள்ள கரும்புள்ளி போல இருக்கிறதே இந்த மச்சம்” என்று அவளது மார்பகங்களுக்கு மேலிருந்த கறுப்புநிற மச்சத்தைக் காட்டினான். அவளது சந்தன நிறத்துக்குச் சற்றும் ஒத்துவராத கறுப்பு நிறத்தில் நாலணா வடிவத்தில் அமைந்திருந்தது அந்த மச்சம்.

“என்னை எல்லாருக்கும் அடையாளம் காட்டக்கூடிய மச்சம் இது. இது இல்லையென்றால் என்னிடம் ஏதோ குறை இருப்பது போல உங்களுக்குக் கூடத் தோன்றும்” என்றாள் அவள் சிரித்துக் கொண்டே. அப்போது அவள், அவன் மார்பில் சாய்ந்திருந்தாள். விஜயமோகன் அவளது தலை முடியைத் தன் கைவிரல்களால் கோதிக் கொண்டிருந்தான். சிறிது நேரம் பேசாச் சுகம்.

“உங்களுக்குத் தூக்கம் வரும் போல் இருக்கிறது” என்று கூறிக் கொண்டே அவள் அவன் கண்களை மெதுவாகத் தடவிவிட்டாள்.

“ஆமாம். உடலில்கூட சோர்வு தெரிகிறது. வெகுதூரம் நடந்து வந்ததால் ஏற்பட்ட களைப்பாகவும் இருக்கும்.”

“உம்... இருந்தாலும் இருக்கலாம். அங்கே போய் என்னைப் பற்றிப் பேசினீர்களா?”

“ஏன் வீட்டில் உள்ளவர்களைப் பற்றிக் கடைத்தெருவில் பேச வேண்டும்?”

“ஆமாம்! நான் தெரியாமல் கேட்டுவிட்டேன். நீங்கள் நன்றாகத் தூங்குங்கள். மறந்துவிடாதீர்கள்... நாளை வாசுதேவன் தம்பியின் வீட்டிற்கு நானும் வருவேன்.”

“நாளைப் பகலில் போகலாமா?”



“முடியாது. எனக்கு நாளை வேலை இருக்கிறது. அதை முடித்து விட்டு திரும்பி வரும்போது மாலை நேரமாகிவிடும்.”

“அப்படியென்றால் இன்னொரு நாள் போகலாமா?”

“அதெல்லாம் வேண்டாம். முடிவு செய்தபடி நாளையே போவோம். அதில் மாற்றமே வேண்டாம்!”

“சரி... நாளையே போவோம்.” அவன் சொன்னவுடன் கார்த்திகா எழுந்து தன் ஆடைகளை அணிந்து கொண்டாள். அவனைப் பார்த்தாள். பிறகு அவன் கன்னத்தில் லேசாகத் தட்டிவிட்டுப் புறப்பட்டாள். அந்த நேரத்தில் கோழியும் கூவிவிட்டது.

“இவள் யார்?” என்று மறுபடியும் அவன் மனம் சிந்திக்கத் தொடங்கியது.

“நான் சந்தேகப்பட்டது மாதிரியாகத்தான் இருக்கும்” என்று அவன் தன்னையே சமாதானப்படுத்திக் கொள்கிறான். எழுந்து போய்க் கதவை மூடிவிட்டு வந்து படுக்கையில் விழுந்தான் தூங்கிப் போனான்.

அடுத்த நாள் பகல், உன்னித்தன் தன் மாமா சொன்ன மந்திரவாதியை இடசேரி இல்லத்திற்கு அழைத்து வந்தான். அந்த மாந்திரீகனைப் பார்த்தவுடன் இவன் கொஞ்சம் விஷயம் தெரிந்தவன் என்ற எண்ணம் வாசுதேவன் தம்பிக்கு வந்தது.

அவன் நல்ல உயரம். நன்றாக விரிந்த நெற்றி. தலைமுடி ஜடைகளாக மாறி, பல பிரிவுகளாகப் பிரிந்து தோள் மீது தொங்கிக் கொண்டிருந்தது. அவன் முகம் பார்த்த மாத்திரத்தில் மனத்தில் பயத்தைத் தோற்றுவித்தது. காரணம் அவனுக்கு ஒரே கண்! இன்னொரு கண் இருந்த இடம் குழியாக இருந்தது. அதில் இருள் தெரிந்தது. அந்த இருளுக்குள் ஏதோ அசைவது போலத் தெரிந்தது. ஒரு கண் குழியானதற்குப் பின்னால் ஒரு கதையே இருக்கிறது.

சேகர உன்னித்தன் என்னும் பெயர் கொண்ட அந்த மாந்திரீகன், தன் தொழிலில் எல்லாமே செய்யக் கூடியவன் என்று பெயர் பெற்றவன். ஆனால் பலருக்கு அவனைப்பற்றிய முழு விபரமும் தெரியாது. பல நாடுகளைச் சுற்றி வந்தவன்.

ஒரு சமயம் இந்த மாந்திரீகன் இரத்தக் காட்டேரியின் அருளை வேண்டி ஒரு யானையின் தலையை வெட்டி வைத்து ஹோமம் நடத்தினான். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்களைக் கொல்ல வேண்டித்தான் இந்த யாகம் நடத்தப்பட்டது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் நினைத்த காரியம் நடக்கவில்லை. இறக்கவேண்டிய முக்கியமான நபர், தமது இடுப்பில் கட்டியிருந்த ஒரு தாயத்து எல்லா மாந்திரீக சக்திகளையும் தடுத்து நிறுத்திவிட்டது. கொஞ்சம் சிரமப்பட்ட பிறகு ஹோம குண்டத்தின் முன் செய்து வைக்கப்பட்டிருந்த மூன்று களிமண் உருவங்களில் இரண்டின் தலை மட்டும் அற்று வீழ்ந்தது! ஒன்று மட்டும், வைத்த கோலத்திலேயே இருந்தது. அதைப் பார்த்த கோபக்காரனான சேகர உன்னித்தன் காட்டேரியின் கையிலிருந்த சூலத்தை எடுத்து, தன் பலம் கொண்ட மட்டும் அதைத் தனது வலக் கண்ணில் பாய்ச்சிக் கொண்டான்.

கண்ணிலிருந்து இரத்தம் ஆறாகப் பெருகியது. அந்த இரத்தம் பீய்ச்சி அடித்த வேகத்தில் ஹோமக் குண்டத்தில் விழவே திடீரென அது நடந்தது.

இரத்தம் குண்டத்தில் விழுந்த அதே விநாடி, மூன்றாவது களி மண் சிலையின் தலையும் துண்டாகிக் கீழே விழுந்தது!

உடனே சேகர உன்னித்தன் ஹோம குண்டத்திலிருந்த நெருப்பை அள்ளித் தன வலக் கண்ணில் வைத்துக் கொண்டான். உடனே இரத்தம் கொட்டுவது நின்றுவிட்டது. இந்த விபரம் அங்கே இருந்த இரண்டு பேரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. சாகும்



வரையில் வெளியே சொல்லக்கூடாது என்று அவர்களுக்கு கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது. இதில் தனக்கு வீழ்ச்சிதான் என்று அவன் நினைத்ததுதான் இதற்குக் காரணம்.

“உங்கள் விஷயங்களை நான் நன்றாக அறிவேன். உங்கள் எதிராளி ஒரு பிரம்மராட்சஸி தானே?” என்று கேட்டான் மந்திரவாதி.

“ஆமாம்! ஆனால் அவள் மனித உருவத்தோடு நடமாடுகிறாள்.”

“அப்படியா?” என்று கேட்ட அவன் சில விநாடிகள் சிந்தித்தான்.

“நிஜமான பெண்ணாகவே நடக்கிறாளா?” என்று கேட்டான்.

“அப்படித்தான் தெரிகிறது” என்று தம்பி சொல்ல மாந்திரீகன் தன் ஒற்றைக் கண்ணை மூடிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தான். அப்போது அவனது முகம் மிகவும் பயங்கரமாகத் தெரிந்தது. குழியோடு இருந்த கண் பயங்கரத்தைச் சற்று அதிகமாக்கியது. உதடுகள் அசைவதைப் பார்த்துத்தான் அவன் ஏதோ மந்திரம் ஜெபிப்பது போலத் தெரிந்தது.

“வழக்கமாக, பிரம்மராட்சஸ் இன்னொருவர் உடலில் புகுந்து கொண்டுதான் அவர்களை ஆட்டுவிப்பதும்... அலங்கோலப்படுத்துவதும் நடப்பது” என்று ஒரு கண்ணைத் திறந்தபடி மெதுவாகச் சொன்னான் மாந்திரீகன்.

“இந்தக் கேஸில் உருவமும் உண்டு, உணர்ச்சியும் உண்டு” என்று தம்பி சொன்னான் தன்னைச் சுற்றிப் பார்த்தபடி.

ஜன்னல் அருகில் சந்திரிகாவும், ஓமன குஞ்சம்மாவும் நின்று கொண்டு இவர்கள் பேசுவதை மிகவும் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். தங்கள் வீட்டில் ஏதோ குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் யூகித்த அவர்கள், அது என்ன என்று தெரியாமல் தடுமாறினார்கள்.

கல்யாணமான தினத்திலிருந்து தனது அண்ணன் சரியாகவே இல்லை என்பதை சந்திரிகா அறிவாள். எப்போதுமே இந்த வீட்டில் இரவைக் கழிக்காத உன்னித்தன் இந்த வீட்டில் இரண்டு ராத்திரிகளைக் கழித்திருக்கிறான். அதற்கு என்ன காரணம்? அவன் இங்கு இரவைக் கழிப்பது தனக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் விஷயமாக இருந்தாலும் அவன் இங்கிருப்பது எதனால்? அதுவுமில்லாமல் இரவில் எந்த நேரத்திலும் தைரியமாகப் போகும் உன்னித்தன், இப்போது இரவு நேரத்தில் வெளியில் போவதற்கே பயப்படுவது போலத் தெரிந்தது. அது ஏன்?

வாசுதேவன் தம்பியும், உன்னித்தனும் இப்போது மிகவும் நெருக்கமாக ஒட்டி உறவாடுகிறார்கள். அதுவும் சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

"நீங்கள் ஏன் இங்கு நிற்கிறீர்கள்? உங்களுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத விஷயம் இது. உங்களுக்குத் தேவையும் இல்லை. போங்கள்" என்று தம்பி சற்றுக் கோபமாகச் சொன்னவுடன் பெண்கள் இருவரும் உள்ளே போய் மறைந்தார்கள்.

"இனி நாம் பேசலாம்" தம்பி, சேகர உன்னித்தனிடம் சொன்னான்.

"உருவம் இருக்கிறதென்று உங்களுக்குத் தோன்றக் காரணம் என்ன?"

"ஒருநாள்..." என்று ஆரம்பித்த தம்பி தன்னைச் சுற்றி ஒருதடவை நிதானமாகப் பார்த்துவிட்டு...

"அவள் என் படுக்கையில் வந்து படுத்திருந்தாள். அன்று தான் எனக்கு முதல் இரவு. பழி வாங்கும் எண்ணத்தோடு வந்திருப்பதாகச் சொன்னாள்."

"பிறகு என்ன நடந்தது?"



"கொஞ்சம் கொஞ்சமாக என்னைச் சித்திரவதை செய்து கொல்வதுதான் தன் எண்ணம் என்றாள். இதற்கிடையில் ஒரு ஆளையும் கொன்றாகிவிட்டது."

"நிஜமாகவா? அப்படியென்றால் அது உருவத்துடன் இருக்கிறது என்றுதான் அர்த்தம்" என்று மாந்திரீகன் மீண்டும் ஆலோசனையில் ஆழ்ந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு பேசினான்.

"இலட்சத்தில் ஒருவர் இப்படி ஆகிவிடுவதும் உண்டு. விதிமுறையும் அப்படித்தான் சொல்கிறது. நம் ஆசாரப் பிரகாரம், கர்மங்கள் செய்து எரிக்காத பிணங்களில் தான் இப்படி நடக்கும்."

"புரியவில்லையே?" என்று சொல்லிவிட்டுத் தம்பியும் உன்னித்தனும் சேகர உன்னித்தனைப் பார்த்தார்கள். சேகர உன்னித்தன் பேசினான்.

"நாம் ஆசார அனுஷ்டானங்கள் பிரகாரம் எல்லா சடங்குகளையும் வீட்டிலும் சுடுகாட்டிலும் செய்து, பிணத்தை எரித்துவிட்டு, மறுநாள் காலை சாம்பலை எடுத்து ஆற்றிலோ, கடலிலோ கரைப்பது உண்டல்லவா? அப்போதுதான் எந்தப் பிணத்திற்கும் உயிர் வராது. சில விஷயங்களில் அடக்கம் செய்தபிறகு நாம் சந்தேகப்படுவதால் ஏதாவதொரு கேஸில் இப்படி நேரலாம்."

"அப்படியா?"

"இன்னொன்றும் இருக்கிறது. எந்தவிதமான சடங்குகளும் இல்லாமல் விபத்தில் இறந்தவர்கள், தற்கொலை செய்து கொண்டவர்கள் போன்றவர்களை அப்படியே புதைத்துவிடுகிறோம் அல்லவா? அவர்களும் இப்படி முழு உருவத்தில் வந்து தொல்லை தரலாம்."

தம்பி உன்னித்தன் முகத்தைப் பார்த்தான்.

கார்த்திகாவின் உடம்பு எரிக்கப்படவில்லை. அவள் பிணமான பிறகுதான் எந்தவிதமான சடங்குகளும் செய்யவில்லை. இத்தனைக்கும் அவள் ஆசாரமான ஒரு குடும்பத்துப் பெண். குளத்திலிருந்து உடல் எடுக்கப்பட்டு நேராக கருங்கல் பெட்டியில் வைத்து மூடப்பட்டது. இந்த வேலைகளைச் செய்தது பாச்சுவும், குட்டனும்தான். ஆனால் பாச்சுவை தம்பி ஏமாற்றி சாராயத்தில் விஷம் கலந்து கொடுத்து கொன்றுவிட்டான். குட்டனை கிடா ஒருமாதிரியாகக் கவனித்துவிட்டது. அவனுக்கு வைத்தியம் செய்தும் பலனில்லை. இறந்துவிட்டான். இவர்கள் இருவரும் இதைப்போல பின்னால் பேயாக வருவார்களோ?''

சேகர உன்னித்தன் பேசினான்.

''இம்மாதிரி சம்பவங்களில் எதுவும் நேரலாம். ஆனால் பயங்கரமாக நடப்பது வெகு அபூர்வம். அப்படி உற்பத்தியாகும் பிரம்மராட்சஸ் மிகவும் சக்தி வாய்ந்தது. அதுமட்டுமல்ல, அபாயகரமானதும்கூட. சரீரம் உள்ளது எதுவும் செய்யும். பகல் நேரத்தில்கூட அதன் நடமாட்டம் உண்டு!''

''பகவதியே! அப்படியும் நடக்குமா?'' தம்பி பயத்தால் நடுங்கினான்.

மாந்திரீகன் தொடர்ந்து பயமுறுத்திக் கொண்டே இருந்தான்.

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அதற்கு உருவம் இருக்கிறது. சொந்த சரீரத்தோடு சஞ்சரிக்கிறது. அதனால் அவ்வளவு எளிதில் அதைக் கட்டுப்படுத்த முடியாது.''

''அப்படியென்றால் இப்போது என்ன செய்வது?'' தம்பி விரக்தியோடு கேட்டான்.

சேகர உன்னித்தன் தனது தோள் பையிலிருந்து ஒரு பழைய ஓலைச்சுவடிக் கட்டை எடுத்தான். மிகவும் பழைய அந்தச் சுவடியை மெதுவாகப் புரட்டினான். புரட்டிக் கொண்டே வந்தவன் ஓர் இடத்தில் சட்டென்று தன் ஒற்றைக் கண்ணைப் பெரிதாக்கி



உற்றுப் பார்த்தான். சரியாகத் தெரியாததால் தன் மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டான். அதில் ஒரு கண்ணுக்கு மட்டுமே கண்ணாடி இருந்தது.

படித்தான்.

''இதற்கொரு வித்தை இருக்கிறது'' என்று சொல்லி அவன் தம்பியின் முகத்தைப் பார்த்தான்.

''இப்போது அந்த ராட்சஸியின் சரீரம் உள்ள இடம் உனக்குத் தெரியுமா?'' அவன் தம்பியிடம் கேட்டான்.

''தெரியும்.''

''அப்படியென்றால் அதற்கு ஒரு வழியிருக்கிறது'' என்று சொன்ன அவன் உன்னித்தனை நோக்கி,

''உங்கள் மாமா கொடுத்த தாயத்தைக் கொண்டு போய் அந்த இல்லத்தில் வைத்தீர்களா?''

''ஆமாம் வைத்தேன்.''

''அந்தத் தாயத்திலிருந்து ஒரு ராட்சஸி வெளியில் வந்திருக்க வேண்டும். உங்கள் பிரம்மராட்சஸியோடு சண்டை போடவே அவள் அனுப்பப்பட்டாள். ஆனால் அவள் உருவத்தோடு இருந்ததால் எதிர்பார்த்த சண்டை நடக்கவில்லை. நான் வேறு ஒன்று சொல்கிறேன்...''

''என்ன அது?''

''சில விசேஷ பூஜை செய்து, அந்தப் பிரசாதங்களைக் கொண்டு போய், அவள் பிணத்தை மூடிய கருங்கல் மீது வைத்தால் போதும். அவள் வெளியே வரமுடியாது.''

''நிஜமாகவா? இது மிகவும் நல்ல யோசனைதான். இன்று வரைய யாரும் சொல்லாத யோசனை...'' என்று கூறி மகிழ்ந்தான் தம்பி.

"நல்ல யோசனை என்றாலும், இது மிகவும் கஷ்டமான விஷயம். இது பிரம்மராட்சஸ் ஆனாதல், ஏதாவது ஒரு பிராமணன் அல்லாத மனிதன் பிணத்தை, எரியும் சிதையிலிருந்து எடுத்து அதைத் துண்டாக்கியோ, இல்லை முழுதாகவோ அவள் படுத்திருக்கும் கல்பெட்டியின் மீது வைக்க வேண்டும். பிறகு சில பூஜை விதிகளும் இருக்கின்றன."

தம்பி உன்னித்தன் இருவர் முகத்திலும் மகிழ்ச்சி. இந்தத் தடவை அவர்கள் கார்த்திகாவையே ஜெயித்துவிட்டதாக முடிவுகட்டி விட்டார்கள்.

"இந்தச் சமயத்தில் சவத்தை எங்கே போய்த் தேடிப் பிடிப்பது?"

"பிணத்தை தேடிக் கொண்டிருக்க முடியாது. யாரையாவது பிணமாக்க வேண்டியதுதான்..." என்று மாந்திரீகன் சொல்ல,

"நல்ல யோசனை என்றான் தம்பி. பிறகு உன்னித்தன் காதில் என்னமோ சொன்னான்.

"இன்று இரவே அதைச் செய்து விடலாம்" என்றான்.

"சரி... அப்படியென்றால், அந்த வேலையெல்லாம் முதலில் முடியட்டும். மற்றவைகளைப் பற்றி நாம் பிறகு யோசிப்போம்..."

"ஒரு விஷயம் மட்டும் எனக்குத் தெரிய வேண்டியிருக்கிறது." தம்பி கேட்டான்.

"என்ன தெரிய வேண்டும்?"

"பிணம் கிடைத்தால் அதை எப்போது கல்லறைமீது வைக்க முடியும்?"

"பகல் நேரத்தில்தான் வைக்க முடியும். இரவு அது வெளியில் போயிருக்கும்போது வைத்தால் எதுவுமே நடக்காது..."

"நாளை பகலில் பிணத்தை அங்கே வைத்துவிடுவோம். அதற்கான ஏற்பாடுகளை இப்போதிலிருந்தே செய்ய ஆரம்பிக்கலாம்" என்று தம்பி சொல்லி பேச்சை முடித்தான்.



சேகரன் மதியம் அங்கேயே சாப்பிட்டுவிட்டு உன்னித்தன் வீட்டிற்குப் போய்விட்டான்.

அங்கே விடுபட்ட தம்பியும் உன்னித்தனும், யாரைப் பிணமாக்குவது என்பதைப் பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வந்தனர். தம்பியின் வயலில் வேலை பார்க்கும் ஒருவனை இந்த வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தீர்மானித்தனர். மாலை நேரம் முடிந்து இரவு தலைகாட்டிய போது தம்பியின் ஆட்கள் அந்தக் குறிப்பிட்ட நபரை கள்ளுக்கடைக்கு அழைத்துச் சென்றனர். அவர்களை அனுப்பிவிட்டு தம்பி வராந்தாவில் வந்து அமர்ந்தான். அவன் முகத்தில் திருப்தி. ஓமனா வாயிலில் விளக்கேற்றி வைத்துவிட்டு "யாரோ வருகிறார்கள்" என்றாள்.

தம்பி பார்த்தான். விஜயமோகன் ஒரு பெண்ணுடன் அங்கே வந்து கொண்டிருந்தான்.

அந்தப் பெண் கார்த்திகா அந்தர்ஜனம்!

## அத்தியாயம் - 9

கார்த்திகாவைப் பார்த்துப் பயந்து போன தம்பி, என்ன செய்வதென்றே தெரியாமல் சில விநாடிகள் தடுமாறினான். விஜயமோகனுடன் கார்த்திகா அந்தர்ஜனம்! இரவு நேரம் ஆரம்பமாகிவிட்டிருந்தது. வீட்டில் விளக்குகளும் ஏற்றப்பட்டு விட்டன. பிசாசுகளுக்கு இரவு நேரத்தில்தான் சக்தி அதிகம் என்று சொல்வார்கள்.

தன்னை ஒரு வழியாக முடித்து விடவே இவர்கள் இருவரும் இங்கே வந்திருக்கிறார்கள் என்று தம்பி நினைத்தான். இருவரும் வராந்தாவில் காலடி எடுத்து வைத்தனர். அப்போது தம்பி கார்த்திகாவின் பாதங்களைக் கவனித்தான். அவள் முகத்தை

நிமிர்ந்து பார்க்க அவனுக்குத் தைரியமில்லை. பாதம் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்கள் மட்டுமே இருந்தன. இரண்டு பாதங்களிலுமே இருந்த அந்த நாலு விரல்கள் ஒரே மாதிரியான நீளத்தில் இருந்தன.

தம்பிக்கு பயத்தால் வியர்த்துக் கொட்டியது. முகத்திலும் பயத்தின் சாயல். சுவாசம் மிகவும் வேகமாக வந்தது.

"இப்படி அமருங்கள் திருமேனி" என்று தனது நடுங்கும் குரலிலேயே விஜயமோகனை உபசரித்தான் தம்பி. அவன் அருகில் இருந்த கார்த்திகா, வாசதேவன் தம்பியைத் தன் கடைக்கண்களால் பார்த்தபடியே உள்ளே போனாள்.

அங்கே இருந்த சந்திரிகாவும் ஓமனாவும் அவளை வரவேற்றார்கள். அவளை அவர்கள் விஜயமோகனின் மனைவி என்றே முடிவு கட்டியிருந்தார்கள்.

"வாருங்கள்... வாருங்கள்" என்று வாய்நிறைய அழைத்து, அவளைக் கட்டிலில் அமர்த்தினாள் சந்திரிகா. நில விளக்கில் திரி சிறிதாக எரிந்து கொண்டிருந்தது. கார்த்திகா உள்ள வந்தவுடன் திரி மிகவும் பிரகாசமாக எரிந்து நல்ல வெளிச்சத்தைக் கொடுத்தது. சந்திரிகா இந்த மாறுதலைக் கவனிக்கவில்லை என்றாலும் ஓமனா குஞ்சம்மா இதை உடனே கவனித்தாள். கார்த்திகாவைப் பார்த்தவுடன் அவள் முகத்தில் லேசாகச் சந்தேகம். இந்த முகத்தை அவள் எங்கோ, எப்போதோ பார்த்திருக்கிறாள்.

"எங்கே? எப்போது? அதுதான் திடீரென அவளுக்கு ஞாபகத்திற்கு வரவில்லை.

"திருமேனியின் மனைவியா?" என்று அவளிடம் அவள் கேட்டும் விட்டாள்.

"உம்!" என்றாள் கார்த்திகா! சந்திரிகாவின் நிலை வேறு –



கார்த்திகா எப்போது உள்ளே நுழைந்தாளோ, அப்போதிலிருந்து அவளை, வைத்த கண்ணை வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தாள் சந்திரிகா.

சிறுவயது முதல் எங்கே இந்த முகத்தைப் பார்த்திருக்கிறோம்? கோயிலில் பார்த்திருக்கிறேனா? இல்லை வேறு எங்காவதா? முகம் தெரிந்த முகமாக இருந்தாலும் இது வேறு ஆளாக இருந்துவிட்டால்? தான் நினைக்கிற ஆளாக இது நிச்சயம் இருக்க முடியாது என்று முடிவு செய்து கொண்டாள் சந்திரிகா!

"என்ன இது? நான் அப்போதிருந்து பார்க்கிறேன். நீங்கள் இருவரும் என்னை ஏதோ காட்சிப் பொருளைப் பார்ப்பது போல பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள்" என்று சந்திரிகாவைப் பார்த்து கார்த்திகா கேட்கவும் அதற்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியாமல் சந்திரிகா தடுமாறினாள். ஓமனா சிரித்து மழுப்பினாள். "எழமத்தூர் இல்லத்தைச் சேர்ந்த கார்த்திகா அந்தர்ஜனம் நீங்கள்" என்று எப்படி அவளிடம் சொல்ல முடியும்?

'அந்தப் பெண் குளத்தில் விழுந்து இறந்து விட்டாள்' என்று அவள் அண்ணன் அவளிடம் சொல்லி இருக்கிறானே!

அதனால்தான் வாரிசுகள் இல்லாத இல்லத்தை இப்போது விற்கவேண்டிய நிலை ஏற்பட்டது!

அந்த இல்லத்தை வாங்கியவன் இப்போதுதான் மனைவியுடன் இங்கே வந்திருக்கிறான். அவளிடம் போய்க் கேட்பது முறையற்றது.

உலகத்தில் ஒருவரைப்போல் இன்னொருவர் இருப்பார்கள் என்கிறார்களே, அப்படி இருந்துவிட்டால்? கேட்காமல் இருப்பதே உத்தமம்!

"உங்கள் வீடு எங்கே இருக்கிறது?" சந்திரிகா அவளிடம் கேட்டாள்.

"என் வீடா இல்லை அவர் வீடா?"

"உங்கள் வீடுதான்..."

"இங்கே இருந்து சற்று தூரத்தில் இருக்கிறது. சொன்னால் உங்களுக்குப் புரியாது."

"குழந்தைகள் இல்லையா?"

"இன்னும் இல்லை."

இப்படிப் பேசிய பின் சந்திரிகாவின் பயம் போய்விட்டது. தான் சந்தேகப்பட்டது தவறு என்று அவள் நினைத்தாள். அதற்காக இப்போது வெட்கப்பட்டாள்.

அங்கே வெளியே...

"திருமேனிக்கு ஆகாரம் எப்படி?" தம்பி விஜயனிடம் கேட்டான்.

"வீட்டிற்குச் சென்ற பிறகுதான்! நான் இரவில் எப்போதும் நேரம் கழித்துத்தான் சாப்பிடுவேன். தினசரி அப்படித்தான்" என்றான் விஜயன்.

"அதுவரை உங்களுக்கு எப்படிப் பொழுது போகும்?"

"எதையாவது படித்துக் கொண்டிருப்பேன்."

"என்ன படிப்பீர்கள்?"

"அநேகமாக மாந்திரீக கிரந்தகங்கள்."

"அதில் இரு பிரிவுகள் இருக்கின்றனவே..."

"இருக்கிறது. நல்லதும் – கெட்டதும்."

"இருக்கிறதல்லவா? அதில் உங்களுக்கு எதில் விருப்பம்?"

"இதில்தான் விருப்பம் என்றில்லை. இரண்டையுமே படிப்பேன்."



"அப்படியென்றால் எல்லாம் தெரியும் என்று சொல்லுங்கள்..." தம்பி அர்த்தத்தோடு கேட்டான்.

"உன்னுடன் அழைத்து வந்திருக்கிறாயே... கார்த்திகா... அவள் ஒரு பிரம்மராட்சஸ் என்பதைத் தெரிந்துதான் அவளை உன்னுடன் அழைத்து வந்திருக்கிறாயா?" என்று கேட்பதற்கு பதில் அப்படிக் கேட்டான்.

விஜயமோகன் சிரித்து மழுப்பிவிட்டான்.

"நான் அன்று சொல்லவில்லை? அந்த கார்த்திகாதான் இப்போது என்னுடன் வந்திருக்கிறாள். நான் வாங்கிய அந்தச் சொத்தில் இவளுக்கும் பங்கு இருக்கிறதல்லவா?" விஜயமோகன் தம்பியிடம் கேட்டான்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்றே தம்பிக்குத் தெரியவில்லை! எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் விஜயமோகன் கேட்கிறானா?

ஒரு நிமிடம் யோசித்துவிட்டுப் பேசினான் தம்பி.

"அப்படி ஒரு நபரைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை. ஒருவேளை மிகவும் தூரத்துச் சொந்தமாக கார்த்திகா என்று யாராவது இருக்கலாம்" – இந்தப் பதிலினால் தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று அவன் நினைத்தான்.

விஜயமோகன் இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? அவனுக்குத்தான் பூரா கதையும் தெரியாதே!

தம்பி தொடர்ந்தான்.

"தேவை என்றால் கோர்ட்டில் இந்தச் சொத்தில் தனக்கும் பங்கு இருக்கிறதென்று அப்பெண்மணி வழக்குத் தொடர்ந்து இருக்கலாம். ஏனோ தொடரவில்லை போலிருக்கிறது..." என்று உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

27920
428922

அதற்கும் விஜயமோகனிடம் இருந்து பதில் இல்லை.

"இந்தப் பெண்மணி இல்லத்தில்தான் தங்கி இருக்கிறார்களா?" தம்பி கேட்டான்.

"ஆமாம்! எனக்கும் உதவி தேவையாக இருக்கிறதல்லவா? இல்லத்தைப் பற்றி இவள் நன்றாக அறிவாள். அதனால் இவள் இருப்பது எனக்கு மிகவும் சௌகர்யமாக இருக்கிறது."

தம்பிக்கும் கார்த்திகாவுக்கும் உள்ள சச்சரவைப் பற்றி விஜயமோகன் ஏதும் அறியமாட்டான்.

தம்பியின் அந்தக் காலத்துச் சதியையும், கொலையையும், சொத்தை அபகரிக்கும் இதர விஷயங்களையும் விஜயமோகன் அறிந்திருந்தால் இப்படிப்பட்ட ஒரு அற்பனின் சகவாசமே தனக்கு வேண்டாம் என்று அப்போதே முடிவு கட்டியிருப்பான்.

"நாங்கள் புறப்படலாமா?" விஜயமோகன் இருக்கையை விட்டு எழுந்தான்.

அப்போது கார்த்திகாவும் உள்ளேயிருந்து வெளியே வந்தாள். அவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டு ஒன்றாக நடந்து போனபோது, தம்பியின் மனத்தில் வக்கிரமான எண்ணங்கள் தோன்றின.

இவர்கள் வந்து போனதற்கு என்ன அர்த்தம் என்றே அவனுக்குப் புரியவில்லை.

அவர்கள் சென்றபின் சந்திரிகா வெளியில் வந்தாள்.

"அண்ணா! அந்தப் பெண் யார்?" என்று கேட்டாள். அவள் யாரென்று இவன் எப்படி பதில் சொல்லுவான்?

"இந்த கார்த்திகாதான் அது" என்று சொல்ல முடியுமா? அப்படிச் சொல்லிவிட்டால் தொடர்ந்து பல கேள்விகளுக்கு அவன் பதில் சொல்ல வேண்டிவரும்.



அவள் கேள்விக்குப் பதில் சொல்லாமல், லேசாகச் சிரித்து வைத்தான்.

சந்திரிகா தொடர்ந்தாள்.

"அண்ணா! எனக்கு முதலில் அவளைப் பார்த்தவுடன் எழுமத்தூர் இல்லத்துத் தம்பிராட்டி கார்த்திகாவின் ஞாபகம்தான் வந்தது. உலகத்தில் ஒருவரைப் போல் மற்றவர் இருப்பதில்லையா? அப்படித்தான் இவர்களும் இருக்க வேண்டும் என்று என்னையே சமாதானம் செய்து கொண்டேன்."

"அப்படியும் இருக்கலாம்" என்றான் தம்பி.

"இவள் எப்படி அங்கே தங்க முடியும்?"

"தங்கினால் என்ன?"

"அவ்வளவு பெரிய வீட்டில் இவர்கள் இருவர் மட்டும் எப்படி அண்ணா தங்க முடியும்? அகால மரணம் அடைந்த கார்த்திகா இருந்த வீடல்லவா அது?"

"எல்லா இடத்திலும் ஏதாவது கோளாறு இருக்கத்தான் செய்யும். அதற்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் எல்லாம் சரியாகி விடும்" என்றான்.

ஓமனா குஞ்சம்மா இச்சமயத்தில் அங்கே வந்தாள். அவளுக்கும் ஏதோ சொல்ல வேண்டும் போல் இருந்தது.

"அண்ணி என்னமோ கேட்க விரும்புகிறாள்..."

"என்னது?" மனைவியைப் பார்த்தான் தம்பி...

"அந்தப் பெண்ணை இந்த வீட்டிலேயே நான் பார்த்திருக்கிறேன்" என்றாள். அவள் முகம் பயத்தால் வெளுத்திருந்தது.

"ஏய்! என்ன இது? இதெல்லாம் உன் மனத்தில் உள்ள கோளாறு என்றுதான் நினைக்கிறேன். உனக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் வீட்டில் ஏதாவது ஹோமம் நடத்திவிடலாம்" என்றான் தம்பி.

அதே சமயத்தில் சேகர உன்னித்தன் இன்று செய்யவேண்டிய வேலைகளைப் பற்றிக் கூறியது அவனுக்கு ஞாபகம் வந்தது. அவன் செய்ய வேண்டிய வேலைகளை இங்கேயே வைத்துச் செய்தால், ஓமனா குஞ்சம்மாவுக்குச் சொன்ன ஆறுதல் இதில் அடிபட்டுப் போய்விடும்!

மறுநாள் சூரியன் உதித்த பிறகு, ஒரு பிராமணன் அல்லாதவன் உடலைத் தூக்கிக் கார்த்திகாவின் கல்லறையின் மீது வைக்க முடிவாகி இருக்கிறதல்லவா? அதற்கான ஆகம கர்மங்களை இன்று இரவே செய்யலாம் என்று சேகர உன்னித்தன் சொல்லி இருந்தான் அல்லவா?

அதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் தம்பி தன் மனைவியிடம் தைரியமாக ஹோமத்தைப் பற்றிச் சொல்லிவிட்டான்.

இரவு சாப்பாடு முடிந்ததும் இரண்டு உன்னித்தன்களும், தம்பியின் இல்லத்திற்கு வந்தனர்.

தான் செய்ய வேண்டிய ஹோமத்திற்கு வேண்டிய வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான் சேகர உன்னித்தன்.

இதற்கிடையில்தான் கள்ளுக்கடையிலிருந்து தம்பியின் ஆட்கள் வேலையாள் பப்பனை நிறையக் குடிக்க வைத்து சுடுகாட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

என்னதான் குடித்திருந்தாலும் பப்பனுக்குத் தான் வேறு வழியில் போகிறோம் என்பது மட்டும் தெரிந்துவிட்டது.



"நாம் ஏன் இங்கே போகிறோம்?" என்று பப்பன் கேட்டான்.

"நம்முடைய சங்கர வாரியர் இறந்துவிட்டார் அல்லவா? அவரது உடலை இன்று இரவுதான் எரிக்க வேண்டும்" என்று அவர்களில் ஒருவன் சொன்னான்.

"அதென்ன இரவு நேரத்தில் எரிப்பது?" பப்பனுக்குச் சந்தேகம்.

"அவருக்குப் பெரிய அம்மை வந்ததல்லவா? அதனால்தானே இறந்தார். அவரை இரவில் எரிக்கச் சொல்லித்தான் தம்பி சொல்லி அனுப்பினார். இந்தக் காரியத்தை நாம் செய்துவிட்டால், இந்த வாரம் பூராவும் நமக்குச் சாராயம் இலவசம்."

இதைக் கேட்ட பப்பனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி...

அவர்கள் சொல்வதைக் கேட்கத் தயாரானான்.

நால்வரும் சிதையைத் தயார் செய்தார்கள். விறகு ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டது. சுற்றிலும் மண்ணெண்ணெய் ஊற்றி சிதையை ஈரப்படுத்தினார்கள். சிதை ரெடி. அதில் எரிய வேண்டிய நபர்?

"அய்யோ!" என்றொரு சப்தத்துடன் பப்பன் கீழே விழுந்தான்.

அவனை மற்ற மூவரும் எடுத்து சிதை மீது வைத்தனர். ஒரு அடி விழுந்தவுடன் அவன் இறந்திருக்க வேண்டும். அவன் மீது மண்ணெண்ணெய் தெளிக்கப்பட்டது. விறகுகள் ஒழுங்காக அடுக்கப்பட்டு, தீ மூட்டப்பட்டது. சில விநாடிகளில் தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

கையில் கொண்டு வந்திருந்த கள்ளை அவர்கள் மூவரும் குடித்து முடித்த வேளையில், உடல் எரியும் நாற்றம் வீசத் தொடங்கியது.

அதைக் கண்ட ஒருவன் வேகமாகத் தம்பியின் வீட்டிற்கு ஓடினான்.

"என்ன, காரியம் முடிந்ததா?" தம்பி கேட்டான்.

"எரிந்து கொண்டிருக்கிறது" என்று வந்தவன் சொல்ல, தம்பி உள்ளே வந்து சேகர உன்னித்தனிடம் விஷயத்தைச் சொன்னான்.

"பாதி எரிந்தவுடன் நெருப்பை அணைத்துவிடச் சொல்" என்ற பதில் கிடைத்தவுடன், தம்பி அதை வந்தவனிடம் சொல்லி அனுப்பினான்.

அவன் சுடுகாட்டை நோக்கி ஓடினான்.

தீயை அணைத்தார்கள்.

பாதி வெந்த பிணம் சிதையில் இருந்தது. தம்பியின் வீட்டில் இந்த ஹோமம் நடந்து கொண்டிருந்த அதேநேரத்தில், அங்கே இல்லத்தில் கார்த்திகா, விஜயமோகனின் மார்பில் தன் முகத்தைப் பதித்தவாறு படுத்திருந்தாள்.

"ஏன் இன்னும் தூக்கம் வரவில்லையா?" அவன் கேட்டான்.

"ஆமாம்! ஏனோ தெரியவில்லை. இன்று எனக்கு உடம்பு ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது" என்றாள்.

விஜயன் மார்பில் இருந்த முடியில் அவளது கைவிரல்கள் விளையாடிக் கொண்டு இருந்தன.

அவளது முதுகில் அவன் கை ஒன்று பதிந்திருக்க, இன்னொரு கை அவளது பின்புறத்தின் மீது விளையாடிக் கொண்டிருந்தது. ஆனால் அவளோ எந்தவிதமான உணர்ச்சிகளுக்கும் ஆளாகாமல் இருந்தாள்.

"கனவு காண்கிறாயா?" அவன் கேட்க...



"இல்லை. கண்களில் ஏதோ இருள் சூழ்வது போலத் தெரிகிறது" என்று சொல்லிக் கொண்டே எழுந்த அவள், அவன் முகத்தைப் பார்த்தாள்.

கோல் விளக்கின் பிரகாசம் அவளது முகத்தில் விழுந்தது.

முகத்தின் ஒரு பக்கம் இருளாகவும் மறு பக்கம் வெளிச்சமாகவும் இருந்தது.

ஒரு கோணத்தில் இருந்த வெளிச்சத்தில் அவளது மார்பகங்களின் நிழல் அவளது கையில் விழுந்தது.

"ஒரு வேலை செய். நாளை நீ இங்கிருந்து போக வேண்டாம். இங்கேயே தங்கிவிடு" என்று அவன் சொல்ல,

அவள் அதைப் பற்றி யோசித்தாள்...

ஆனால் அவள் பகல் நேரத்தில் விழித்திருக்க முடியாதே!

அதே சமயத்தில் அவன் அழைத்தால் கூட அவளால் எழுந்து வரமுடியாதே!

தன்னைப்பற்றி அவனுக்கு ஏதோ சில சந்தேகங்கள் தோன்றி இருக்கின்றன என்பதை அவள் அறிவாள். தான் ஒரு பிரம்மராட்சஸ் என்பதை அவன் நிச்சயம் தெரிந்து கொண்டிருக்க முடியாது. பழி வாங்கும் பொருட்டு தான் இப்படி அலைந்து கொண்டிருப்பதையும் அவன் அறியமாட்டான். அந்த எண்ணத்தின் பூர்த்திக்கு அவளுக்கு ஒரு உதவி தேவைப்படுகிறது. அதிர்ஷ்டவசத்தினால் அவளுக்கு உதவ இப்படி ஒரு நபர் கிடைத்திருக்கிறான்.

வாசுதேவன் தம்பியை திடீரென்று கொன்றால் அது நன்றாக இருக்காது.

அவனைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பழிவாங்க வேண்டும் என்பது அவள் முன்பே தீர்மானம் செய்து வைத்திருந்த விஷயமாயிற்றே...

"விடிவதற்கு முன்பு நீ போக வேண்டுமல்லவா? அப்படி எங்கே போகிறாய்? அதை நான் தெரிந்து கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன்" என்றான் விஜயமோகன்.

"வேண்டாம்! நீங்கள் தற்சமயம் அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது மிகவும் நல்லது. நமக்கிடையே சில இரகசியங்கள் இருப்பது நல்லது என்றே நான் நினைக்கிறேன்... என்ன சரிதானே?"

"அப்படியே இருக்கட்டும். ஆனால் கார்த்திகா, ஒரு பெண் என்பதால், நான் அந்த இரகசியத்தைத் தெரிந்து வைப்பது நல்லது என்று நினைக்கிறேன்."

"சமயம் வரும்போது நானே அதை உங்களிடம் சொல்கிறேன்" என்று கூறிய அவள் அவனை முத்தமிட்டாள். அவள் உடம்பில் வீசிய மல்லிகை மணம், அவன் உடம்பிலும் ஒட்டிக் கொண்டது.

சேவல் கூவுவதற்கு முன்பே அவள் விழித்துக் கொண்டுவிட்டாள். அப்போது விஜயன் நன்றாகத் தூங்கிக் கொண்டு இருந்தான். கார்த்திகா வெளியில் வந்து குளத்தின் அருகே நின்றாள்.

தன்னைச் சுற்றிலும் ஒரு தடவை பார்த்தாள். யாரும் இல்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு தனது கருங்கல் கல்லறைக்கு நடந்தாள். பிறகு உள்ளே இறங்கி மறைந்தாள்!

"அதோ அங்கே யாரோ நடப்பதுபோல் தெரியவில்லை" என்று சேகர உன்னித்தன் கேட்டான்!

தம்பி 'ஆம்' என்றான்.



பப்பனின் எரிந்த உடலைப் பாயில் சுற்றி வைத்து சுமந்து கொண்டிருந்த தமபியின் ஆட்களும் அங்கே இருந்தார்கள்.

"அப்படியென்றால் நாம் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் இன்றுடன் முடிவு ஏற்பட்டுவிட்டது என்று அர்த்தம். நமக்கு வெற்றி கிட்டியிருக்கிறது" என்று வாசுதேவன் தம்பி சொன்னான்.

இத்தனை நாளும் தன்னைச் சுற்றித் தொல்லை கொடுத்த கார்த்திகா என்கிற பிரம்மராட்சஸ் இன்றுடன் தொலைந்தாள் என்று அவன் சந்தோஷப்பட்டுக் கொண்டான். எல்லாமே சரியாகிவிட்டது என்பதன் அடையாளமாக இன்று அவளையும் பார்த்தாகிவிட்டது. அது நல்ல சகுனம்!

சேகர உன்னித்தனும் தம்பியும் கருங்கல் கல்லறையின் அருகில் சென்று நின்றனர்.

உன்னித்தன் அவர்களுக்கு மிகவும் பின்னால் இருந்தான். பிணத்தைத் தூக்கிக் கொண்டு வந்த ஆட்களைப் பார்த்து அழைத்து வர வேண்டியிருந்தது. பிரகாசமான வெளிச்சம் இல்லாத நேரம் – சுற்றுப் புறமும் நன்றாகத் தெரியவில்லை. பிணத்தைத் தூக்கிக் கொண்டு அவர்கள் முன்னே செல்ல பத்தடி தள்ளி உன்னித்தன் மெதுவாக குளத்தின் அருகில் வந்தான். முதலில் அவர்களுடன் இவன் நடந்தபோது, பிணத்தைத் தூக்கியவன் ஒருவனைத் தொட்டுவிட்டான். அதனால் குளத்தில் தன் கை கால்களைக் கழுவிக் கொள்ளலாம் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் மெதுவாகப் படிக்கட்டு வழியாக இறங்கினான். குளத்தில் மெதுவாகக் காலை வைத்தான்.

அந்தச் சமயத்தில் குளத்தின் மையத்திலிருந்து ஒரு உருவம் திடீரென எழுந்து, இடுப்பளவு தண்ணீரில் நின்றது.

அதனால் பயந்து, நடுங்கிவிட்ட உன்னித்தன் தன் எதிரில் இருந்த சாவித்திரியைப் பார்த்தான்.

"குளிக்க வேண்டுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்ட அவள், அவன் பக்கம் தன் கையை நீட்டினாள். அந்தக் கை அவனை நோக்கி நீண்டு வந்ததுபோல் அவனுக்குத் தோன்றியது.

"அய்யோ!" என்ற கூச்சலுடன் அவன் திரும்பி வேகமாகப் படிகள் மீது ஏறிக் குளத்தின் அருகில் வந்து நின்று கொண்டான்.

அவன் போட்ட சப்தத்தைக் கேட்ட அவர்கள் அவன் பக்கமாகத் திரும்பினார்கள்.

"என்ன ஆயிற்று?" தம்பி கேட்டான்.

"குளத்தில் யாரோ நிற்கிறார்கள்!" என்று சொன்னானே தவிர, அவள் சாவித்திரி என்று அவன் சொல்லவில்லை. மற்றவர்களுக்கு அந்தப் பெயர் தெரியவேண்டாம் என்று அவன் நினைத்தான்.

"உன் கண்களுக்கு அப்படித் தோன்றி இருக்கும்" என்று தம்பி அவனுக்குச் சமாதானம் சொன்னான்.

"சீக்கிரம்... சீக்கிரம்... அந்த இடம் எங்கே?" என்று சேகர உன்னித்தன் கேட்டான்.

"இதோ இங்கேதான்!" என்று தம்பி தங்களுக்குச் சற்று அருகில் இருந்த அந்தக் கருங்கல் கல்லறையைக் காட்டினான்.

"அந்தப் பிணத்தைக் கொண்டு வந்து இங்கே கிடத்துங்கள்" என்று சேகர உன்னித்தன் சொல்ல, பிணத்தைத் தூக்கி வந்த அவர்கள் அதை, அந்தக் கறுப்புக் கல்பெட்டியின் மீது வைத்தார்கள். பிறகு பாயை எடுத்து விட்டார்கள். உடனே அங்கே துர்நாற்றம் வீசத் தொடங்கியது.

"வாருங்கள். இந்த இடத்தில் நாம் யாரும் நிற்கவேண்டாம்" என்று மாந்திரீகன் சொல்ல எல்லாரும் வேகமாக அங்கிருந்து



புறப்பட்டு விட்டார்கள். கீழ்வானம் வெளுத்திருந்ததே தவிர சூரியன் உதிக்கவில்லை.

விஜயமோகன் நீண்ட நேரம் கழித்து எழுந்தான். காப்பியைக் குடித்தபிறகு நேரே குளிக்கப் போனான். அவன் ஆற்றில் குளித்து விட்டு வரும்போது வழியில் இருந்த டீக்கடையில் நுழைந்தான்.

"நீங்கள் வருவீர்கள் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன்" என்று டீக்கடை முதலாளி கட்டியம் கூற விஜயமோகன் ஒரு பக்கமாக அமர்ந்தான். அமர்ந்தவன் நிதானமாகத் தனது காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு தன் வீட்டிற்குத் திரும்பினான்.

அவன் திரும்பி வருவதற்காகவே காத்திருந்தவள் போல் சாவித்திரி வாயிலிலேயே நின்று கொண்டிருந்தாள்.

"உங்களுக்கு ஆகாரம் இங்கே வேண்டாம் என்று முடிவுகட்டி விட்டீர்களா?" சற்றுக் கோபமாகக் கேட்டாள் அவள்.

"அப்படி ஒன்றும் இல்லை சாவித்திரி! உங்களால் எப்போதும் எனக்குச் சமைத்துப் போட முடியுமா? அதனால்தான் அவ்வப்போது ஒட்டலிலும் கணக்கு வைத்துப் பழகிக் கொள்கிறேன்" என்றான். இதைக் கேட்டவுடன் சாவித்திரி வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

"அப்படியென்றால் மத்தியான சாப்பாடு?" என்று அவள் மெதுவாகக் கேட்க...

"அது இங்கேதான். சாவித்திரி, நீ உன் வீட்டிற்குப் போகிறாய்? இங்கேயே இருந்துவிடுவது தானே? இங்கு யாராவது ஒருவர் எப்போதும் இருந்துதானே ஆக வேண்டும்? அதுதான் நல்லது! நீ இங்கே இருப்பதைப் பற்றி எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை."

"தம்பிராட்டியின் பிடிவாதத்தினால்தான் நான் இங்கு இருக்கிறேன். யாராவது ஒருவர் இருந்தால் போதும் என்பதால், எங்களில் ஒருவர் இங்கே இருந்து கொண்டுதானே இருக்கிறோம். நீங்கள் சொல்வதுபோல் நான் இங்கேயே இருக்கிறேன்."

"நான் இங்கே இருக்கும்வரை நீயும் இங்கே இருக்க வேண்டும். நான் போகச் சொல்லும்போது போனால் போதும்" என்றான்.

"சரி."

"உம்... இந்தப் பெண் கார்த்திகா பகலில் எங்கே போகிறாள்?" மெதுவாக விஜயன் அவளிடம் கேட்டான்.

"ஏன் நீங்களே அதை அவளிடம் கேட்கக் கூடாது?"

"இன்று கேட்டுவிடுகிறேன்" என்றான் தீர்மானமாக...

அன்று பகல் பூராவும் வாசுதேவன் தம்பி வீட்டில் குடியும் விருந்தும் ஒரே கூத்துமாக இருந்தது. அது நிற்கவே இல்லை. தொடர்ந்து நடந்தது. தன் விரோதி அழிந்து- போய்விட்டதாகக் கருதி தம்பி குதூகலித்தான். நன்றாகக் குடித்தான். உன்னித்தனும் அதே அளவு சந்தோஷமாக இருந்தான். சந்திரிகாவும் அடிக்கடி அவன் எதிரில் தோன்றி உற்சாகப் பார்வை வீச அவன் குடி அதிகமாகியது. அன்று இரவு தான் அங்கேயே படுக்கப் போவதாக அவளிடம் சமிக்ஞை மூலம் தெரிவித்தான். இரவு நேரம் வரை நீடித்த பார்ட்டி ஒரு வழியாக முடிந்தது. சந்திரிகாவும் ஓமனாவும் தங்கள் பங்கிற்கு மிகவும் கொஞ்சமாக மது அருந்தி இருந்தனர். எதற்காக இவ்வளவு மகிழ்ச்சி என்று தெரியாவிட்டாலும் எல்லாருடனும் அவர்களும் மகிழ்ச்சியாக இருக்க விரும்பிக் கலந்து கொண்டனர்.

"இன்று என் பிறந்த தினம்... அதாவது நான் புனர்ஜென்மம் எடுத்த தினம்..." என்று தம்பி, விசேஷம் என்ன என்று



கேட்டவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான்! எல்லாருக்கும் அவன்தான் தன் கையால் மதுபானத் தம்ளரை எடுத்துக் கொடுத்தான். முதல் தம்ளரை எடுத்து, முதலில் தன் மனைவி ஓமனாவிடம்தான் கொடுத்தான்.

"இந்த ஒரு தம்ளரோடு உன் குடியை முடித்துக் கொள்" என்று அவன் அவளுக்கு அறிவுரை வழங்கினான். தொடர்ந்து சந்திரிகாவுக்கும், மற்றவர்களுக்கும் கொடுத்தான்.

தம்ளரைத் தன் கையில் வாங்கிய ஓமனா... "நீங்கள் நீடுழி வாழ்க!" என்று சொல்லிய பிறகு தம்ளரைக் காலி செய்தாள்.

சேகர உன்னித்தன் அங்கிருந்து போய் வெகு நேரமாகிவிட்டது.

சந்திரிகாவையே பார்த்துக் கொண்டிருந்த உன்னித்தன், குடி அதிகமாகி விட்டதைப் போல் வராந்தாவில் மல்லாந்து கிடந்தான்... நடித்தான். அதைக் கண்ட சந்திரிகா தன்னுள் சிரித்துக் கொண்டே உள்ளே போனாள்.

வாசுதேவன் தம்பி வராந்தாவில் இருந்த நாற்காலியில் படுத்துத் தூங்கிவிட்டான்.

ஓமனா வந்து அவனைப் பல தடவை அழைத்துப் பார்த்து, பிறகு மெதுவாக தட்டி எழுப்பினாள். அவன் முக்கி முனகியபடியும், அதிகமாக உளறியபடியும் எழுந்து அவள் தோளில் சாய்ந்தவாறு படுக்கை அறைக்குப் போனான்.

தம்பி உள்ளே போனவுடன் உன்னித்தன் அதற்காகவே காத்திருந்தவன் போல திடீரென எழுந்து கொண்டான்.

கனைத்துக் கொண்டே அவன் சாவடியின் பக்கம் போனான். வாயிலருகில் நின்று இரண்டு தடவை கனைத்துவிட்டு அறைக்குள் போனான்.

கதவைத் தாழ்போடாமல் வெறுமனே மூடிவைத்தான். படுக்கையில் விழுந்தவாறு மல்லாந்து கிடந்தான். எப்பக்கமாவது சப்தம் கேட்கிறதா என்று காதுகள் கூர்மையாகக் கவனித்துக் கொண்டு இருந்தன. இருந்தாலும், மது போதையில் அவன் அப்படியே தூங்கிப் போய்விட்டான்.

திடீரென தன் உடம்பில் ஏதோ ஸ்பரிசம்பட அவன் விழித்தான். தன் அருகில் யாரோ இருக்கிறார்கள். அது நிச்சயமாக சந்திரிகாவாகத்தான் இருக்க முடியும்!

"என்ன தூங்கியாகிவிட்டதா?" காதில் மதுரமான குரல்.

"உம்" என்றான்.

"நான் வருவேனென்று தெரியாதா? இல்லை மறந்தாகி விட்டதா?"

"எப்படி மறக்கும்?"

அவன் கன்னத்தில் தன் முகத்தை வைத்து இறுகத் தழுவினாள், முத்தமிட்டாள்.

அவள்மீது மல்லிகை வாடை வீசியது.

தழுவல் இறுகியது. விலா எலும்புகள் உடைவது போல நெருங்கி அணைத்தாள்.

உன்னித்தனுக்கு மூச்சு விட முடியவில்லை.

"சந்திரிகா... என்ன இது?" என்று கேட்டுக்கொண்டே அவள் பிடியிலிருந்து விலக முயன்றான்.

"என்ன வலிக்கிறதா?" அவள் கேட்டாள்.

"ஆமாம்!"



"வலித்தால் என்ன? அணைப்பது நானல்லவா?" என்று அவள் அவனை மேலும் இறுக்கினாள். கைகளுக்குச் சக்தி மேலும் அதிகமாகிவிட்டது போலத் தோன்றியது.

நல்ல பலசாலியான உன்னித்தனுக்கு மீண்டும் மூச்சு முட்டியது.

அவனை இறுக அணைத்திருந்த அவளது தலைமுடி அவன் கைகளில் சிக்கியது.

அதைத் தடவிப் பார்த்தான்.

பனங்குலை போன்ற தலைமுடி... அடர்த்தியாக இருந்த முடி. இதைப் போன்ற முடி சந்திரிகாவுக்கு இல்லையே இல்லையே. அவளது முத்தமும் வித்தியாசமாக இருந்ததும் அவனுக்கு இப்போதுதான் தெரிந்தது.

இது வேறு யாராக இருக்கும். ஓமன குஞ்சம்மாவோ?

வாசுதேவன் தம்பி குடிவெறியில் படுத்திருந்ததால், அவள் இங்கே அவனைத் தேடி வந்து விட்டாளோ? சில நேரத்தில் ஓமனா தன்னைக் கவனிப்பதையும் அவன் பார்த்திருக்கிறான். அவளாகத் தான் இருக்க வேண்டும். இருள் நிறைந்திருந்ததால் சட்டென்று ஏதும் புலப்படவில்லை.

"ஓமன குஞ்சம்மாவா நீ?" என்று கேட்டான்.

"இல்லை. நான் வாசந்தி... இப்போது என்னைத் தெரிகிறதா?" என்று கூறியவாறே அவள் அவனை மேலும் நெரித்தாள்.

உன்னித்தன் கத்த முயன்றான். ஆனால் முடியவில்லை. அவளது கைவிரல்கள் அவனது கழுத்தைச் சுற்றி வளைத்தன. விரல்கள் நீண்டுகொண்டே போவதைப் போல் இருந்தன.

கழுத்து நெரிக்கப்பட்டதால் கண்கள் பிதுங்கி வெளியே வர, வாய் இரத்தம் சிந்தியது. அவனாலே பேசவே முடியவில்லை.

"அன்று இரவு நீங்கள் இருவரும் ஒட்டலில் வைத்து என்னைப் படாது பாடு படுத்தினீர்களே... மறந்துவிட்டீர்களா?" அவள் கேட்டது அவன் காதில் விழவே இல்லை. அவன் உடல் துவண்டு அடங்கியது. இறந்தான்.

சாவடியில் இருந்து வெளியே வந்த ஒரு பெண் உருவம் வாயில் வழியாக வெளியேறி இருளில் மறைந்தது.

அந்த இரவு கார்த்திகாவுக்காகக் காத்திருந்த விஜயமோகன் ஏமாந்து விட்டான். அவள் அன்று வரவே இல்லை. எரிந்து கொண்டிருந்த விளக்கு, மங்கும்போதெல்லாம் எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருந்தான். அவள் வரவே இல்லை.

ஏன் அவள் வரவில்லை? அவளுக்கு என்னவாயிற்று? அவன் யோசித்தான். தனிமை அவனை வாட்டியது. அந்தக் கிராமத்தில் அவன் காலடி வைத்தது முதல் அவன் கூடவே இருந்தாள் அவள்! பகல் நேரத்தில் இல்லையென்றாலும், இரவு பூராவும் அவனுடன் இருந்தாள். ஒரு ஆண் தன்னை மறக்காமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அவள் செய்தாள்.

அவளுடன் எத்தனை இரவுகளைக் கழித்தாலும் அவனுக்குச் சலிப்பே ஏற்படவில்லை. அவளுடன் இருந்தால், அவனுக்கு உடலில் அதிக பலம் வருவது போன்ற உணர்வு! அவள் இல்லாத இந்த இரவை அவன் எப்படிக் கழிக்க முடியும்? அவனுக்கு மனத்தில் வேறு எந்த விதமான யோசனையும் ஓடவில்லை.

அவள் வராதிருக்க எந்த ஒரு நியாயமும் இல்லை. இப்படியே பொழுது கழிந்தபோது ஜாமக்கோழி கூவியது. படித்துக் கொண்டிருந்த கிரந்தத்தைச் சுருட்டிக் கட்டி வைத்தான். விளக்கைச் சிறிதாக்கினான். அவள் இல்லாத அந்தப் படுக்கையை ஒரு தடவை பார்த்தான். பெருமூச்சு வந்தது. இருந்தாலும் அதில் படுத்தான். தூக்கமே வரவில்லை. அப்படி வந்தாலும் அடிக்கடி விழிப்புக் கொடுத்தது.



கோழி காலையில் கூவியது. இதுநாள் வரையிலும் அவன் இந்தச் சப்தத்தைக் கேட்டதே யில்லை. இன்று கேட்டான். எழுந்தான். குளிக்கப் போனான். திரும்பி வரும்போது தன் இல்லத்துக் குளத்துப் பக்கமாகவே வந்தான். அப்பக்கம் வரும்போது ஒரு கெட்ட நாற்றம் அவன் மூக்கைத் துளைத்தது.

"என்ன இது?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட அவன் அந்த நாற்றம் அவனைப் பின்தொடர்வதைப் போல் உணர்ந்தான்.

இல்லத்திற்குப் பின் இருந்த காட்டுப் பிரதேசத்தில் ஏதாவது பிராணிகள் செத்துக் கிடக்கலாம்; அதனால் இந்த வாசனை வருகிறது என்று அவன் முடிவு செய்து கொண்டான். விஜயமோகன் அந்தக் காட்டுப்பகுதிப் பக்கம் போனதே இல்லை.

"என்ன திருமேனி காலையில் எழுந்துவிட்டீர்களா?" என்று சாவித்திரி அவனைப் பார்த்தவுடன் கேட்டாள்.

கேட்டவளை விஜயமோகன் உற்றுப் பார்த்தான். அவன் கண்களுக்குப் பளிச்செனத் தெரிந்தது அவளது ரவிக்கையில் தென்பட்ட ரத்தக்கறைதான்!

அவன் அதைப் பார்த்துவிட்டான் என்பதை அறிந்த சாவித்திரி உள்ளே போய்விட்டாள்.

இவளிடமும் ஏதோ குழப்பம் இருக்கிறது என்று விஜயமோகன் நினைத்தான். எல்லாமே சேர்ந்த ஒரு சந்தேகம் அவன் மனத்தில். தான இங்கே வந்தபிறகு ஏராளமான அற்புதங்கள் நடக்கின்றன.

ஒரு கோணத்தில் பார்த்தால் கார்த்திகாவும் ஓர் அற்புதமே!

அவன் டீக்கடைக்குப் போகும்போது மணி ஒன்பது. வழக்கத்திற்கு மாறாக அங்கே நிறைய மக்கள் தென்பட்டார்கள். ரஸ்தாக்கள் சந்திக்கும் இடங்களில் எல்லாம் கும்பல் கும்பலாக

மக்கள் நின்று பேசிக் கொண்டிருந்தனர். மெதுவான குரலில் அவர்கள் இரகசியம் பேசிக்கொண்டிருந்தது போலத் தெரிந்தது. தன்னையும் சிலர் விசித்திரமாகவும், பயமாகவும் பார்ப்பதைப் போல் அவனுக்குத் தெரிந்தது. அவன் ஓட்டலுக்குள் நுழைந்தவுடன், அங்கே அமர்ந்திருந்தவர்கள் மரியாதை தெரிவிக்கும் பொருட்டு எழுந்தனர். அவன் அமர்ந்த பிறகே எல்லாரும் அமர்ந்தனர்.

ஓட்டல் முதலாளி அவனுக்கு ஆகாரம் கொண்டு வந்து வைத்தான்.

அருகில் இருந்த ஒருவனிடம், "என்ன... எப்போதும் இல்லாத வகையில் இன்று என்ன இங்கே கூட்டம்?" என்று விஜயமோகன் கேட்டான்.

அவன் இதற்குப் பதில் சொல்லாமல் மற்றவர்களைப் பார்த்தான்.

"ஏன் பதில் பேசமாட்டேன் என்கிறீர்கள்? என்ன விஷயம்? ஏன் எல்லாரும் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" விஜயமோகன் கேட்க, "நான் சொல்கிறேன்" என்று ஓட்டல் முதலாளியே வாயைத் திறந்தான்.

"வாசுதேவன் தம்பி வீட்டில் ஒரு மரணம். இறந்தவன் அவன் சிநேகிதன் உன்னித்தன். இது சாதாரண மரணமன்று!"

"அப்படி ஒரு மரணம் இருக்கிறதா?"

"ராட்சஸின் வேலை என்றால் அப்படித்தான் இருக்கும்."

"இருக்கலாம்! இதைச் சொன்னது யார்?"

"இது முதல் தடவை இல்லை தம்பிரானே! இதைப் போன்று ஏற்கெனவே இரண்டு மரணம் நடந்திருக்கிறது. அப்போது யாரும் இதை நம்பி முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இறந்ததை



இரகசியமாக்கி விட்டார்கள். இதை மூடிமறைக்க முடியவில்லை. ஏனெனில் இது வாசுதேவன் தம்பி வீட்டில் நடந்திருக்கிறது."

"இந்தக் கொலைக்குக் காரணம் ராட்சஸ்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"உடலில் இருந்த இரத்தம் பூராவும் வற்றிவிட்டது. அவனைக் கொன்ற பேய் அவன் இரத்தத்தைப் பூராவும் உறிஞ்சிக் குடித்திருக்க வேண்டும். உங்களிடம் ஓர் இரகசியம் சொல்கிறேன்" என்றான் ஓட்டல் முதலாளி.

"என்னிடத்தில் எந்தவிதமான இரகசியமும் இல்லை. பலமாகவே பேசலாம். சொல்லுங்கள்" என்றான் விஜயமோகன்.

இருந்தாலும் ஓட்டல் முதலாளி சுற்றும் முற்றும் பார்த்தபடி பேசினான்—

"அப்படியென்றால் சொல்கிறேன். கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் தங்கியிருக்கும் எழமந்தூர் இல்லத்திலும் இந்த ராட்சஸ்கள் இருக்கிறார்கள் என்று எல்லாரும் நம்புகிறார்கள். அதனால்தான் இவர்கள் உங்களைச் சந்தேகத்தோடு பார்க்கிறார்கள்" என்று ஓட்டல் முதலாளி சொல்லி முடித்தான்.

விஜயமோகனுக்குச் சட்டென்று சாவித்திரியின் நினைவு வந்தது. சாப்பிட்டு முடிந்தவுடன் எழுந்து வேகமாக இல்லத்திற்கு வந்தான். "சாவித்திரி!" என்று சப்தத்தோடு அதிகாரத்தொனியில் அவளை அழைத்தான் விஜயமோகன்.

## அத்தியாயம் - 10

விஜயமோகன் அழைத்தவுடன் சாவித்திரி வந்தாள்.

அவளை உச்சி முதல் உள்ளங்கால் வரை நிதானமாகப் பார்த்தான். முகம், கண்கள், உதடுகள், ரவிக்கை முதலிய யாவும் அவன் பார்வைக்குத் தப்பவில்லை! ரவிக்கையில் முன்னே பார்த்த இரத்தக்கறை.

"என்ன இது?" அதைக் காட்டியே கேட்டான்.

"இரத்தம்!" என்று சலனமில்லாமல் அவள் பதில் சொன்னாள்.

"அப்போது நான் சந்தேகப்பட்டது சரிதானா?" என விஜயன் அவளிடம் கேட்க,

"என்ன உங்கள் சந்தேகம்?" என்று அதையும் மிகவும் சாதாரணமாகத்தான் அவள் கேட்டாள்.

"இரத்தம் குடிக்கும் நபர்கள் இங்கே தங்கி இருக்கிறார்கள் என்பது!"

"யார் சொன்னது அப்படி?"

"டீக்கடையில் பேசிக்கொண்டார்கள். உன்னித்தனைக் கொன்றதுகூட ஒரு ரத்தவெறி பிடித்த ராட்சஸி என்றுதான் சொன்னார்கள்!"

"ஓ! அதுவா விஷயம்? திருமேனி இதை நம்பிவிட்டீர்களா? கிரந்தத்தைப் படித்தபிறகு உங்களுக்கு எல்லாமே பிசாசுகளாகத் தெரிகிறார்கள் போலிருக்கிறது. அப்படித்தானே? இந்த ரவிக்கையில் காணும் இரத்தம் என் மார்பில் முள் குத்தியதால் ஏற்பட்டது"



"எப்படி மார்பில் முள் குத்தும்? வியப்பாக இருக்கிறதே!"

"இரவு நான் குளிக்க குளத்தில் இறங்கினேன். குளத்தில் அடியில் ஏதோ இருக்கிறதென்று குனிந்து பார்த்தேன். செடிதான் என் காலைச் சுற்றி இருந்தது. அதைத் தவிர்க்க ஒரு ஓரமாக வந்தபோது கரையோரம் நீண்டிருந்த முள் மார்பில் குத்திவிட்டது. உங்களுக்குச் சந்தேகம் என்றால் வாருங்கள் முள்ளைக் காட்டுகிறேன்."

அவள் ரவிக்கையின் கொக்கிகளை அவிழ்க்க ஆரம்பித்தாள். இளமையின் துடிப்புகள் தெரிய ஆரம்பித்தபோது...

"வேண்டாம், வேண்டாம், அதை நான் பார்க்க வேண்டாம்." அவன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"திருமேனிக்குத் தெரியுமா, இங்கே இருப்பவர்கள் எல்லாம் வாசுதேவன் தம்பியின் ஆட்கள்! நீங்கள் இந்த இல்லத்தை வாங்கியவுடன் இன்னமும் இடிக்காமல் வைத்திருக்கிறீர்கள் என்பதுதான் இங்கே இருப்பவர்களுக்குப் பிடிக்காத விஷயம்!"

"இல்லத்தை இடிப்பதும் இடிக்காததும் என் விருப்பம். இதை நானல்லவா முடிவு செய்ய வேண்டும்?"

"இல்லத்தை வாங்கியவுடன், நீங்கள் அதை இடித்துவிட்டு வேறு வீடு கட்டுவீர்கள் என்றுதான் அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

விஜயமோகன் திடீரென விஷயத்தை மாற்றினான். "உன்னித்தன் எப்படி இறந்தான்?"

"யார் அந்த உன்னித்தன்? எனக்கு அப்படி யாரையும் தெரியாது."

"சரி, உள்ளே போ!" விஜயமோகன் தன் படுக்கை அறைக்குப் போனான். தலையணை மீது தலைவைத்துப் படுத்தான். 'இன்று இரவாவது அவள் வருவாளா? கட்டாயம் வருவாள்!' அவனே கேள்வி கேட்டு அவனே பதில் பெற்றான்.

உன்னித்தனின் மறைவினால் வாசுதேவனின் பயம் இரண்டு மடங்காகப் பெருகியது. எல்லாமே முடிந்துவிட்டது என்று அவன் தன்னைத் திருப்திப்படுத்திக் கொண்டிருந்த இந்த வேளையில் இப்படி ஒரு பயங்கரமா?

கார்த்திகாவின் கல்லறையின் மீது பாதி எரிந்த மனித மாமிசத்தை வைத்தபிறகு, அவள் நிச்சயம் எழமாட்டாள் என்றல்லவா முடிவு கட்டியிருந்தான்?

அவள் வந்திருக்க முடியாது என்றால் இவனைக் கொன்றது யார்? அது நிச்சயம் வாசந்தியாகத்தான் இருக்க வேண்டும். எழமத்தூர் இல்லத்தில் வாசந்தியைப் பார்த்ததாக உன்னித்தன் சொன்னானே? அங்கே அவள் இருந்தால், இது அவள் காரியமோ? தன்மீதும் அவளுக்குப் பகை இருக்கிறதே!

இந்த நேரத்தில் தனக்கு யோசனை சொல்ல யாருமே இல்லை என்றும் அவன் நினைத்தான்! எது எப்படி என்றாலும் மாந்திரீகன் உன்னித்தனை அழைத்து சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள அவன் தீர்மானித்தான்.

இன்னொரு சந்தேகமும் அவன் மனதில், எழமத்தூர் இல்லத்தை வாங்கியுள்ள விஜயமோகன் சாதாரண ஆள் இல்லை என்பதையும் அவன் அறிவான். இல்லையென்றால் அவ்வளவு சக்திவாய்ந்த பிரம்மராட்சஸியான கார்த்திகாவைக் கூட்டிக்கொண்டு வரமுடியுமா? கணவனும், மனைவியும் போலல்லவா அவர்கள் நடந்து கொண்டார்கள்? அதனால் அவள் தான் அவனிடம் எல்லா விஷயங்களையும் சொல்லி இருக்க வேண்டும்.

பத்திரத்தில் அவள் கையெழுத்துப் போட்ட மாயத்தை அவன் அன்றே கேட்டானே? இப்போது அதுவும் தெரிந்திருக்கும்.



காரியஸ்தனை அனுப்பி மந்திரவாதியை வரவழைத்தான். அவனும் வந்தான். தன் நண்பன் உன்னித்தன் இறந்த மர்மத்தைக் குறித்து அவன் பேசினான். அவன் இறந்ததற்கு விஜயமோகன் ஒருவேளை காரணமாக இருக்கலாம் என்று தான் சந்தேகப்படுவதாகவும் தம்பிசேகர உன்னித்தனிடம் சொன்னான்.

"அப்படியென்றால் அந்த நபரை நிச்சயம் கண்காணிக்க வேண்டும்! அவன் ஏதாவது மந்திரம் படித்திருக்கலாம்" என்று சேகரன் சொல்ல, தம்பி மேலும் பயந்தான். இனி ஏதாவது ஒரு காரணத்தினால் கார்த்திகா அந்தக் கல்லறையைவிட்டு வெளியே வந்தால், முதலில் அவள் தன்னைத்தான் கொல்வாள் என்பதும் தம்பிக்குத் தெரியும்! ஏனெனில் மீதமிருப்பது அவன் மட்டுந்தானே? எந்த ரூபத்தில் வந்து அவள் பழி வாங்கப் போகிறாளோ? பயத்தோடு அவன் யோசித்தான்!

"இப்போது நாம் என்ன செய்யலாம்?"

மாந்திரீகன் சில விநாடிகள் யோசித்தான். பிறகு திடீரென்று "தெரிகிறது நன்றாகத் தெரிகிறது. இப்போது இருப்பது ஒரே வழிதான்!" என்றான்.

தம்பிக்கு வழி இருக்கிறது என்று கேட்கும்போதே மகிழ்ச்சியாக இருந்தது. அந்த ஒரே வழி என்னவென்று தெரிந்துகொள்ள அவன் மிகவும் ஆவலாக இருந்தான்!

"விஜயமோகனைப் பொறுத்தவரை இதுவரை நமக்குத் தெரிந்த விஷயங்களைக் கொண்டு கணித்துப் பார்த்தால், அவன் ஒரு சாதாரண ஆள் இல்லை என்றே தோன்றுகிறது. வீட்டில் உள்ளவர்களை வெளியே அனுப்பிவிட்டு, அவனை முடிப்பது மிகவும் கஷ்டம். நாம் ஏதாவது கெடுதல் செய்தோம் என்றால், அவனுக்கு அதை எதிர்க்கும் சக்தியும் இருக்கிறது. மேலும் இந்த விஷயங்களைக் கிராமத்து மக்கள் அறிந்தால் மிகவும் அவமானம்!"

"ஆமாம்! நீங்கள் சொல்வது சரிதான். பிறகு இதற்கு என்ன வழி இருக்கிறது?" என்று தம்பி கேட்க, சேகர உன்னித்தன் மீண்டும் யோசனையில் மூழ்கிவிட்டான். தனது ஒற்றைக் கண்ணை அடிக்கடி மூடி மூடித் திறந்தான். கடைசியில் அவன் சொன்னான். "நேற்று இரவு கார்த்திகா, அவனது அறைக்குப் போகவே இல்லை. விஜயமோகன் காத்திருந்து பார்த்திருப்பான். இன்று இரவு வேண்டுமானால் அவள் போகட்டும்."

"என்ன நீங்கள் சொல்வது? நாம் செய்த காரியம் யாவும் வியர்த்தமாகிவிட்டதா?" என்று கோபத்தோடு கேட்டுக்கொண்டு அவன் எழுந்தான்.

"அட உட்காரப்பா! நான் வீண் வேலை செய்யவா இங்கே வந்தேன்."

"பின் ஏன் இந்த விபரீத யோசனை?"

"அவசரப்படாதே! இன்று இரவு கார்த்திகா அந்தர்ஜனத்தைப் போல் உள்ள ஒரு பெண்ணை நான் விஜயமோகனிடம் அனுப்புகிறேன். அதற்கான பூஜைகளை இங்கேயே செய்யலாம்!" என்று சேகரன் சொல்ல, தம்பியின் மனம் கொஞ்சம் சமாதானமடைந்தது! உடனே காரியஸ்தனை அனுப்பி, பூஜைக்கு வேண்டிய எல்லா சாமான்களையும் வாங்கி வரச் சொன்னான்.

அந்த நேரத்தில் எல்லோரும் சாப்பிட்டாயிற்று. வீட்டில் இருந்த பெண்களைப் போய்ப் படுக்கச் சொல்லிக் கட்டளை பிறப்பித்தாயிற்று. பெண்கள் சாவடிக்குள் போய்ப் படுத்தனர். சேகர உன்னித்தன் பூஜையை ஆரம்பித்தான். பூஜை முடியும் நேரத்தில் தனது வலது கையின் சுண்டுவிரலை எரியும் நெருப்பில் நீட்டினான். அடுத்த விநாடி இன்னொரு கையால் கத்தியை எடுத்து அந்தச் சுண்டுவிரலைக் காயப்படுத்தினான். இரத்தம் சொட்டு சொட்டாக ஹோமத்தில் விழுந்தது. அதே சமயத்தில்



யோம குண்டத்திற்குப் பின்னால் சங்கல்பம் செய்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யோகினி விக்ரகம் சிலிர்த்தது. அசைந்தாடியது! மறுகணம் அந்த இடத்திலிருந்து ஒரு பேய் பயங்கர உருவத்துடன் எழுந்தது.

"எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே" என்றான் தம்பி.

"இதோ பார்" என்று தன் இரத்தம் சிந்திய விரலைக் காட்டினான். தம்பி அப்பக்கம் பார்த்தான். அப்போதும் அவனுக்கு அது தெரியவில்லை.

"என்னைத் தொட்டுக்கொண்டு பார்!"

அப்படியே செய்த தம்பி, திடுக்கிட்டு பயத்தால் விறைத்தான். இதுவரை தான் கனவில்கூட பார்த்திராத ஒரு பயங்கர உருவத்தை அவன் தன் எதிரில் பார்த்தான். பரட்டைத் தலையில் சிறு சிறு பாம்புகள் ஆடிக்கொண்டிருக்க, நெற்றியில் இருந்த கண் இரத்தச் சிவப்பாக இருந்தது. மூக்கு முன்னோக்கிப் பெரிதாக வளைந்திருந்தது.

விகாரமான வாய், அதில் பெரிய கோரைப் பற்கள்! முகத்தை மட்டும் பார்த்துத் திடுக்கிட்ட தம்பி, சேகரன் மீது இருந்த தன் கையை எடுத்து விட்டான். இப்போது அந்த உருவம் அவன் கண்களுக்குத் தெரியவில்லை. மாந்திரீகன் ஹோமத்தில் ஒருவிதமான பொடியை வீசினான். அதனால் நெருப்பிலிருந்து மின்மினிப் பூச்சிகள் போல ஜுவாலை பறந்தது. அந்த ஜுவாலை மிகவும் பிரகாசமாக இருந்தது. பிறகு மறைந்தது.

"இப்போது என்னைத் தொட்டுக்கொண்டு பார்!" சேகரன் சொல்ல, தம்பி அப்படியே செய்தான்! இப்போதும் அவன் திடுக்கிட்டான். அவன் முன்னால் நின்று கொண்டிருந்தது கார்த்திகா அந்தர்ஜனம்! அவள் அவனையே பார்ப்பது போலத் தோன்றியது.

"இனி கையை எடுத்துக் கொள்."

செய்தான். கையை எடுத்த பிறகும் அவள் தெரிந்தாள்.

"இது யார் தெரியுமா?" மாந்திரீகன் கேட்டான்.

"இது... இது..." என்று உளறிய தம்பி மேலே பேச முடியாமல் தடுமாறினான்.

"இது இப்போது கார்த்திகா அந்தர்ஜனம்! நான் இப்போது இவளை விஜயமோகனிடம் அனுப்பப்போகிறேன். நாளைக்கு அந்த நபரை இங்கு யாருமே பார்க்க முடியாது. என்ன? என்று அவன் சொன்னபோது தம்பிக்கு மனது சந்தோஷமடைந்தது!

"சரி, போய் வா!" என்று அவன் அந்தப் போலியிடம் சொல்ல, அது உடனே அங்கிருந்து மறைந்தது!

இதே சமயத்தில் விஜயமோகன் நிராசையுடன் படுத்துக்கொண்டு இருந்தான். நேற்று இரவே கார்த்திகா வராததன் துக்கம் அவனுக்கு இருந்தது. ஒருவேளை இனிமேல் அவள் வரவே மாட்டாளோ! அவன் யோசனைகள் பலவாறு இருந்தன. எப்போது அவள் வரவேண்டும் என்று ஏதும் விதி இல்லை. இன்று வரவில்லையென்றால் நாளை வரலாம்! அந்தப் பெரிய நாலு கட்டு வீட்டில் அவன் மட்டும் தனியாக இருந்தான்! எங்கும் நிசப்தம். இரவுப் பூச்சிகளின் சப்தமும் இல்லை. விஜயமோகன் கட்டிலின் மீது இருந்த கிரந்தத்தை எடுத்துப் பிரித்தான். கோல்விளக்கு மங்கியது. திரியைப் பெரிதாக்கினான். தீபத்தின் வெளிச்சம் அதிகமாகியது! அந்த வெளிச்சத்தின் அவன் தன் கண்களைக் கஷ்டப்படுத்திக் கொண்டு எழுத்துக்களைப் படித்தான்.

திடீரென்று யாரோ நடந்து வரும் சப்தம் கேட்டது! 'ஜிலுங்... ஜிலுங்" கால் கொலுசின் சப்தம். கார்த்திகாதான் என்று அவன் தீர்மானித்தான். சப்தம் கேட்டவுடன், திடீரென எழுந்துபோய்



அவளை வரவேற்பது தன்னைப் போன்ற புருஷர்களுக்கு அழகன்று என நினைத்து அவன் அங்கேயே அமர்ந்திருந்தான். சப்தம் அருகில் கேட்டது. வாயிலைத் தாண்டியது. அவன் தலைநிமிர்ந்து பார்த்தான். கார்த்திகா!

"நேற்று எங்கே போயிருந்தாய்?"

பதில் ஏதும் பேசாமல் அவள் கட்டிலில் அமர்ந்தாள். அதே கேள்வியை அவன் மறுபடியும் கேட்டபோது அவள் பதில் சொல்லவில்லை. அமர்ந்தபடியே இருந்தாள். அவளை அவன் பார்த்தான். அவள் முகம் குனிந்திருந்தாள். முன்பு இருந்ததைவிட அவளுக்கு இப்போது அழகு கூடியிருந்ததுபோல் தெரிந்தது. இன்று அவள் அணிந்திருந்த மேல் துண்டு மிகவும் மெல்லியதாக இருந்தது. மார்பின் நிழல்கூட வெளியில் தெரிந்தது. அவள் அருகில் நெருங்கி அமர்ந்தான்.

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே கலைந்திருந்த அவளது தலைமுடியைத் தன் கைகளால் கோதினான். அவள் பெருமூச்சு விட்டதோடு நின்றாள். பதில் பேசவே இல்லை. மேலே போட்டிருந்த துண்டு தானாக விலகி பின்னால் விழுந்தது. அவள் ஒரு சிலைபோல் இருந்தாள். மார்பும், இடையும் தொப்புள் குழியும் கைதேர்ந்த சிற்பி ஒருவன் வடித்தவைபோலவே இருந்தன! விஜயமோகனின் கைவிரல்கள் அவளது சரீரத்தில் விளையாட ஆரம்பித்தன. இதுவரை ஏற்படாத ஒரு காம உணர்ச்சிக்கு அவன் இப்போது அடிமையாகி இருந்தான்.

"கார்த்திகா! ஒன்றும் பேசாமல் இருந்தால் எப்படி? என்மீது கோபமா? என்று கூடக் கேட்டான். அவள் அதற்கும் பதில் சொல்லவில்லை. தன் பேரில் அவளுக்கு ஏதாவது சந்தேகம் இருக்குமா? அவள் கோபத்தைத் தீர்க்க அவன் முடிவு செய்துகொண்டு அவளை நன்றாகக் கட்டிப் பிடித்தான். அவளும்

அவனை இறுகத் தழுவினாள். இரண்டு உடல்களும் உரசிக்கொண்டு இருந்தபோது அவளுக்கு ஆவேசம் அதிகமாக இருந்தது.

மந்திரவாதி அவளுள் ஏற்றி வைத்த காமசூத்திர மந்திரம் இப்போது தீவிரமாக வேலை செய்தது! அவளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அதனால் அவள் பிடி இறுகியது. அவனுக்கு இவளிடம் முதலில் ஏற்பட்ட அனுபவம் ஞாபகம் வந்தது! இந்த வேகம் அவளுக்குத் தான் உண்டு. இது கார்த்திகாதான்! அதனால் அவள் வேகத்தைக் கட்டுப்படுத்த அவன் அவள் முதுகில் 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தை எழுத ஆரம்பித்தபோது அவள் அவன் கழுத்தை அழுக்கிப் பிடித்தாள். அதனால் அவன் தன் முகத்தை எப்பக்கமும் திருப்ப முடியவில்லை! என்ன இது? இவளுக்கு என்னவாயிற்று இன்று? அவன் யோசித்தான்.

மூளையில் ஏதோ உறைக்க, அவன் திடீரென அவளை ஒரு பக்கமாகத் தள்ளிவிட்டான். அவளும் கட்டிலில் இருந்து சற்று தூரத்தில் போய் விழுந்தாள்! எழுந்தபோது அது கார்த்திகாவாக இருக்கவில்லை. கோரமாக பிசாசு உருவம். விஜயமோகன் முதலில் பயந்து விட்டான். "கார்த்திகா! என்ன இது? இதுதான் உன் நிஜமான உருவமா? என்று கேட்டுக் கொண்டே அருகில் இருந்த ஓலைச்சுவடிகளைக் கையில் எடுத்துக் கொண்டான். அந்த கோர உருவம் பதில் சொல்லாமல், அருகில் அவனைப் பிடிக்கப் பார்த்தது. கைகளை ஆட்டிச் சண்டை போடத் தொடங்கியது. என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு விநாடி தடுமாறினான். திடீரென அவனுக்கு ஞாபகம் வந்தது. அவனுக்கு இடுப்பில் ஒரு தாயத்து!

'மிகவும் கஷ்டமான நேரத்தில் மட்டுமே இதை உபயோகிக்க வேண்டும்' என்று அவன் தாத்தா சொன்னது ஞாபகத்தில் வந்தது! அதுவும் அது ஒரு தடவை மட்டுந்தான் உபயோகப்படும்.



"இந்தத் தாயத்தினுள் அதிபயங்கரமான சக்தி படைத்த ஒரு மந்திரம் இருக்கிறது. அதை வெளியில் எடுத்து உபயோகப்படுத்த வேண்டும்." தாத்தா சொல்லி இருந்தார்.

விஜயமோகன் அதை எடுத்து, பல்லால் கடித்துத் திறந்தான். அதைத் திறந்தவுடன் அதிலிருந்து ஒரு வேல் இறங்கி வந்தது. சில விநாடிகளில் அது வளர்ந்து பெரியதாகியது. அதை எடுத்து, ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த அந்தப் பிசாசின் மீது வீசினான். அது நேராகப் போய் அதன் ஒற்றைக் கண்மீது குத்திக் கொள்ளவே, அது கீழே விழுந்தது.

வேலை எறிந்தபிறகு அவன் அங்கே கண்டது அவனது வாழ்நாளில் காணாத அற்புதங்கள். அந்த வேல் நெற்றியில் ஒற்றைக் கண்ணில் குத்தி நின்றவுடன், அக்கண் இரண்டாக வெடித்தது. கிழிந்தது. அதன் இடைவெளியிலிருந்து சிறு பாம்புகள் குபீரென வெளி வந்தன. அதே சமயம் அதன் உடல் இரு கூறாகியது. மூக்கிலிருந்து வாய், மார்பு என்று இரு பகுதிகளாகப் பிரிந்தன! மார்புப் பகுதியிலிருந்து வௌவால்கள் சிறகடித்துப் பறந்தன. வயிற்றிலிருந்து ஒரு பெரிய கருநாகம் இறங்கி வந்தது. அது தன் நாக்கை வெளியே நீட்டியபோது அங்கிருந்து நெருப்பு ஜுவாலை வெளிப்பட்டது.

தொப்புளில் இருந்து வெளிவந்த இன்னொரு சர்ப்பம் படமெடுத்து நின்றது. இதையெல்லாம் பார்த்த விஜயமோகன் அப்படியே படுக்கையில் சாய்ந்தான்.

திடீரென உருகியதுபோல அந்த நாகம் கீழே படுத்து மறைந்தது! பெரிய புயல் அடித்ததுபோல், அடுத்த வினாடி அங்கிருந்த எல்லாமே மறைந்து விட்டன. விஜயமோகன் அவள் மீது எறிந்த வேலும் காணாமற் போய்விட்டது! எல்லாமே முடிந்து தளர்ந்தது போல, அவன் படுக்கையில் படுத்துவிட்டான்.

கார்த்திகா தன்னை இப்படிச் செய்துவிட்டாளே என்று வருந்தினான். அந்த அறையில் படுக்கக்கூட அவனுக்கு விருப்பமே இல்லை! அங்கிருந்து புறப்பட்டு வெளி வராந்தாவுக்கு வந்தான். நில விளக்கு அப்போதும் மங்கிய நிலையில் எரிந்து கொண்டிருந்தது. தூக்கம் அவனை விட்டுப் போய் வெகு நேரமாகி இருந்தது. அவன் தூணில் சாய்ந்து இருந்தபோது யாரோ படியில் இறங்கி வருவது தெரிந்தது. உருவம் அருகில் வர, அது சாவித்திரி!

"என்ன இந்த நேரத்தில்?

"வரவேண்டி இருந்ததால் வந்தேன்" என்று கூறியவாறே அவன் காலடியில் அமர்ந்தாள்.

"இந்த இல்லத்தில் நிறைய பிசாசுகளும், பூதங்களும்தான் இருக்கின்றனவா? யாரையுமே நம்பமுடியவில்லையே!" என்றான்.

"என்னையுமா சந்தேகிக்கிறீர்கள்?"

"ஏன், என் ரவிக்கையில் ரத்தத்தைக் கண்டதால் ஏற்பட்ட சந்தேகமா?"

அதற்குப் பதில் சொல்லாமல் விஜயமோகன் அமர்ந்திருந்தான்.

"உன்னித்தனை ஏதோ ஒரு ராட்சஸ் பிடித்துக் கொன்றதாலா? அதற்குப் பின்னால் ஒரு கதையே இருக்கிறது. திருமேனி கேட்க விருப்பமென்றால் சொல்கிறேன். சாவித்திரி தன் தலைமுடியை முன்னால் இழுத்துப் போட்டுக் கொண்டு அதைத் தடவியவாறே சொன்னாள்.

இவள்மீதும் ஏதோ ஒரு விதமான பூவின் வாசனை. அதிலெல்லாம் விஜயமோகன் கவனம் செலுத்தவில்லை. சற்றுப் பொறுத்து, சொல் நான் கேட்கிறேன். என்றான் பிறகு அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.



கார்த்திகாவைப் பற்றி அவன் நினைத்திருந்த எண்ணங்கள் மாறின. முதலில் அவளைப் பற்றி ஒரு சந்தேகம் ஆரம்பத்தில் இருந்ததென்றாலும் பிறகு அது மாறி விட்டது. சற்றுமுன் நடந்த சம்பவத்தால், அவளை அவன் மறக்கவும், ஏன் வெறுக்கவும் செய்தான்! இனி எப்போதும் அந்த ராட்சஸி தன் முன்பு வரமாட்டாள் என்றதில் அவனுக்கு இப்போது திருப்தியும் ஏற்பட்டது. இப்படி ஒரு எண்ணத்தில் அவன் தீர்க்கமாக மூழ்கி இருந்தபோதுதான் சாவித்திரியின் வரவு அங்கு நடந்தது. அது அவனது வேதனையான தனிமைக்கு ஒரு துணை கிடைத்தது போலவும் இருந்தது.

"உன்னித்தனம், வாசதேவன் தம்பியும் சேர்ந்து ஒரு பெண்ணை இங்கிருந்து அழைத்துப் போய் ஒட்டலில் வைத்து கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டார்கள்."

"எதற்காக அவள் அவர்களுடன் போகவேண்டும்?"

"ஆரம்பத்தில் உன்னித்தன் வீசிய மோக வலையில் அவள் விழுந்துவிட்டாள். அதிலிருந்து கர்ப்பிணியான அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி பட்டணத்திற்கு அழைத்துப்போய், ஒட்டலில் வைத்து உன்னித்தனும், தம்பியும் அவளைக் கெடுத்தார்கள். இதனால் ஏற்பட்ட அவமானம் தாங்காமல், அவள் தற்கொலை செய்து கொண்டாள். அவள் பிசாசுதான் உன்னித்தனைக் கொன்றது.

"ஒஹோ இதுதான் அந்தக் கதையா? சரி அதை யார் உன்னிடம் சொன்னது?"

"தற்கொலை செய்துகொண்டு இறப்பதற்கு முன்னால், அப்பெண் என்னிடம் சொன்னாள்."

"யார் அந்தப் பெண்?"

"வாசந்தி."

அந்த நேரத்தில் ஆகாயத்தில் நிலா எழுந்தது பூரண சந்திரன். பௌர்ணமியின் வெளிச்சம் பிரமாதமாக முற்றத்தில் விழுந்தது. அந்த வெளிச்சத்தில் விஜயன் சாவித்திரியை நன்றாகப் பார்க்க முடிந்தது. அவளது கால்கள் முற்றத்தில் இருந்தன. அவள் இடையில் கட்டியிருந்த முண்டு முழங்காலுக்குச் சற்று கீழே வரை மூடியிருந்ததால், கீழே கால்கள் மட்டும் நன்றாகத் தெரிந்தன.

கார்த்திகாவை மறந்து சாவித்திரையைப் பார்த்துக்கொண்டே இருந்தவனின் பார்வை, அவள் பாதங்களுக்கு இறங்கியது. திடுக்கிட்டான்! ஒரே நீளமுள்ள நாலு விரல்கள் மட்டும் உள்ள பாதங்கள் அந்தப் பாதங்களில் நன்றாகப் பிரகாசிக்கும் நகங்கள்.

"சாவித்திரி" என்று அவன் சத்தமாகக் கூப்பிட்டான்.

"ஏன்?"

"நீ சாவித்திரியா? இல்லை வாசந்தியா?"

"என்ன? என்ற கேட்டவாறு அவள் எழுந்து நின்றாள்.

"நீ ஒரு சாதாரணப் பெண் அல்ல! ராட்சஸி" நீதானே உன்னித்தனைக் கொன்றது?

அவள் அதற்குப் பதில் பேசவில்லை.

"என்ன, பதிலைக் காணோம்? நான் சொன்னது சரிதானே? என்று அவன் இன்னும் பலமாகக் கேட்டான்.

"ஆமாம் திருமேனி நீங்கள் சொல்வது சரிதான். நான் வாசந்தி தான்! நான்தான் உன்னித்தனைக் கொன்றேன்.

"ஓ! என்னால் இதை நம்பவே முடியவில்லை. நீ அன்று ரவிக்கையில் ரத்தம் குளக்கரை முள்ளால் எற்பட்டது என்று சொன்னபோது நான் அதை அப்படியே நம்பினேன். ஆனால் இப்போது உன் கால் விரல்களைப் பார்த்தபிறகு தான் எனக்கு மனதில் சந்தேகம் எழுந்தது."



"நீங்கள் இப்படித்தான் என்னைத் தெரிந்துகொண்டீர்களா? ஏ! பகவதி நான் கால்விரல்களைப் பற்றி நினைக்கவே இல்லை."

"நான் அதைக் கண்டுபிடிக்கவில்லையென்றால் நீ என்னையும் முடித்துவிட எண்ணியிருந்தாயா? என்று சற்று கோபத்துடனே கேட்டான் விஜயன்

"ஹா, என் தம்பிரானே! நீங்கள் அப்படிச் சொல்லவே வேண்டாம். கனவில்கூட நாங்கள் இந்த மாதிரி நினைக்கவே இல்லை."

"நாங்கள் என்றால்?"

"நானும் தம்புராட்டியுந்தான்."

"அது யார் தம்புராட்டி?"

"கார்த்திகா தம்புராட்டிதான். அவர்கள் தான் என்னை இங்கே வேலை செய்யச் சொன்னது."

"கார்த்திகாதான் உன்னை இங்கே அனுப்பி வைத்தது என்பது எனக்குப் புரிந்தது. அவள் வேலை என்னவென்பதையும் நான் இப்போது தெரிந்து கொண்டேன்."

"என்ன திருமேனி, தாங்கள் இப்படிச் சொல்லுகிறீர்களா?" என்று அவள் கேட்டவுடன் சற்றுமுன் நடந்தவற்றை அவளிடம் ஒப்புவித்தான்!

இதைக் கேட்டவுடன் அவளுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ஒரு வேளை கார்த்திகா இப்படிச் செய்திருப்பாளோ? இருந்தாலும் அவள் சொன்னாள்::

"கார்த்திகா ஒரு நாளும் அப்படிச் செய்யமாட்டாள்."

"அதை நான் எப்படி நம்ப முடியும்? இந்த இல்லத்தை நான் வாங்கியது அவளுக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ என்று எனக்குத் தோன்றுகிறது."

"இல்லை எஜமானே. இது வேறு யாரோ செய்த சதிவேலை. கார்த்திகாவின் உருவத்திலே யாரோ மாயமாக இங்கே வந்திருக்கிறார்கள். இந்த வேலையைத் தம்பிதான் செய்திருப்பான். அது நிச்சயம்!"

"அப்படியென்றால் கார்த்திகா எங்கே? இன்று இரவு அவள் வரவில்லையே?"

"அதற்கு ஒரே காரணந்தான் இருக்க முடியும்! அவளை யாரோ மந்திர சக்தியால் கட்டிப்போட்டு இருக்கிறார்கள். இல்லையென்றால் கடலின் அடியில் இருந்தால் கூட இரவு இங்கே வரத் தவற மாட்டாள்."

"அவள் வராததற்கு அதுவா காரணம்? அதைக் கண்டுபிடித்தாக வேண்டுமே. அவளைக் கட்டிப் போடும் சக்தி யாருக்கு இருக்கிறது?" அவன் கேட்டான்.

"யாராவது வலிமையுள்ள மந்திரவாதி பலமான மந்திரப் பிரயோகத்தினால் அவளை எழவொட்டாமல் செய்திருக்கலாம்."

"நீ போய் எல்லா விவரங்களையும் அறிந்து வர முடியுமா? நாளை இரவு உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். பகலில் என் ஊர் வரையிலும் போய்விட்டு வருகிறேன்."

"சரி திருமேனி, நாளை இரவு நீங்கள் இங்கே வரும்போது எல்லா விவரங்களையும் சேகரித்துக் கொண்டு வந்துவிடுகிறேன். இப்போது நான் இங்கேயே தங்கவா?"

அப்போது அவள் பார்த்த பார்வையில் வசீகரமான சக்தி மிதமிஞ்சி இருந்தது.

"கார்த்திகா!" என்று அவன் அவள் பெயரைச் சொன்னான்.

"திருமேனி! நீங்கள் கார்த்திகா என்னும் பிரம்மராட்சசைத் திருமணம் செய்து கொண்டிருக்க முடியாது. ஏனெனில் அது



பிரமாணங்களுக்கும், ஆசாரங்களுக்கும் எதிரானது. தொடர்பு வைத்துக் கொள்வது வேறு, திருமணம் செய்து கொள்வது வேறு. உம். தம்புரானே. நீங்கள் எனக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டும். அதற்கு ஒரு காரணமும் இருக்கிறது" என்று கூறியவாறு அவனது காலடியில் அமர்ந்தாள். அவளது தலைமுடி அவன் பாதங்கள் மீது விழுந்தன.

"காரணமா? அது என்ன?"

"நீங்கள் பிறப்பால் பிராமணர். நான் மோட்சமடையாத ஒரு ராட்சஸி. உங்கள் ஸ்பரிசமும், அணைப்பும் ஒரே ஒரு இரவு மட்டும் கிடைத்தால் நான் புனிதமடைவேன். மோட்சம் கிடைக்கும். இந்த உதவி மட்டும்தான் எனக்கு வேண்டும் திருமேனி. அதுவும் ஒரே ஒரு இரவு மட்டும்."

அவன் பதில் சொல்லவில்லை. அவளோ மேற்கொண்டு எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தாள்.

"நான் தங்களை யாசித்ததில் ஏதாவது தவறு இருக்கிறதா திருமேனி?" என்று கேட்டவாறு அவனது பாதங்களை, தன் கையால் படித்துவிட்டாள்.

"வீணாகத் தற்கொலை செய்து கொண்ட நீ நற்கதி அடையவேண்டும் என்பதற்காக நான் உன் வேண்டுகோளுக்காக, இன்று இரவை உன்னுடன் கழிக்கச் சம்மதிக்கிறேன்" என்று சொல்லிய விஜயமோகன் தன் படுக்கை அறைக்கு அவளை அழைத்துப் போனான்.

கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தான். அவள் கீழே அமர்ந்து அவனது கால்களைப் பிடித்து விட்டாள். இப்போது அவளது மார்பகங்கள் மூடப்படாமல் இருந்தன. விஜயமோகன் அவள் அழகில் மயங்கி இருந்தான்.

"அன்று இரவு உங்களைப் பார்த்தபோதே உங்களுடன் ஒரு இரவைக் கழித்து என் மோட்சத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்து வைத்திருந்தேன். அது இன்று நிறைவேறுகிறது. என் ஆசையும் பூர்த்தியாகிறது. இனி எனக்கு எதுவுமே வேண்டாம்!" என்று சொல்லிக் கொண்டே அவள் அவனை மெதுவாகத் தழுவினாள். அவளது மார்பகங்கள் அவன் மீது அழுந்த அவளது தலைமுடி அவன் முகத்தை மூடியது. உணர்ச்சிப் பிரவாகத்தில் திளைத்த அவன், அவள் இதழ் அமுதத்தைப் பருகத் தொடங்கினான். காமம் அணையை உடைத்துக் கொண்டு கிளம்பியது போல, அவள் அவனோடு ஐக்கியமானாள்.

"அடுத்த ஜன்மத்தில் நான் தம்பிரானின் வீட்டு வேலைக்காரியாகப் பிறக்க வேண்டும்" என்று அவன் காதில் கிசுகிசுத்தாள் அவள்.

"ஏன் அப்படி?"

"உங்களை எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்கலாமல்லவா?"

மீதமிருந்த இரவு பூராவும் அவர்கள் இருவரும் தூங்கவில்லை. விடியற்காலை கோழி கூவுவது வரை அவள் அங்கே இருந்தாள்.

"நான் இன்று இரவு இங்கே வரும்போது எல்லாவற்றையும் அறிந்து வருகிறேன் தம்பிரானே!" என்று கூறிவிட்டு அவள் அங்கிருந்து போய்விட்டாள்.



## அத்தியாயம் - 11

காலையில் அவன் எழுந்த போது இரவு நடந்ததெல்லாம் கனவு போலத் தோன்றியது.

டீக்கடையில் அன்று பார்த்தது போலவே அவனை எல்லாரும் பயத்தோடு பார்த்தனர். அவன் எழுந்தால் எழுந்தனர். உட்கார்ந்தால் உட்கார்ந்தனர். டீக்கடைக்காரன் அவனுக்கு டிபன் பரிமாறினான்.

அவன் சாப்பிட ஆரம்பித்த பிறகு எல்லாரும் எழுந்து வெளியே போய்விட்டார்கள்.

"என்ன இது? தினமும் இதைப் போலவே நடந்து கொள்கிறார்கள்?"

"ஒரு பயந்தான்..."

"என்ன பயம்?"

"இல்லத்தில் நீங்கள் இரவைக் கழிப்பது எல்லாருக்கும் வியப்பாக இருக்கிறது. ஆட்களை அழைத்துப் போய் இரத்தத்தைக் குடித்துக் கொல்லும் ரத்த ராட்சஸிகள் உள்ள வீடு அது!"

"எனக்கு அப்படித் தோன்றவில்லை" என்றான். வெளியில் நின்று கொண்டு ஒருவன் விஜயமோகனைக் கவனித்துக் கொண்டே இருந்தான். தம்பியின் காரியஸ்தன் அவன். உடனே அவன் இடசேரி இல்லத்திற்குச் சென்று தம்பியிடம் விஜயன் இன்னும் உயிரோடு இருக்கும் விஷயத்தைச் சொன்னான்.

விஜயன் தன் ஊருக்கு வந்து தன் தாத்தாவைப் பார்த்தான். நடந்தவை யாவற்றையும் விவரமாகச் சொன்னான். தாயத்து எப்படி உபயோகப்பட்டது என்பது பற்றியும் சொன்னான். அவனிடம்

விவரம் கேட்ட முத்தச்சன் உடனே பிரசனம் வைத்துப் பார்த்தார். கணக்குப் போட்டுக் கூட்டினார். பிரசனத்தில் அவர் கண்களுக்குப் பல விஷயங்கள் தெரிந்தன. அதை அவர் விஜயமோகனிடம் சொன்னார்.

"இல்லத்தின் தெற்கே ஓர் எட்டி மரம் இருக்கிறது. அதற்கு வடக்கே ஓர் கல்லறை உண்டு. நீ சொன்ன பெண் அந்தக் கல்லறைக்குள்தான் இருக்கிறாள்."

ஆக, கார்த்திகாவை அங்கே யாரோ கட்டிப்போட்டு இருக்கிறார்கள். விஜயமோகன் தன் தாத்தாவிடம் தகவலைப் பெற்றுக் கொண்டபின், தாமதிக்காமல் உடனே எவமத்தூர் இல்லத்திற்கு வந்தான். இல்லத்திற்கு அவன் வந்து சேர்ந்தபோது இரவு மணி பதினொன்று.

விபரத்தோடு உங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பேன் என்று சொன்ன சாவித்திரியை அங்கே காணோம். அதற்குள் கல்லறையைப் பார்த்துவிடலாம் என்று அவன் டார்ச்சுடன் இறங்கிய போது சாவித்திரி எதிரில் வந்தாள்.

"தம்பிரான் அங்கே போகவேண்டாம்."

"என்னைத் தடுக்காதே, நான் அங்கே போய்த்தான் தீருவேன்" என்று அவளை அகற்றிவிட்டு வேகமாகப் போனான்.

எட்டி மரத்தைத் தாண்டிப் போனான். பழைய வாசனை அங்கே இல்லை. கல்லறைக்குச் சற்று தூரத்தில் போய் நின்றான். அப்போது கல்லறை மேலிருந்து ஒரு கருத்த உருவம் எழுந்து நின்றது.

விஜயன் டார்ச் அடித்துப் பார்த்தான். முகமெல்லாம் அழுகித் தொங்கிய மாமிசம். ஒரு கண் கீழே இறங்கி இருக்க, பல இடத்தில் மாமிசம் இல்லாமல் எலும்பு தெரிய, கோரமான உருவம் இருந்த இடத்தைவிட்டு நகராமல் விஜயனை எட்டிப் பிடிக்க கையை



நீட்டியது. அடி எடுத்து வைக்க காலைத் தூக்கி வைக்க முயற்சித்தது. பாதி எரிந்த நிலையில் சிதையிலிருந்து எழுந்து வந்ததைப் போலிருந்த அவ்வுருவம் இருந்த இடத்தைவிட்டு நகர முடியாமல் தவித்தது.

விஜயமோகன் அந்த உருவத்தைக் கண்டவுடன் மேலே அடி எடுத்து வைக்காமல் அப்படியே நின்றுவிட்டான். இதற்கு என்ன காரணம் என்றே அவனுக்குப் புரியவில்லை. தன் தாத்தா முத்தச்சன் இதைப்பற்றித் தன்னிடம் ஏதும் சொல்லவில்லையே என்றும் அவன் நினைத்தான்.

எட்டி மரத்தின் வடக்கே இருக்கும் கல்லறையில்தான் அப்பெண் இருக்கிறாள் என்று தனது பிரசனத்தில் பார்த்துச் சொல்லி இருந்தார் பெரியவர். இப்போது அங்கே ஒரு பிசாசு எழுந்து நிற்கிறது. எரியும் சிதையிலிருந்து எழுந்து வந்ததைப் போல இருக்கிறது அது. அந்தப் பிசாசின் மீது டார்ச்சை அடி முதல் முடிவரை அடித்து அது ஆணா, பெண்ணா என்று தெரிந்து கொள்ள விரும்பினான். அடித்துப் பார்த்தான். ஆண்தான்! ஆக, இது கார்த்திகா இல்லை என்பதில் அவனுக்கு ஒரு திருப்தி. சரி, இப்போது அவள் எங்கே இருக்கிறாள்? தன் தாத்தா ஒரு வேளை தவறாகச் சொல்லிவிட்டாரோ? அவர் சொன்னது போலல்லாமல் இங்கே வேறுவிதமாக அல்லவா நடந்திருக்கிறது? அவன் மனம் யோசனையில் ஆழ்ந்தது.

வாசுதேவன் தம்பியின் வீட்டில் அந்தப் பெண் பிசாசு விஜயமோகனைக் கொன்றுவிட்டுத் திரும்பி வராததால் சேகர உன்னித்தனுக்கும், தம்பிக்கும் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

அடுத்தநாள் காலை விஜயமோகனை டீக்கடையில் பார்த்த விவரத்தை அவன் காரியஸ்தனும் வந்து சொன்னான். இதனால் தம்பிக்கு மீண்டும் பயம் வந்துவிட்டது.

விஜயமோகன் தனக்கு வந்த ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டான். இனி அவன் கார்த்திகா எங்கே என்று தேட ஆரம்பித்துவிடுவான். இதற்காக புதிய ஏற்பாடு செய்யப்பட்டது. தப்பித் தவறி அவன் கல்லறை அருகில் வந்தால், அவனைக் கொல்ல தூமாவனி என்னும் பிசாசினை சேகர உன்னித்தன் ஹோமத்தின் மூலம் வரவழைத்தான். அந்தப் பிசாசுதான் அழுகிப்போன பப்பன் சரீரத்தில் புகுந்து விஜயமோகனை பயமுறுத்தித் திருப்பி அனுப்பியது.

விஜயமோகன் முயற்சித்துப் பார்க்கலாமே என திரும்பவும் முன்னேறப் பார்த்தான். அப்போதும் அந்தப் பிசாசு தன் கைகளை உயர்த்தி அவனைப் பிடிக்க வந்தது. அந்தக் கோர உருவத்தை அதிக நேரம் பார்த்துக் கொண்டிருக்க விஜயமோகன் விரும்பவில்லை. அது தன்னைத் தொட்டு விட்டால் தனது பரிசுத்தம் கெட்டுவிடும் என்று நினைத்தான்.

அவன் இத்தனை நாள் படித்ததெல்லாம் வீணாகிவிடும். இதற்காக அவன் இன்னொரு ஜென்மம் எடுக்கவேண்டும்ஜ! அதனால் மனத்தில் நிராசையுடன் அவன் தன் இல்லத்திற்குத் திரும்பினான்.

"என்ன தம்பிரானே, நான் சொன்னது நிஜந்தானா?" என்று சாவித்திரி கேட்டாள்.

"நீ எதைப்பற்றிப் பேசுகிறாய் என்றே எனக்குப் புரியவில்லை."

"நான் சொல்லச் சொல்ல நீங்கள்தான் போய்க்கொண்டே இருக்கிறீர்களே. அங்கே ஒரு சுடலைப் பிசாசு இருக்கிறது. அது உங்களைத் தொட்டாலே உங்கள் பரிசுத்தம் கெட்டுவிடும் என்று சொன்னேன்."

"உண்மைதான்! அந்தப் பிசாசு இப்போது கார்த்திகாவின் சமாதியின் மேல் இருக்கிறது. அது அங்கே இருக்கும்வரை, அவள் வெளியே வரமுடியாது. அதனால் எப்படியாவது அதை அங்கிருந்து அகற்ற வேண்டும்."



"தம்பிரான் படிக்கும் கிரந்தத்தில், நாம் எங்கே போகவேண்டும் என்று நினைக்கிறோமோ, அந்த இடத்திற்கு சூட்சும சரீரத்தோடு போக ஒரு மார்க்கம் இருக்கிறது. கூடுவிட்டுக் கூடு பாய்வது என்று அதைச் சொல்வார்கள். அப்படித்தான் தம்பிராட்டியின் இடத்திற்குப் போகலாம்" என்று சாவித்திரி தனக்குத் தெரிந்த யோசனையைச் சொன்னாள்.

"நான் பார்க்கிறேன்" என்று விஜயமோகன் உள்ளே போய் அந்தப் பழைய கிரந்தத்தை எடுத்துக் கொண்டு வந்தான்.

சாவித்திரி அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

"நீ ஏன் மீண்டும் இங்கே வந்தாய்? உனக்குத்தான் மோட்சப் பிராப்திக்கு வேண்டிய வழிவகைகளை நேற்றே செய்துவிட்டேனே."

"தம்பிராட்டியைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போகவே வந்தேன். ஏனெனில் அவர்கள்தான் என்னை இங்கே அனுப்பியது" என்று அவள் சொல்ல,

"கார்த்திகா திரும்பி வருவாள் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. இருந்தாலும் நான் பார்க்கிறேன்" என்றான்.

விஜயமோகன் கிரந்தத்தை எடுத்துவைத்து அந்தக் குறிப்பிட்ட இடத்தைப் பார்த்தான். அதில் அந்தக் கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையைப் பற்றி இருந்ததைப் பார்த்தான். அதை அவன் நன்றாகப் படித்துப் பார்த்தபோது மிகவும் கஷ்டமான ஒரு விஷயம் வெளிப்பட்டது.

உடலில் இருந்து ஆத்மா வெளியே போயிருக்கும்போது அந்த உடம்பை பத்திரமாக ஒரு இடத்தில் காப்பாற்றி வைக்க வேண்டும்.

இல்லையென்றால் யாராவது இறந்து கிடக்கும் பிணம் என்று நினைத்து எடுத்துக் கொண்டுபோய் எரித்துவிடுவார்கள். இல்லையென்றாலும் புதைத்து விடுவார்கள். அதனால் தன் சரீரத்தைப் பத்திரப்படுத்தி வைக்க நிச்சயம் ஒரு நபர் வேண்டும்.

அது மட்டுமல்லாமல், வெளியே போயிருக்கும் ஆத்மா மீண்டும் திரும்பி வரும்வரையிலும் அந்தச் சரீரத்தின் சூடு குறைந்துவிடாமல் இருக்கவும் பார்த்துக்கொள்ள வேண்டும். கிரந்தத்தை மூடி வைத்துவிட்டு, எரியும் விளக்கின் திரியைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் சாவித்திரி.

"நீ சொன்ன மந்திரம் இதிலே இருக்கிறது. ஆனால் உடம்பிலிருந்து ஆவி வெளியே போயிருக்கும்போது உடம்பையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். அதில் இருக்கும் சூடும் குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதற்கெல்லாம் எனக்கு உதவியாக ஒரு ஆள் வேண்டாமா? அதுவும் அந்த உயிர் திரும்பவும் உடலுக்கு வரும்வரை வேண்டுமல்லவா?" என்று விஜயம் கேட்டான்.

"அதற்காகவா இவ்வளவு கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"அதற்கு நீ சம்மதித்தால் போதும். நான் போய்க் கார்த்திகாவைப் பாத்துவிட்டு வந்துவிடுவேன்."

"நீங்கள் அதற்குத் தயார் என்றால், உங்கள் உடலைப் பார்த்துக் கொள்ள நான் தயார்."

அவளை அழைத்துக் கொண்டு அவன் படுக்கை அறைக்குப் போனான். கதவை மூடித் தாழிட்டான். ஜன்னலைச் சாத்தினான். விளக்கு அணைக்கப்பட்டது. அறைக்குள் முகம் தெரியாத இருட்டு. விஜய மோகனின் கரங்கள் சாவித்திரியைக்



கட்டிப்பிடித்தன. படுக்கையில் சாய்ந்தார்கள். அவன் அவளது ரவிக்கையைக் கழற்றி விட்டான். மார்பகங்கள் மீது முகத்தை வைத்தான். அவளது உதடுகள் அவன் முகத்தில் சஞ்சரித்தன! ஒரு கொடி படர்ந்தது போல், அவன் அவள் உடம்பில் படர்ந்து இருந்தான். அவளது சக்தியும், உடல் சூடும் அவன் உடம்பிற்குத் தாவின.

"போதுமா? என்று கேட்டாள் அவள்.

செய்யப்போகும் காரியத்தை உத்தேசித்து இருவரும் உணர்ச்சிகளுக்கு இடந்தரவில்லை.

"போதும்" என்று சொன்ன விஜயமோகன், "நான் இப்போது அந்த மந்திரத்தை ஜெபிக்கப் போகிறேன்" என்றான்.

"நான் இதே நிலையில் இங்கேயே இருப்பேன்" என்றாள் சாவித்திரி.

விஜயமோகனின் வாய் மெதுவாக மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கியது. மெதுவாக அவள் காதில் விழுந்து கொண்டிருந்த அச்சத்தம் சட்டென்று நின்றுவிட்டது. அவன் உதடுகள் அசைவற்று நின்றது. விஜயமோகன் உடல் குளிர்வதுபோல அவளுக்குத் தோன்றியது. அவள் மேலும் அவனை இறுகத் தழுவினாள். அரூபமாகிவிட்ட விஜயமோகன் மெதுவாக அங்கிருந்து கிளம்பினான். திட்டமிட்டிருந்தபடி நேராக எட்டி மரத்தின் அருகே வந்து, அதைத் தாண்டி கல்லறை அருகே வந்தான்.

கார்த்திகாவின் கல்லறை மேல் அந்தப் பிசாக இருப்பது நன்றாகத் தெரிந்தது. காவல்காரன் போல அந்தப் பிசாசு கால் மேல் கால் போட்டு, கல்லறைமீது அமர்ந்திருந்தது, தலை மட்டும் இயந்திரம் போல் இப்படியும், அப்படியுமாக ஆடிக் கொண்டிருந்தது. நிலா வெளிச்சம் அந்த இடத்தில் பிரகாசமாக விழுந்திருந்தது.

அந்த வெளிச்சத்தில், அப்பிசாசின் கோர உருவம் பார்ப்பவர்களை பயமுறுத்துவதாக இருந்தது.

விஜயமோகன் ஆத்மா கல்லறை அருகே வந்தது. பிசாசின் நிலையில் எந்தவிதமான மாறுதலும் அருபமாகத் தன் அருகே நிற்பது கூட அதற்குத் தெரியவில்லை. விஜயமோகன் கல்லறையிலிருந்த சிறு துவாரம் வழியாக உள்ளே இறங்கினான். உள்ளே கார்த்திகா கவிழ்ந்து கிடப்பதை அவன் பார்த்தான்.

"கார்த்திகா... கார்த்திகா..." என்று அவள் காதில் சப்தமிட்டான்.

"என்ன நீங்களா? இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று அவள் தன் உடலைத் திருப்பாமல் கேட்டாள்.

"நான் என் உடலோடு இங்கே வரவில்லை. ஆத்மா மட்டுந்தான் வந்திருக்கிறது."

"திருமேனி! என் கல்லறைமீது அந்தப் பிணம் இருப்பதால் நான் திரும்பிப் பார்க்க முடியாது."

"இப்போது அங்கே பிணம் மட்டுமல்ல, வேறு ஒரு பிசாசும் இருக்கிறது. காவலாக! நாம் வெளியே போனால் நம்மைக் கொல்வதற்காக ஏவி விட்டிருக்கிறார்கள்."

"உங்களை என்னால் பார்க்க முடியவில்லையே!" என்று அவள் அழுதுகொண்டே கேட்டாள்.

"நீ இப்போது திரும்பிப் படுக்கலாம். பயப்பட ஒன்றுமில்லை" என்று அவன் சொன்னான்.

இருவர் படுக்க அங்கே தாராளமாக இடம் இருந்தது. கார்த்திகா திரும்பிப் படுத்தாள்.

"நான் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளவே இங்கு வந்தேன்."



"என்ன தெரியவேண்டும் திருமேனி, கேளுங்கள். நான் இப்போது இங்கிருந்து வெளியேற வேண்டும். எனக்கு வெளியே இன்னமும் சில வேலைகள் பாக்கி இருக்கின்றன."

"அப்படியென்றால் சொல், மேலே இருக்கும் பிணத்தை எப்படி இங்கிருந்து அகற்றுவது? அது பாதி எரிந்த ஒரு பிணம்."

" அப்படியா? அதற்கு ஒரு வழி தான் இருக்கிறது. கருடமந்திரம் ஜபித்து, கருடனைப் பிரத்தியட்சப் படுத்தினால் போதும். மற்றதை அவர் பார்த்துக் கொள்வார். அதற் ஹோமம் நடத்தவேண்டும்" என்றாள்.

"சரி, நான் அப்படியே செய்கிறேன்."

"உடனே நீங்கள் வேகமாக வெளியேறுங்கள். அங்கே உங்கள் சரீரம் கெட்டுவிடப் போகிறது."

"இல்லை, அது சூடாக இருக்க நான் ஏற்பாடு செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்."

"இருந்தாலும் உங்களை உயிரோடு என்னால் பார்க்க முடியவில்லையே அந்த துக்கந்தான் எனக்கு அதிகமாக இருக்கிறது. சரி, நீங்கள் வேகமாகப் போய் நான் சொன்னதைச் செய்யுங்கள்."

விஜயமோகன் கல்லறையிலிருந்து வெளியேறினான். மேலே இருந்த அந்த உருவம் பழைய படியே தலையை ஆட்டியவாறு அமர்ந்திருந்தது. விஜயமோகனின் அருபத்தை அது கண்டுகொள்ளவே இல்லை. ஆத்மாவை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?

அவன் இல்லத்திற்கு வந்தான். சாவித்திரி தன் உடலைக் கட்டிப் பித்தவாறே படுத்திருந்ததைக் கவனித்தான். திருப்தியடைந்தவன், தன் சரீரத்தில் பிரவேசித்தான். அவன்

உடலில் சூடு ஏறுவதை சாவித்திரி அறிந்தாள். "நீங்கள் வந்தாயிற்று?" என்று கேட்டுக்கொண்டே அவனை மேலும் இறுக்கினாள்.

"நான் சென்ற காரியம் முடிந்தது" என்று கூறி அவன் கைகளை மெதுவாக விடுவித்தான்.

"உங்களுக்கு என் சூட்டைக் கொடுத்து நான் குளிர்ந்துவிட்டேன்" என்றாள் சாவித்திரி.

கார்த்திகா சொன்னவற்றை சாவித்திரியிடம் அவன் சொன்னான். "இன்று இரவு பூராவும் நமக்கு வேலை இருக்கிறது" என்றான்.

"சரி, ஹோமச் சாமான்களை நான் கொண்டு வரலாம் அல்லவா? அதற்குப் பிறகு நான் இங்கிருந்து போய்விடுகிறேன்."

"கார்த்திகா வராமலா?"

"பிறகு நான் தம்பிராட்டியிடம் சொல்லிக் கொள்கிறேன்." சொல்லிக் கொண்டே அவள் வெளியேறினாள்.

அவள் திரும்பி வந்தபோது அவளது கையில் கருட பூஜைக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் இருந்தன.

உடனே விஜயமோகன் ஹோமம் வளர்த்து மந்திரத்தை ஜெபிக்க ஆரம்பித்தான். பூக்களையும், ஆஹூதிப் பொருள்களையும் ஹோம குண்டத்தில் போட்டுக் கொண்டே தொடர்ந்து ஐம்பதாயிரம் தடவை கருட மந்திரத்தை ஜெபித்தான்.

"ஷிப ஓம் ஷியாகா!"

மந்திர உச்சாடனம் நடந்து கொண்டிருந்தபோது எங்கோ சிறகடிப்பது போன்ற சப்தம் மேகங்களைக் கலைத்துக் கொண்டு, இடி முழக்கத்தோடு கருடன், விஜயமோகன் முன்னால் வந்து அமர்கிறது. சோபையான உருவத்துடன் இருந்த கருடனைப் பார்த்துக் கொண்டே விஜயமோகன் பேசலானான்.



"வணக்கத்துக்குரிய கருடதேவா! உனக்கு எல்லாமே தெரியுமல்லவா? தயவு செய்து, கார்த்திகாவின் கல்லறை மீதுள்ள அந்தப் பிணத்தை அகற்றித் தரவேண்டும். அதுதான் நீங்கள் எனக்குச் செய்யும் உதவி."

அதைக் கேட்ட மாத்திரத்தில் கருடன் அந்த இடத்தை விட்டுப் பறந்துவிட்டது. சில நிமிடங்களில் வெளியே வானவீதியில் ஆயிரமாயிரம் சிறகுகள் படபடவென அடித்துக் கொள்ளும் சப்தம் கேட்டது. என்னவென்று பார்க்க விஜயமோகன் வெளியே வந்தான். சிறகுகளின் ஓசை குளக்கரை அருகில் இருந்துதான் வந்தது.

அந்த இருளில் அவன், அப்பக்கமாக மெதுவாக அடி எடுத்து வைத்தான். அருகே இருந்த எட்டி மரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பட்சிகள் மரக்கிளைகளில் அமர்ந்திருந்ததை அவன் பார்த்தான். அவற்றின் கண்கள் சிவந்த நிறத்தோடு பளிச்சிட்டன. இடையிடையே அவற்றில் சில கல்லறை மீது தாழப்பறந்தும் மேலே போய்க்கொண்டும் இருந்தன.

அவை போட்ட சப்தம் பயப்படுத்தக்கூடியவைகளாக இருந்தன. விதவிதமான சப்தங்கள். சிறகுகள் அடிப்பதால், காற்று வீசுவது போலவும் தெரிந்தது. அதை சில விநாடிகள் மட்டும் பார்த்துக் கொண்டிருந்த விஜயமோகன், 'கருடதேவனிடம் பொறுப்பை ஒப்படைத்தாயிற்று. என்னவாகுமோ? ஏதாகுமோ' என்று கவலைப்பட்டுக் கொண்டே இல்லத்திற்குத் திரும்பி வந்தான்.

காலையில் விஜயமோகன் எழுந்தான். இரவு அவன் கேட்ட பட்சிகளின் சப்தம் ஞாபகத்திற்கு வர, மெதுவாக கல்லறை அருகே

சென்றான். அங்கே அவன் ஓர் அற்புதமான காட்சியைக் கண்டான். ஆயிரக்கணக்கான கழுகுகள் கல்லறை அருகே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அந்தக் கழுகுகள் கல்லறை மீதிருந்த பிணத்தைத் துளி விடாமல் கொத்தித் தின்றுவிட்டன.

சில நிமிடங்களில் அவை அங்கிருந்து பறந்துவிட்டபோது, ஒரு பிணம் அங்கே இருந்தது என்பதற்கே சாட்சி இல்லை. இடம் அவ்வளவு சுத்தமாக இருந்தது. விஜயமோகன் கல்லறை அருகில் சென்று, தனது சர்வ சக்தியையும் உபயோகித்து, அதன் மேல் மூடியை மெதுவாக அகற்றினான்.

உள்ளே சலனமற்றுக் கிடந்த கார்த்திகாவைப் பார்த்தான். மெதுவாக, "கார்த்திகா... கார்த்திகா..." எந்று அழைத்தான். அவளிடமிருந்து எந்தவிதமான சலனமும் இல்லை. அவளது மார்பில் கை வைத்துப் பார்த்தான். இருதயத் துடிப்பு இல்லை. ஆனால் சரீரத்தில் சூடு இருந்தது. என்ன காரணம்? அவன் சிந்தித்தான். ஒரு வேளை இவளுக்கு இரவில் மட்டும்தான் உயிர் வருமா? அப்படியென்றால் சாவித்திரி? அவனுக்கு விளங்கவில்லை. இவளுக்கு மட்டுந்தான் இப்படிப் போலிருக்கிறது.

இப்படி நினைத்துக் கொண்டே அவன் கல்லறையைப் பழையபடி மூடிவிட்டுத் திரும்பி வந்தான். சற்று தூரம் வந்தபிறகு அவன் மனத்தில் திடீரென ஒரு சந்தேகம் தோன்றியது.

பகலில் தம்பியின் ஆட்கள் இங்கு வந்து கல்லறையைத் திறந்து பார்த்தால்... இவளைக் கண்டதும், சரீரத்தை எரித்து விடுவார்கள். பிறகு அவள் என்றைக்குமே உயிருடன் திரும்ப முடியாது. அதனால், அவளது உடலை இங்கிருந்து கிளப்பிவிட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

திரும்பி நடந்தான். கல்லறையைத் திறந்தான். மெதுவாக அவளது உடலைத் தூக்கித் தனது தோள்மீது போட்டுக் கொண்டு



இல்லத்தை நோக்கி நடந்தான். எழமத்தூர் இல்லத்தில் உள்ள தெற்குப் பக்க அறையில் அவன் அதைக் கிடத்தினான்.

விஜயமோகன் சந்தேகப்பட்டது போலவே, தம்பியின் காரியஸ்தனும், அவனது இரு வேலையாட்களும் கல்லறை அருகே வந்தனர். அவளது சரீரத்தை அங்கே காணாததால் அவர்களுக்குச் சந்தேகம் வந்து விட்டது. உடனே அதை அவர்கள் தம்பியிடம் சொன்னார்கள். சேகர உன்னித்தன் உடன் வரவழைக்கப்பட்டான்.

அவன் விஷயத்தைக் கேள்விப்பட்டபின், தன் ராசிப் பலகையை எடுத்து வைத்து பிரசனம் பார்த்தான். கார்த்திகாவின் உடல் இல்லத்து அறையில் இருந்தது தெரிந்தது.

"இனி என்ன செய்வது?" தம்பி கேட்டான்.

"அங்கே போய்ப் பிணத்தை எடுத்து வந்து விடவா?"

"அது எப்படி முடியும்? விஜயமோகன்தான் அங்கே இருக்கிறானே?"

"இந்த விஷயத்திற்கெல்லாம் யோசனையே கூடாது எஜமானே! முரட்டுத் தனமாகப் புகுந்து எடுத்துக் கொண்டு வரவேண்டியதுதான்!" என்றார்கள் வேலைக்காரர்கள்.

"முடிகிற காரியமா? எப்படி?"

"பலாத்கார முறையில்தான்"

"இது மற்றவர்களுக்குத் தெரிந்தால்?"

"மாலை போய்விட்ட பிறகு இரவு நேரத்தில் அங்கே யாருமே இருக்க மாட்டார்கள். ஜன நடமாட்டமும் இருக்காது! நான்கைந்து பேர் அங்கே போனால் காரியம் முடிந்த மாதிரிதான். தேவைப்பட்டால் அவனையும் அடித்துக்கட்டித் தூக்கி கிணற்றில் போட்டுவிடலாம்"

"வேறு வழி ஏதும் இல்லையென்றால் நீங்கள் சொல்லும் வழிதான்." தம்பி அவர்கள் சொன்னதற்கு ஆதரவைத் தந்தான்.

கார்த்திகாவை அங்கே கிடத்திவிட்டு டீக்கடைக்குச் சென்றான் விஜயமோகன். அதே சந்தேகம்! அதே பயம்! எல்லாரும் போன பிறகு டீக்கடையின் சொந்தக்காரன் அருகில் வந்தான்.

"என்ன?"

"திருமேனி அந்த வீட்டை விட்டுப் போய்விடுவது நல்லது. நீங்கள் அங்கே தங்குவது மிகவும் ஆபத்து. அபாயகரமானது."

"அப்படியொன்றும் எனக்குத் தெரியவில்லையே? நான் அங்கே இருப்பதால் மற்றவர்களுக்கு என்ன கஷ்டம்?"

"அது பிசாசுகள் தங்குமிடம் திருமேனி."

"பரவாயில்லை. நான்தானே அங்கு இருக்கிறேன்."

"வெளிப்படையாகவே பேசுகிறேன். இன்று இரவு அங்கே யாரோ திட்டம் தீட்டி இருக்கிறார்கள். அவர்கள் வருவது நல்லதற்கல்ல."

"அப்படியென்றால்?"

"தம்பியுடைய ஆட்கள் அங்கே வருகிறார்களாம்!"

"ஓ! அப்படியா? அது எனக்குப் புரிகிறது. அதை நான் பார்த்துக் கொள்கிறேன்."

அதற்கு மேல் நின்று நேரத்தை வீணாகக் கழிக்காமல் விஜயமோகன் நேராக இல்லத்திற்கு வந்துவிட்டான்.

சூரியன் மறைந்ததும், சேகர உன்னித்தன் மீண்டும் பூஜையைத் தொடங்கினான். கார்த்திகாவை எரித்துவிட ஒரு சிதையே தயாராக, தம்பியின் இல்லத்திற்குத் தெற்குப் பக்கத்தில் இருந்த காட்டிற்கப்புறம் வைக்கப்பட்டிருந்தது. மேலும் அவள்



உயிரோடு வந்து விடக் கூடாது என்பதற்காக ஹோமும் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருந்தது.

சூரியன் நன்றாக மறைந்தவுடன், இருள் தெரிந்தது. வடக்குப் பக்கத்தில் கருமேகங்கள் உயர்ந்து வரத் தொடங்கின. அதைப் பார்த்தால், திடீரென காற்றும் மழையும் வரும் என்று ஒரு நம்பிக்கை. எங்கும் இருள். மழை நிச்சயமாக வரும் என்று நம்பியவர்கள் அவசர அவசரமாக அவரவர்கள் வீட்டிற்குள் முடங்கினார்கள்.

விஜயமோகன் நில விளக்கைக் கொளுத்தினான். சாவித்திரி இனி வரமாட்டாள் என்று அவன் தீர்மானித்தான்.

கார்த்திகாவுக்கு இன்னும் உணர்வு வரவில்லை. அவள் அப்படியேதான் மரக்கட்டைப் போல் கிடந்தாள். வாயிற்படியில் விஜயமோகன் அப்பக்கம் பார்த்தான்.

கையில் எரியும் தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு நான்கு பேர் வெளிவாயிலைத் தாண்டி உள்ளே வந்தனர். துளசி மாடத்தின் அருகில் வந்து நின்றார்கள்.

"என்ன விஷயம்? யார் நீங்கள்?" விஜயமோகன் அவர்களிடம் கேட்டான்.

"திருமேனி! எங்களுக்கு வேண்டியது, அந்தக் கல்லறைக்குள் இருந்த பெண்ணின் பிணம். அது இங்கே இருக்கிறதாகத் தெரிந்து வந்திருக்கிறோம்."

"உங்களை இங்கே வரச் சொல்லி அதிகாரம் தந்தவர் யார்?"

"நாங்கள் இங்கே வந்தது பேசிக் கொண்டிருக்க அன்று" என்று சொன்ன அவர்களின் தலைவன் எல்லாரையும் தள்ளி விட்டு வராந்தாவிற்கு வந்தான்.

27920
428226

"நில் அங்கே! என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் இந்த வாயிலுக்குள் வந்ததே தவறு. இப்போது அத்துமீறி உள்ளேயும் வருகிறீர்களா?"

"திருமேனி! எங்களைத் தடுக்க வேண்டாம். தேவையில்லாமல் வீணாகக் குழப்பமும் விளைவிக்க வேண்டாம்." என்று சொல்லிய அவன் அடுத்த அடி எடுத்து வைத்தான்.

"இந்த வீட்டிற்குள் வர யாருக்குடா தைரியம் இருக்கிறது?" என்றது ஒரு பெண் குரல்.

அங்கே நின்றது கார்த்திகா அந்தர்ஜனம்!

"கார்த்திகா தம்பிராட்டி" என்று யாரோ ஒருவன் சொல்ல...

"அதில் சந்தேகமா?" என்று கேட்டுக்கொண்டே அவள் விளக்கு வெளிச்சத்திற்கு வந்தாள். விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு முன்னே வந்தவன் முன் நீட்டினாள். விளக்கின் தீ அவன் மீது பட்டது. அதுவே ஒரு கயிற்றைப் போல், அவன் கழுத்தைச் சுற்றிக் கொண்டது.

"அய்யோ! என்னைக் கொல்லாதே!" என்று அவன் கத்திக் கொண்டே எரிந்தான். தீயின் நாக்கு அடுத்த ஆளையும் தாக்கியது. அவன் கதறி விழ, சில விநாடிகளில் அந்த நெருப்பு நால்வரையும் வளைத்துப் பிடித்து எரித்தது.

"என்னோடு வாருங்கள்" என்று கார்த்திகா முன்னே நடக்க விஜயமோகன் அவளைப் பின் தொடர்ந்தான்.

தம்பியின் வீட்டில் ஹோமம் நடந்து கொண்டிருந்தது. காரத்திகா தம்பியின் வீட்டிற்குள் புகுந்து முற்றத்தில் அடி எடுத்து வைத்தாள்.

"உன்னித்தனே! அதோ வருகிறாள்... வருகிறாள்..." என்று கார்த்திகாவைப் பார்த்து அலறினான் தம்பி.



சேகர உன்னித்தன் தன் ஒற்றைக் கண்ணைத் திறந்து அவளைப் பார்த்தான். ஆனால் அங்கே பிரம்மராட்சஸி கார்த்திகா! மூன்று ஆள் உயரம் வளர்ந்திருந்த அவள், தனது வலது கையை நீட்டி சேகர உன்னித்தனைப் பிடித்தாள். அவனது தலைமுடி அவள் கையில்... அவனைத் தூக்கி கரகரவென்று சுழற்றி மேலே எறிய அவன் அந்தரத்தில் சில நிமிடங்கள் சுற்றிக் கொண்டு இருந்துவிட்டு தலைகீழாக ஹோமகுண்டத்தில் வீழ்ந்தான். நெருப்பு குபீரென்று பற்றிக்கொண்டு எரிந்தது.

அதற்குப் பிறகு அவள் முன்னேறி தம்பியைப் பிடிக்க முயற்சித்த போது அவன் ஓடினான். அவளது கை நீண்டு அவனைப் பிடித்தது. அவனைத் தூக்கி எடுத்துக் கொண்டு நடந்தாள்.

ஆகாயத்தில் கருமேகங்கள் கூடின. இடி பயங்கரமாக இடிக்க, மின்னல் துள்ளி விளையாடியது. கார்த்திகா தனது சொந்த உருவத்தில் அவனைப் படுக்கையில் கொண்டு போய்த் தள்ளினாள்.

"இனி நீ மாத்திரமே பாக்கி" என்று கட்டிலில் அவனைத் தூக்கி நிறுத்தினாள். "என்னை நீ சரியாகப் பார்க்கவில்லையல்லவா? இப்போது பார்! அவள் பழைய கோர ரூபத்தில் உடனே காட்சி அளித்தாள்.

தம்பி நடுங்கியே செத்தான். நாவரண்டு இருந்தது. கண்களில் வெளிச்சம் இல்லை. அவளது பற்கள் வாயிலிருந்து வெளியே வந்து வளைந்திருந்தன. கண்கள் தீப் பந்தகளாக ஜொலித்தன. அவளது கை நீண்டு வந்து அவனது அடிவயிற்றைப் பற்றியது. விரல்களில் நீண்டிருந்த நகங்கள் வயிற்றுக்குள் இறங்கின. குடலைப் படுங்கிக் கொண்டு வெளியே வந்தன.

அவனது அலறலும், அவளது பயங்கரச் சிரிப்பும் இடசேரி இல்லத்தை அதிர வைத்தன. இறந்து விட்ட அவனது உடலை

எடுத்துக் கொண்டு அவள் வராந்தாவுக்கு வந்தாள். தலைக்கு மேலே அதைச் சுழற்றி வேகமாக வீசி எறிந்தாள். அவன் விழுந்த இடம் அவளுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிதை.

அவனை எறிந்துவிட்டவுடன் அவள் உடனே சாந்தமானாள். பழைய அழகிய கார்த்திகாவானாள். அதுவரை பொறுமையோடு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த விஜயமோகனை "வாருங்கள்" என்று அழைத்துக் கொண்டு இருவரும் கிளம்பினார்கள்.

இருவரும் எழமத்தூர் இல்லத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

"என்ன திருமேனிக்கு என்னைக் கண்டதும் பயம் தோன்றியதா?"

"பயமா? எனக்கா? நான்தான் கார்த்திகாவை நேசித்து வந்தேனே! பயம் எங்கிருந்து வரும்?"

"நிஜமாகவா! உம்... நான் பல வருடங்களுக்கு முன்பே உங்களைச் சந்தித்திருக்க வேண்டும்..." என்று கூறியபடியே அவள் படுக்கையில் விழுந்தாள். அவள் இப்போது முன்பைவிட அழகியாகக் காட்சியளித்தாள்.

"இனி கார்த்திகா எங்கேயும் போகவேண்டாம். இங்கேயே இருக்கலாம்." அவளது நெற்றியைத் தடவிக்கொண்டே அவன் அதைச் சொன்னான்.

அவள் பேசவில்லை.

"இந்த வீட்டின் சொந்தக்காரியாக நீ இங்கேயே தங்கலாம்" என்றான்.

"நான் போகாமல் இருக்க முடியாது!"

"ஏன்?"



"சிலரைப் பழிவாங்குவதற்காகத்தான் நான் இதுவரை இங்கே இருந்தேன்."

"உன்னை நான் போகவிட்டால் தானே?" என்று அவன் அவளைக் கட்டிப்பிடித்தான். முத்தமிட்டான்.

புதிதாக மணமான பெண் போல அவள், அவன் கைக்குள் நெளிந்தாள்.

அவனது கைவிரல்களை, அவளது உடலில் எதையோ தேடுவது போல ஊர்ந்தன. அவளது ஆடைகள் தானாகக் கீழே விழுந்தன!

"இன்று இரவு பூராவும் நான் தூங்க மாட்டேன்" என்று சொன்ன அவள் அவனை இறுக அணைத்தாள்.

வெளியே இடிஇடித்து மழை பெய்தது. வானத்தில் மின்னல் நாகங்களைப்போல் ஊர்ந்தன. நெளிந்தன!

வெளியே போகும் வழி அடைப்பட்டுக் கிடந்ததால் நாலு முற்றத்திலும் வெள்ளம் குளமானது. விடியற்காலை வரை மழை நீடித்தது.

அதிகாலையில் விஜயமோகன் எழுந்தான். ஆனால் அவள் அங்கே இல்லை.

"கார்த்திகா!" என்று அழைத்தான்.

அது அவளுக்கு எட்டவே இல்லை...

அவன் அங்கிருந்து குளக்கரைக்கு ஓடினான். குளத்தில் அவள் இல்லை. கல்லறைக்குப் போனான். அது காலியாக இருந்தது! உள்ளே யாருமில்லை.

"கார்த்திகா... கார்த்திகா..." என்று அவன் பலமாகக் கூவி அழைத்தான். அவன் குரல் எதிரொலித்தது. அவள் பதில் சொல்ல வில்லை.

திரும்பி இல்லத்திற்கு வந்து, அந்த வீட்டுப் பத்திரத்தை எடுத்து நெருப்பில் போட்டுக் கொளுத்தி, எரியவைத்தான். அதற்குப்பிறகு அவன் தன் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

அங்கேயிருந்து ஒரு தடவை மீண்டும் திரும்பிப் பார்த்தான். வாயிலில் நின்றுகொண்டு யாரோ அவனைப் பார்ப்பதுபோல் தெரிந்தது.

"இல்லை...இல்லை... இங்கே யாரும் இல்லை" என்று அவன் மனம் சொல்லிற்று.

விஜயமோகன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடந்தான். பின்னால் அவன் திரும்பிப் பார்க்கவில்லை!

முற்றும்.

27920